# தேவன்





## ராஜத்தின்

# மனோரதம்

## தேவனின் எழுத்தோவியங்கள் :

1932 முதல் ஆனந்த விகடன் மூலம் எழுதத் தொடங்கிய தேவன் இருபத்தைந்து ஆண்டுகளாக ஏராளமான கதைகள் கட்டுரைகளை எழுதி, தனக்கென ஒரு வாசகர் கூட்டத்தையே உருவாக்கினார். இப்படிப்பட்ட வாசகர்களின் கூட்டம் பரம்பரையாகத் தொடர்வதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை! ஏனெனில் அவருடைய எழுத்துக்கள் காலத்தால் அழியாதது. ஆனந்த விகடனின் வளர்ச்சிக்கு உதவியவர்களுள் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள் எஸ். வி. வி. யும், தேவனும் ஆவார்கள். இவர்கள் ஆனந்த விகடனில் தொடர் கதைகளை எழுதும்போது, ஒவ்வொரு வீட்டிலும், 'யார் முதலில் படிப்பது?' என்று பெரிய யுத்தமே நடக்குமாம்; அப்படிப்பட்ட ஒரு குதூகலம்.

பிறர் மனதைப் புண்படுத்தாத ஹாஸ்யம், மாறாத தெய்வபக்தி, மனதை உருக்கும் எழுத்து இவைகளை இனி எவரிடம் காண்போம்? ஆங்கிலக் கதைகளையே படித்துப் பழக்கப்பட்டவர்கள்கூட எஸ். வி. வி., தேவன் எழுத்துக்களைப் படித்து ஆங்கில மோகத்தையே விட்டொழித்தனராம். தமிழை வளர்ப்பதாகக் கூறிக்கொண்டு, பல அபத்தங்களைச் செய்து வரும் இன்றைய மாமனிதர்கள் இதைக் கவனிக்க வேண்டும்.

1940 வாக்கில் எங்கள் நிறுவனர் குப்புஸ்வாமி ஐயர் வெளியிட்ட 'கதைக் கோவை' என்ற நூலில் தேவனுடைய கதையும் இடம் பெற்றது. இதுதான் புத்தக உருவில் வெளிவந்த தேவனின் முதல் கதை. பிறகு பலமுறை தேவன் அவர்கள் எங்களது

நிறுவனரைச் சந்திப்பது வழக்கம். அந்தச் சமயத்தில் தேவன் அவர்கள் தன்னுடைய கதைகள் புத்தகமாக வெளிவரவேண்டும் என விரும்பினார். எங்கள் நிறுவனரும் இசைவு தந்தார். ஆனால் அவர் ஆனந்தவிகடன் ஆசிரியராக இருந்த காரணத்தால் அந் நிறுவனத்தின் ஆசிரியரை மீற முடியவில்லை. கடைசி வரையில் அவருடைய ஆசை நிறைவேறவில்லை. பிறகு அவருடைய நாவல்கள் மட்டும் ஒன்றன்பின் ஒன்றாக 1960க்குப்பிறகு வெளிவந்தது. அதன் பிறகு நெடுங்காலமாக தேவன் கதைகளைத் தேடி மக்கள் அலைந்தனர். 1990க்குப் பிறகு மறுபடியும் எங்கள் நிறுவனம் மூலம் தேவனுடைய எழுத்துக்கள் மீண்டும் வெளிவரத் தொடங்கியது.

தற்போது தேவனுடைய அனைத்து நூல்களும் எங்களால் வெளியிடப்பட்டு வருகின்றது. தேவனும் எங்கள் நிறுவனர் குப்புஸ்வாமி ஐயரும் 1940 வாக்கில் பேசிக்கொண்ட விஷயம் 1998ல் நிறைவேறியுள்ளது. இருவரும் மறைந்து, வருடங்களும் பல மறைந்தாலும், தேவனுடைய எழுத்துக்களும், அல்லயன்ஸும் இன்னும் சிரஞ்சீவியாகவே இருப்பதில்தான் ஆச்சரியமா!

படித்துத்தான் பாருங்களேன்.

27070
41754

# ராஜத்தின் மனோரதம்!

## 1. யாருக்கும் தெரியாதது

நான் துப்பறியும் நாவல் ஒன்றைப் பிரித்து வைத்துக் கொண்டு அதில் ஆழ்ந்து போயிருந்தேன். ஆகையால், என் எதிரில் ராஜம் வந்து நின்றது எனக்குத் தெரியவே தெரியாது. சில நிமிஷங்கள் தொடர்ந்து நிசப்தமாகச் சென்றன.

"உங்களைத்தானே! ஒரு வீட்டைப் பார்த்து வாங்கிப் போடுகிறது தானே?" என்று கேட்டாள் அவள்.

"என்னத்தை வாங்கச் சொல்கிறாய்?...நிலக்கடலையா?" என்று நான் கேட்டேன் திருப்பி.

"நீங்கள் நிலமும் வாங்க வேண்டாம்; கடலையும் வாங்க வேண்டாம்... நான் 'ஒரு வீடு வாங்குங்கள்' என்றுதான் சொன்னேன்."

"ஹஹ்ஹா!... வீடா!... நீ என்னிடம் வேடிக்கையாகப் பேசுகிற நேரம் இது இல்லை. ராஜம்! இந்தக் கதையில் நான் படிக்கும் கட்டத்தில் மின்சார விளக்கெல்லாம் ஒரு தரம் அணைந்து எரிந்திருக்கிறது; மகிஷஞ்சேரி ஜமீன்தார் மார்பிலிருந்து ஒரு கட்டாரியின் தந்தக் கைப்பிடி நீட்டிக் கொண்டிருப்பதையும் பார்த்திருக்கிறார்கள். அறையிலிருந்து வெளியேறப் பார்க்கும் ஒரு மடந்தையின் கையில்

சிவப்புச்சாயம் படிந்த ஒரு கைக்குட்டை காணப்படுகிறது. இத்துடன் அத்தியாயம் முடிந்திருக்கிறது. அடுத்த அத்தியாயத்தை நான் தொடர்ந்து படிக்க விட்டாய், உள்ளே தயார் செய்து கொண்டிருக்கும் வெங்காய உப்புமா கூட எனக்கு உள்ளே செல்லாது..." என்றேன்.

"ஐய! எப்போ பார்த்தாலும் கொலையும் கொள்ளையும் இருக்கிற புஸ்தகந்தானா உங்களுக்கு?"

"அப்படிச் சொல்லாதே, ராஜம்! இங்கே நடக்கிறது ஒரு ரஸமான கொலை...ஆச்சரியமான கொலை...படித்துப் படித்துப் பரவசமாக வேண்டிய கொலை...அதிசயமான அதிசயமான கொலை..."

நான் பாட்டுக்குச் சரமாரியாக வர்ணனைகளை அடுக்கிக் கொண்டு, ராஜத்தின் முதுகில் தட்டினேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை; முழுக்க முழுக்க வீண் பேச்சுக்களில் விருதாவாகச் செலவழிய வேண்டிய தினம். மத்தியானம் மூன்று மணியும் அடித்துவிட்டது. டிபனைச் செய்து வைத்துவிட்டு என் மனைவி என்னைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறாள். மாடியில் என் மருமான் என் பிள்ளைக்கு ஏதோ பாடம் சொல்லித்தர முயன்று கொண்டிருக்கிறான். என் பிள்ளை இலையைக் கருட்டி ஊதல் செய்து கொண்டிருக்கிறான்.

என் தாயார் ஸ்காந்தத்தில் ஏதோ ஒரு பகுதியை என் மருமானைக் கொண்டு படிக்கச் சொல்லிக் கேட்டுக் கொண்டிருக்கிறாள். வழக்கமாக நான் எழுதும் கதைகளில் பாதி படிக்கும் போதே என் தயார் தூங்கிப் போய்விடுவாள். அவனை எழுப்பி, 'தூங்கிவிட்டாயே' என்று சொன்னால் 'இல்லை, கண்ணை மூடிக்கொண்டு கேட்டேன். மேலே படி!' என்பாள். 'சரி, படிக்கிறேன்...கடைசியாக என்ன வாசித்தேன், அதைச் சொல்லு' என்றால், 'நீதான் மறுபடி வாசித்துவிடு. ஞாபகத்துக்கு வந்துவிடும்' என்பாள் ஆனால்



ஸ்காந்தத்தில் ஏனோ, என் அழகிய எழுத்தில் இல்லாத சுவை இருக்கிறது! நிற்க.

நாங்கள் தனியாக இருக்கிறோம் என்ற தைரியத்தினால் ராஜம் என் கையிலிருந்த புஸ்தகத்தைப் பிடுங்கிக்கொண்டு, "அந்தக் கொலைகள் சற்று இருக்கட்டும்...கொஞ்ச நேரம் வீட்டில் தங்கும் ஞாயிற்றுக்கிழமையை நீங்கள் கொலை செய்வதைவிட இது பெரிசில்லை...ஒரு வீடு வாங்கிப் போடுங்கள் என்றேனே, உங்கள் காதில் விழுந்ததா?" என்றாள்.

"வீடா? ஓஹோ, வீட்டையா சொல்கிறாய்?...அதாவது நாலு சுவர்கள், கூரை, அறைகள், ஜன்னல்கள் எல்லாம் வைத்திருக்குமே, வீடு......அதையா வாங்கச் சொல்கிறாய்?" என்றான்.

"எனக்குச் சிரிப்பு வரவில்லை உங்கள் பேச்சு!...எழுதிப் பாருங்கள் யாராவது சிரிக்கிறார்களா என்று...ஒருத்தி சொல்கிறேன், அதற்குக் கேலி செய்கிறதைப் பார்!"

"இல்லை, ராஜம்! என்னிடம் நிறையப் பணம் இருக்கிறதென்ற தப்பான எண்ணம் உனக்கு எப்போது முதல் தோன்றிற்று, அதை முதலில் எனக்குச் சொல்லிவிடு."

"ஆமாம்!......முதலில் நிறையப் பணத்தை வைத்துக் கொண்டுதான் எல்லாரும் வீடு வாங்குகிறார்களாக்கும்! முழுப் பணத்தையும் சேர்த்துக் கொண்டு நாம் வீடு வாங்கப்போகும் போது, தொண்டு கிழங்களாகப் போக வேண்டியதுதான்..."

"பெண்ணே!...இப்படி வா! என் அருகில் வா!" என்று நாடக பாணியில் சொல்லி, என் மூக்குக் கண்ணாடியைக் கழட்டிக் கீழே வைத்தேன். "உண்மையை ஒப்புக்கொள்!... வீடு வாங்கலாம் என்ற கெட்ட எண்ணத்தை உன் மனத்தில் புகுத்தினது யார்? என்னிடம் சொல்லிவிடு!" என்றேன்.

"யாரும் இல்லை!"

"நிச்சயமாகவா?"

"ஒருவர் சொல்ல வேண்டுமா எனக்கு?...ஊரில் அத்தனை பேரும் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். நாம் எத்தனை வருஷங்களாகக் குடியிருந்து கஷ்டப்பட்டு விட்டோம்?"

"தங்கமான பேச்சுத்தான்..."

"மலிவாக வேறு வீடுகள் இப்போ வந்துகொண்டு இருக்கின்றனவாம்!"

"தேவலையே! எல்லாமே கிராக்கியாகி வரும்போது வீடுகள் மட்டும் மலிந்து வருகின்றனவா! ராஜம்! மலிவாக வாங்கி ஒரு விஷயத்தில் நாம் பட்ட பாடு உனக்கு ஞாபகம் இல்லையா? 'புஷ்பகம்' வாங்கி, தெருவுக்குத் தெரு அதைத் தள்ளிக்கொண்டு நின்றோமே!"

"ஒரு சமயம் ஏமாந்து போனால் வெறுமனே ஏமாந்து கொண்டிருக்க வேண்டுமா?...ஒரு இருபதாயிரம் ரூபாயைப் போட்டு ஒரு நல்ல வீடாக..."

"இருபதாயிரமா!... பெண்ணே, பெண்ணே நீ என்னுடன் விளையாடுகின்றனையா?"

"நீங்கள்தான் விளையாடுகிறீர்கள்! ஏதடா, ஒருத்தி ஆசையாகக் கேட்கிறாளே என்று காது கொடுத்துக் கேட்பதுகூட இல்லை."

"கேட்கிறேன். ஆனால் இருபதாயிரம் எங்கே இருக்கிறது, நான் எங்கே இருக்கிறேன்!...நம் சின்னக் கண்ணன் படித்துப் பெரியவனாகப் போவதற்கே..."

"அதெல்லாம் கதை! சின்னக் கண்ணனுக்கு இன்னும் முழுசா நாலு வயசு ஆகவில்லை. அவனுக்கு என்ன தெரியும்!"

"என்ன தெரியுமா? நாளைக்கே ஆறு, எட்டு, பத்து, பதினைந்து என்று வயசாகிவிடாதா? அப்புறம் அவனுக்குக் காலேஜ் சம்பளம், டிரஸ் வகையறா, கிரிக்கெட் மட்டை,



சினிமா டிக்கெட் இதுகளுக்கு அலவன்ஸ்' எல்லாம் எப்படிக் கொடுப்பதென்று நான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் போது, இருக்கிற பணத்தை வீடாக வாங்கிவிட்டால், என்னைச் சும்மா விட்டுவிடுவானா? இப்போதே அவன்..."

அதே சமயம், தடார்! தடார்! என்று மாடியில் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து என் மருமான் திடுதிடென்று மாடிப்படியில் ஓடிவர, பின்னாலேயே என் பிள்ளை துரத்திக்கொண்டும் கூச்சல் போட்டுக் கொண்டும் வந்தான்.

"என்னடா, என்ன ரூட்டி வீட்டில்!" என்று கேட்டுக் கொண்டு என் தாயார் எழுந்து வந்து சேர்ந்தாள்.

"ஏன், என்னடா சின்னக் கண்ணா! மாடிப்படியில் ஓடாதே என்று உனக்கு எத்தனை தரம் சொல்கிறது!" என்று ராஜம் அதட்டினாள்.

"அவனுடன் என்னடா உனக்கு விளையாட்டு!" என்று மருமானை நான் கோபித்துக் கொண்டேன்.

"இல்லை, மாமா! அவன் ஓலை ஊதல் சரியாக ஊதவில்லை என்று இங்கிலீஷ் புஸ்தகத்தைக் கிழிக்க ஆரம்பித்து விட்டான்" என்றான் என் மருமான்.

"போய், அப்பா! அத்தனையும் புளுகு! இவன்தான் ஓலை ஊதல் பண்ண வேண்டாம், பாம்பு பண்ணலாம்னு எல்லாத்தையும் பிய்ச்சுப் போட்டுட்டான், அப்பா!"

நான் எல்லாரையும் கையமர்த்தினேன்: "இந்தத் தகராறு இருக்கட்டும். உங்கள் எல்லாரையும் வைத்துக் கொண்டு ஒரு விஷயம் பேச வேண்டுமென்று நான் மிகவும் ஆசைப்பட்டுக்கொண்டிருந்தேன். அது வெகு காலமாக எனக்கு வாய்க்கவில்லை. இப்போது எதிர்பாராத ஒரு காரணத்தினால் அந்தச் சந்தர்ப்பம் வாய்த்துவிட்டது. நான் அதைப் பயன்படுத்திக்கொள்கிறேன்" என்று என் சபையோரை ஒருமுறை சுற்றிலும் நோட்டம் விட்டேன்.

"எங்கே அவள், சரஸு?" என்று கவலித்தேன்.

"இங்கே இருக்கிறேன், மாமா!" என்று குரல் கொடுத்தாள் என் மருமாள்.

"இப்படி உள்ளே வா!...கேளுங்கள்: இந்த ராஜம் என்னை மிகவும் தொந்தரவு படுத்துகிறாள்... என்னால் அதைக் கொஞ்சங்கூடச் சகிக்க முடியவில்லை..." என்று ஆரம்பித்தேன்.

"எனக்குக்கூடத்தான், அப்பா!" என்று என் பக்கம் நகர்ந்தான் சின்னக் கண்ணன்.

"நீ இருடா!...நான் உடனே ஒரு வீடு வாங்கியாக வேண்டுமாம்."

"வாங்கு அப்பா, அழகாகக் கடையிலே ஒண்ணு வந்திருக்கு!"

"நீ இருடா, பயலே!...எத்தனை நாள் நாம் குடியிருக்கிறது என்று கேட்கிறாள். இருபதாயிரம் ரூபாயை வீசியெறிந்தால் ஒரு வீடாம்! ஹூம்...இருபதாயிரம் ரூபாயை அலட்சியமாகப் பேசுகிறாள். இந்தஜன்மத்தில் என்னால்..."

என் தாயார் குறுக்கிட்டாள். "அதெல்லாம் ஒன்றும் சொல்லாதே.. நாலு வேதபதி ஜோஸ்யரே சொல்லியிருக்கிறார், நான் கேட்டிருக்கிறேன். உனக்கு வீடு வாசல் எல்லாம் கட்டாயம் கிடைக்குமாம்!" என்றாள்.

"அந்த நாலு வேதபதி ஜோஸ்யரைத் தூக்கி நரகத்தில் தள்ளு! அந்த மனுஷன் சொன்னதெல்லாமே பொய்.. அவன் கெட்டது சொன்னால் கூடப் பலிக்கிறதில்லை; அத்தனை மோசம் அவன் ஜோஸ்யம்!"

"உன் ஆம்படையாள் வாங்கச்சொன்னால் வாங்கேன்" என்றாள் என் தாயார், நான் ஜோஸ்யரைக் குறை கூறுவதை ரஸிக்காமல்.

"நான் சொல்கிறதென்னவென்றால் நாளைக்கே வாங்க வேண்டும் என்றில்லை, பார்த்துக்கொண்டே



வந்தால்தானே கிடைக்கும்? நாலு பக்கமும் மண்—தரை இருக்கிறதாகப் பார்த்து வாங்கினால் ஒரு தோட்டம் போட்டு—" என்றாள் ராஜம்.

"கிரிக்கெட்கூட விளையாடலாம், மாமா!" என்றாள் என் மருமாள்.

"அப்பா, ஒரு நாய்க்குட்டி வைச்சுக்கலாம்!" என்றான் சின்னக் கண்ணன்.

"நீ எப்படி வாங்கினாலும், விஸ்தாரமா சாப்பிடற இடம், இரண்டு ஸ்வாமி படம் மாட்டி வைக்கும்படியா ஒரு பூஜை அறை இருக்கணும்." இது என் தாயார்.

"அடுப்பு புகையாமல் இருக்கணும்; ஜலக்கஷ்டம் இல்லாமல் கிணறுடன் பார்க்கணும்..." - இது ராஜம்.

"பார்த்தால் 'ஜம்'னு பங்களா - பாஷனா 'ஷோக்கா' யிருக்கணும்" - என் மருமாள்.

"சினிமாவுக்குக் கிட்ட இருக்கணும்... தினம் தினம் போய்ப் பார்க்கலாம்," — சின்னக் கண்ணன்.

"நிறைய ஜன்னல் வைத்து புழுக்கம் இல்லாத வீடாயிருக்கணும்... ஐய! இது ஒரு வீடா? நீங்கள் ஆபீஸ் போயிடறேள், 'பங்கா' அடியிலே இருந்துட்டு வரேள், உங்களுக்குத் தெரியவில்லை, நாங்கள் பொம்மனாட்டிகள் வீட்டிலே படுகிற கஷ்டம்... முழுக்க முழுக்க வீட்டிலே இருக்கிறது நாங்கள்தானே?" என்றாள் ராஜம்.

"ஒரு கோபுர தரிசனமாவது பண்ணணும்டா... அப்படிப் பார்... இந்த வீட்டுக்கு வந்தாலும் வந்தோம், வீட்டை விட்டு அடி எடுத்து வைக்கவில்லை" - என் தாயார்.

"பதினைந்து அலமாரியாவது இருக்க வேண்டும்" — ராஜம்.

"அதில், மாமி பதினாலரை அலமாரிகளில் தன் புடவைகளை வைத்துக்கொண்டு, நம்ப மூன்று பேர் துணி

மணிகளுக்கும் அரை அலமாரி ஒழித்துக் கொடுப்பாள்” - என் மருமான்.

“நிறுத்துங்கள் நிறுத்துங்கள்! நீங்கள் பாட்டுக்குப் பேசிக்கொண்டே போனால் என்ன அர்த்தம்?... நான் வீடு வாங்கப் போவதாக ஒப்புக்கொண்டே பிறகல்லவா நீங்கள் எல்லாம் வீட்டின் லட்சணங்களை அடுக்கிக்கொண்டே போகலாம்? நீங்கள் சொல்கிற மாதிரியெல்லாம் ஒரு வீடு அமைய வேண்டுமென்றால், உங்கள் எல்லாரையும் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஒரு 'பிளான்' போட்டுப் புதிதாக ஒன்று கட்டிவிட வேண்டியதுதான்!” என்றேன் நான். பிறகு சரஸாவின் பக்கம் திரும்பி, “குழந்தாய்! இத்தனை நேரம் இவர்கள் எல்லாரும் தலைக்கொரு யோசனை சொல்லி என் மூளையைக் குழப்பிக்கொண்டிருந்தபோது, முற்றும் மௌனம் சாதித்து எனக்குப் பக்கபலமாக நின்ற உன்னை நான் மிக மெச்சிக்கொள்கிறேன்... வேண்டிய வரனைக்கேள்! குழந்தாய்!” என்றேன்.

என் தாயார் உடனே, “அததற்குக் காலம் வந்துவிட்டால் யாராலும் நிறுத்த முடியாது. முருகனாகப் பார்த்து ஒரு மனுஷரை அனுப்பி வைப்பார்” என்று எனக்குச் சமாதானம் சொன்னாள்.

மேற்கொண்டு சம்பாஷணையை நாங்கள் தொடருமுன் வாசலில் 'பாம், பாம்' என்று மோட்டார் ஹாரன் சப்தம் செய்தது. “ஏய், விச்சு! மாமா இருக்காராடா?” என்றகுரல் கணீரென்று ஸ்வாதீனத்துடன் ஒலித்தது.

“ஐயம் வந்திருக்கிறார்!” என்று நாங்கள் அவ்வளவு பேரும் வாசலுக்கு ஓடினோம்.

ஸ்ரீமான் ஐயம் அவர்களைப்பற்றி அவர் அருகில் வருமுன்னதாக நான் இரண்டொரு வார்த்தைகளைச் சொல்லிவிடுகிறேன். அவரிடம் எனக்குப் பயம் அதிகமா, ப்ரியம் அதிகமா என்று என்னை யாராவது கேட்டால், நான் பதில் சொல்லத் திணறிப்போவேன். நண்பர் என்ற



உருவத்தில், நண்பர்களிடம் எதிர்பார்க்க முடியாத நன்மைகளைச் செய்திருக்கிறார். என்னைவிட மூத்தவர் என்ற ஹோதாவில் என் சொந்தத் தமையன்கூட அஞ்சும் அளவுக்கு என்னைக் கண்டித்திருக்கிறார். ஒரு சமயம் நான் மகா கெட்டிக்காரன் என்று மரியாதைகள் செய்திருக்கிறார்; அடுத்த சமயம் என்னைவிட மடத்தனமாக வேறு ஒருவர் நடந்துகொண்டிருக்க முடியாதென்று தீர்மானமாகச் சொல்லியிருக்கிறார். “என் மோட்டாருக்குள் ஏறிக்கொள்” என்று அன்பாக அழைத்திருக்கிறார்; “உடனே இறங்குகிறீரா, இல்லையா?” என்று அதட்டியுமிருக்கிறார்.

நான் செய்கிற காரியங்களில் என்னென்ன தவறுகள் என்று முதல் முதலாக அவர் கண்களில்தான் படும். கண்டுபிடித்து அவற்றை மட்டுமே என்னிடம் சொல்லுவார். “என்னமோ எனக்குத் தோன்றியது; நான் சொல்வது பிசகாகவும் இருக்கலாம்” என்று சொல்லிவிட்டுப் போவார். இதற்காக அவருடன் சேர்ந்து கொண்டு அவர் சொல்வது தான் சரி என்று ஆமோதித்து வந்தாலும் தப்பித்துக் கொண்டுவிட முடியாது.

ஐயம் வந்திருக்கிறார் என்றவுடன் வாசலுக்கு ஓட்டமாக வந்து பார்த்தேன். மோட்டாரிலிருந்து இறங்கிக் கொண்டிருந்த அவரை, “வாருங்கள், ஸார்!” என்று அழைத்தேன்.

“உங்கள் வீட்டுக்கு நான் வந்ததாக யார் சொன்னது?” என்று பதில் கேட்டார். அப்புறம், “நீங்கள் ஏதாவது முக்யமாகப் படித்துக்கொண்டிருப்பீர்கள். அதைக் கெடுக்க நான் எதற்காக அங்கே வர வேண்டும்?” என்றார்.

“ஒன்றும் படிக்கவில்லை. சும்மா வம்பளந்துகொண்டுதான் இருக்கிறோம்!” என்றேன். ஐயம் என் தாயாரிடம், “என்ன அம்மா! உங்கள் பிள்ளை சொல்கிறது நிஜந்தானா? அவர் பேச்சை நான் நம்புகிறதில்லை!” என்று கேட்டார்.

சின்னக் கண்ணன், அதற்குள், "மாமா! எங்கப்பா ஒரு வீடு வாங்கப் போறார் உனக்குத் தெரியுமா!" என்று 'குட்டை'ப் போட்டு உடைத்து வைத்தான்.

"பேஷ், பேஷ்! எனக்குச் சொல்லவே இல்லையே! வீடு பார்த்து விட்டீர்களா? எத்தனை மாடி?" என்று கேட்டார் ஜயம், சின்னக் கண்ணனைத் தலைக்குமேல் தூக்கிக் கொண்டு.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. இவன் உளறுகிறான்" என்றாள் என் தாயார்.

"என்னைக் கேட்டால், வீடு வாங்குகிறதைவிட கட்டுகிறதுதான் நல்லது என்பேன்" என்று தம் அபிப்பிராயமாக அவர் தெரிவித்தார்.

"கையில் பணம் இல்லாதவனுக்கு இரண்டும் கெட்டது தான்!" என்றேன்.

"உம்மை நான் அறையப் போகிறேன்... இடத்தை வாங்கிப் போடுகிறது; மெள்ள மெள்ளக் கட்டுகிறது. எடுத்தவுடனே மூன்று மாடி வைக்க வேண்டுமா?...... அல்லாடின் விளக்கு மாதிரி நடத்திவிட முடியுமென்று பார்க்கிறீரா?... இப்போது எனக்குத் தெரிந்து முதல் தரமான 'ப்ளாட்' ஒன்று இருக்கிறது. வேண்டுமானால் நானே உமக்கு வாங்கித் தருகிறேன், என்ன!"

"இருக்கட்டும். அதற்கு முந்தி பணம் இருக்கும் இடத்தைக் காண்பியுங்கள்!" என்றேன்.

"உஸ்ஸ்... இடத்தைப் பாரும் அய்யா! பிடிக்காமற் போனால், அப்புறம் கட்டின வீடாக ஒன்றைக குப்பைமேட்டுச் சந்தில் போய் வாங்கிக்கொண்டு 'ஜம்'மென்று இருமேன்!... யார் வேண்டாமென்கிறார்கள்!......என்ன, அம்மா?"

என் தாயார் தர்மசங்கடத்தில் தவித்தாள். அவளுக்கு என்னையும் தெரியும், ஜயத்தையும் தெரியும்,



"டிபன் ஆகிவிட்டதல்லவா!...... ஏறுங்கள், ஐயா வண்டியில்! பத்தே நிமிஷத்தில் பார்த்துவிட்டுத் திரும்பலாம்!"

சின்னக் கண்ணன் ஓடிப் போய்க் காரில் எல்லாருக்கும் முந்தி உட்கார்ந்துவிட்டான். "உம்ம பையன் தேவலை!... அம்மா, நீங்களுந்தான்... மிஸ்டர்! உங்கள் எஜமானி அம்மாளையும் அழைத்துக் கொள்கிறது" என்றார் ஜயம்.

நான் தயங்கினேன். "சட்டை போட்டுக்கொள்கிறீரா? அல்லது இப்படியே கிளம்புகிறீரா? எனக்கு வேறு வேலை கிடையாதா?... இங்கே உம்மோடு வம்படித்துக்கொண்டு நின்றால் என் உத்தியோகம் போய் விடும்!" என்று அவசரப்படுத்தினார்.

"பார்த்துவிட்டுத்தான் வரலாமே!" என்றாள் என் தாயார்.

பத்து நிமிஷங்களுக்குப் பிறகு மோட்டாரை ஸ்ரீஜயம் ஓட்டிச் செல்ல, எங்கள் குடும்பமே போய்க்கொண்டிருந்தது. வெளியே ஒரு பெரிய கட்டடத்தை ஜயம் எனக்குச் சுட்டிக் காட்டி, "அதோ பார்த்தீரா... அதை நன்றாய்ப் பார்த்துக் கொள்ளும்" என்றார்.

"ஏன், அதில் என்ன விசேஷம்?"

"பணம் எங்கே இருக்கிறது என்று அடிக்கடி கேட்கிறீரே' அதில் தான் நிறைய இருக்கிறது?" என்றார்.

அவர் எனக்குக் காண்பித்தது ஒரு பாங்கியின் கட்டடம்.

# 2. சில பேருக்கு மட்டும் தெரிந்தது!

நினைத்துப் பார்க்கும்போது நம்ப முடியாமல் இருக்கிறது. தினம் பொழுது விடிந்தால் எத்தனை வீடுகளைப் பார்க்கிறேன்; வீடுகளுக்குச் சென்றிருக்கிறேன். இந்தச் சென்னைப் பட்டணத்தில் இதுவரையில் பதினெட்டு வீடுகளில் குடியிருந்திருக்கிறேன். ஆனால், இன்று வரை வீட்டை எப்படிக் கட்டியிருக்கிறார்கள் என்று நான் நினைத்துப் பார்த்ததுகூடக் கிடையாது.

வீட்டுக்கு வாடகை பேசும்போது, "எத்தனை ரூம்?" என்றுதான் கேட்டிருக்கிறேன். ஆனால், வீடு கட்டினவர் வாடகையை மனத்தில் வைத்துக்கொண்டுதான் அதை நிர்மாணித்திருப்பார் என்று எண்ணியது கிடையாது.

ஒரு வீடு கட்ட எத்தனை செங்கல் வேணுமென்று எனக்குத் தெரியாது; செங்கல் எங்கே கிடைக்கும், அதன் விலை என்னவென்று நான் விசாரித்ததில்லை. ஒரு வீடு பிடிக்காவிட்டால் இன்னொரு வீட்டைப் பார்த்துக் கொண்டு போயிருக்கிறேன். "கட்டினவனுக்கு ஒரு வீடு, ஸார்! கட்டாதவனுக்கு பலசெல்வாம் வீடு!" என்று தாராளமாகச் சொல்லியிருக்கிறேன்.

இப்போது ஸ்ரீமான் ஐயம் எனக்கு ஒரே வீடு என்று செய்யப் பார்க்கிறார். "முட்டாள்கள் வீடு கட்டுகிறார்கள்; அதில் புத்திசாலிகள் வாசம் செய்கிறார்கள்" என்ற பழமொழிப்படி பார்த்தால், என்னை எப்படியோ முட்டாள்களில் ஒருவராகச் செய்யப் பார்க்கிறார்! அல்லது, ஏற்கெனவே அப்படித் தீர்மானம் செய்துவிட்டாரோ, என்னவோ!

மோட்டார் போய்க்கொண்டே இருந்தது. சிந்தனைக் கிணற்றை நான் ஆழ ஆழத் தோண்டிக்கொண்டிருக்கிறேன்; நம்பிக்கை ஊற்று இன்னும் தென்படவில்லை.



"அதோ அதோ பாருங்கள்... அழகாக ஒரு சின்ன வீடு! புது வீடு போல் இருக்கிறது" என்று என்னிடம் காண்பித்தாள் ராஜம்.

ஐயமும் எட்டிப் பார்த்தார். "ஓ! அதுவா? நம்ம ஜகந்நாதன் வீடு... இரண்டு மாசமாகிறது... வந்து விட்டானோ இல்லையோ, தெரியவில்லை" என்றார்.

"உங்களுக்குத் தெரியுமா, அவரை?"

"தெரியாவிட்டால்தான் என்ன? இப்போது தெரிந்து கொண்டால் போகிறது!" என்று சடக்கென்று மோட்டாரைத் திருப்பி விட்டார் ஐயம்.

ஒரு சவுக்கத்தை மேலே வீசிக்கொண்டு சுமார் நாற்பது வயதுள்ள ஒருவர் அந்த வீட்டு வாசலில் நின்றுகொண்டிருந்தார். அவர் மனைவி, தோட்டத்திற்காக விடப்பட்டிருந்த முன் வாசலில் ஒரு முல்லைக்குப் பதியன் போட்டுக்கொண்டிருந்தவள், எங்களை எதிர்பாராமல் அங்கே கண்டதும் எழுந்து நின்றாள்.

"என்ன, ஜாகை வந்துவிட்டீர்களா?" என்று கேட்டார் ஐயம், காரில் உட்கார்ந்தபடியே.

"வாருங்கள் வாருங்கள்... இரண்டு நாள் முந்திதான் வந்தோம்... இறங்கி வாருங்கள், ஸார்" என்றார் அவர்.

"சும்மா இந்தப் பக்கம் போனோம்...... ஜாகை வந்துவிட்டீர்களோ என்று பார்த்தோம்...... இவர் என் சிநேகிதர். ரொம்ப அவசரமாக எங்கேயோ போகவேண்டுமென்கிறார்" என்று ஐயம் என்னைச் சுட்டிக் காட்டினார்.

"அவரைக்கூட நான் பார்த்திருக்கிறேன். எங்கே என்று ஞாபகம் இல்லை!"

"உங்களையும் நான் பார்த்திருக்கிறேன்" என்று நான் அசடு வழிந்தேன்.

ஜயம் என்னைப் பார்த்து, "உம்..... இறங்கிப் பார்க்கிறது... எல்லாருந்தான்!" என்று சொல்லிவிட்டு அந்த மனிதரிடம், "இவர்கூட வீடுகட்டப் போகிறார்... உங்களுக்குத் தெரிந்ததையெல்லாம் இவருக்குச் சொல்லிக் கொடுங்கள்!" என்றார்.

ஜகந்நாதன், "உங்களுக்குத் தெரியாததா, ஸார்?... இருபத்திரண்டாயிரத்துக்கு ஒரு வீடு வந்தது, ஸார்! அதை நான் வாங்கியிருக்க வேண்டும்... அதைவிட நன்றாக மலிவாகக் கட்டலாம் என்று இதை ஆரம்பித்தேன். மெள்ள மெள்ள இது நாற்பது வரை இழுத்துவிட்டது!" என்றார்.

"நாற்பதா?" என்று நான் திடுக்கிட்டு ராஜத்தைப் பார்த்தேன்.

வீடு ஒன்றும் பெரிதென்று சொல்வதற்கில்லை. நாலைந்து அறைகளே இருந்தன; பெரிய ஜன்னல்கள் இருந்தன. முன்புறத்து ஹால் சற்றுப் பெரிதாகவும் அலங்காரமாகவும் இருந்தது. தரைக்குச் சிவப்புச் சிமிட்டி போட்டிருந்தார்கள்.

ஜயம் பேசாமல் சுற்றி வந்தார். திருமப ஹாலுக்கு வந்ததும், "எப்படி ஸார் இருக்கிறது வீடு?" என்று கேட்டார் ஜகந்நாதன்.

"நான் முன்னாடியே பார்த்திருக்கிறேனே! ரொம்ப அழகாய் இருக்கிறது!" என்றார் ஜயம்.

"சும்மாச் சொல்லக்கூடாது, ஸார். ஏதாவது கெடுதலக இருந்தால்....."

"கட்டின வீட்டுக்குப் பழுது சொல்கிறது என் வழக்கமில்லை, ஸார்... இது மாதிரி அழகாகச் சில வீடுகள்தான் அமையும்... பேஷாகக் கட்டியிருக்கிறீர்கள்..."

"செளந்தரம், செளந்தரம்!"... என்று ஜகந்நாதன் கூப்பிட்டார். அந்த அம்மாள் வந்ததும், "கேட்டாயா மிஸ்டர் ஜயம் சொல்கிறதை?" என்றார் பெருமையுடன்.



"சமையல் கட்டு இக்கடமாயிருக்கிறது, இல்லையா? அப்போ நமக்கு அதைச் சொல்கிறதற்கு மனுஷாள் இல்லை!" என்றாள் அந்த அம்மாள்.

"அது அப்படித்தான் இருக்க வேண்டும், அம்மா! சமையல் அறை என்றால் அது சமைக்க மட்டுந்தான் இருக்க வேண்டும். நீங்கள் போட்டிருக்கிற அளவு ரொம்ப சரி!" என்றார் ஜயம்.

"நன்றாகச் சொன்னீர்கள், ஸார்! இவளிடம் நான் எப்படிச் சொன்னாலும் நம்ப மாட்டாள்!"

"என்னமோ கட்டிவிட்டோம்...... பணத்தைப் போட்டாய் விட்டது; திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டியது தானே..."

"அப்படி இல்லவே இல்லை. நன்றாக இருப்பதை நன்றாக இருக்கிறதென்று ஒப்புக்கொள்ள வேண்டும்... இதோ இவர் 'ஓய்பு' போகும் போதே உங்க வீட்டைக் காண்பித்து, "அத்தனை அழகாகக் கட்டி இருக்கிறார்களே, யார் வீடு?" என்று கேட்டான். நான் பொய் சொல்ல வில்லை, ஸார்!" என்றார் ஜயம்.

செளந்தரம் புன்னகை செய்தாள். "எல்லாருமே அப்படித்தான்சொல்கிறார்கள்" என்று ஒப்புக்கொண்டாள்.

நாங்கள் விடை பெற்றுக்கொண்டு காரில் ஏறினோம். சிறிது தூரம் சென்ற பிறகு, ஜயத்தின் உடல் குலுங்கிக் கொண்டிருப்பதைக் கவனித்து, அவர் முகத்தை நோக்கினேன். அவர் அப்படிச் சிரித்துக் கொண்டிருந்தார்.

"வீடு கட்டின ஒரு மனுஷனுக்கு 'வீடு நன்றாக இருக்கிறது' என்று சொல்லிவிட்டால் என்ன சந்தோஷம்! சொர்க்கத்திலே கொண்டு வைத்தது போல் ஆனந்தம்!" என்றார் அவர்.

"அந்த அம்மாளுக்குக் கொஞ்சம் அதிருப்தி போல் இருக்கிறதே!" என்று கேட்டாள் என் தாயார்.

"அதுதான் இல்லை, அம்மா! அந்த அம்மாள் ஏதோ குறை இருப்பது போல் பாசாங்கு செய்து, நம் வாயினால் இன்னும் நாலு வார்த்தைகள் 'ஸர்ட்டிபிகேட்டில் சேர்த்துக் கொண்டாள்."

"ஆமாம் இதற்குப் போய் நாற்பதாயிரம் ஆகியிருக்குமா?"

"எனக்குத் தெரியாது, அம்மா! வீடு கட்டுகிறவர்களில் இரண்டு ஜாதி உண்டு. ஒன்று குறைத்துச் சொல்கிற ஜாதி; இன்னொரு ஜாதி. ஐந்தாயிரம் எட்டாயிரம் சேர்த்துச் சொல்கிற ஜாதி. இந்த ஜகந்நாதனைப் பற்றி எனக்குத் தெரியாது!"

நான் இடைமறித்து, "நமக்கு இவ்வளவு செலவில் வீடு வேண்டுமா?" என்று கேட்டேன்.

ராஜம் என்னிடம் மெதுவாக, "தூரப் பார்வைக்கு அழகாக இருந்ததே ஒழிய, அருகில் போனதும் எனக்கு அது அவ்வளவு திருப்தியாக இல்லை" என்று சொன்னாள்.

"வீட்டில் என்ன சௌகரியம் இருக்கிறது! குழாய்க்கும் சமையல் கட்டுக்கும் அரை மைல் இருக்கிறது. மாடிப்படி முழங்கால் - முறிச்சானாய் இருக்கிறது. சின்ன வீடா யிருந்தாலும், மனுஷாளை மனுஷாள் ஆள் வைச்சுத்தான் அழைக்கணும் போலிருக்கிறது!' என்றாள் என் தாயார்.

ஐயம் திரும்பிச் சிரித்தார். "உங்க அம்மா கவனித்த அளவு நீங்கள் யாருமே கவனிக்கவில்லை. ரொம்ப சரியான பேச்சு சொன்னீர்கள். வீடு ஒன்று கட்டினால் மூன்று 'ஐயிட்டம்' அதில் முக்கியமாக இருக்க வேண்டும். முதல் 'யுடிலிடி'...சௌகர்யம், ஒரு இடத்திலிருந்து கொண்டு வீடு பூராவும் பேசணும்; 'எகானமி'...விலை அதிகம் ஆகி விடக் கூடாது. 'ப்யூடி'...பார்த்தால் ரம்யமாயிருக்க வேண்டும். இனி கொஞ்ச வேண்டும்...அவ்வளவுதான்!"



சில பேருக்கு மட்டும் தெரிந்தது!

"ஆமாம்! சிறுகக் கட்டிப் பெருக வாழத்தாடுத்தாக சொன்னார்கள்? நீங்கள் பார்த்து, தம்பிக்கு ஒன்று கட்டிக் கொடுங்கள்" என்று பொறுப்பைத் தள்ளிவிட்டாள் என் தாயார்.

"ஓ! எனக்கு ஒண்ணுமே தெரியாது, அம்மா! எத்தனை இன்ஜினியர்கள், காண்டிராக்டர்கள் இருக்கிறார்கள்...! நன்றாக ஒரு 'பிளா'னைப் போட்டுத் தரச் சொல்லி நல்ல சாமானாக வாங்கிக் கொடுத்து, அப்பப்போ கூட இருந்து கவனித்துச் செய்தால் ஷோக்காகப்போய்விடுகிறது!...கதை வெள்ளாம் கட்டறார் இவர்; இவருக்கா ஒரு வீடு கட்டத் தெரியாது?" என்றார் ஐயம்.

"ஐயய்ய!" என்றேன் நான்.

"பேசாமல் வரீரா, என்ன!" என்றார் ஐயம்.

அவர் மோட்டார், வீடுகள் இருக்கும் பிரதேசங்களைத் தாண்டி ரஸ்தா ஒன்றைத் தவிர வனாந்தரமாகக் காட்சியளித்த ஸ்தலத்தில் விரைந்தது.

"நீங்கள் சொன்ன இடம் இன்னும் தொலைவில் இருக்குமோ?" என்று பயந்துகொண்டே அவரைக் கேட்டேன்.

"நாற்பது மைல் இருக்கும்!" என்று சொல்லி, மடக்கென்று காரை வலப்புறம் ஒடித்து கரடுமுரடான ஒரு சாலையில் அதை ஓட்டி, ஒரு தென்னந்தோப்பின் முன்னால் கொண்டு நிறுத்தினார். பிறகு "இறங்குங்கள் ; இதுதான் அது!" என்றார்.

நாங்கள் எல்லோரும் இறங்கினோம். அயர்ந்து தூங்கிப் போயிருந்த சின்னக் கண்ணனும் திடுக்கிட்டு எழுந்து, கண்ணைக் கசக்கிக்கொண்டு நாலா புறமும் பார்த்தான். இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு, ஸ்ரீ ஜயம் தமது முன்னாலிருந்த இயற்கைக் காட்சிகளைப் பார்த்தார்.

"ஸார்! இங்கேயா வீடு கட்ட வேண்டும் என்று சொன்னீர்கள்!" என்று கேட்டேன்.

“ஆமாம், இங்கேதான், இந்த இடத்திலேயேதான், இங்கேயேதான்!”

“ஒரே தென்னந்தோப்பாக இருக்கிறதே!”

“வேண்டிய மரங்களை வைத்துக்கொண்டு மீதியைப் பிடுங்கி விடுகிறது...உமக்கு எட்டின்மீது பிரியம் அதிகமா? ஒன்பதின்மீது பிரியம் அதிகமா?” என்று கேட்டார்.

“ஏன் கேட்கிறீர்கள்?”

“இதில் எட்டாவது 'பிளாட்'டை உமக்குக் கொடுப்பதா ஒன்பதாவதைக் கொடுப்பதா என்பதற்காகக் கேட்டேன்!”

“நான் இதை எடுத்துக்கொள்வதாகத் தீர்மானம் செய்து விட்டீர்களா?”

“பின் எனக்கு வேறு வேலை இல்லாமல், உமக்குத் தென்னந்தோப்பு காண்பிக்கவா இங்கே அழைத்து வந்திருக்கிறேன். இரண்டரை 'க்ரவுண்ட்' இருக்கிறது, உமக்குப் போதும்...சின்ன வீடாக அழகாகக் கட்டிக்கொள்ளலாம்...”

“காடாரம்பமாக இருக்கிறதே!”

“இருக்கட்டுமே! மாம்பலம், அடையாறு எல்லாம் பதினைந்து வருஷத்துக்கு முந்தி அப்படித்தான் இருந்தது.”

“இங்கே வீடுகளையே காணோமே?”

“நீர் கட்ட ஆரம்பித்தவுடன மற்றவர்களும் கட்டு கிறார்கள்.”

“எல்லாமே ரொம்பத் தொலைவாக இருக்கும் போலிருக்கிறதே!”

“சுகமான காற்று; டாக்டர் வரவே வேண்டிய இல்லை.”

“மற்ற சௌகரியங்களுக்கெல்லாம் எத்தனை நாள் பிடிக்குமோ?”

“நாளைக்கே உட்கார்ந்து ஒரு நல்ல 'ப்ளா'னாகப் போட்டு விடுவோம்.”



“முன்னாடி 'க்ரவுண்டு'க்குப் பணம் கொடுத்தாக வேண்டும் அல்லவா?”

“அதோடு, சாமான்களுக்கும் 'அட்வான்ஸ்' கொடுத்து விடலாம்...கிடுகிடு வென்று வேலை செய்தால் ஆறே மாசத்தில்வீடு...இது ஐப்பசி மாசமா? சித்திரை வைகாசியில் 'ஜம்' மென்று வந்துவிடலாம் 'ஜிலு ஜிலு' வென்று புது வீட்டில் ஜோக்காயிருக்கலாம்.”

“கேட்க ஆனந்தமாக இருக்கிறது.”

“சொந்த வீட்டில் இருப்பது பிரம்மானந்தமாக இருக்கப்போகிறதே!...என்ன அம்மா! என்ன சொல்கிறீர்கள்?” என்று என் தாயாரைப் பார்த்துக் கேட்டார்.

“எனக்கு என்ன தெரிகிறது? உங்களுக்குத் தேவலை என்று பட்டால்...”

“வீட்டு எஜமானர் சரி என்று சொல்லிவிட்டார்; அதையும் அவர் எஜமானியிடம் கண் ஜாடையாகத் தெரிந்துகொண்டுதான் சொல்லியிருக்கிறார். நீங்களும் சரி என்று சொல்லிவிட்டால்...”

“சரி, மாமா!” என்றான் சின்னக் கண்ணன்.

“சரி...ஆனால்...” என்று என் தாயார் ஆரம்பித்தாள்.

“'ஆனால்' பற்றிய விஷயங்களை அப்புறம் கேட்டுக் கொள்கிறேன்” என்றார் ஜயம்.

வீட்டுக்குத் திரும்பும்போது நான் பல முறைகள் பேச முயன்றேன். ஸ்ரீமான் ஜயம் வேறு வேறு விஷயங்களைப் பற்றிப் பேசினார். “தேசப் பெருமாள் நல்லூரில் நரஸிம்ம ஜயந்தி நடக்கப்போகிறதே நீர் அதற்குப் போக வில்லையா?” என்று கேட்டார்.

“இந்த 'ப்ளாட்' விஷயமாக...”

“மாசி மாசத்தில்தானே திருச்செந்தூர் பெரிய உத்ஸவம்? இந்தத் தடவையும் தம்பதிகளாகப் போகிறீர் களாக்கும்!”

"நாம் இன்னும் 'க்ரவுண்ட்' விலை சம்பந்தமாக ஒரு முடிவுக்கும் வரவில்லையே?"

"எப்படி இருந்தால் என்ன? மற்றவர்கள் கொடுக்கிற விலையை நீங்களும் கொடுக்க வேண்டியதுதானே?"

கார் எங்கள் தெருவில் திரும்பிவிட்டது. "கொஞ்சம் இறங்கிக் கொள்கிறீர்களா?... சீக்கிரம், சீக்கிரம்!" என்றார்.

இதெல்லாம் நடந்து மூன்று தினங்களுக்குப் பிறகு எனக்கு ஒரு லெட்டர் வந்தது. ஜயம் சிபார்சு செய்ததன் மேல் புதிதாக நிர்மாணம் ஆகும் ஒரு காலனியில் ஒன்பதாவது 'ப்ளாட்' ஒதுக்கி வைக்கப்பட்டு இருக்கிறது என்றும் அதன் கிரயத்தைத உடனே செலுத்திவிட வேண்டும் என்றும் கண்டிருந்தது.

"அம்மா!" என்று கூப்பிட்டுக்கொண்டு உள்ளே சென்று என் குடும்பத்தினருக்கு அந்தக் கடிதத்தின் விவரங்களைச் சொல்லி, "ஒப்புக் கொள்ளட்டுமா?" என்று கேட்டேன்.

"ஒப்புக்கொள்!" என்று என் தாயார் சொன்னாள். "சீக்கிரம் கட்டி முடிய ஏற்பாடு செய்ய வேண்டும்" என்றாள் ராஜம்.

சட்டென்று ஒரு விஷயம் நினைவு வந்தவனாக, "இது விஷயம் வெளியில் யாருக்கும் தெரியவேண்டாம்!" என்று எல்லோருக்கும் சொன்னேன்.

"நான் வாசற்படி தாண்டி எங்கே போகிறேன்" என்றாள் என் தாயார். ராஜம் தோள்பட்டையில் முகவாய்க் கட்டையினால் இடித்துக் காட்டினாள்.

மேலும் நாலைந்து நாட்கள் சென்றன. கடைத் தெருவில் என்னை ஒரு நண்பர் நிறுத்தி, "'ப்ளாட்' வாங்கி விட்டீர்கள் போலிருக்கிறதே!" என்றார்.

தூக்கிவாரிப் போட்டது. "உங்களுக்கு யார் சொன்னார்கள்?" என்று அவரைக் கேட்டேன்.



"என் ஷட்டகன் விஜயராகவனுடைய தங்கை புருஷன் உங்கள் 'பிளாட்'டுக்குப் பக்கத்து 'ப்ளாட்' வாங்குகிறான்; என்னிடம் சொன்னான்."

நாம் ரகசியமாக வைத்துக்கொண்டால்கூட இது நீர்மேரு போல் இருக்கிறதே என்று வீட்டிற்கு வந்தேன். தெரு முனையிலே ஒரு கார் நின்றுகொண்டிருந்தது. எனக்கு முன்பின் பரிச்சயமில்லாத ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார்.

"நமஸ்காரம், தாங்கள் யார்?" என்று விசாரித்தேன்.

"நீங்கள் வீடு கட்டிக்கொண்டு போவதாகத் தெரிந்து கொண்டேன்."

"அட, பாவமே! நான் இன்னும் 'க்ரவுண்ட்' வாங்கினபாடே இல்லையே!... உங்களுக்கு யார் சொன்னது?"

"என் மைத்துனன் லால்குடியில் இருக்கிறான். அவனுக்கு உங்கள் மாமனார் பரிச்சயம் போலிருக்கிறது... அவர் மூலம் தெரிந்ததாகச் சொல்கிறான். நான் ஜாகைக்கு ரொம்பச் சிரமப்பட்டுக்கொண்டு இருக்கிறேன்."

அவருக்குப் பதில் கூறாமல் "ராஜம்! ராஜம்!" என்று நான் விச்வாமித்ர கோபத்தில் உள்ளே சென்றதைப் பார்த்து விட்டு, அவர் காரில் போய்விட்டார்.

பதினைந்து குரல்களுக்குப் பிறகு ராஜம் வந்து, "இப்போ என்ன அமர்க்களம் இங்கே?" என்று கேட்டாள்.

"உன்னை யார் லெட்டர் போடச் சொன்னது உங்கப்பாவுக்கு?"

"என்ன போட்டுவிட்டேன் இப்போ? எங்கப்பா வீடு கட்டினவர் தான், தெரிந்திருக்கட்டும் என்று எழுதினேன் அதில் என்ன பிசகு?"

"பிசகா? இந்த வீட்டைக் காலி செய்யச் சொல்லி, வீட்டுக்காரரிடமிருந்து 'நோட்டீஸ்' வரப்போகிறது."

"அதைச் சீக்கிரம் கட்டிக்கொண்டு போனால் போகிறது!"

"கட்டுகிறதென்ன சும்மா இருக்கிறதா? எனக்கு யாரைத் தெரியும்? முந்திப் பிந்தி வீடு கட்டியிருக்கிறேனா? எல்லாருமாக என்னைக் கொன்று .."

"மன்னிக்க வேண்டும்...... நீங்கள்தானே மிஸ்டர்..."

இரண்டு பேர் ஓசைப்பட்டாமல் வந்து நின்றார்கள். ஒருவர் கனத்தவர்; ஒருவர் ஒல்லியானவர். இருவரும் புன்னகை பூத்தார்கள்.

"நீங்கள் ஒரு 'கன்ஸ்ட்ரக்ஷன்' செய்யப்போவதாகக் கேள்விப் பட்டேன்" என்று சங்கீத சகோதரர்கள் மாதிரி ஒரே சுருதியில் சொன்னார்கள்.

"உங்களுக்கு யார் சொன்னது?"

"மிஸ்டர் ஐயம் சொன்னார். அவரே ஐந்து நிமிஷத்தில் இங்கே வருகிறார்."

"உட்காருங்கள், உட்காருங்கள்!" என்றேன்.

உட்கார்ந்து கொண்டார்கள். மிஸ்டர் ஸ்தூலம் பேசினார்: "உங்களைப் பார்க்க ரொம்ப சந்தோஷம்... ஹிஹ்ஹி...... நாங்கள் ரொம்ப வீடுகள் கட்டியிருக்கிறோம். மாம்பலம் மகாராஜா தெருவில் இப்போ அநேகமாகக் கட்டி முடித்திருக்கிறோம். 'அஞ்ஞாதபுரம்'னு புதுசா கட்டுகிறார்களே, அதிலே ஆறு வீடு நாங்கள்தான் கட்டுகிறோம்...... ஹம்பி ஹைஸ்கூல் 'பேஸ்மெண்ட்' வரைக்கும் செய்தோம்...... நீங்கள் எப்படிச் சொல்கிறேளோ அப்படிச் செய்து தருகிறோம்... எங்கள் 'ஒர்க்மன்ஷிப்' பிரமாதமாயிருக்கும் ஸார்! இன்னிக்கு உங்களிடம் ஒரு ஆயிரம் ரூபாய் நாங்கள் கூட வாங்கிக்கொண்டு போயிடலாம், அது பெரிதில்லை..."

மிஸ்டர் ஒல்லி:- பெரிசே இல்லை.

மிஸ்டர் ஸ்தூலம்:- எங்களுக்குப் பேர்தான் வேணும்,



சில பேருக்கு மட்டும் தெரிந்தது!

ஒல்லி:- நீங்கள் நாலு பேரிடம் எங்களைப்பற்றிச் சொல்லுணும்.

ஸ்தூலம்:- அதுகூட வேண்டாம்; உங்கள் வீடே அதைச் சொல்லும்!

ஸ்தூலம் அண்ட் ஒல்லி:- நீங்கள் கட்டுகிற வீடு ஆர். ஸி. யா? மெட்ராஸ் டெர்ரஸா?

இவை இரண்டும் இதுவரை நான் கேள்விப்பட்டிராத வார்த்தைகள்; தெரியாது என்று சொல்லிக்கொள்ளவும் வெட்கமாக இருந்தது. ஆகையால், சட்டென்று எழுந்து சமையல் கட்டில் போய், "ராஜம், கொஞ்சம் வருகிறாயா?" என்று கூப்பிட்டேன்.

"நான் வரவில்லை!" என்றாள் அவள்.

"அம்மா! எங்கே இருக்கிறாய்? கொஞ்சம் வருகிறாயா?" என்று அழைத்தேன்.

"கைக்காரியமாக இருக்கிறேன். ராஜம் என்ன செய்கிறாள்?" என்றாள் தாயார்.

சின்னக் கண்ணன், "அப்பா, என்னைக் கூப்பிடாதே! நான் ஐந்து ஸ்தான் 'கடன் வாங்கற கழித்தல்' போட்டுக் கொண்டிருக்கிறேன்; புதுப் பாடம்... விச்சு அத்தான் சொல்லிக் கொடுத்தான்!" என்றான்.

நான் திரும்பியபோது வாசற்படியைப் பிடித்துக் கொண்டு குறும்புப் புன்னகையுடன் ஐயம் நின்றுகொண்டிருந்தார். என்னைப் பார்த்ததும், "என்ன! வீடு கட்டி முடித்து விட்டீர்களா? எப்போ கிரஹப் பிரவேசம்?... சீக்கிரம் சொல்லுங்கள். நிற்க நேரமில்லை. என் உத்தியோகம் போய்விடும்!" என்றார்.

# 3. எனக்குச் சிறிதும் தெரியாதது!

என் நண்பர் ஸ்ரீ ஐயத்தை உட்காரும்படி வேண்டிக் கொண்டேன். ஸ்ரீமான்கள் 'ஸ்தூலம்,' 'ஒல்லி' இருவருக்கும் இரு நாற்காலிகளைக் கொண்டுவந்து போட்டு அமர்ந்து கொள்ளச் சொன்னேன். பிறகு "வீட்டு விஷயமாகப் பேசலாமே" என்று நானே ஆரம்பித்தேன்.

"தாராளமாகப் பேசுங்கள்... ஆனந்தமாகக் கேட்டுக் கொண்டு வருகிறேன்...நான் அதுபற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் இன்னும் ரொம்ப இருக்கின்றன" என்றார் ஐயம்.

மிஸ்டர் ஸ்தூலம் 'ஹஹ்ஹஹ்ஹா' என்று சிரித்து, ஆமாம், ஸார்! ஆமாம்! வீடு கட்டுகிற முறை மாறிக் கொண்டே வருகிறது. பதினைந்து வருஷத்துக்கு முந்தி, முன்னால் வளைத்துக் கட்டுகிற வீடென்றால் அபூர்வம்; இப்போது வளைக்காமல் கட்டுகிற வீடு அபூர்வ மாகப் போய்விட்டது. 'பாஷன்'கள் அப்படித்தான் மாறிக் கொண்டே போகும்!" என்றார்.

"இப்போது நமது நண்பர் எப்படி இருக்க வேண்டும் என்கிறார் தம் வீடு?" என்று வினவினார் ஐயம்.

"இப்படியெல்லாம் புதிர் போட்டால் எனக்குத் தெரியாது... வீடு கட்டி நான் கண்ணால் பார்த்ததுகூடக் கிடையாது... நீங்கள் சொல்லி இவர்கள் என்னிடம் வந்திருக்கிறார்கள். எப்படிச் செய்யச் சொன்னாலும் அப்படிச் செய்கிறேன்" என்று ஐயத்தைப் பரிதாபமாகப் பார்த்தேன். இவர்களில் யாரையும் கட்டாயப்படுத்திப் பேசும் அளவுக்கு எனக்கு ஏது உரிமை?



"அது சுத்தத் தப்பு... இவர்களை நான் வரச்சொல்லவே இல்லை... ஏன் ஸார், நானா சொன்னேன்?" என்று கேட்டார் ஐயம்.

பெரிய தமாஷ் நடந்துவிட்டது போல் ஸ்தூலமும் ஒல்லியும் விழுந்து விழுந்து சிரித்தார்கள். "நாங்களாகத் தான் வந்துகொண்டிருந்தோம்... இவரைக் கண்டு விசாரித்தோம். இவரும் சொன்னார்... அப்படியே வந்தோம். இவரும்கூட இங்கே வருவதாக இருந்தபடியால் ரொம்ப சௌகரியமாகப் போச்சு!" என்றார் ஸ்தூலம்.

"ரொம்ப சௌகரியமாப் போச்சு... நீங்கள் சொல்லி நாங்கள் செய்தால் என்ன?... அல்லது..." என்றார் பெரியவர்.

"நாங்களே உங்களைக் கேட்டு வாங்கிக்கொண்டால் என்ன...?" என்று முடித்தார் சின்னவர்.

"இரண்டும் ஒன்றுதான் எங்களுக்கு!... நாங்கள் போகிற இடம் எல்லாம் திருப்தி திருப்தி என்கிறதுதான் வழக்கம். அதுதான் எங்கள் 'ஸர்ட்டிபிகேட்' எங்கள் சொத்து...!"

"நாங்கள் பெரிய 'காண்ட்ராக்ட்' எடுத்துப் பெரும் பணம் பண்ணுகிறதை ஒரு லட்சியமாகக் கருதுவதில்லை."

"உங்கள் மாதிரி நாலு பேருக்குச் செய்து கொடுத்து, நல்ல பெயர் வாங்க வேண்டியதுதான் ஒரே குறி."

"த்லொ! த்லொ!" என்றேன் நான்.

ஐயம் குறும்பாகச் சிரித்துக்கொண்டிருந்தார். "உங்கள் அறிமுகம் ஆகிவிட்டதா? நானும் ஏதாவது சொல்ல வேண்டுமா?" என்று கேட்டார்.

"நீங்களுந்தான் சொல்லுங்களேன்!" என்று சொன்னேன்.

"உங்களுக்குத் தெரிந்ததைச் சொல்லுங்கள், நல்லது தானே!" என்றார்கள் அந்த ஜோடி.

"கோபித்துக்கொள்ளக் கூடாது .. உங்கள் மூன்று பேரையும் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது."

"நம்ம ஸாருக்கு எப்பவும் வேடிக்கைதான்!"

"நிலம் அவருடையது; வீடு கட்டிக் கொடுக்க வந்திருக்கிறவர்கள் நீங்கள். இதில் நான் எங்கே வருகிறேன்?"

எங்களுக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. சற்று நேரம் மௌனமாக இருந்தோம். ஸ்ரீ ஜயம் தொடர்ந்து, "என்னைக் கேட்டால், யாராக இருந்தாலும், புதிதாகக் கட்டுகிற வீட்டைக் கூடியவரை பதினைந்து வருஷத்திற்காவது 'பாஷன்' மாறிவிடாமல் கவனித்துப் பார்த்துக் கட்ட வேண்டும். ஏனென்றால், ஒரு மனுஷன் ஆயுளில் அநேகமாக ஒரு தடவைதான் தனக்கென்று வீடு கட்டிக்கொள்கிறான்."

"வாஸ்தவம்."—ஸ்தூலம்.

"ரொம்ப உண்மையான வார்த்தை"— ஒல்லி.

"நாங்கள் பல தினுசுகளில் வீடுகள் கட்டியிருக்கிறோம்."

"வரதராஜராவுக்கு ஒன்று ஆறு மாதத்தில் கட்டப் போகிறோம்."

ஜயம் இடைமறித்து, "நம்ம நண்பருக்குக் கட்டுகிற வீட்டைப்பற்றி நாம் நன்றாக யோசனை செய்து, அதிக விலையாகாமல், புது 'பாஷன்' ஆகவும், உபயோகமாகவும் செய்யவேண்டும்."

"காத்துக்கொண்டிருக்கிறோம். முன்னாடி கிணறு வெட்டி விடலாம். அதற்கு நான் பார்க்கச் சொல்லுங்கள்!" என்றார் ஸ்தூலம்.

"நாலடிக் கிணறா, மூன்றடிக் கிணறா? என்று கேட்டு விட்டு என்னைப் பார்த்தார் ஒல்லி.

"ஆழத்தைச் சொல்கிறீர்களா, அகலத்தைச் சொல்கிறீர்களா?" என்று யதார்த்தமாக நான் கேட்டு வைத்தேன். நல்ல வேளை யாரும் சிரிக்கவில்லை.



"கிணறுக்கென்ன இப்போது அவசரம்!" என்று கேட்டார் ஜயம்.

"இல்லை; கைவசம் 'வாடர்-டிவைனர்' ஒருவர் இருக்கிறார். உங்கள் 'க்ரவுண்'டில் இன்று காலை அவரை வைத்துக்கொண்டு பார்த்து விட்டோம். மூன்று இடத்தில் ஜலம் இருக்கிறது. பதினாறு அடி பதினெட்டடிக்குள் 'பஸ்ட் கிளாஸ்' ஜலம் இருக்கிறது" என்றார் ஸ்தூலம்.

"அதெப்படித் தெரிந்தது உங்களுக்கு? என் 'கிரவுண்'டில் இருப்பதாகவா சொல்கிறீர்கள்?" என்று வியப்புத் தாங்க மாட்டாமல் கேட்டேன்.

"அதுதான் 'டிவைனர்' வைத்துக்கொண்டு நாங்களாகவே பார்த்தோமே!" என்றார் ஒல்லி.

ஸ்ரீ ஜயம் எனக்கு விவரமாக எடுத்துச் சொன்னார். கிணறு வெட்டு முன் அடியில் ஜலம் இருப்பதைச் சில 'நிபுணர்'கள் ஒரு கவைக்குச்சியின் உதவியால் கண்டு சொல்லி விடுவார்களாம். கவைக்குச்சியைக் கையில் பிடித்துக்கொண்டே அவர்கள் தரை மட்டத்திற்குக் குனிந்தபடி நடப்பார்களாம். ஜலம் இருக்குமிடம் அவர்களுக்குத் தெரிந்துபோய் விடுமாம்.

"எங்களிடம் இருக்கிற ஆசாமி சூரராக்கும் .. மாம்பலத்தில் இருபத்து ஆறு அடியில ஜலம் இருக்கிறது என்றார். இருபத்தைந்தே முக்கால் அடி வரையில் வெட்டியும் ஜலம் வரவில்லை. 'எங்கேடா ஏமாந்துவிட்டோமோ' என்று சந்தேகத்துடனேயே ஒரு வெட்டு வெட்டினான்...... கு பு கு-பு கு-பு.." என்று ஆரம்பித்தார் ஒல்லி.

"கு-பு, கு-பு,கு-புவென்று ஜலம் வந்ததே பார்க்கணும்!" என்று தொடர்ந்து பாடினார ஸ்தூலம்.

ஸ்ரீ ஜயம் என்னைப் பார்த்து, "நீர் அதிஷ்டசாலிதான்! ஆனால் வீட்டுப் 'பிளா'னைப் போட்டுக்கொண்டு கிணறு வெட்டலாம்... என்ன?" என்றார்.

"கிணற்றை மூன்னாடி வெட்டிவிடலாம். மூன்றடிக் கிணறு முந்நூறு ரூபாயாகிறது; நாலடி ஐந்நூறு ரூபாயாகிறது. அடையாறில் ஆறு கிணறு வெட்டினோம். அவ்வளவும் பிரமாதமாயிருக்கிறது. சோடையே இல்லை."

"முன்னாடி 'பிளா'னைப் போட்டுக்கொண்டு விடுவோம். ஏன், நீங்கள்தான் ஒரு 'பிளா'னைப் போடுங்களேன்!" என்றார் ஐயம்.

"கிணறு வெட்ட ஆட்கள் இருக்கிறார்கள். அடுத்த வாரம் அவர்கள் பெருவாரூருக்குப் போகிறார்கள்."

"வேறு ஆட்களை வைத்துக்கொள்வோம்; அல்லது அதற்கடுத்த வாரம் அவர்கள் வந்த பிறகு வைத்துக் கொள்வோம். 'பிளான்' முன்னாடி தயாராகட்டும்."

மிஸ்டர் ஸ்தூலமும் மிஸ்டர் ஒல்லியும் ஒருவரையொருவர் அர்த்த புஷ்டியுடன் பார்த்துக்கொண்டார்கள்.

"அப்படியானால் நாங்கள் வருகிறோம்... கைவசம் ஆட்கள் இருக்கிறார்களே என்று பார்த்தோம். தவிர, நீங்கள் உடனே வீடு கட்டுவதானால்தான் எங்களால் முடியும். ஆறு மாசமானால், வில்லிவாக்கத்தில் பெரிய 'காண்ட்ராக்ட்' ஒன்று எடுத்துக்கொள்ளப் போகிறோம்."

"அதை எடுத்துக்கொண்டால் ஒன்றரை வருஷம் இன்னண்டை அன்னண்டை திரும்ப முடியாது."

"நிமிர்ந்து பார்க்க முடியாது!"

"அது முடிந்த பிறகுதான் மூச்சுவிட முடியும்."

இருவரும் எழுந்து விட்டார்கள். ஸ்ரீ ஐயமும் எழுந்தார். எல்லோரும் வாசல் பக்கம் போனோம். தங்கள் விலாஸத்தைக் கொடுத்துவிட்டுக் காண்டிராக்டர்கள் ஸைக்கிளில் புறப்பட்டு விட்டார்கள். ஸ்ரீ ஐயமும் காரில் ஏறிக் கொண்டார். நான் அருகில் போய் நின்றேன்.

"அப்படியானால் நாம் இப்போ கிணறு வெட்ட வேண்டாமா?" என்று கேட்டேன்.



"நீர் சும்மா இருங்காணும். குறுக்கே பேசிக்கொண்டு! அவருடைய ஆளுக்கு வேலை இல்லை என்றால், உம்முடைய கிணறுதான் அகப்பட்டுக் கொண்டதா, கேட்கிறேன்!"

"எனக்கு அது தெரியவில்லை, ஸார்! நீங்கள் சொன்ன பிறகுதான் ஸார் தெரிகிறது."

"உமக்கு ஒன்றும் தெரியாது! உம்மால் எனக்கு எவ்வளவு தொல்லை!" என்றார் ஐயம்.

"நான் என்ன செய்வேன்! நீங்கள் வரச்சொன்னதாகச் சொல்லக் கொண்டுதானே நான் பேசினேன்!"

"நான் இவர்கள் பேச்சைத் 'தொல்லை' என்று சொல்லவில்லை. உமக்காக நானே ஒரு 'பிளான்' தயார் செய்துகொண்டு வந்திருக்கிறேன். எத்தனை சிரமம்!" என்று காரிலிருந்து ஒரு சுருளை எடுத்து என்னிடம் கொடுத்தார். என் கண்கள் ஆனந்த பாஷ்பத்தால் நிறைந்தன. 'ஆஹா! இத்தனை உபகாரியும் இருக்கிறார்களா?' என்று பேச முடியாமல் கைகளில் வாங்கிக் கொண்டேன்.

"இது தீர்மானமான 'பிளான்' என்று நினைத்துக் கொள்ள வேண்டாம்!...... இதில் நீர் வேண்டிய மாறுதல் செய்யலாம்!"

"என்னத்துக்கு, ஸார்? இப்படியே ஆரம்பித்து, கட்டும்போது மேலே மேலே பார்த்துக்கொண்டால் போயிற்று" என்றேன். என் நன்றியைக் காண்பிப்பதற்கு அப்படிச் செய்வது ஒன்றுதான் சிறந்த வழி என்று எனக்குத் தோன்றியது.

"உஸ்... உளறாதேயும். உம்ம வீடு நன்றாக அமைய வேண்டும், சிக்கனமாக முடிய வேண்டும் என்றால், போட்ட 'பிளானை' மாற்றுவது என்பதே கூடாது. கோவிந்தன் சொன்னான், கோதண்டன் சொன்னான் என்று

அப்பப்போ மாற்றினீரோ, தொலைந்தீர். வீட்டுக்கு வீடும் நன்றாயிராது, பணமும் போய்விடும்!"

"அதனால்தான் ஸார் இப்போது இருக்கிறபடியே..."

"உஸ்... இப்போதே உங்கள் வீட்டில் எல்லாரிடமும் காண்பியுங்கள். சிநேகிதர்களிடமும் காண்பியுங்கள். என்னென்ன சொல்கிறார்கள் என்று கவனியுங்கள். அதில் நல்லது, உபயோகமானது என்றால் எடுத்துக் கொள்ளலாம்... கடைசியாக ஒரு 'பிளானை' முடிவாகப் போட்டுக்கொள்ளலாம்... என்ன!"

எந்த விஷயமானாலும் நாலு பேரைக் கலந்துகொண்டு செய்வதில் அனுகூலமும் இருக்கிறது. பிரதிகூலமும் இருக்கிறது. நாலு பேர்கள் உதிரியாகச் சொல்வதில் புத்திசாலித்தனம், யோசனைகள், அனுபவங்கள், எல்லாம் காணப்படலாம்; ஆனால் அவைகளில் சந்தர்ப்பத்துக்கு எதெது ஒத்து வரும் என்பதைக் கண்டுபிடித்து உபயோகப் படுத்திக்கொள்வதுதான் ஒரு புத்திசாலியின் காரியம். எங்கள் வீட்டு ஹால் அழகாக இருக்கலாம். கடையில் ரோஸ் — டாப் டேபிள் அழகாக இருக்கலாம் அந்த மேஜையை வாங்கி என் வீட்டு ஹாலில் கொண்டுவந்து போட்டால் பொருத்தமாக இருக்குமா என்பது முற்றிலும் வேறு விஷயம்.

நான் நினைத்துப் பார்த்த சமயம் எத்தனை எத்தனையோ விதமான பங்களாக்கள் என் கண் முன்னால் வந்தன. ஒவ்வொன்றிலும் ஒவ்வோர் அழகு இருக்கத்தான் இருக்கின்றன. அவை எல்லாம் அந்த சிந்தனையின் பேரிலேயே மேதாவிகள் கட்டியிருப்பவையே. அவற்றிலிருந்து நாலு அழகை ஒன்று சேர்த்து ஒரு புதிய அழகு செய்து கொடுக்க எனக்கு இப்போது ஒரு மேதாவி வேண்டியிருக்கிறது...

என் குடும்பத்தை என் முன்னால் கூட்டி வைத்துக் கொண்டு, 'பிளானை'ப்பற்றி விவரமாகச் சொன்னேன்



"முன்னால் ஒரு சின்ன 'வராண்டா' போட்டிருக்கிறார்கள்" என்றேன்.

"மோட்டார் நிற்கிறாப் போல் ஒரு 'போர்ட்டிகோ' போடுங்கள், மாமா!" என்றான் மருமான்.

"நீ பேசாதேடா! 'வராண்டா' திறந்தவெளியாகவா இருக்கும்?" என்று கேட்டாள் தாயார்.

"திறந்தபடி வைத்தாலும் வைக்கலாம்; கம்பிக் கதவுகள் போட்டு மூடினாலும் மூடலாம்... இதெல்லாம் நாமாகச் செய்துகொள்ள வேண்டியதுதானே?"

"மாம்பலத்தில் ஒரு வீட்டில் கம்பிக்கதவு போட்டிருக்கிறார்கள். ரொம்ப நன்றாக இருக்கிறது!" என்றாள் ராஜம்.

"சரி, சரி, சரி...கம்பிக் கதவு போட்டுவிடுவோம். அப்புறம்?"

"உங்களுக்கு ஏன் இத்தனை கோபம் வருகிறது? இப்படிப் பொறுமை இல்லாதவர் வீடு கட்டப் போகிறது எப்படி?"

"உஸ்ஸ்ஸ்... அந்த வராண்டாவுக்கு அடுத்தபடி ஒரு ஹால்; இடப்புறம் ஒரு ரூம் ஹாலுக்கு ரூம், வழியாகவும் போகலாம்; முன் வாசற்படி வழியாகவும் போகலாம்."

"நம்ப காந்தா வீட்டில் இருக்கிறாப்போல்..." என்றாள் என் மருமாள்.

"ஒன்றும் இல்லை. அவர்கள் வீட்டில் ரெண்டு பக்கமும் ரூம் நடுவில் ஹால்..." என்றான் என் மருமான்.

"இல்லை... இப்போவே போய்ப் பார்க்கிறது..."

"பார்க்கிறது...என்ன பந்தயம்?"

"சட்! மேலே பேசவிட மாட்டீர்களா?... ஹாலைத் தாண்டினால் சாப்பிடுகிற இடம்... 'டைனிங் ஹால்'...

விஸ்தாரமாகப் போட்டிருக்கிறது. இதற்கு இடப்புறத்தில் சாமான், சமையல் அறைகள் இரண்டு..."

"அதெல்லாம் சரி...சாமான்கள் இறைந்து கிடக்காதபடி ஏதாவது ஒரு வழி பண்ணு. அது முக்கியம்."

"அதற்கும் வழி இருக்கிறது. இங்கே போட்டிருக்கிற ப்ளானில் ஒரு சின்னக் குடும்பம் ஜாகை இருக்கலாம். வேண்டிய அலமாரிகள் போட்டிருக்கிறார்..."

"ஸ்வாமி படங்களை வைக்கிறாப் போலே ஒரு அலமாரி ஸ்பெஷலாகக் கட்ட வேண்டும்...இப்போ பாரு, இந்த வீட்டில், ஸ்படிகப் பிள்ளையாரை அடிக்கடி எலி இழுத்துக் கொண்டு போய் விடுகிறது."

"ஆமாம், அம்மா! மூஞ்சூறுதானே அவர் வாகனம்?" என்றான் என் மருமான்.

"மகா புத்திசாலி, கண்டுபிடிச்சுட்டான்!"

"குழந்தை சொன்னால் சொல்லட்டுமே!" என்றான் ராஜம்.

"உன் இஷ்டப்படி வராண்டாவில் கம்பி போட்டு விடுவோம்...அதற்காகக் கடைசிவரை நீ யுத்த-ஸந்நத்த மாக இருக்க வேண்டாம்...அப்புறம் இடது புறம் பாத்ரூம்; வலது புறம் இடிக்க, அரைக்க வசதிகள்; குழாயும் இங்கே தான் வரும். அதற்குப் பின்னால் கொஞ்சம் திறந்த வெளி."

"எல்லாரும் நன்றாகச் சாப்பிடலாம். எங்கே தூங்கு கிறதாம்?"

"அவசரப்படேல், குழந்தாய்! வருகிறேன். 'மாடி' என்று ஒன்று கட்டுகிறார்களே! அதில் கீழே ஹாலுக்கு மேல் ஒரு அறையும், ஆபீஸ் ரூமுக்கு மேல் ஒரு அறையும் தாராளமாகப் போட்டுக்கொள்கிறது...எப்படி ப்ளான்?"

யாரும் பதில் சொல்லவில்லை.

"எப்படி இருக்கிறது, என் 'ப்ளான்'?"



எனக்குச் சிறிதும் தெரியாதது!

"நன்றாகத்தான் இருக்கிறது."

"ஏதாவது திருத்தம் அடித்தல் இருந்தால் இப்போதே சொல்லிவிடுங்கள்...அஸ்திவாரம் போட்டுவிட்டால், பேச முடியாது."

"நன்றாகத்தான் இருக்கிறது."

"என்ன ராஜம்? உன் அபிப்பிராயம் என்ன? அப்புறம் ஏதாவது முனகினால் கேட்க மாட்டேன்."

"ஆமாம்! சொன்னால் உடனேயே கேட்டுவிடப் போகிறீர்கள்!"

"சொல்லிப் பாரேன்... சரியான யோசனையாக இருந்தால் கேட்போம்!" என்று அரசர்களும் ஆசிரியர்களும் பேசுகிறாப் போல் பேசினேன்.

கூட்டம் கலைந்தது. ஆனால், என் மனத்தில் பூர்ண திருப்தி ஏற்படவில்லை.

அன்று மத்தியானம் ஒரு நண்பரைப் பார்க்கப் போயிருந்தேன். நாலு பேரைக் கேட்க வேண்டும் என்று ஸ்ரீ ஜயம் சொன்ன புத்திமதி ஞாபகம் வரவே, அவரிடம் என் 'ப்ளாட்' விஷயமாகப் பிரஸ்தாபித்தேன்.

"உம்...வாங்கிவிட்டாயா?...உம்ம்ம்? எங்கே?" என்று கேட்டார். இடத்தை விவரமாகச் சொன்னேன்.

"அங்ங்ங்கேயா?...ஹூம்! வேறே உனக்கு எங்கேயுமே இடம் கிடைக்கவில்லையா?"

"மலிவாக இருக்கிறது, ஸார்!"

"மலிவாகத்தானே இருந்தாக வேண்டும்? அங்கெல்லாம் யார் வாங்குகிறார்கள்?...நான் வாங்கியிருக்கிறேன், பார்' அபனான இடம்! அதற்கும் நாலு பேர் போட்டி; எனக்குத்தான் கிடைத்தது."

"அப்போ நான் பார்த்திருப்பது...!"

"பொட்டைத் திடலாக இருந்த இடம்!...ஏன்? ஏழு மணிக்கு இப்ப கூட அதில் நரி ஓடுமே!"

''பல பேர் சேர்ந்து வீடுகள் கட்டுகிறோம், ஸார்!''

'''டைம்' ஆகணும், பார்க்கணும்...ஜலமெல்லாம் எப்படி இருக்கிறதோ? நம் வீட்டில் ஏழாவது அடியில் ஜலம்...கம்மா கரும்பு, கரும்பு!...''

''ஸார்! ஒரு 'டிவைனா' கூடப் பார்த்தாராம், மூன்று இடங்களில் நல்ல ஜல ஓட்டம் இருக்கிறதாம்...''

''என்ன மாதிரி இருக்கோ? உப்புத் தண்ணியாக இருந்து விட்டால்...? நம்ம சிவசாம்பு வீட்டில் ஒரு டிவைனர்'தான் சொன்னான் என்று இருபத்தெட்டடிவரை தோண்டினான், ஈரப்பசைகூட இல்லை...''

மனம் தளர்ந்து போனேன்; ''இஞ்ஜினியர் தேவலை என்று சிபார்சு செய்தார், தைரியமாக இறங்கிவிட்டேன்...''

மன உளைச்சல் என்னால் தாங்க முடியவில்லை. நான் மடத்தனமாக ஒப்புக்கொண்டு விட்டேனா? யார் சொல்வார்கள்? எனக்கு ஒன்றுமே தெரியாதே! ஷண்முகா!

மறுநாளைக்கு மறுநாள் வேறொருவரைப் பார்க்கப் போனேன். பெரிய வீட்டுக்குச் சொந்தக்காரர் அவர். பேச்சுக் கொடுத்து மன ஆறுதல் அடைய நான் வீடு கட்ட உத்தேசித்திருப்பதை அவரிடம் சொன்னேன்...

அவர் ஆகாசத்தைப் பார்த்துக்கொண்டிருந்துவிட்டு, ''வீடு கட்டப் போகிறாயா? இப்பவா?'' என்று கேட்டார்.

''ஆமாம்!''

''இது 'டைம்' இல்லையே! நான் 1927இல் இதைக் கட்டினேன். பதினேழாயிரம் ஆயிற்று. இன்றைக்கு நம் வீட்டின் விலை தெரியுமா?''

''தெரியாது.''

''எழுபத்தொன்று கொடுத்தால் கொடுக்க முடியாது! ஏன் தெரியுமா?...உயரப் பார்! 'டீக்'...எப்பேர்ப்பட்ட 'டீக்?' இப்போ இதுமாதிரி மரம் இந்தியாவிலேயே கிடையாது!...''

எனக்குச் சிறிதும் தெரியாதது! 

''ஹாவ்'' என்று வாயைப் பிளந்தேன்.

''கீழே தரையைப் பார்...இந்த வர்ணம் இப்போ இல்லை. இப்போ வரதுகள் எல்லாம் அடாஸ்!''

''உம்!''

''நம் வீட்டுக்கு 'ஸ்பெஷல்' காளவாய் போட்டோம்; தன் தரை லக்ஷம் கல்...கையில் எடுத்துத் தட்டினால் வெண்கலம் கெட்டதே! பூச்சுக்குச் சிமிட்டி எப்படி? தெளா, தெளா...அந்த நாளை 'ஒர்க்மன்' களைச் சொல்லணும், அப்பா! இப்போ 'கொல்லுரு'வைத் தூக்கினவன் எல்லாம் கொத்தனார்கள்.. வேலை எல்லாம் அடாஸ்!''

''உம்'' என்று பெருமூச்சு விட்டேன்.

நண்பர் வெகுநேரம் தலையை ஆட்டிக்கொண்டு! சிவானுபவத்தில் கழித்தார். பிறகு, ''சரி...கட்டுகிறதென்று தீர்மானம் செய்துவிட்டே?'' என்றார்.

''ஆமாம்!''

''சிமிட்டியிலா, சுண்ணாம்பிலா?...யார் காண்ட்ராக்டர்? 'பிளான்' ஸாங்ஷன் ஆகி வந்துவிட்டதா? என்ன விஸ்தீர்ணம்? 'எஸ்டிமேட்' என்ன? இரும்புக்கு எழுதிப் போட்டாச்சா? குழாய்க்குச் சொல்லி விட்டாயா? மரம் யாரிடம் வாங்கப் போகிறாய்? என்ன மாதிரி செங்கல்? ஸ்டாக்ப்ரிக்கா? 'சேம்ப'ரா?''

''அதெல்லாம் இனிமேல்தான், ஸார், யோசனை செய்யணும்?'' என்றேன்.

''எதற்கும், கொஞ்சம் அசந்தாயோ போச்சு, பணம்' போயே போச்சு!'' என்று அவர் எச்சரித்தார்.

''ஏது, நம்மை மீறின காரியமாக இருக்கும் போலிருக்கிறதே, இது! இதைவிட்டு நகர்ந்துகொண்டுவிடவேண்டும்?' என்ற திட சங்கல்பத்துடன் கிளம்பி வந்தேன். நான்

வரும்போது, என்மேல் ஏறி விடுகிறாப்போல் ஒரு மோட்டார் வந்து, என் பக்கத்திலே நின்றது. அதன் உள்ளே ஸ்ரீஜயம் உட்கார்ந்துகொண்டிருந்தார்.

"என்னய்யா, தெருவெல்லாம் வீட்டுப் 'பிளான்' போட்டுக் கொண்டு போகிறீர்?...மாடி ரூமுக்கு என்ன வர்ணம் அடிப்பதாக முடிவு செய்தீர்?" என்று கேட்டார்.

"மாடி இருக்கட்டும், ஸார்! இந்த வீட்டு விஷயமாக உங்களிடம் பேச வேண்டும் உடனே!" என்றேன்.

"அவசரமே இல்லை. அதை மெள்ளப் பேசிக்கொள்ளலாம். 'பிளா'னை ஒரு மாதிரி முடிவு செய்யும். நாலு நாள் மழை பெய்யணும். தண்ணீர் தேங்கணும். தவளைகள் கத்தணும். அப்புறந்தான் கடக்கால் எடுக்கலாம். ரைட்! நான் வரட்டுமா?" நான் பதில் சொல்லுமுன் கார் பறந்துவிட்டது.

அப்புறம் மூன்று மாசம் அவரை நான் பார்க்கவில்லை.

# 4. சில வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்தது!

"ஒரு வீடு என்றால் என்ன இருக்கவேண்டும்? ஒரு ஆபீஸ் அறை, ஒரு ஹால், சமையல் அறை, சாமான் அறை, ஒரு பாத்ரூம், படுக்கை அறை இவ்வளவுதானே? இவைகளை முன்னே பின்னே பார்த்து வைத்துக் கட்டிவிட்டால் ஆயிற்று!.. இதற்குப் பிரமாதமாக யார் யாரையோ யோசனைகள் கேட்கிறதும், மனத்தைக் குழப்பிக் கொள்கிறதுமாக இருக்கிறீர்களே!" என்று கேட்டாள் ராஜம். எனக்குக் கோபம் கோபமாக வந்தது.



"முக்யமான ஒன்றை விட்டு மற்றதையெல்லாம் சொல்லிவிட்டாய்!" என்றேன் பல்லைக் கடித்து.

"என்னவாம் அது?"

"உன் முதுகு கேட்கிறது ஒரு அறை!...ஆமாம்!' என்றேன்.

"ரொம்பச் சமர்த்தாகச் சொல்லிவிட்டீர்கள்! முதலில் அதைச் செய்துவிடுங்கள்; காசு பணம் செலவில்லை."

"பின் என்ன உபத்திரவம் இது? நான் கிடந்து தவிக்கிறேன்! ஒரு பக்கம் பார்த்தால் கட்டிவிடலாம் என்று உத்ஸாகமாக இருக்கிறது; ஒரு பக்கம் பார்த்தால், நாலு பேர் பயமுறுத்தி வைக்கிறார்கள். நீ வேறு நடுவில் என்னைக்குழப்புகிறாய்" என்று என்னையே அங்கலாய்த்துக் கொண்டேன்.

"நான் சொன்னபடி கேட்கிறீர்களா? உங்கள் ஜயம் வந்து, என்ன யோசனை செய்தீர்கள் என்று கேட்டால், ஏதாவதும் பதில் சொல்ல வேண்டாமா?"

"ஆமாம்; அதற்கென்ன வழி சொல்லுகிறாய்? வந்து கேட்கும் போது நான் வீட்டில் இல்லை என்று சொல்கிறேன் என்கிறாயா?"

"ஐய! பேச்சைப் பார்க்கவில்லை; நாம் இரண்டு பேருமாகத்தான் புது வீடுகள் சிலவற்றைப் பார்த்துவிட்டு வருவோமே?... எப்படிக் கட்டியிருக்கிறார்கள் என்று கொஞ்சத்துக்குக் கொஞ்சமாவது தெரிந்து கொள்ளலாமல்லவா?"

சரியான யோசனைதான்! நான் அதை ஏற்றுக் கொண்டேன். அடுத்த நாலைந்து ஞாயிற்றுக்கிழமைகள், காலையும் மாலையும் இந்த அலுவலில் செலவு செய்தோம் வீடுகளில் எத்தனை தினுசு!

முன்னால் வானவில் போல் வளைந்த வீடுகள்; ஒரு புறம் துறவு கிணறு போல் தோன்றிய இல்லங்கள்; மடக்கி

மடக்கிப் பல கோணங்கள் தென்பட உருவாகியிருந்த பங்களாக்கள்; பல உருண்டைகளை உருட்டினாற்போல் காட்சி அளித்த கிருஹங்கள்; அரக்கன் ஒருவன் வாயைப் பிளந்துகொண்டிருப்பது போல் மாடி அமைத்த நூதன கட்டடங்கள்... எல்லாவற்றையும் பார்த்தோம். எங்களுக்கு ஏற்றதாகப் பட்ட சில வீடுகளுக்குள்ளே நுழைந்தும் ஆராய்ந்தோம்.

ஒருவருடைய புதிய வீட்டைப் பார்க்க வேண்டுமென்று நாங்கள் விரும்பியதும், அவர் "சற்று இருங்கள், சௌகரியப் படுமா, பார்த்துச் சொல்கிறேன்" என்று எங்களை வாசற்படியில் நிறுத்தி வைத்துவிட்டு உள்ளே சென்றார். உள்ளே இருவர் பேசுவது எங்கள் காதில் கணீர் என்று விழுந்தது.

"யாரது?" என்றது பெண் குரல்.

"யாரோ தெரியவில்லை. புதிதாக வீடு கட்டப் போகிறார்களாம். நம் வீட்டைப் பார்க்கலாமென்று வந்திருக்கிறார்கள்!" என்றார் வீட்டுக்காரர்.

"வேறே வேலை இல்லை!..."

"என்ன செய்கிறது? புது வீடு என்றால் அப்படித்தான் நாலு பேர் பார்க்க வேண்டும் என்பார்கள்."

"நல்ல புது வீடு! அடுப்பங்கரையில் கண் அவிந்து போகிறது. அதைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போகட்டும்."

"நான் என்ன பண்ணுவேன்? அந்தக் 'காண்டிராக்டர்' பேச்சை நம்பினதில் ஏமாந்து போய்விட்டேன்!"

"இது ஒன்றுக்கு மட்டுமா? பாத்ரூமில், ஒரு சொம்பு ஜலம் விட்டால், சாப்பிடுகிற இடம் வரைக்கும் ஓடி வருகிறது... நீங்கள் அசடு என்று நன்றாகத் தெரிந்து கொண்டு..."

"உஷ்... இரைந்து பேசாதேடி! வாசலில் அவர்கள் நிற்கிறார்கள்.."



"கெட்டிக்கொண்டு வந்து காண்பியுங்கள்! மாடிப்படிகள் கோணலும் மாணலுமாக இருக்கிற அழகைப் படம் பிடித்துக்கொண்டு போகட்டும்!"

ராஜம் என்னைப் பார்த்தாள். "உங்கள் காதில் விழுகிறதா உள்ளே நடக்கிற சம்பாஷணை?" என்று ரகசியமாகக் கேட்டாள்.

"நன்றாக விழுகிறது! அந்த அம்மாளுக்கும் உன் மாதிரி சுபாவம் போலிருக்கிறது!"

"சொல்ல மாட்டீர்களோ? அந்த மனுஷி பொறுமையில் நூற்றில் ஒரு பங்கு உங்களுக்கு உண்டா? அல்லது வருமா?"

இந்தச் சமயம் அந்தத் தம்பதிகளே வெளியில் வந்துவிட்டார்கள். பார்வைக்கு 'இவளும் இப்படிப் பேசியிருப்பாளா?' என்றே எனக்குத் தோன்றியது. தம்பதிகள் எங்களுக்கு வீட்டைச் சுற்றிக் காண்பித்தார்கள்.

"எங்களுக்கு 'ஸ்பெஷலா'கச் சொல்லி ஸிமெண்ட் வந்தது, ஸார்! எல்லாரும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்!" என்றார் அவர்.

"எங்களுக்கு நல்ல கண்டிராக்டர். அனுபவஸ்தராக அமைந்தார். ஒன்றொன்றும் கவனித்துக் கவனித்துச் செய்தோம்..." என்றாள் அம்மாள்.

"முக்கியமாக, ஸார்! நாம் எங்கே அதிகமாக வீட்டில் இருக்கிறோம்? பகலெல்லாம் ஆபீஸுக்குப் போய்விடுகிறோம்... முழுக்க முழுக்க இருக்கிறது பெண் பிள்ளைகள். அவர்களுக்கு முன்னாடி எல்லா சௌகர்யமும் செய்து கொடுக்க வேண்டும் என்பதே என் 'பிரின்ஸிபிள்' அதன்படி செய்தேன்!" என்றார் புருஷர்.

"எங்களுக்கு வீடு நன்றாக அமைந்துவிட்டது......" என்றாள் அம்மாள்.

"என்ன ஸார் அடக்கம் இருக்கும்?" என்று அவரைத் தனியாகக் கேட்டேன்.

"உண்மையைச் சொல்லிவிடட்டுமா?" என்றார்.

"சும்மா சொல்லுங்கள். நானும் சீக்கிரம் வீடு கட்டப் போவதால்."

"இருபத்தெட்டு ஆயிற்று!"

ராஜம் அந்த அம்மாளுடன் சமையற்கட்டைப் பார்த்துவிட்டு வந்தாள். நாங்கள் இரண்டு பேரும் விடை பெற்றுக்கொண்டு வெளியே வந்தோம்.

"எப்படி இருக்கிறது, ராஜம்?"

"என்னமோ இருக்கிறது... நாம் வீடு கட்டினால் சாமான்கள் கீழே இறைந்து கிடக்காமல் இருக்க வழி செய்ய வேண்டும்... ஆனாலும் அவள் ராங்கிக்காரி!"

"ஏன்? என்ன சொன்னாள்?"

"விலையைக் கேட்டேன். 'அதை எல்லாம் யார் கூட்டிப் பார்த்தார்கள்? முப்பத்தியேழோ, முப்பத்தெட்டோ!' என்கிறாள் வெகு அலட்சியமாக."

"அவர் இருபத்தெட்டு என்றாரே!... அதில் யார் சொன்னது நிஜம்?"

நாங்கள் இதுபற்றிய தர்க்கம் செய்து முடிவதற்குள் வேறொரு வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டோம்.

அது கட்டி முடியும் தறுவாயில் இருந்தது. சில இடங்கள் பூசப்பட்டும், சில இடங்கள் பூசப்படாமலும் காணப்பட்டன. ஒரு பக்கம் 'வார்னிஷ்' அடிப்பவர்களும், ஒரு பக்கம் 'பெயிண்ட்' அடிப்பவர்களும், ஒரு பக்கம் சுண்ணாம்பு அடிப்பவர்களும், மேலே 'எலெக்டிரிக்' கம்பி பொருத்து பவர்களும், பக்கவாட்டில் குழாய்க்குக் குழி வெட்டுபவர் களும் மும்முரமாக வேலை செய்துகொண்டிருந்தார்கள்.



அங்கே மேஸ்திரி போல் இருந்த ஒருவரைப் பார்த்து, "இந்தக் கட்டடம் என்ன ஆகிறது?" என்று மெள்ள விசாரித்தேன்.

"ஐம்பது ரூபாய்க்குக் குறையாது!"

"அம்மாடியோய்!" என்றேன்.

"காலம் அப்படி இருக்குதுங்க...கல்லு விலை முன்னே இருபது இருபத்திரண்டு இருந்ததுங்க...... இப்ப நாப்பத்தேளு நாப்பத்தெட்டு ஆவுதே!"

"ஓஹோ!"

"மரமே ஆளைத் தின்னுடுங்களே! இவரு ஆர். ஸி.யிலே கட்டியிருந்தால் அஞ்சாயிரம் குறைவாயிருக்கும்..."

இந்த ஆளைத் தைரியமாகக் கேட்கலாமென்று "ஆர். ஸி." என்றால் என்ன என்று விசாரித்துவிட்டேன். தேக்க மரங்களைக் குறுக்கே போட்டுத் தளம் போடுவது 'மெட்ராஸ் டெர்ரஸ்' என்றும், இரும்புக் கம்பி கட்டி ஜல்லியும் ஸிமெண்டுமாகக் 'கான்கிரீட்' செய்வது 'ஆர். ஸி.' என்றும் சொன்னான் அவன்.

"ஓஹோ! நிமிர்ந்து பார்த்தால் மரச்சட்டமே இல்லாமல் 'வெழு மூணா' இருக்குமே அதுவா? என்று பச்சைக் குழந்தைபோல் கேட்டேன். இந்தச் சமயம் ராஜம எனக்கு அழகு காட்டிக்கொண்டிருப்பதைக் கவனித்து, "என்ன?" என்றேன்.

"எல்லாரும் சிரிக்கப் போகிறார்கள்! பேசாமல் வாருங்க!" என்றாள்.

"நீ பேசாமல் இரு! இதுவும் தெரியாமல் என் சிநேகிதர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு இதைச் சொல்லித் திணற அடிக்க மாட்டேனா நான்?" என்றேன்.

ஒரு வீட்டில் அறைகள் என்றில்லாமல் "ஹால், ஹாலாக" இருந்தது. அந்த வீட்டுக்காரர், "வீடு என்றால் விசாலமாக

இருக்க வேண்டும். உள்ளே வந்துவிட்டால் ஜெயில் மாதிரி தோன்றி வெளியே போக வேண்டுமென்று வெறுப்பு வரக்கூடாது. அதனால் நான் 'ரூம்' என்று போடாமல் 'ஹால்' களாகவே போட்டுவிட்டேன்!'' என்று சொன்னார்.

''ரொம்ப நல்ல யோசனை, ஸார்!'' என்று அதை ஆமோதித்தேன்.

''நீங்கள் அப்படிச் சொல்லிவிடுகிறீர்கள்! இப்போ எங்கே பார்த்தாலும் 'பம்பாய்- பாஷன்' என்று சொல்லிக் கொண்டு, எட்டடி சதுரத்தில் அறை அறையாகத் தடுத்து விடுகிறார்கள். ஒரே அவலட்சணம்! பார்த்தால் திராக்ஷைக் குலை மாதிரி இருக்கிறது!'' என்றார்.

இன்னொருவர் வீட்டில் சிறு சிறு அறைகளாக ஏகப்பட்ட அறைகள் இருந்தன அந்த வீட்டுக்காரர், வீடு என்றால் ஒரு 'பிரைவஸி' வேண்டாமா? அதில்லாவிட்டால் ஹோட்டலிலோ, ஆபீஸிலோ இருந்துவிடலாமே! வெள்ளைக்காரன் வீட்டைப் போய்ப் பாருங்கள். ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொரு அறை! நான் எங்கள் வீட்டுச் சுப்பிணிக்குக் கூட ஒரு அறை கொடுத்துவிட்டேன்.'' என்றார். சுப்பிணி அப்போது கைக்குழந்தையாக இருந்தான்!

ஒரு நண்பர் ஒரு குடித்தனம் கூடவே இருக்க வசதி இல்லாமல் கட்டுகிற வீடு, வீடே இல்லை என்று என்னிடம் வாதித்தார். ''வீட்டை நாம் பூட்டிக்கொண்டு போகிறோம் என்றால், இப்போ இருக்கிற நிலைமையில் கொள்ளை போய்விடுமே, ஸார்!'' என்றார், பிறகு என் அருகில் நெருங்கி, ''வாடகையைச் சொல்லுங்கள்! இப்போ இருக்கிற அகவிலையில், முப்பதையும் முப்பத்தைந்தையும் கொட்டி வீட்டைக்கட்டிவிட்டு, வட்டி நஷ்டப்படுவானேன்? வீட்டு வரியே வாரியோ வாசி!'' என்றார். அவர் சொல்லுகிறபோது அதுவும் நியாயம் என்று தோன்றியது.



மறுவாரம் வேறொருவருடைய வீட்டைச் சுற்றி வந்துவிட்டு, ''குடித்தனம் ஒன்றும் வைத்துக்கொள்ளவில்லையா?'' என்று கேட்டு வைத்தேன்.

அவர் முகத்தில் குப்பென்று ரத்தம் ஏறிவிட்டது. ''ஸார்! ஆண்டவன் கிருபையால் இன்றுவரைக்கும் தனி வீட்டில் தான் இருந்திருக்கிறேன். வீடு கட்டிக்கொண்டு வரும் போக அப்படியே வந்து விட்டேன். என்ன இருந்தாலும், குடித்தனம் என்று வைத்தால், நம் சமாசாரம் வெளியே போகத்தான் போகும். நம் 'ஒய்ப்'பிட்டே சித்தே நாழி ஜாலியா பேசினோம்; அல்லது நாமாகக் குஷி பிறந்து நம் இஷ்டம் போல் ஒரு காம்போதி ராகம் ஆலாபனை பண்ணினோம் என்றெல்லாம் குடித்தனம் வைத்துவிட்டால் முடியுமா?''

''முடியவே முடியாது!'' என்று ஒப்புக்கொண்டு வந்தேன்.

இப்படிப் பல வாரங்களில் பல இடங்களைப் பார்த்து விட்டு வந்த பிறகு, மனிதர்கள் எத்தனையோ அத்தனை மனித சுபாவமும் இருக்கிறது என்ற உண்மையை நாங்கள் தெரிந்துகொண்டோம். ஆனால், எத்தனை பார்த்தும் ஸ்ரீ ஜயம கொடுத்த பிளானை மற்ற எங்களுக்குத் திடம் ஏற்படவில்லை.

ஒரு நாள் வீடு கட்டி வரும் என் நண்பர், ''என்ன ஸார் எப்போது வீடு கட்டப் போகிறீர்கள்? உங்கள் பி. ஏ. நம்பர் என்ன?'' என்று கேட்டார்.

நான் சற்று விழித்துவிட்டு, ''ஞாபகம் இல்லை... நான் பி. ஏ. பாஸ் பண்ணிப் பதினெட்டு வருஷங்கள் ஆகிவிட்டதால் மறந்துவிட்டேன்... வீடு கட்ட அதுகூட வேண்டியிருக்குமா?'' என்று கேட்டேன்.

அவர் விழுந்து விழுந்து சிரித்தார். ''அதில்லை, ஸார்! 'பிளான்' இருக்கிறதல்லவா, அதற்கு 'ப்ளூ—ப்ரிண்ட்'

போட்டு, கார்ப்பரேஷனுக்கு அனுப்பியிருப்பீர்களே, அவர்கள் அதற்குக் கொடுக்கும் நம்பருக்கு பி. ஏ. நம்பர் என்று பெயர்... அது வந்த பிறகுதானே நீங்கள் சிமிட்டிக்கும், இரும்புக்கும் அப்ளிகேஷன் போடவேண்டும்!' என்றார்.

''அதற்கு ரொம்ப நாளாகுமோ?''

''சில சமயம் ஆகும்; சில சமயம் ஆகாது... அங்கங்கே தெரிந்த மனிதர்கள் இருந்தால் ரொம்ப நல்லது.''

''உங்களுக்கு அப்படி யாராவது இருக்கிறார்களா?''

''நமக்குக் காரியம் ஆகவேண்டுமே! நாமாக விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டியதுதான்.''

''காசைக் கொடுத்தோம், கடையில் வாங்கினோம் என்று கிடையாது?...''

''அதெல்லாம் போய் எத்தனையோ யுகம் ஆச்சே, எங்கே, உங்கள் 'பிளான்' இருக்குமா?''

என் வீட்டுப் பிளானைச் சட்டென்று நான் ஒரு காகிதத்தில் போட்டு அவர் கையில் கொடுத்தேன்... ஒரு விஷயம் சொல்ல மறந்து விட்டேனே! கொஞ்ச நாளாகவே நான் பிளான் போடுவதில் முனைந்து திருந்தியும் போயிருந்தேன். வீட்டில் ஒரு சாக்—பீஸை வைத்துக் கொண்டு நினைத்த இடங்களெல்லாம் போட்டு நண்பர்களுக்குக் காண்பித்து வரத் தொடங்கியிருந்தேன்.

அவரும் அதைப் பார்த்துவிட்டு, ''கிட்டத்தட்ட நம் வீடு மாதிரிதான்... சிற்சில மாறுதல்களே செய்திருக்கிறது!'' என்று சொல்லி, தமது வீட்டுப் பிளானைப் போட்டு என் கையில் கொடுத்தார்.

''நான் சாப்பிடுகிற ரூமைப் பெரிதாகப் போட்டேன்'' என்றேன்.

''நான் முன்—ஹாலை விஸ்தாரமாக வைத்துக் கொண்டேன்'' என்றார்.



''என் வீட்டு மாடிப்படி நல்ல அகலம்... தாராளமாக இருக்கிறது.''

''நான் நாலு ஜன்னல் கூடப் போட்டிருக்கிறேன், அதைக் கவனித்தீர்களா?''

''ஏன், என் வீட்டில் குறைவா? எத்தனை 'வெண்டிலேட்டர்' போட்டிருக்கிறேன், பார்த்தீர்களா?''

''மழை குளிர் காலங்களுக்கு என் ஆபீஸ் ரூம் வெகு சுகம், வெகு சுகம்.''

''வெய்யில் காலத்தில் என் வீட்டு ஹால் கோடைக்கானல் மாதிரி இருக்கும்!''

''அரைக்க, இடிக்க அருமையான இடம்.''

''த்ஸொ! த்ஸொ! ஸ்நான அறை அற்புதமாகச் செய்திருக்கிறேன்.''

''என்னமோ, ஸார்! எனக்குப் 'பிளான்' போட்டுக் கொடுத்தவர் ரொம்ப அனுபவஸ்தர். அதோடு உங்களை விட எனக்கு 'இன்ப்ளுவன்ஸ்' ஜாஸ்தி இருக்கிறது. நான் நாலு இடத்தில் அலைந்து பார்த்து, சிரமப்பட்டு, சாமான்கள் நல்லதாகப் பொறுக்கி வாங்குவேன்... எனக்கு மலிவாகக்கூடக் கிடைக்கும். உங்களால் அத்தனை முடியும் என்று சொல்வதற்கில்லை'' என்றார் அவர்.

எனக்கு இது உறைத்து விட்டது; ''ஏன் இல்லை? எனக்காக ஐயம் ஆறு மாசம் முனைந்து கட்டப்போகிறார். அவர் உதடு அசைத்தால் ஊர் அசையும்...''

''ரைட், ரைட்!''

''ஆல் ரைட், ஆல் ரைட்!''

நண்பர்கள் பிரிந்து வந்துவிட்டோம். ஆனால், சற்று நிதானித்த பிறகு, நாங்கள் சிறு பிள்ளைகளைப் போல் போட்டி போட்டு எதற்காகப் பேசிக்கொண்டோம் என்று நான் மிக வெட்கம் அடைந்தேன்.

இதற்கெல்லாம் பிறகு, திடீரென்று ஒரு நாள் ஸ்ரீஜயம் என்னை வந்து அழைத்தார். உள்ளே கூப்பிட்டு நாற்காலியில் உட்கார்த்தி வைத்து அவரை உபசரித்தேன்.

''பிளானை எந்த மட்டில் வைத்திருக்கிறீர்? உங்கள் வீட்டுக் கரப்பான் பூச்சி சாப்பிட்டுக்கொண்டிருக்கிறதோ?''

''இல்லை, ஸார்! நான் ரொம்ப இடங்களைப் பார்த்து விட்டு வந்திருக்கிறேன். நீங்கள் சொன்னபடி பல பேர் யோசனைகளையும் கேட்டிருக்கிறேன்.''

''தெரிகிறது......மிக மிகக் குழம்பிப் போயிருக்கிறீர்கள் என்று தெரிகிறது.''

''ஆமாம், ஸார்! நீங்கள் போட்ட 'பிளான்'படி பேசாமல் நடத்தி விடலாம்.''

''நீர் அப்படிச் சொல்லுவீர் என்று முன்னாடியே தெரியும் எனக்கு. ஆகையினால் 'ப்ளூ—பிரிண்ட்' போட்டு விட்டேன். கார்ப்பரேஷனுக்கு மூன்று காப்பிகள் அனுப்ப வேண்டும். சீக்கிரம் கையெழுத்தைப் போட்டுக் கொடும்! என்றைக்குச் சுப முகூர்த்தம்? உம்ம 'பிளாட்'டில் தவளைகள் போடுகிற கூச்சல் என்னால் சகிக்க முடியவில்லையே!'' என்றார்.

''ஸார்! இதோ பார்த்துவிடுகிறேன், ஸார்!''

''ஈசான்ய மூலை ஞாபகம் இருக்கட்டும்.''

''அப்படி யென்றால்?''

''ஈசான்ய மூலையில்தான் ஐயா, முதல் முதல் ஒன்பது கல்லை நவக்கிரஹங்களாக வைத்துப் பூஜை செய்வார்கள்'' என்று எழுந்து விட்டார்.

வாசல் வரை அவரைக் காரில் கொண்டுவிட்டேன். ''வீடு கட்ட ஆரம்பிக்கிறதற்கு முந்தி முக்யமாக மூன்று சாமான்கள் வேணும்! அவை எப்போதும் உம்முடைய கையோடு வரவேண்டும். ஒரு 'டேப்', ஒரு ரஸ மட்டம்,



நல்ல கனமாக ஒரு பேனாக்கத்தி... எதிலும் அளம் என்றால் அளவாக இருக்க வேண்டும், தெரிந்ததா? அறை பதினோரு அடி சதுரம் என்றால், பத்தரை அடி நீளம், பத்தேமுக்கால் அடி அகலம் என்றில்லை!...''

''நானா அதை அளக்கவேண்டும்?''

''நானா, நீரா? வீட்டுக்கு எவன் சொந்தக்காரனோ அவன் அளக்கிறான்! உம்மோடு கதை அளந்துகொண்டு நிற்க நேரம் இல்லை... நான் வருகிறேன்.''

''ஆமாம்! நீங்கள் சொன்ன 'டேப்', 'ரஸ மட்டவு' எல்லாம் எங்கே விலைக்குக் கிடைக்கும்?''

''வெற்றிலை பாக்குக் கடையில் விசாரித்துப் பாரும்!'' — புர்ர்ர் என்று கார் ஓடிவிட்டது.

இதற்கு ஒரு வாரத்திற்குப் பிறகு நான் என் 'பிளாட்'டைப் பார்க்கலாமென்று போயிருந்தேன். பக்கத்து நிலங்களில் வரிசையாக வீடுகள் கட்ட ஏற்பாடு தொடங்கியிருந்தார்கள். கடைசி வீட்டின்முன் கிணறு வெட்டிக் கொண்டுமிருந்தார்கள். அங்கே அந்த வீட்டுக்காரரே நின்று மேற்பார்வை செய்துகொண்டிருந்தார். அவர் 'பிளா'னைக் கேட்டு வாங்கிப் பார்த்தேன்.

''உம்ம்.. ஆரம்பித்துவிட்டீர்கள் போலிருக்கிறது!'' என்றேன்.

''ஓ!...கிடுகிடுவென்று ஒவ்வொன்றாக நடக்கவேண்டியது தானே?'' என்றார். பிறகு, ''உங்கள் நிலத்தில்கூட நேற்று கோடுகள் போட்டுக் கொண்டிருந்தார்களே! மிஸ்டர் ஜயம் மேற்பார்வை பார்த்துக் கொண்டிருந்தாரே!''

எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஓடிப் போய்ப் பார்த்தேன். முன்னே 'சாக்-பீஸி'னால் நான் என் வீட்டுக் கூடம் தாழ்வாரம் எல்லாம் 'பிளானைக் கிறுக்குவேன் என்று சொன்னேன் அல்லவா? அதே போல் நிஜ அளவில் சுண்ணாம்புப் பொடியினால் குறி போட்டிருந்தது. கிணறு

27010

முதல் கொண்டு அதில் காட்டியிருந்தது. நான் 'மனை முகூர்த்தம்' செய்யவேண்டிய இடத்தில் ஒரு சதுரத்திற்கு ஆறு அடி தோண்டியும் காண்பித்திருந்தார்கள்.

பரபரவென்று வீட்டுக்கு ஓடி விஷயத்தைச்சொன்னேன். என்மருமான் சாஸ்திரிகள் வீட்டுக்கு ஓடினான்; சாஸ்திரிகள் என் வீட்டுக்கு ஓடி வந்தார்; ''குழந்தை சொன்னான்... ரொம்ப சந்தோஷம்... ஆயதனவான் பவதி' என்று சொன்னார்களே! ஆயதனம், ஆயதனம் என்றால் வீடு விடு என்று அர்த்தம்!''

''ஓஹோ, அப்படியா?''

'' 'வீடுடையவனாக ஆகிவிடு' என்பது பெரியவான் வாக்கு!...சரி, நவக்ரஹ பூஜையை நன்னா பண்ணிவிடுகிறது.''

அடுத்த வாரம் நல்ல நாள் ஒன்றில் பூஜை செய்யப் போனோம். ஸ்ரீ ஜயம் வீட்டிலே அகப்படவில்லை; அவர் ஆபீஸிலும் அகப்படவில்லை. விஷயத்தைச் சொல்லிவிட்டு வந்தேன். பூஜை நடந்து முடிகிற சமயத்தில்தான் அவர் வந்து நின்று, ''சாஸ்திரிகள் கைராசியைப் பார்க்கப் போகிறேன்!'' என்றார்.

''நன்றாகப் பாருங்கள்! நான்தான் ஸர்... அவர்களுடைய வீட்டுக்குப் பூஜை செய்தேன்! நாளைக்கும் சொல்வார்!''

''சாஸ்திரிகள் குறிப்பிட்ட ஸர்... அவர்களை நான் எங்கே கண்டு, கேட்டு, இந்த வார்த்தையை நிருபித்துக்கொள்ளப் போகிறேன்!

''ஐயய்ய!'' என்றாள் ராஜம், ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு வந்து.

''என்ன சமாசாரம்?''

''ஆபீஸ் ரூம் துளியூண்டு இருக்கிறது; ஹால் ஒரு அங்கணம் அளவு கூட இல்லை; ஸ்நான அறையில் ஒரு



[illegible]க்கு நிற்க இடமில்லை. சமையல் கட்டானால் ஒரே [illegible]க்கடம்...''

ஸ்ரீ ஜயம் கடகடவென்று சிரித்தார். ''இப்போதே சொல்லி விட்டேன்...கட்டடம் கட்டின பிறகு, ஏன் இவ்வளவு [illegible] பொட்டறைகள் என்று இந்த அம்மாளே குற்றம் சொல்லப்போகிறார். பார்த்துக்கொண்டிருங்கள்!'' என்று கூறிவிட்டு, காரில் போய் ஏறிக்கொண்டு விட்டார்.

நான் ராஜத்தைக் கோபித்துக்கொண்டு, ''உனக்கு எந்நாளும் இத்தனை வாய் ஆகாது...அரட்டை!'' என்றேன்.

''ஆமாம்! அவர் அங்கே மரத்தின் பின்னால் நிற்கப் போகிறார் என்று நான் கண்டேனா?...தவிர, அறைகள் சின்னதாக இருந்தால் அதை நாம் இப்போதே கவனித்தால் நன்மை உண்டு?''

எனக்கும் மனத்தில் அப்படித்தான் பட்டது. அறைகள் ரொம்ப ரொம்பச் சின்னவையாக இருந்துவிட்டால் எப்படி ஆகிறது? ஆனால், அதை நான் யாரிடம் சொல்வது? மிகுந்த மனக்குழப்பத்துடன் வீட்டுக்கு வந்தேன்.

வீட்டுக்கு வந்ததும் 'டேப்'பை எடுத்துக்கொண்டு என் குடியிருந்த அறைகளை அளந்து பார்த்தேன். என்ன ஆச்சரியம்! அவை எல்லாம் புது வீட்டைவிடச் சிறியவை! [illegible] நம் கண்ணே நம்மை ஏமாற்றுகிறதா?

''ராஜம்! அநியாயமாக நீ ஜயத்தைப் புகார் சொல்லி விட்டாய்! அவர் எத்தனை அனுபவசாலி!'' என்று, நான் கண்டுபிடித்த விஷயங்களை அவளுக்கு எடுத்துச் சொன்னேன்.

மேலும் இரண்டு நாட்களுக்குப் பிறகு ஒரு கார்ப்பரேஷன் சிப்பந்தி என்னைத் தேடிக்கொண்டு வந்து ஒரு கவரைக் கொடுத்தான். என் 'பிளான்' அங்கீகரிக்கப் பட்ட விஷயமாகத்தான் இருக்கும் என்று அவசரமாக அதை உடைத்துப் படித்தேன். என் நெஞ்சு உட்கார்ந்து போயிற்று.

"ஐயா! நீர் அனுப்பிய வீட்டுப் 'பிளான்' விஷயமாக மாறுதல் செய்ய வேண்டியிருப்பதால், நாளாவது திங்கள் கிழமை 11 மணி முதல் 1 மணிக்கு உள்ளாக இன்ஜினியரை வந்து நேரில் காண வேண்டியது, காணத் தவறினால், உமது 'பிளான்' ரத்து செய்யப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்."

பல நிமிஷங்கள் சமைந்து போய் உட்கார்ந்திருந்துவிட்டு நிமிர்ந்தேன். அந்த லெட்டர் கொடுத்த ஆள் இன்னும் நின்றுகொண்டே இருந்தான்.

"நீ என் அப்பா நிற்கிறாய்?" என்று அவனைக் கேட்டேன்.

"எதினாச்சும் இனாமுங்க!" என்று கேட்டு, அவன் அசட்டுச் சிரிப்புடன் நாணிக் கோணிக் காதுக்குப் பின்னால் தலையைச் சொறிந்து கொண்டான்!

## 5. அவரவர்களுக்குத் தெரிந்தது!

எனக்குக் கார்ப்பரேஷன் மீது கடுங்கோபம் வந்து விட்டது. என் 'பிளா'னைச் சரியாக இல்லையென்று சொல்ல இவர்கள் யார்? கார்ப்பரேஷன் கட்டடம் கட்டப் பட்டிருக்கும் 'பிளான்' அவ்வளவு சுகமாயில்லை என்று நான் சொல்லுகிறேன். ஏன்? அவர்களால் என்ன பதில் சொல்ல முடியும்? இன்றுவரைக்கும் எத்தனை ஒழுங்காக, நோட்டீஸ் வந்த மறுநாளே, என் உத்தியோக வரியைச் செலுத்திக்கொண்டு வந்திருக்கிறேன்? கேவலம், அதற்கு நன்றி காட்டுவதற்காகவாவது என் பிளானை உடனே ஒப்புக்கொண்டிருக்க வேண்டாமா?

எனது நண்பர்கள் சிலரிடம் என் பிளான் நிராகரிக்கப் படும் என்று வந்த கடிதத்தைக் காண்பித்தேன். அவர்கள்



எல்லோரும் உதட்டைப் பிதுக்கித் தலையை ஆட்டி, "இதை நீங்கள் இப்படியே விட்டுவிடக் கூடாது: என்ன பிசகு என்று அவர்கள் சொல்லட்டுமே!" என்றார்கள் ஏகமனதாக.

"நிச்சயம்!" என்று நான் அழுத்தந்திருத்தமாகச் சொன்னேன். குறிப்பிட்ட தினத்தில் இன்ஜினியரைப் பார்த்து வரப் போனேன்.

கார்ப்பரேஷன் கட்டடத்தின் பெரிய தாழ்வாரத்தில் வருவோரும் போவோருமாக இருந்தார்கள். 'இப்படிப் 'பிளான்'களை நிராகரித்துக் கொண்டிருந்தால் ஏன் இங்கே கூட்டம் கூடாது?' என்று நினைத்துக்கொண்டு, அங்கிருந்த ஒரு 'டவாலி'யிடம் இன்ஜினியர் இருக்குமிடத்தை விசாரித்தேன்.

"மாடியிலெ போங்க!" என்றான்.

மாடியில் ஏறி அங்கே இருந்த வேறொரு 'டவாலி'யிடம் விசாரித்தேன்.

"மாடியிலே போய்ப் பாருங்க!" என்று அவனும் சொன்னான்.

மறுபடி இரண்டாம் மாடியில் ஏறி அங்கிருந்த ஒரு 'டவாலி'யை அணுகினேன். என் முழங்கால் வலித்த வலியில், மறுபடி அவன் 'மாடியிலே போங்க' என்று சொன்னால், ஒரே குத்தாகக் குத்திக் கீழே தள்ளி, அவன் மார்பின் மீது என் முழங்காலை வைத்து அமுக்கி, "அடே, என்னை யார் என்று நினைத்தாய்! புது ஆளாக அகப்பட்டுக் கொண்டால், உன் மாடிகளைக் காட்டுவதென்று பார்த்தாயா?" என்று கர்ஜிப்பதென்று முடிவுசெய்து கொண்டு தயாரானேன். ஆனால், இத்தனை ஆச்சரியமான தொரு நிகழ்ச்சி லகுவிலே நடந்துவிடுமா?

அந்த 'டவாலி' என்னை ஒரு சிறு நடைபாதைக்குள் அனுப்பி, "அப்படியே போங்கள்... இருப்பாரு!" என்று வழியும் காட்டினான்.

நான் பார்க்கப் போனவர் ஒரு இளைஞராயிருந்தார். நான் எதிர்பார்த்தபடி இல்லாமல், பால் வடியும் முகமும் பூத்த புன்முறுவலுமாக இருந்தார். "உட்கார்ந்து கொள்ளுங்கள், ஸார்! நீங்கள் தான்... என்பவரா?" என்று கேட்டார்.

"ஆமாம்; நான்தான் அது!"

"நீங்கள் ஒரு வீடு கட்டப் போகிறீர்கள் போலிருக்கிறது!"

"அதைத்தான் நடக்கவொட்டாமல் அடிக்கப் பார்க்கிறீரே!" என்று சுடச்சுடக் கேட்கவேண்டும் என்று ஆசைதான். ஆனால், அந்த மனுஷரிடம் சண்டை போட்டுக்கொள்வதில் லாபம் இல்லையென்று வெகு சாதுர்யமாக, "ஆமாம், ஸார்! அதுதான் 'பிளான்' ஒன்று போட்டு அனுப்பினேன். நீங்கள் அதில் பிசகு இருப்பதாக-" என்று ஆரம்பித்து நிறுத்தினேன்.

நான் முடிப்பதற்குள் அவர் என் 'பிளா'னை வெளியே எடுத்து விட்டார்.

"ஒன்றுமல்லை... ஒரு சின்ன விஷயந்தான்...... இதைப் பார்த்தீர்களா?" என்று அதில் ஓர் இடத்தைச் சுட்டிக் காட்டினார். (அது என் மோட்டார் காரேஜ் என்று காட்டியிருந்தது.)

"ஆமாம்... அதில் என்ன?"

"அதை ஒரு இரண்டடி தள்ளிப் போடுங்கள். பாத்ரூமுக்கு இன்னும் ஒரு அடி அதிகம் கொடுங்கள்!"

"ஹா! இவ்வளவுதானா!... இதை நீங்களே போட்டிருக்கலாமே! பயமுறுத்திவிட்டீர்களே, என்னை?"

"அதெப்படி நானாகச் செய்ய முடியும்?"

"என்னிடம் 'கார்' கிடையாது. நான் சும்மா போட்டு வைத்தது தான்... நமக்குள் இருக்கட்டும், அந்த 'காரேஜ்' கூடக் கட்டப் போகிறதே இல்லை."



"உங்கள் இஷ்டம் போல் செய்யுங்கள். இருந்தாலும், அது இருக்க வேண்டிய இடத்தில் போட்டுவிட வேண்டியது தானே நியாயம்?"

"ஆட்சேபணை என்ன? தவிர, நீங்கள் சொன்னப்புறம் நான் செய்துவிட வேண்டியதுதானே?"

"இப்படி ஒரு கையெழுத்துப் போடுங்கள்!" என்று சொல்லி 'பிளான்' மேலேயே என் கையொப்பத்தை வாங்கிக்கொண்டார் அவர். "இன்னம் நாலு நாளில் உங்களுக்கு லெட்டர் வரும்" என்றார்.

"நான் வீடு கட்ட ஆரம்பித்துவிடலாம் அல்லவா? பூஜையெல்லாம் முந்தானாளே பண்ணிவிட்டேன்."

"தாராளமாகச் செய்யுங்கள். கார்ப்பரேஷனுக்குப் பணத்தைக் கட்டிவிட்டீர்களானால்..."

"அது எதற்காகப் பணம்?"

"உங்கள் 'பிளான்'படி எத்தனை சதுர அடி கட்டுகிறீர்களோ அதற்குத் தகுந்தபடி பணம் செலுத்தி, ரசீது பெறவேண்டும். அதை அப்புறம் ஜாக்கிரதையாக வைத்திருக்க வேண்டும்."

"இதென்ன காரியம்! நிலக்காரருக்குப் பணம் கொடுத்தாயிற்று; அது சரி. அப்புறம் கார்ப்பரேஷனுக்கு எதற்காகக் கொடுப்பது?..."

"எத்தனை என்று கேட்கிறீர்களா? 14 ரூபாய் ஆகிறது... வருகிறீர்களா?" மறுபடியும் அன்பு நிறைந்த புன்னகை.

"சரி கட்டிவிடுகிறேன்" என்று கிளம்பினேன். பால்காரர் தயிர்க்காரருடன் பிசகுகிறாப்போல் கார்ப்பரேஷனோடு பிசக முடியுமா?" வெளியே வந்தேன். இரண்டாவது மாடியின் நடுவே வரும்போது யாரோ பின்னால், "ஸார், ஸார்!" என்று கூப்பிட்டுக்கொண்டு ஓடி வருவது தெரிந்து

திரும்பினேன். யாருமில்லை; அந்த மூன்றாவது 'டவாலி' தான்!

என் அருகில் வந்ததும், "ஸாமி! இன்ஜினீயர் ஐயாவைப் பார்த்தீங்களா?" என்று கேட்டான் அவன்.

"பார்த்துப் பேசிக்கொண்டிருந்தேன். எல்லாம் சௌகரியமாக முடிந்தது" என்று திருப்தியுடன் சொன்னேன்.

ஆனால் என் திருப்தி அவனுக்கு ஒரு பொருட்டாகவே படவில்லை. "இன்ஜினீயர் ஐயாவைப் பார்த்தவங்க, என்னைப் பார்க்காமே போறீங்களே, ஸாமி!" என்றான் அவன் மனக்குறையுடன்.

என் திருப்தியைத் தெரிவித்துக் கொண்டதில், நாலணா நஷ்டத்துடன் வாசலை வந்தடைந்தேன்.

கார்ப்பரேஷனிலிருந்து வெளியே வந்ததும் என் உள்ளத்தில் மகிழ்ச்சியானது, முன் காலத்துச் சோடாக் குப்பிகளிலிருந்து சீறி வரும் ஆவிபோல், பொங்கி வழிந்தது. என் கண்களில் அந்தக் கட்டடம் தேவலோகம் போலவும், அதில் இருந்த சிப்பந்திகள் எல்லாம் மனித குலத்தை வாழ்விக்க வந்த தெய்வங்கள் போலவும், தோன்றியது.

சந்தோஷ சமாசாரத்தை என் குடும்பத்தினரிடம் சொல்லிவிட்டு, ஸ்ரீ ஐயத்திடம் எனது வெற்றிகரமான முயற்சியைச் சொல்ல டெலிபோனில் கூப்பிட்டேன். அவர் இருந்தார்.

"என்னை இப்போது கூப்பிடப்போகிறீர்கள் என்று எனக்குத் தெரியும்...அதனால்தான் நான் கூப்பிடாமல் காத்திருக்கிறேன்" என்றார் அவர்.

"அதெப்படித் தெரியும் உங்களுக்கு?"

"ஏதாவது காரியம் ஆக வேண்டியிருந்தால் கூப்பிடு வீர்களே!...அது கிடக்கட்டும்; கார்ப்பரேஷனில் பாத்-ரூமை அவரவர்களுக்குத் தெரிந்தது!



[illegible]ப் போடச் சொன்னாரா? அப்புறம் என்ன?" என்று கேட்டார்.

"அதை யார் உங்களுக்கு இவ்வளவு சீக்கிரமாகச் சொன்னது?"

"சொல்ல வேண்டியதே இல்லை...எனக்குத் தெரியும். இது வழக்கமாக அவர்கள் சொல்கிற காரியந்தான்... அப்புறம்?"

"அப்புறம்...நீங்கள் சொல்ல வேண்டியதுதான்!"

"சொல்லட்டுமா?...இங்கே என் பக்கத்தில் யார் உட்கார்ந்து கொண்டிருக்கிறார், தெரியுமா?"

"தெரியவில்லையே, ஸார்!"

"உம்ம வீட்டைக் கட்டிக் கொடுக்கப்போகிறவர்! மிஸ்டர் திருமலை. அவரிடந்தான் பேசிக்கொண்டிருக்கிறேன் அங்கே அவரை அனுப்புகிறேன்."

"அவருடன் நான் என்ன பேச இருக்கிறது? நீங்களே பேசி விட்டால் எனக்குத் திருப்திதான்."

"நன்றாயிருக்கிறது! உங்கள் வீடு, அதில் எனக்கென்ன [illegible] 'கண்டிராக்ட'ரும் 'ஓனரு'ம் பேசிக்கொள்ளுங்கள். நான் காதைப் பொத்திக்கொண்டு வேறு பக்கம் திருப்பிக் கொள்கிறேன்!" என்று ஐயம் சொல்லி, டெலிபோனை வேறொருவர் கையில் கொடுத்தார்.

ஆகவே, நான் என் கிருஹத்தைக் கட்டும் கண்டிராக்ட ராக ஆகப்போகிறவரைப் பார்க்கு முன்னதாகப் பேசக் கேட்டேன். "நான்தான் திருமலை பேசுகிறேன்...மிஸ்டர் ஐயம் எல்லாம் சொல்லிவிட்டார்" என்றார் அவர்.

"அவரையே கேளுங்கள், ஸார்! அவர்தான் எனக்குப் பூராவும் உதவி செய்ய வேண்டியவர், எனக்கு இதற்கு முன் வீடு கட்டிப் பழக்கமே இல்லை!" என்றேன்.

"எல்லாம் நாங்கள் பார்த்துக்கொள்கிறோம், ஸார்!"

''இன்னொரு விஷயம், ஸார்! நாம் 'எஸ்டிமேட்' என்று போட்டால் அதை அதிகம் தாண்டக்கூடாது. அதற்காகப் போடுகிறதைப் பெரிதாகப் போட்டுக் காட்டி என்னை முன்னாடியே நன்றாகப் பயமுறுத்தி விடுங்கள்!''

'''ஹஹ்ஹா' என்று திருமலை சிரித்தார். ''நீங்கள் எழுதுகிறாப் போலவே பேசுகிறேன், ஸார்!'' என்றார்.

''இல்லவே இல்லை!... பேசுகிறாப் போல எழுத முயற்சி செய்து கொண்டிருக்கிறேன்; அது வேறு விஷயம். நீங்கள் பதினெட்டாயிரம் ரூபாய் வீட்டுக்கு இருபதாயிரம் என்று ஒரு 'எஸ்டிமேட்' போட்டுக் காண்பித்தீர்களானால், அப்புறம் கடைசியில் இரண்டாயிரம் மிஞ்சுகிறபோது ஒரு பெரிய லாபம் கண்டதுமாதிரி நமக்கு ஆனந்தமாக இருக்கும் அல்லவா?''

''உங்களுக்கு எவ்வளவு மலிவாகச் செய்ய வேண்டுமோ அவ்வளவு மலிவாகச் செய்து தருகிறோம்.''

இதற்குள் ஜயம் டெலிபோனைப் பிடுங்கிக்கொண்டு, ''ஓஹோ! பூரா வீட்டையும் என் வீட்டு டெலிபோனுக் குள்ளேயே கட்டிவிடப் பார்க்கிறீர்களா! அது நடக்காது, ஸார்!'' என்று சொல்லி, ரிஸீவரை வைத்துப் பேச்சை முடித்துவிட்டார்.

ஸ்ரீ திருமலை என்னை வீட்டில் வந்து பார்த்தார். ஆஜானுபாகுவாக இருந்த அந்த மனிதர், எனக்கு நம்பிக்கை ஊட்டும் வகையில் பேசினார். உடனே கிணறு வெட்ட ஆரம்பிப்பதாகச் சொன்னார். ''என் குமாஸ்தா கேசவனும் வந்து அடிக்கடி கவனித்துக்கொள்ளுவான்... சிமிட்டிக்கு அப்ளிகேஷன் போட்டாச்சா?'' என்று விசாரித்தார்.

''இன்னும் போடவில்லை... ஆமாம், சிமிட்டி லொக்கியமா, சுண்ணாம்பு லொக்கியமா, ஸார்?'' என்று நான் கேட்டேன்.



''டின்னருக்குக் குஞ்சாலாடு போட்டால் தேவலையா, மைசூர்ப் பாகு போட்டால் தேவலையா-அது மாதிரிதான்! சில பேருக்குச் சிமிட்டி பிடிக்கும், சில பேருக்குச் சுண்ணாம்பு பிடிக்கும்... நான் இரண்டிலும் கட்டியிருக்கிறேன். வாருங்கள், காண்பிக்கிறேன்! டாக்டர் மணி வீடு நான் கட்டிக் கொடுத்ததுதான்; முழுக்க முழுக்கச் சிமிட்டி...''

''இல்லை, சுண்ணாம்பை நன்றாக அரைத்துக் கட்டி விட்டால் அதற்கு நிகர் இல்லை என்கிறார்களே...''

''அதுவும் வாஸ்தவம்; ஆனால், கான்கிரீட்டுக்கு எப்படியும் சிமிட்டி வாங்கித்தானே ஆகவேணும்?... கூரைக்கு ஆர்.ஸி. தானே போடப் போறேன்?''

''உங்களுக்கு என்ன ஸார் தோன்றது?''

''நீங்கள் எப்படிச் சொல்கிறீர்களோ அப்படிச் செய்து தருகிறோம்.''

''இல்லை; எது தேவலை என்று நான் இப்போ உங்களைக் கேட்கிறேன்!''

''பெரிய பெரிய கட்டிடங்கள் எல்லாம் ஆர்.ஸி.யில் தான் போடுகிறார்கள். எதுவும் இதுவரை என் காதில் விழவில்லை.''

''அப்படியானால் ஆர்.ஸி.யே இருக்கட்டும்!'' என்றேன், அவர் காதை ஒரு முறை நன்றாகக் கவனித்துவிட்டு.

''மெட்ராஸ் டெர்ரேஸும் போடலாம்... அதை எந்தச் சமயத்திலும் பிரித்து வேலை செய்யலாம். 'லீஸ்'ஸான மரமாகப் பார்த்துப் போட்டுவிட்டால் அதற்கு அழிவே இல்லை.''

''அப்போ, நாமும் மெட்ராஸ் டெர்ரஸே போட்டு விடலாமா?''

''போடச் சொன்னால் அப்படியே போட்டுவிடு கிறோம்.''

இதென்ன அவஸ்தை என்று நான் நினைத்துத் தவித்துக்கொண்டிருந்த சமயம், "நீங்கள் யாரை வேண்டுமானாலும் கலந்துகொண்டு சொல்லுங்களேன்...என், ஜயத்தையே கேட்கலாம்; அதற்கு இப்போ அவசரம் இல்லை...எதற்கும் சிமிட்டிக்கு ஒரு 'அப்ளிகேஷன்' எழுதிப் போடுங்கள்...'பெர்மிட்' வந்து சேர ஒரு மாசம் ஆகும்..." என்றார் அவர்.

"அப்படியானால், நாம் கட்டடம் ஆரம்பிக்கவும் ஒரு மாசம் ஆகும் என்று சொல்லுங்கள்!"

"உங்களுக்கென்ன அந்தக் கவலை?... நான் பார்த்துக் கொள்கிறேன். உங்களுக்கு இப்பவே வேலை தொடங்க வேண்டுமா? நான் ஆரம்பித்து விடுகிறேன்!" என்று சொன்னார். உடன், ஒரு பெரும் போக்கான புன்னகையும் செய்தார்.

ஸ்ரீ திருமலையின் சாமர்த்தியத்தை அந்தரங்கத்தில் வியந்து கொண்டே நான் அவருக்கு விடை கொடுத்தேன்.

நாலைந்து நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் காலையில் என் 'நில'த்திற்கு நான் போனபோது சில அதிசயங்கள் அங்கே நேர்ந்திருந்தன. அது என் நிலந்தானா என்ற சந்தேகமே எனக்கு முதலில் ஏற்பட்டு விட்டது. ஸ்ரீ திருமலை அத்தனை தென்னை மரங்களையும் அந்தர்த்தானமாக்கி யிருந்ததுடன், முன்புறத்தில ஒரு சிறு குடிசையும் போட்டு இருந்தார். உள்ளே எட்டிப் பார்த்த நான், அதனுள் சில சிமிட்டி மூட்டைகளைக் கண்டு பிரமித்தேன். நிலத்தின் பின் பாகத்தில் கிணறுக்காகச் சுமார் எட்டடி வரை பள்ளம் தோண்டியிருந்தார்கள். இரண்டு மூன்று அடுக்குகளாக ஆறடி உயரத்துக்குப் புதுச்செங்கல் வேறு அடுக்கப் பட்டிருந்தது.

நான் சென்ற சிறிது நேரத்திற்கெல்லாம் கட்டை குட்டையாக ஒரு ஆசாமி என்னை நோக்கி வந்து, "நீங்கள் தான் .....?" என்று இழுத்தார். அவர் குரல் சற்றுக் கீச்சென்று கேட்டது.



"நான்தான்......" என்று நானும் இழுத்து, "தாங்கள் யார்? தெரியவில்லையே!" என்றேன்.

"இனிமேல் என்னை நீங்கள் அதிகம் சந்திக்க வேண்டி யிருக்கும்......நான் மிஸ்டர் திருமலையிடம் இருக்கிறேன், கேசவன்!" என்றார்.

"ஓஹோஹோ—!...சொன்னார், சொன்னார்...கேசவன் என்கிறது...?"

"நான்தான், நானேதான் அது......ரொம்ப நாளாக இருக்கிறேன் திருமலையிடம். என்னை அவருக்குச் சொந்தம் என்றுகூடச் சில பேர் நினைத்துக்கொண்டு விட்டார்கள்!"

"சந்தோஷமாக இருக்கிறது. ஒரே இடத்தில் ரொம்ப நாளாக இருக்கிற பேரை எனக்கு ரொம்பப் பிடிக்கும்......"

"அது சரி...!ரொம்பச் சரி......திருமலை இருக்காரே பழகுகிறதற்குத் தங்கம்......நானே சொல்லக்கூடாது; டாக்டர் மணியின் வீடு கட்டிக் கொடுத்தோம் அல்லவா? கடைசியில் அவர் என்ன சொன்னார் தெரியுமா?"

"சொல்லுங்கள்; உடனே தெரிந்துகொள்கிறேன்! கேட்க ஆசையாக இருக்கிறது."

"திருமலையைக் கூப்பிட்டார். 'ஸார், உங்கள் பணம் எவ்வளவு பாக்கி? அதை வாங்கிக்கொள்ளுங்கள். அது என்னிடம் இருந்ததோ, எனக்கு ஒட்டாது'—அப்படின்னு சொல்லி, ஒரு 'செக்'கிலே எழுதி......"

"த்ஸொ! த்ஸொ!...டாக்டர் மணி அப்பேர்ப் பட்டவரா? அப்படி எத்தனை பேர் ஸார், பெரிய மனுஷாள் இந்தக் காலத்திலே இருக்கா?"

"மணியைப் பற்றிச் சொல்லவில்லை நான்!..... எங்கள் திருமலை இருக்கிறாரே, அப்படித் தங்கம் மாதிரி நடந்து கொள்வார், பழகுவார். ஒருத்தருக்கு வீடு கட்டினால் அது கட்டி முடிகிறமட்டும் 'தன் வீடு' என்றுதான் நினைப்பாரே தவிர..."

"அது வேணும், ஸார்! நான் ரொம்ப அதிர்ஷ்டசாலி! எனக்கு ஐயம் வேறு ஒத்தாசை செய்துகொண்டிருக்கிறார், பாருங்கள்—"

"நம்ம ஐயமா?......அடே அப்பா! அவர் சொல்றதெல்லாம் 'கர்ரெக்'டாக இருக்குமே! ஒரு விஷயம் கேளுங்கள்......"

நாங்கள் பேசிக்கொண்டிருந்த போதே கிணறு வெட்டும் ஆட்கள் வந்துவிட்டார்கள். கூடவே இரண்டு கொல்லத்துக்காரர்களும் வந்து சேர்ந்தார்கள்.

"கிணறு எப்படி ஸார் இருக்கும்?" என்று நான் கேசவனைக் கேட்டேன்.

"நாங்கள் கிணறு வெட்டி ஜலம் வராமல் இருந்ததே கிடையாது!"

"இப்போது இங்கே 'டிவைன'ரை வைத்துப் பார்த்தீர்களா?"

கேசவன் முகத்தைச் சுளித்துக்கொண்டார்: 'டிவைனர்' வைக்கலாம்......ஆனால், இந்தப் பக்கங்களுக்கு அது தேவையே இல்லை......இது என்ன சேலம் ஜில்லாவா?...... நமக்கு ஜலம் பதினாறு பதினெட்டடிக்குள் வந்துவிடப் போகிறதே!"

"ஓஹோ! நிச்சயமாக வந்துவிடுமோ?"

"வராவிட்டால், மேலும் இரண்டடி தோண்டுகிறது!"

"வராமலேயே இருந்துவிட்டால்......"

"ஹி ஹ்ஹி......நமக்காச்சு அதற்காச்சு, கடைசி வரையில் ஒரு கை பார்த்துவிடுகிறது!" என்றார் கேசவன்.

"இதென்னடா இப்படி ஒரு கோணங்கி!" என்று நான் எண்ணியது என் முகத்தில் தோன்றியிருக்க வேண்டும். அதோடு எனக்குச் சட்டென்று என் தாயார் சொன்ன ஒரு விஷயமும் ஞாபகத்துக்கு வந்தது. "கிணறு என்றால் அடியில்



நெல்லிக் கட்டையினால் 'பிரேம்' செய்து கொண்டுதானே இறக்குவார்கள்? எங்கே நெல்லிக்கட்டை?" என்று பளிச்சென்று ஒரு கேள்வி போட்டேன்.

கேசவன் பதில் சொல்லத் திணறுவதுபோல் எனக்குத் தோன்றியது. அதே சாக்கில் கிணற்றையே நிறுத்தி விடுவோமோ என்று நான் துடித்துப் போவதற்குள் பின்னால் ஒரு குரல் கேட்டுத் திரும்பினேன். செங்கற்களுக்குப் பக்கத்தில் அஞ்சலி செய்தபடி ஒரு கொல்லத்துக்காரன் அரும்பு போன்ற மீசையுடன் நின்றுகொண்டு இருந்தான்.

"அது அவசியமில்லிங்கோ! வந்து...கெணறு கட்டியான பிற்பாடு ஒரு நெல்லித்துண்டு வெட்டிப் போட்டா எதெஸ்டமுங்கோ.....ரொம்ப வூடுங்கள்லே இப்பல்லாம் அப்படித்தானுங்கோ ஸெய்யறது!" என்றான் அவன்.

'நீ யார் குறுக்கே பேசுவது?' என்ற தோரணையில் ஆவேசமாகத் திரும்பிய என்னைக் கேசவன் மடக்கி, "இவர்தான் நம்ம மேஸ்திரி. பேரு கந்தசாமி என்கிறது..." என்று அவனை அறிமுகம் செய்வித்தார்.

"ஓஹோ! அப்படியா?"

"ஆமாமுங்கோ!......நம்ப அய்யாவுக்கு எவ்வளவோ வூடுங்க நானு தான் கட்டிக் கொடுத்திருக்கிறேனுங்கோ... நம்ம உஸ்மான் ரோடுக்குக் கிழக்காலே பெரிய பங்களா இருக்குதுங்களே......"

"எனக்குத் தெரியாது......உம்?"

"அது நான் கட்டினது தானுங்கோ..."

"ஓஹோ, சரிதான்! அப்படியா?"

"நம்ம வூடு கட்டணும்னு ஸொன்னாங்கோ...... 'அதுக்கென்னா, ஜோக்கா கட்டிடலாம்'னு நான் ஸொன்னேனுங்கோ......"

"ரொம்ப சந்தோஷம், அப்பா! நீங்கள் எல்லாம் கவனித்து நன்றாகக் கட்டினால், (என் வீட்டை ரொம்பப் பேர் பார்க்க வருவார்கள்!) உங்களுக்கு நல்ல பேரு கிடைக்கும்!"

இந்தப் பேச்சில் கிணற்றைப்பற்றி மறந்தே போய் விட்டேன். அங்கிருந்த குடிசையிலிருந்து ஒரு தோண்டி யுடன் ஒரு கிழவன் வெளிப்பட்டான்.

"இது யார்?" என்று விசாரித்தேன்.

"நம்ப வாட்ச்மேன் ஆறுமுகம்...மிஸ்டர் திருமலை எங்கே வீடு கட்டினாலும் ஆறுமுகம்தான் வாட்ச்மேன்...... ரொம்ப யோக்யன்......திருட்டுப் புரட்டு ஒன்றும் பேசப் படாது!"

"அதெல்லாம் இருந்தா அய்யாகிட்டே அரை நாவி பேர் சொல்ல முடியுமா?" என்றான் மேஸ்திரி.

"நமக்கு ஒரு வாட்ச்மேன் வேண்டியதுதானோ!" என்று கேசவனைக் கேட்டேன்.

"ஆஹா! இங்கே இனிமே சிமிட்டி, மரம், இரும்பெல்லாம் வந்து இறங்கும்.. பாருங்கோ, அதோ அங்கே ஒரு வீட்டில் ஜன்னல் வைத்தார்கள்; காலையில் வந்து பார்த்தால், அதைக் காணோம்! யாரைக் கேட்கிறது?"

"வாஸ்தவம்! வாட்ச்மேன் என்று இருந்தால், அவனையாவது நாம் கேட்கலாம் அல்லவா?" என்றேன் யதார்த்தமாக. ஆனால், நான் பரிகாசம் செய்வதாகக் கேசவன் நினைத்துக்கொண்டாரோ என்னவோ, வேறு பக்கம் பார்த்து, ஒரு சித்தாளுக்கு ஏதோ உத்தரவு கொடுத்துவிட்டு என் பக்கம் திரும்பி, "சரி...உங்களுக்கு நேரமாகிறது...நான் இங்கே கொஞ்சம் கவனிக்கிறேன்" என்றார்.



"பார்த்துக்கொள்ளுங்கள்... நன்றாகக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று பாதி அதிகாரமாகவும், பாதி கெஞ்சலாகவும் சொல்லிவிட்டு, வீட்டுக்குப் போனேன்.

அன்று மாலை ஸ்ரீ ஜயம் டெலிபோனில் கூப்பிட்டார். "கிணறு வேலை ஆகிக்கொண்டிருக்கிறது" என்றார்.

"நீங்கள் பார்த்தீர்களா? எப்படி இருக்கிறது, ஸார்?"

"தென்னண்டைப் பக்கம் நன்றாகச் சாய்ந்துகொண்டு இருக்கிறது..."

"ஐயையோ, அதற்கு என்ன செய்யலாம்? நான் ஓடிப் போய்ப் பார்க்கட்டுமா?"

"நீர் பார்த்தவுடன் அது நிமிர்ந்துவிடுமா? தவிர, நீர் போகும்போது அங்கே யாரும் இருக்க மாட்டார்கள்...நான் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். காலையில் பார்த்துக் கொள்ளலாம்."

"அதற்குள் அது ரொம்ப சாய்ந்துவிட்டால்—" என்று பதறினேன்.

"சாயாது, சாயாது, சாயாது!"

"நான் உங்களை உடனே வந்து பார்க்கிறேனே. இப்போ!"

"அது முடியாது; அது அவசியமில்லை; அதனால் உபயோகமுமில்லை."

"அப்போ நான் என்ன செய்கிறது?"

"வீட்டில் போய்ப் பேசாமல் தூங்கும்" என்று ரிஸீவரை வைத்து விட்டார் ஜயம்.

நான் என் 'க்ரவுண்டு'க்கு விரைந்து செல்வதற்குள் நன்றாக இருட்டிப் போய்விட்டது. கிணற்றுக்குள் எட்டிப் பார்த்தபோது இருளைவிடக் கரியதொரு அந்தகாரம் அதில் சூழ்ந்துகொண்டிருந்தது.

# 6. ஸ்ரீ திருமலைக்குத் தெரிந்தது!

தனக்கு வழிவிடாத சமுத்ர ராஜன்மீது ஸ்ரீராமனுக்கு வந்த கோபமும், பிரஹ்லாத ஸ்வாமியை மிக அவமதித்து ஹிரண்யன் தூணை உதைத்த போது நரஸிம்ஹனுக்கு வந்த ரௌத்ரமும், என் கிணற்றைச் சாய வைத்து விட்டார்கள் என்று அறிந்த எனக்கு ஏற்பட்ட ஆவேசத்துக்கு அருகே நிற்க முடியுமா என்பது எனக்குச் சந்தேகந்தான். "நாளைப் பொழுது விடியட்டும்...நான் என்ன செய்கிறேன், பார்......ஹூம்" என்று உறுமிக்கொண்டு கூட்டிலடைபட்ட சிங்கம்போல் என் வீட்டில் நடந்தேன்.

"எதற்கும் நீங்கள் சண்டை போட்டுக்கொள்ள வேண்டாம்...முதலில் அவராக என்ன சொல்கிறார் என்று கவனித்துக்கொண்டு......" என்று ராஜம் என்னைச் சமாதானப்படுத்த முயன்றாள்.

"ஷட் அப்! என் பணத்தைக் கிணறு வெட்டுகிறேன் என்று வாங்கிக் கொண்டுபோய் அதைக் கிணற்றுக்குள்ளே போட்ட மாதிரி செய்கிறது! நான் பணிந்து போகிறதா?" என்று கர்ஜித்தேன்.

"அதுதான் உங்கள் ஐயம்கூடச் சொல்லியிருக்காரே, நான் பார்த்துக்கொள்கிறேன் என்று......இப்போதுதான் வீட்டு வேலையே ஆரம்பித்திருப்பதால்—"

"அதனால்தான் ஒரு வழியாகத் தீர்த்துக் கட்டிவிடுவது சௌகர்யமாக இருக்கும் என்கிறேன்! அப்புறம் இதே மாதிரி ஒவ்வொன்றையும் இவர்கள் எனக்குத் தெரியாமல் ரகசியமாகச் செய்துகொண்டிருந்துவிட்டு, ஐயம் போய்க் கண்டுபிடித்துச் சொல்லிக்கொண்டிருக்க முடியுமா?... நீ சும்மா இரு, ராஜம்! உன்னாலேயே எனக்கு ரொம்பக்



காரியங்கள் கெட்டுப் போயிருக்கின்றன. ஆமாம்!" என்றேன்.

என் தாயார் வந்து இடையில் பேசினாள். "இப்போ என்னதான் சொல்கிறார்களாம்? சொல்லேன்?"

"போ, அம்மா! நான் எல்லாவற்றையும் ஒழித்துக் கட்டிவிடுகிறேன். இது நமக்குத் தெரியாத விஷயம், வேண்டாம் என்று முதலிலேயே நினைத்தேன்; அதே முடிவாக இருந்திருக்க வேண்டும்!"

"எல்லாம் முருகனை நம்பிவிட்டுவிடு" என்றாள் அவள். அவளால் பதில் சொல்ல முடியாத போதெல்லாம்-இப்படிச் சொல்லி என்னைப் பேசவொட்டாமல் செய்வது என் தாயார் வழக்கம்.

"பணம் ஆச்சே, அம்மா?"

"எல்லாம் சரியாக இருக்கும், பார்த்துக்கொண்டே இரு!"

என் பிள்ளை சின்னக்கண்ணனும் மருமானும் இதுவரை எங்கேயோ பதுங்கிக் கொண்டிருந்தார்கள். எனக்குக் கோபம் வந்திருக்கிறதென்றால் அந்தப் பிராந்தியத்தில் அவர்கள் தலை காட்டுவதே இல்லை. இதற்குள் என் கோபம் தணிந்திருக்குமென்று எண்ணி மெல்லத் தலையை நீட்டினார்கள்.

"என்னடா அது!... கையிலே கீறலா?" என்று அதட்டினேன்.

சின்னக்கண்ணன் தயங்கிக்கொண்டே, "கீழே விழுந்துட்டேன், அப்பா...... சிலேட்டு உடைசல் குத்திடுத்து......" என்றான்.

"ஏதுடா சிலேட்டு உடைசல்?"

"புது சிலேட்டுக்குத் தலைவலித்தாகிவிட்டது! ஒடிக்கு. அதை உடைத்துமாயிற்று" என்றாள் ராஜம்.

''மூத்தானாள் வாங்கினதையா?''

''ஆமாம்... அதுதான்!''

''என்னடா நினைத்துக்கொண்டிருக்கிறே... நான் என்ன ஜமீன்தாரா, தினம் ஒரு சிலேட்டு வாங்க... கழுதை!'' என்றேன். என் மருமான் கையில் இருந்த புது சிலேட்டை பார்த்ததும், ''இது ஏது?'' என்று உறுமினேன்.

''இன்றைக்கு வாங்கினேன்.''

''என்ன அவசரம் அதற்கு?''

''அம்மாவும் மாமியும்தான் வாங்கச் சொன்னா!''

''எல்லாருமாகச் சேர்ந்து என்னை ஒரு வழியாக குட்டிச்சுவராக்கி விடுங்கள்..... அங்கேயானால் அவன் கிணற்றைச் சாய்த்துக் கொண்டிருக்கிறான்; இங்கே நீங்கள் சிலேட்டு சிலேட்டாக உடைத்துத் தள்ளுங்கள். நான் ஒருமிக்க ஒழிந்து போகிறேன்... சட்! எனக்குச் சாதம் வேண்டியதில்லை!'' என்றேன்.

''நாழியாகிறது... சாப்பிட எழுந்து வாருங்கள்!'' என்றாள் ராஜம்.

''வேண்டாம், வேண்டியதில்லை. கிணற்று விஷயம் தீர்ந்த பிற்பாடுதான் சாப்பாடு.''

''அதற்கும் சாப்பாட்டுக்கும் என்ன சம்பந்தம்?... வேண்டுமென்று இன்றைக்கு அடை தட்டி வைத்துக் கொண்டு காத்திருக்கிறோம்.''

''தலைக்கு ஒன்று அதிகமாகப் போட்டுக்கொண்டு விடுங்கள்.''

''எழுந்திருங்கள். கை வலிக்க வெங்காயம் உரித்துப் போட்டுச் சூடாக வைத்திருக்கிறோம்.''

''கிணற்றில் ஒரு பிசகும் இருக்காது. நான் சொன்னேனே என்று பார்த்துக்கொண்டிரு!'' என்று சொன்னான் தாயார்.

''அதைத்தான் ஒரு தடவை சொல்லிவிட்டாயே அம்மா!''



''அம்மா இன்னும் சாப்பிடவில்லை; நீங்கள் இப்போ படுத்த வேண்டாம்!'' என்று ராஜம் மந்தார சுருதியில் எனக்கு உபதேசம் செய்தாள்.

''அப்படியானால், அதை இப்படிக் கொண்டுவந்து எறி! இன்று தொலைக்கிறேன்!'' என்றேன், விரக்தியுடன்.

காலையில் எழுந்ததும் கண்டிராக்டரைக் கண்டு கேட்பதற்கு நான் சட்டை போட்டுக்கொண்டிருக்கும் போதே, என் மருமான் உள்ளே ஓடி வந்து, ''திருமலை வந்துகொண்டிருக்கிறார்!'' என்று அறிவித்தான். ஒரு நாற்காலியை எடுத்துப் போட்டு அவரை வரவேற்றேன்.

ஸ்ரீ திருமலை உட்கார்ந்துகொண்டு ஒரு புன்னகையுடன் நாலா புறமும் என் வீட்டுக் கூடத்தைப் பார்த்தார். ''உம்ம்... புறப்பட்டுக் கொண்டிருக்கிறீர்கள் எங்கேயோ?'' என்றார்.

எனக்குக் கோபந்தான் புறப்பட்டுக்கொண்டிருந்தது. ஆனால், அவருடைய முகத்தில் இருந்த நிஷ்கவலையான பாவனைகளைக் கண்ட போது, சற்றுப் பொறுமையுடன் இருந்து கேட்டுப் பார்க்கலாமென்று தோன்றியது. மேலும், ஸ்ரீ ஐயம் எனக்குச் சொன்னதாகக் கூறுவது சரியல்ல என்றும் தோன்றவே, ''நான் நேற்றுச் சாயங்காலம் கிணற்றடிக்கு வந்திருந்தேன்'' என்றேன்.

''எப்போ வந்தீர்கள்?... நான் இருந்தேனே அங்கே?'' என்று கேட்டார்.

''நான் வரபோது 6-50 இருக்கும்.''

''சரிதான்! நாங்கள் சரியாக 6-45க்குக் கிளம்பி விட்டோம்.''

''ஓஹோ!... கிணறு நன்றாக வந்துகொண்டிருக்கிறது?''

''வருகிறதாவா?... ஹூ!... வராவிட்டால் அதை யார் விட்டார்கள்!''

நான் சிரித்தேன். ராஜம் ஒரு கதவிடுக்கின் மூலமாகப் பொறுமையைக் கடைப்பிடிக்கும்படி எனக்கு ஜாடை செய்து கொண்டிருந்தாள். "ஆமாம்...... ஜலம் தட்டுப்பட்டு விட்டதா?" என்று தொடர்ந்து கேட்டேன்.

"இன்றைக்குத் தெரிந்துவிடும்... பதினாறடி போய் விட்டோம். இரண்டடியிலும் வரலாம்; நாலடியிலும் வரலாம்... அது உங்கள் அதிர்ஷ்டம்!"

"என் அதிர்ஷ்டம், கிணறு சாயாமல் நேரே வரவேண்டும், ஸார்!... பாருங்கள். கோபாலபுரத்தில் ஒரு கிணறு வெட்டினார்கள். முதல் நாள் சாயந்திரம் இருந்தது; காலையில் பார்த்தால் காணோம்!"

"அதெல்லாம் ரொம்ப-ரொம்ப-அபூர்வம்!"

"நம்ம கிணறு நன்றாக இருக்கிறதென்று சொல்லுங்கள், போதும்."

"பேஷாக இருக்கிறது... வந்து பாருங்களேன்! இப்போ போகலாமா?"

"நீங்கள் சொன்னாலே சரிதான்...... ஆமாம், மிஸ்டர் ஜயம் வந்திருந்தாரோ?"

"நான் பார்க்கவில்லை... கேசவன் சொன்னான், இரண்டு தரம் வந்தாராம்."

"அவருக்கு என் விஷயம் என்றால் ரொம்ப அக்கறை!"

"இருக்க வேண்டியதுதானே! ஜயம் ஒரு உபகாரம் செய்வதென்று மனசு வைத்துவிட்டால், அழகாய்ச் செய்வார்."

"கிணறு நன்றாக இருக்கிறதென்று சொல்கிறீர்கள்?"

"நம்ம வேலைகள் எல்லாம் சுத்தமாக இருக்கும். என்னைப்பற்றி நீங்கள் விசாரித்துப் பார்க்க வேண்டும்..."

"நன்றாயிருக்கிறது! அதெல்லாம் அவசியமே இல்லை, எனக்கு நீங்கள் வீடு கட்டிக் கொடுக்கிறீர்கள். எத்தனை



பெரிய காரியம்! உங்களிடம் அதை ஒப்படைத்து நான் கவலைகளை மூட்டை கட்டி வைத்துவிட்டேன்."

"தாராளமாகச் செய்யலாம். என் சுபாவம், நான் செய்கிற வேலையில் மனச்சாக்ஷிக்கு விரோதம் இல்லாமல் நடந்துகொள்ள வேண்டுமென்பதுதான் ... பணம் கிடக்கிறது!"

"அது கிடக்கிறது, ஸார்! துச்சம்! நிமிஷம் சம்பாதித்து விடலாம். நல்ல பெயர் சம்பாதிக்கிறதுதான் ரொம்பச் சிரமம்!"

"நாம் ரெண்டு பேரும் ஒரு காரியத்தில் இறங்கி விட்டோம். நமக்குள் கூடிய வரையில் அபிப்பிராய பேதம் இல்லாமல் முடித்துக்கொள்ள வேண்டும் என்பது என் நம்பிக்கை."

"ரொம்ப நன்னாச் சொல்லிவிட்டேள்! இதென்ன சிரமம்! நீங்கள் சொல்கிறதை நான் ஒப்புக்கொண்டு விட்டால் போச்சு... நல்லதைத் தானே நீங்கள் சொல்லப் போகிறீர்கள்!... (எலே விச்சு! ஒரு டம்ளர் காபிகொண்டு வாடா!...) கொஞ்சம் காபி சாப்பிடலாமோல்லியோ?"

"இப்ப 'டைம்' என்ன?... எட்டு மணி அடித்துவிட்டால் நான் காபி சாப்பிடுகிறதில்லை!..."

"அதனால் என்ன, அரை டம்ளராகச் சாப்பிடறது... (எலே விச்சு! அரை டம்ளர் கொண்டு வாடா!) நம்ம வீடு சீக்கிரம் கட்டியாக வேண்டுமே!"

"இரண்டு மாசத்திலே வேணுமானாலும் முடிக்கலாம். ஆனால் நான் சில விஷயங்களிலே அவசரப்படறதில்லே. 'காங்கிரீட்' போட்டால் அது 'செட்' ஆக இவ்வளவு 'டைம்' கொடுக்கணும். இவ்வளவு ஜலம் விடணும்னு உண்டு. அதைக் கொடுக்கவிட வேண்டும். அஞ்ஞாதபுரம்னு கட்டினானே, அதிலே இந்த விஷயத்திலே கவனிக்கலே... இப்போ எங்கே பார்த்தாலும் 'க்ராக்ஸ்'!"

"அப்படியா! அடடே!"

"நம்ம ஜஸ்டிஸ்... வீடு கட்டினேன். அவசரப்படுத்தினார். 'ஸார், நீங்க என்னைத் தூக்கிலே வேணுமானாலும் போடுங்கோ... இந்த 'விண்ட்டேல்' கிட்டே பன்னிரண்டு நாள் போகப்படாது!' அப்படின்னு கண்டிப்பாய்ச் சொல்லி விட்டேன்! யாரானால் நமக்கு என்ன ஸார்!"

"'டைம்' ஆனா பரவாயில்லை, ஸார்! வேண 'டைம்' எடுத்துக்குங்கோ. வீடு நன்றாயிருக்கணும்... வீடு விஷயமா, ரொம்ப என்னை இழுத்துவிடாதபடியும் நீங்கள் பார்த்துக் கொள்ளணும்..."

"நீங்க சொல்லவே வேணாம்னா. என் சுபாவம், நம்மால் ஒருத்தர் கஷ்டப்படக்கூடாது. நான் கட்டின வீடுகளில் எல்லாரும் நன்றாக வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்...கோபாலையருக்கு நான் வீடு கட்டிக் கொடுத்த பிறகுதான் அவருக்குப் பெண் பிறந்தது."

"எலே! சின்னக்கண்ணா! உனக்கு ஒரு தங்கை இருக்கிறாள்டா!" என்றேன் என் பிள்ளையிடம். பிறகு திருமலையிடம், "ஸார்! என் சொந்தத் தமையனார் மாதிரி, உங்களிடம் நான் நம்பிக்கை வைத்து விட்டேன். உங்கள் பில்களைக் கூட்டிக்கூடப் பார்க்க மாட்டேன். அது என் சுபாவம்!" என்றேன்.

"என் சுபாவம், ஒரு காரியத்தில் பிரயாசை எடுத்துக் கொண்டால் நாலு ரூபாய் குறையும் என்றால், நான் சோம்பல்பட மாட்டேன்... நான் வரட்டுமா?"

இருவரும் எழுந்தோம்; கைகளைக் குலுக்கிக் கொண்டோம். இருவர் கண்களிலும் பாஷ்பம் பெருகிக்கொண்டிருந்தது. இந்த உலகில் எங்களை விட அதிக பாந்தவ்யமுள்ள பேர்கள் இருக்க முடியாது என்பதை உணர்ந்தோம்.

"என் அண்ணா!"

"என் தம்பி!"



வாசல்வரை போய் அவரை வழி அனுப்பிவிட்டு களிப்பே மலர்ந்த உள்ளத்துடன் திரும்பினேன். ராஜமும் சிரிக்கும் 'கட கடா குடு குடு' என்று சிரித்துக்கொண்டிருந்தாள். தானும் விஷயம் புரியாமலே சின்னக் கண்ணனும் சேர்ந்து சிரித்துக்கொண்டிருந்தான்.

"ஏன், என்ன தமாஷ்?" என்று கடுமையாகக் கேட்டேன்.

"இல்லை, இங்கே ராம ராவண யுத்தம் நடக்கும் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம். கடைசியில் அது விபீஷண சரணாகதியாகிவிட்டதே!" என்றாள் ராஜம் சிரிப்புடன்.

"அசடே! சண்டை போட்டுக்கொள்ள வேண்டிய காலம் எது என்று எனக்குத் தெரியும். இப்போ ஜயத்தின் [illegible] இங்கே நான் இழுத்திருக்கலாமா?"

"அதென்னமோ, விச்சு! உங்கள் மாமா 'சட படா' என்று பேசுகிறதெல்லாம் நம்மிடந்தான். மற்றபடி வெளியில் பேசினால் வெண்ணெய்!"

"அட சட்! நான் என்ன, அவருக்கு எஜமானனா?"

"போகட்டும், இப்போ கிணற்றைப் போய்ப் பார்க்கப் போகிறீர்களா, இல்லையா?"

"இப்போ முடியாது! ஆபீஸுக்கு நேரமாகிவிட்டது. சாயந்திரம் பார்த்துக்கொள்ளலாம். இப்போது அங்கே தான் போய் நின்றால், ஸ்ரீ ஜயம் அடிக்கடி சொல்லுகிற மாதிரி 'உத்தியோகம் போய்விடும்'!" என்றேன்.

அன்று ஆபீஸுக்குப் போனதும் ஸ்ரீ ஜயத்தை டெலிபோனில் கூப்பிட்டேன். "ஸார்! நீங்கள் நேற்று இரண்டு தரம் என் நிலத்தில் கிணறு வெட்டுவதைப் பார்க்கப் போயிருந்தீர்களாம். என்னுடைய நன்றியை எப்படித் தெரிவித்துக்கொள்வதென்று தெரியவில்லை" என்று சொல்லி, என் கண்களைத் துடைத்துக்கொண்டேன்.

"உமது நன்றி எனக்குத் தேவை இல்லை. அதை அனுப்பி விடாதேயும். இங்கே வைத்துக்கொள்ள இடம் கிடையாது; என்னைச் சுற்றி ஏகக்குப்பைகள் ஏற்கெனவே சேர்ந்து கிடக்கின்றன; போகட்டும்; நான் இரண்டு தடவை போனதாக அவர் சொன்னது சுத்தப் பிசகு!" என்றார்.

"அதெல்லாம் இல்லை; கேசவன் சொன்னதாகத் திருமலை என்னிடம் கூறியிருக்கிறார்."

"அது சரி இல்லை: கேசவனுக்குத் தெரிந்து நான் போனேன். அவனுக்குத் தெரியாமல் ஒரு தடவை நான் போனேன். ஆமாம், இப்போ கிணறு நிமிர்ந்துவிட்டதா?"

"நான் பார்க்கவில்லை. திருமலை வீட்டுக்கு வந்து சரியாக இருப்பதாகச் சொல்லிவிட்டார்... சரிதானே?"

"ரொம்ப சரி! கிணற்றை நிமிர்த்தினாலும் நிமிர்த்தாவிட்டாலும், உம் மனக்கோணலை நிமிர்த்திவிட்டார் என்று தெரிகிறது... ஆமாம், நீர் ஏன் காலையில் அங்கே போகவில்லை!"

"சாயந்திரம் போகப் போகிறேன்... நீங்கள் வர சௌகரியப்படுமா!"

"சௌகரியப்படாது; நான் அங்கே வரவில்லை!"

"ஏன், என் மேல் கோபமா?"

"உம்ம மேல் என்ன கோபம்?... இந்த மெட்ராஸில் உமக்கு வீடு கட்டித் தருவதைத் தவிர எனக்கு வேறு வேலையே இல்லையா?"

"நிஜமாகக் கோபந்தான்!... நான் இன்று காலையில் அங்கே போய்ப் பார்க்காதது பிசகுதான். சற்று வேலை அதிகமாக இருந்ததால் போக முடியவில்லை."

"உமக்கு எப்போ வேலைகள் குறைவாக இருக்கும்?"

"ஏன் கேட்கிறீர்கள், ஸார்?"



"இப்ப வீடு கட்ட வேண்டாம். அவகாசம் இருக்கிறபோது அதை ஆரம்பிப்போம்!... என்ன அவசரம்?... இத்தனை நாளும் ஒரு வீட்டில்தானே இருக்கிறீர்கள்? கிருஹப்பிரவேசத்தை ஒத்திப் போட்டுக் கொண்டால் போகிறது."

"ஸார், அப்படி இல்லை...நான் வர வேண்டுமென்றால் தினம் காலையும் மாலையும் வந்துகொண்டிருக்கிறேன். எனக்கு அது விஷயமாக ஒன்றுமே தெரியாதாகையால் நான் வந்தும்..."

"எனக்குந்தான் ஒன்றுமே தெரியாது. நானும் வரவில்லை என்கிறேன்."

"ஸார், ஸார்!"

"சரி, ஸார்! கிருஹப் பிரவேசத்தன்றே சந்திப்போம்... அதற்காவது கூப்பிடுவீர்களோ இல்லையோ?"

நான் தயங்கினேன். அதற்குள் மிஸ்டர் ஐயம் டெலிபோனை வைத்துவிட்டார்.

அதற்குப் பின் எனக்கு மனம் ஒரு நிலையில் இல்லை. ஐயமானால் கோபித்துக்கொள்கிறார்; திருமலையானால் நன்றாகச் செய்துவிடலாம் என்கிறார்; கேசவன் நடுவில் எப்போதோ மேற்பார்வை செய்யாமல் ஒதுங்கியிருக்கிறார்; கிணற்றை மட்டும் முடித்துக்கொண்டு மற்ற வேலைகளை ஒத்திப் போடலாமா என்ற எண்ணம் அடிக்கடி தோன்றி மறைந்தது.

அன்று மாலையில் டிபன் சாப்பிடப் போன இடத்தில், வீடு கட்டும் நண்பர் ஒருவருடன் பேசும் சந்தர்ப்பம் வாய்த்தது.

"உம்ம வீட்டு சமாசாரம் எல்லாம் எந்த மட்டில் வைத்திருக்கிறீர்கள்!.. நான் 'பேஸ்மெண்ட்' வரை வந்து விட்டேன். உம்ம கடக்கால் அகல ஆழம் எப்படி வைத்திருக்கிறீர்கள்?" என்று விசாரித்தார்.

"தெரியாது, நான் விசாரிக்கவில்லை."

"அதெல்லாம் கேட்டு வைத்துக்கொள்ளுங்கள்: நாங்கள் ஐந்தரை அடி போட்டோம். கீழே அகலம் மூன்றரை அடி கொடுத்தோம். ஆழத்தை விட அகலம் கொடுக்கிறது நல்லது என்று எங்கள் இன்ஜினீர் சொல்கிறார்...'பேஸ்மெண்ட்' வரை சுண்ணாம்புதானே?"

"எனக்குத் தெரியாது!"

"அப்படியே வைத்துக்கொண்டுவிடுங்கள். எங்கள் இன்ஜினீர் சொல்லிவிட்டார் : 'மேலே கட்டடம் எப்படி வேண்டுமானாலும் கட்டிக் கொள்; கீழே சுண்ணாம்பைப் போட்டுக் கட்டிவிடு, அதுதான் தொண்ணூறு வருஷமானாலும் அசைந்து கொடுக்காது' என்றார்."

"ஓஹோ, அப்படியா அது?"

"தரைக்கு மேலே மூன்றடி கொடுங்கள் 'பேஸ்மெண்டு'க்கு அதற்குக் குறைந்தால் நன்றாக இராது."

"இதுவும் உங்கள் இன்ஜினீர்தான் சொன்னாரோ?"

"அவரும் சொன்னார்; நானும் ரொம்ப இடங்களில் பார்த்து விட்டேன்...இப்போ நான் வருகிறேன். இன்று நம் வீட்டில் 'பேஸ்மெண்டு'க்கு 'லிண்ட்டெல்' போடுகிறார்கள்" என்று சொல்லி விட்டுப் போனார். 'லிண்ட்டெல்' என்றால் என்னவென்று யாரைக் கேட்கலாம் என்று நினைத்துக் கொண்டே என் நிலத்தை நோக்கி வந்தேன்.

தூரத்திலிருந்தே ஸ்ரீ ஜயத்தின் கார் நிற்பதைப் பார்த்துவிட்டேன். ஸ்ரீ திருமலை, கேசவன், கந்தசாமி மேஸ்திரி மூன்று பேரும் அவருடன் பேசிக்கொண்டு நின்றார்கள். பல ஆட்கள் கீழே போட்டிருந்த கோட்டின் அளவுக்குத் தரையை ஒழுங்காக வெட்டிக்கொண்டிருந்தார்கள்.

என்னைக் கண்டதும் ஸ்ரீ ஜயம், "நான் வருகிறேன். 'ஓனர்' வந்து விட்டார் பேசுங்கள்!" என்று புறப்படுவது போல் பாசாங்கு செய்தார்.



"இல்லை, இல்லை!...சற்று இருங்கள் ஸார்!" என்றேன்

"நான் இங்கே வரவே இல்லை. இந்தப் பக்கம் ஒரு வேலை இருந்தது. இவர் கையைத் தட்டிக் கூப்பிட்டு விட்டார்...கூப்பிட்டீர்களா, இல்லையா ஸார்?" என்றார் ஜயம்.

"இப்போது இவர்கள் வெட்டுகிறார்களே! எவ்வளவு ஆழம் வெட்டுவார்கள்?" என்று நான் விசாரித்தேன்.

"ரைட்டு! அப்படியல்லவா கேட்க வேண்டும்?...மிஸ்டர் திருமலை! இனிமேல் உங்கள் பாடு ஆபத்து!...'ஓனர்' விழித்துக்கொண்டு விட்டார்!" என்று கேலி செய்தார் ஜயம்.

திருமலை என்னைப் பார்த்து, "ஐந்து அடி வெட்டுவோம்" என்றார்.

"ஐந்தரை அடி ஆழம் இருக்கட்டும், அகலம் நன்றாக மூன்றரை அடி கொடுங்கள். 'பேஸ்மெண்ட்'டில் சுண்ணாம்பு தாராளமாக உபயோகியுங்கள். இதனால் ஒரு இருநூறு முந்நூறு ரூபாய் கூட ஆனாலும் பரவாயில்லை.. அஸ்திவாரம் முக்கியம்" என்றேன்.

திருமலை திகைத்துப் போயிருக்க வேண்டும். நாலைந்து முறை வாயைத் திறந்து திறந்து மூடிவிட்டு, "அப்படியே செய்வோம்!" என்றார்.

ஜயம் வெகு சிரமப்பட்டுச் சிரிப்பைச் அடக்கிக் கொண்டிருக்கிறார் என்று ஊகித்தேன். "ஓஹோஹோ! மந்திரியானமெல்லாம் ஏதோ புஸ்தகத்தைப் படித்திருக்கிறீர், தெரிகிறது!" என்றார்.

"இல்லவே இல்லை!"

"இல்லாவிட்டால், வீடு கட்டுகிறவர் யாரோ நன்றாகக் காதைக் கடித்திருக்கிறார்...காயங்கூடப் பட்டிருக்கும் போலிருக்கிறதே!"

"என்ன மிஸ்டர் திருமலை! நான் சொல்கிறது சரிதானே!" என்று நான் கேட்டேன்.

"நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும் அப்படித்தான் செய்வோம்" என்றார் அவர் சுருக்கமாக.

பிறகு கிணற்றைப்போய் எட்டிப் பார்த்தேன். என்கூடக் கேசவனும் வந்து அதை எட்டிப் பார்த்தார்.

"எப்படி இருக்கிறது கிணறு?"

"ஏன், சரியாகத்தானே இருக்கிறது?" என்றார் கேசவன்.

"ரொம்ப அடியில் இருக்கிறதே ஜலம்? இல்லையா?"

"நானும் அப்படித்தான் நினைத்தேன்; திருமலைகூட அதையேதான் நீங்கள் வர ஒரு ஐந்து நிமிஷம் முந்தி சொல்லிக்கொண்டிருந்தார்."

"இன்னும் கொஞ்சம் ஆழமாகப் போய்ப் பார்க்க லாமா?"

"நானும் அதையே கேட்டேன். வேண்டாம் என்று சொல்லி விட்டார். போகப் போகச் சரியாகிவிடும் என்று அவரும் சொன்னார்; மேஸ்திரியும் சொன்னார்."

"அப்படி என்றால், இது அவ்வளவுதானாகும்?"

"நீங்கள் சொன்னால் இன்னம் தோண்டலாம்... ஆனால், என்னத்துக்கு? கார்ப்பரேஷன் குழாய் வந்த பிறகு கிணற்றைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டேன்!"

"கிணறு வெட்ட வேண்டும் என்று சொன்னபோது வேறு மாதிரி என்னிடம் சொன்னார்களே."

கேசவன் என்னை அந்தக் கிணற்றில் பிடித்துத் தள்ளி விடுகிறாப்போல் பார்த்து, "வேறே மாதிரி யார் சொன்னா?" என்று கேட்டார்.

" 'குழாய்களை நம்பிக்கொண்டிருந்தால் 'ஹரோ ஹரா' தான். கிணறு இருந்தாக வேண்டும்' என்று யாரோ



சொன்னார்கள்... அது போகட்டும்; கிணறு வலப்புறம் கொஞ்ஞ்ஞ்சம் சாய்ஞ்சாப்பலே தோணல்லை?"

"நோ! நோ!...நன்னாய்ப் பாருங்கோ! நோ! நோ!"

"பார்த்துட்டுத்தானே சொல்றேன்!"

"நீங்கள் இந்தப் பக்கம் நின்று பாருங்கள், ரொம்ப 'ஸ்ட்ரெய்ட்'டா யிருக்கு!"

"இனிமேல் கிணற்றைப் பார்க்க வருகிறவர்களை யெல்லாம் அந்தப் பக்கமா அனுப்பி வைக்கிறேன்" என்று கூறி, கேசவனைக் கிணற்றில் தள்ளிவிடுகிறாப் போல் நான் உறுத்துப் பார்த்தேன்.

இதற்குள் கந்தசாமி மேஸ்திரி ஒரு குடம் ஜலம் இழுத்துக்கொடுத்து என்னைச் சாப்பிடச் சொன்னார். நான் அதை வாயில் விட்டுக்கொண்டு காறி உமிழ்ந்து விட்டுத் திரும்பியபோது, "வணக்கம் பல!" என்று ஸ்ரீஜயம் எனக்குச் சொல்லிவிட்டுப் புறப்பட்டார்.

"சற்று இருங்கள்! ஜலத்தைச் சாப்பிட்டுப் பார்த்தீர் களா?" என்று கேட்டேன்.

"பேஷாக இருக்கிறது! உங்கள் ஊருக்கு அருகில் திருவிசநல்லூரில் ஸ்ரீதர அய்யர்வாள் கிணற்றில் கங்கையைத் தருவித்தார். நீங்கள் அதைவிட ஒரு படி மேலே போயாச்சு!"

"அப்படி யென்றால்?"

"சமுத்திரத்தையே வரவழைத்துவிட்டீர்கள்! சரியான உப்பு!... ஆச்சு, அடுத்த வாரம் 'ஜிகுஜிகு' வென்று மூன்றடி உயரம் 'பேஸ்மெண்ட்' எழும்பி நிற்காதா!" என்றார்.

"இப்பவே நிலை செய்யக் கொடுத்தால் சரியாக இருக்கும்... மரம் வாங்கிவிடுகிறேனே" என்றார் ஸ்ரீ திருமலை.

இதற்குப் பிறகு தினம் காலையிலும் மாலையிலும்நான் போவதும் வருவதுமாக இருந்தேன். இரு முறை ஒன்ப

தங்குலம் சுண்ணாம்பு ஜெல்லி போட்டு, ஜலம் விட்டார்கள். அது கெட்டிப்பட்ட பிறகு சிமிட்டியினால் அடையாளம் செய்துகொண்டு அஸ்திவாரத்தின் கல் கட்டடம் கட்ட ஆரம்பித்தார்கள்.

நான் போகும்போது பல தடவைகளில் ஸ்ரீ திருமலையையோ அல்லது கேசவனையோ சந்திப்பேன். அவர்கள் இல்லாதபோது, கந்தசாமி மேஸ்திரி கும்பிடு போட்டுக்கொண்டு துள்ளி ஓடி வருவான். "இப்பத்தான் அய்யாவும் குமாஸ்தாவும் வந்து போனாங்கோ" என்று என்னிடம் சொல்லுவான்.

"அய்யா என்னைக் கூப்பிட்டாங்கோ, உங்க பேரை சொல்லி 'கந்தஸாமி, டேய்! அவரு வேலைதான்டா முக்கியம். வேறே எந்த வேலையானாலும் அப்புறந்தான்டா! போய் முன்னாடி அதைக் கௌனிடா' அப்பிடின்னு சொன்னாருங்கோ" என்று சொல்வது வழக்கம்.

"ஆமாம், இந்தச் செங்கல்லுக்குத்தான் 'ஸ்டாக் பிரிக்' என்று பெயரோ?" என்று அவனை விசாரித்தேன்.

கந்தசாமி மேஸ்திரி சடாரென்று குனிந்து ஒரு கல்லை எடுத்துக் கொண்டு நிமிர்ந்து, "இதுதானுங்க இப்போ கட்டற கல்லு. மளமளன்னு வேலையும் ஆவும்; பார்க்கச் சுத்தமாகவும் இருக்குமுங்கோ" என்றான்.

"கலவை எப்படி?"

"ஒண்ணுக்குப் பத்தும் போடுவாங்கோ...ஒண்ணுக்கு ஆறும் போடுவாங்கோ...நம்ம அய்யா எங்கேயும் ஒண்ணுக்கு எட்டுத்தான் போட்டுக் கட்றது...'பஸ்டா' இருக்குமுங்க!... அது எதேஸ்டமுங்கோ!"

நடுநடுவே மேஸ்திரி, "ஏய்! இந்திராணி! எம்மாம் நேரம்! ..போ சீக்கிரம்...பராக்கு பார்த்து நிக்கிறியா?" என்று கூச்சல் போடுவான். இந்திராணி என்ற வேலைக்கார பெண் ஒரு 'பாணலி'யில் கலவையைத் தூக்கிக்கொண்டு,



ஒய்யார நடை நடந்துகொண்டு அலட்சியமாகப் போய்க் கொண்டிருப்பாள்.

"ஒஹோ! நடை போடறியா!...போ, மளமளன்னு! ஆவட்டும்!"

'பேஸ்மெண்டி'ன் மீது முருகய்யன் வந்து கம்பி கட்டினான். ஜெல்லியையும் 'கலவை'யையும் அதன்மீது ஒரு பத்தியாகக் கொட்டினார்கள். மறுநாள் முதல் அதன்மீது குடம் குடமாக ஜலம் விட்டுக் கொண்டும் வந்தார்கள்.

"சிமிட்டி மேலே எவ்வளோ ஜலம் விடறீங்களோ, அவ்வளோவுக்கு நல்லதுங்க!" என்று மேஸ்தி விவரித்தான்.

"நிறைய விடேன்.. நான் குறுக்கே நிற்கப் போகிறதே இல்லை" என்று அவனுக்கு நான் தைரியம் சொன்னேன்.

ஸ்ரீ திருமலை ஒரு நாள் காலையில் வாசல் நிலை தயாராகிவிட்டதென்றும், அன்றே நாள் நன்றாக இருப்பதால் முகூர்த்தம் நடத்திவிடலாமென்றும் சொன்னார். என் குடும்பத்துடன் போயிருந்தேன். நிலையை நிறுத்துமுன் திருமலை என்னிடம் ஒரு பொட்டணத்தைக் கொண்டு வந்து காட்டி, "பாருங்கள், நவரத்தினப் பொடி இது!" என்றார்.

"எனக்கு இது தேவையில்லையே!" என்றேன் வெகுளியாக.

"இது உமக்கில்லை. உம் வீட்டு நிலை வாசலுக்கு. அதனுள் இதை வைத்துக் கட்டிவிடுவோம். எப்போதும் வாசற்படியில் இருக்கும். அதுதான் சாஸ்திரம்."

"சாஸ்திரப்படி நடத்துங்கள். இதை என்னிடம் காட்ட வேண்டியதுகூடச் சாஸ்திரந்தானோ?" என்றேன்.

திருமலை எனக்குப் பதில் சொல்லவில்லை. நிலைப் படியில் செய்திருந்த துவாரத்தில் மஞ்சளுடன் நவரத்தினத்தைப் பிசைந்து வைத்து மரச்சக்கையால் மூடினார். நிலையை வைத்ததும், கந்தசாமி மேஸ்திரி பூஜை செய்தார்.

பூஜை முடியும் சமயம் ஸ்ரீ ஜயம் வந்து,"பேஷ்! யதோக்த மாக நடந்துவிட்டது" என்று சொன்னார்.

"ஆமாம், ஸார்!......எனக்கும் ஒரு கவலை விட்டது!" என்றேன்.

ஜயம் என்னைப் பார்த்துச் சிரித்தார்: "கவலை விட்டதா?...உம்ம கவலை இன்று முதல் தானே ஐயா ஆரம்பமாகிறது? வீடு கட்டுகிறது என்றால் சும்மாவா?...... அய்யா அனுவப் போறார், நான் பார்க்கப் போறேனே!" என்றார்.

## 7. எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டியது!

எந்தத் தொழில்காரர்களாயிருந்தாலும் (மனித சுபாவங்களை அறிந்து அலசித் தள்ளுவதாக எண்ணிக் கொண்டிருக்கும் கதாசிரியர்களாயிருந்தாலும் கூடத்தான்!) ஒருவர் மதிப்பைப்பற்றி ஒருவர் அந்தரங்கத்திலாவது அபிப்பிராய பேதங்கள் கொண்டிருப்பார்கள். ஒரு வைத்தியர் இன்னொருவரைப்பற்றிக் குறிப்பிடும்போது, "என் தொழில்காரர்களுக்குள்ளேயே நான் குறை சொல்லக் கூடாது. இப்படித்தான் அந்த டாக்டர் அடிக்கடி தவறு செய்து வருகிறார்" என்று சொல்லியிருக்கிறார். ஒரு எழுத்தாளர் சகோதர எழுத்தாளரைப்பற்றி, "என்ன ஸார் எழுதறான் வர வர! மண்ணுமாதிரி!" என்று சொல்லி நான் கேட்டிருக்கிறேன். வாழ்க்கை என்ற போட்டா போட்டி ஸ்தாபனத்தில், இந்த அம்சம் இருந்துதான் ஆக வேண்டும் போலிருக்கிறது. கண்டிராக்டர்களும் இதற்கு



விதி விலக்காக இருக்க முடியாது என்பதை நான் அனுபவத்தில் தெரிந்துகொண்டேன்.

ஸ்ரீ திருமலையைப்பற்றி நான் விசாரிக்கப் போனபோது இதே அனுபவம் ஏற்பட்டது. ஓரளவு அதனால் மனக் கலக்கம் அடைந்தேன் என்றாலும் நான் நம்பக்கூடிய இடங்களில் மட்டும் அவரைப் பற்றி நல்ல அபிப்பிரா யங்களே கிடைத்தன. "உங்கள் வீடு கட்டுகிறது யார்?" என்று நண்பர் ஸ்ரீநிவாஸரங்கன் கேட்டார்.

"மிஸ்டர் திருமலை கட்டுகிறார், உங்களுக்குத் தெரியுமா அவரை?" என்று நான் திருப்பிக் கேட்டேன்.

"தெரியுமாவா?...உங்களுக்குத்தான் அவர் புதிசு. நல்ல மனுஷர்! நிறுத்தி நிதானமாகக் கட்டுவார்; நன்றாக இருக்கும் அவர் வேலை."

"அப்படியா!...சந்தோஷம்."

"திருமலையிடம் என்ன விஷயம் என்றால், நீங்கள் எப்படி இஷ்டப்படுகிறீர்களோ, அப்படிச் செய்து கொடுப்பார்."

"ஐயய்ய! இதென்ன வேடிக்கை! நம் இஷ்டப்படி கட்டிக்கொள்ளத்தானே நாம் 'கண்டிராக்டர்' என்றே வைத்துக்கொள்கிறோம்?"

"பச்சைக் குழந்தை மாதிரிதான் பேசுகிறீர்கள்... ஆயிரம் தகராறுகள் அதில்தானே வரும்? நான் சொன்னால் புரியாது...அதைத் தெரிந்துகொள்ள முடியாதபடி நல்ல வேளையாக உங்களுக்குத் திருமலை வந்து சேர்ந்தாரே!" என்று என் முதுகில் 'ஷொட்டு' கொடுத்தார்.

இன்னொரு இடத்தில் பேசும்போது அங்கிருந்த நண்பர் அஸ்திவாரச் சுவரின் அகலம் அடியிலிருந்து மேல்வரை எப்படி அது குறுகி வரும் என்றெல்லாம் எனக்கு விவரித்து "எல்லாம் கூட இருந்து கவனித்துச் செய்தீர்கள் அல்லவா?" என்று கேட்டார்.

"எனக்கு அதெல்லாம் தெரியாது. ஜெல்லியும் சுண்ணாம்பும் போட்டார்கள். அளவையெல்லாம் ஸ்ரீஜயம் பார்த்துக்கொண்டார். ஸ்ரீ திருமலையை நம்பி விட்டு விட்டேன்" என்று சொன்னேன்.

"தாராளமாக அவரை நம்பி விடலாம்......கொஞ்சம் எல்லாம் அதிகப்படியாகவே வைத்துச் செய்திருப்பார் அவர்!...ஆமாம், நிலை வாசல் வைத்துவிட்டீர்களோ, இல்லையோ?"

"வாசல் நிலை மட்டும் தயாராயிருந்தது; அதை நல்ல வேளைக்கு வைத்துவிட்டோம். நாலு நாள் ஆயிற்று."

"சரிதான். புதன் மூணில் இரண்டு, குரு ஒன்ணில் மூணு தானே?"

"அப்படி என்றால் என்ன?"

"உம்... அது தெரியாதா?......உங்கள் கட்டடத்தின் அகலம் என்ன?"

ஏனோ, அந்தச் சமயத்தில் அது எனக்கு ஞாபகம் வர மறுத்துவிட்டது. "தெரியவில்லையே!" என்றேன்.

"சரிதான், சரிதான்!.. எல்லாவற்றையும் அவரிடமே விட்டு விட்டீர்கள்!...அதுவும் ஒருவிதமாக அனுப்பற்ற பாடு தான்; நாங்கள் வீடு கட்டினபோது அங்கிருந்து அசைந்திருக்க மாட்டோம்."

"புதன் குரு என்றீர்களே, அதை மறுபடி கொஞ்சம் சொன்னால், நான் திருமலையை விசாரித்துப் பார்க்கிறேன்."

இனிமேல் என்ன பிரயோசனம்? அதெல்லாம் 'பிளா'னிலே இருந்திருக்க வேண்டுமே! திருமலையும் கவனித்துத்தான் செய்திருப்பார். வீட்டு அகலம் ஒன்பதால் மிச்சமில்லாமல் வகுபடும்படி இருக்கணும். ஒவ்வொரு பாகத்தையும் அளவாக ஒவ்வொரு கிரஹத்துக்கு ஒதுக்கிக் கொடுக்கிறாப்போல்......"



எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டியது!

"நம் வீட்டு மனிதர்களுக்கு அறைகள் பிரித்துக் கொடுக்கிறோமே, அதுபோல் தானே?"

"அப்படித்தான்! அதில், வாசற்படியில் குருவுக்கு அதிகம் இடம் கொடுக்க மாட்டார்கள்......கொடுத்தால், ரொம்ப ஆசாரமாக இருக்க வேண்டியிருக்கும்."

"ஸார்! நான் இப்போதே போய்த் திருமலையிடம் கேட்கிறேன். அப்படி அவர் மட்டும் குருவுக்கு அதிக இடம் கொடுத்திருந்தாரானால்......"

"நிலையைப் பிடுங்கி வைத்துவிடுவீரா?" என்றார் நண்பர்.

"அதெல்லாம் இல்லை!......அந்த வீட்டுக்குக் குடி போனது முதல் ரொம்ப ரொம்ப ஆசாரமாக இருந்து விடுவதென்று முடிவு செய்து விடுகிறேன்!" என்று சொல்லி விட்டு வந்தேன்.

ஸ்ரீ திருமலை கட்டிக்கொடுத்த ஒரு வீட்டின் சொந்தக்காரரையே அகஸ்மாத்தாக நான் சந்தித்தேன். "உங்களுக்கும் வீடு கட்டுகிறாராமே, கேள்விப்பட்டேன்" என்றார் அவர்

"ஆமாம்... திருமலை எப்படி?"

"தங்கமான மனிதர்!...எங்கள் வீட்டுச் சுவரில் ஒரு ஆணி அடிக்க முடியாது. நாலு நாள் முந்தி ஒரு சிறு ஓட்டை செய்யப் போய், 'ஜம்ப்பர்' உடைந்துவிட்டதுதான் மிச்சம்!"

"அவ்வளவு கெட்டியா சுவர்! பேஷ், பேஷ்!"

"எப்பேர்ப்பட்ட சிமிட்டி வாங்கிக் கொடுத்திருந்தேன்! சுவரை ஒண்ணுக்கு ஆறு; பூச்சு ஒண்ணுக்கு ரெண்டு; தளம் [illegible]ப்பாகம் ஒண்ணுக்கு மூணு; மூலை முடுக்குகள் எல்லாம் ஒண்ணுக்கு நாலு; அஸ்திவாரம் வரை ஒண்ணுக்கு மூணு; சில பேர் எல்லாமே ஒண்ணுக்கு எட்டு போதும் என்கிறார்கள். ஆனால் நான்......"

''கொஞ்சம் மெள்ளச் சொல்லுங்கள் : விவரங்களை சட்டென்று எழுதிக்கொண்டுவிடுகிறேன்'' என்று பேனாவை அவசரமாக எடுத்தேன்.

''அது என்னதான் கட்டுங்கோ, யார்தான் கட்டட்டு அந்தக கலவை கலக்கிற இடத்தில் 'ஓனர்' நி வில்லையோ; போச்சு, போச்சு கட்டடம்!...நான் நின்றே ஸார்!''

''நானும் கட்டாயம் நிற்கப்போகிறேன்! இப்பே இங்கே நிற்க அவகாசமில்லை'' என்று சொல்லிவிட் வந்தேன்.

வரும் வழியில் என் பால்ய சிநேகிதன் கிருஷ்ணசாமியை பார்த்தேன். அவன் ஒரு எலெக்டிரிக் கம்பெ வைத்திருக்கிறான். என்னடாது! என்னமோ வி கட்டறயாமேடா!'' என்று கேட்டான். 'டா' போட்டு பேசுவதில் நிபுணன்.

''ஆமாம் உனக்கு யாரடா சொன்னது, அத்தனை பெரிய ரகசியத்தை!'' என்று கேட்டேன்.

''பெரிய ரகசியமோடா! உன் வீட்டு பேஸ்தி கந்தசாமியை எனக்கு நாலு வருஷம் முந்தியே தெரியும்! 'எங்கேடா வேலை செய்யறே' என்று கேட்டேன்; சொல் விட்டான்.''

''தேவலைடா நீ! ரொம்ப சீக்கிரம் தெரிந்துகொண் விட்டாய். கந்தசாமி நல்ல வேலைக்காரன், இல்லை?''

''நல்லவன் என்னடா, கெட்டவன் என்னடா!......நா நல்லவனா, கெட்டவனா, அதைச் சொல்ல முடியுமாடா

''நாம் பல வருஷங்கள் பழகியும் அதை நா யோசித்துப் பார்த்ததே இல்லை! அதனால்தான் எ வீட்டுக்கு உன்னை 'லைட்' போட வைத்துக் கொள்ள மென்று நினைத்துக்கொண்டே வந்தேன்.''



''மேஸ்திரா போட்டுத் தரேன்டா... இப்போ நான் சீப் ...ஜினிடென்டு வி. ஜி. வெங்கட்டரத்னம் வீட்டில் ...போட்டுக்கொண்டிருக்கிறேன். இன்னும் ஒரு மாசம் வேலை ...இருக்கு... என்டா! உன் வீட்டுத் தளம் எப்படா ...போட்டாகும்?''

''...நான் நிறைய இருக்கிறது. எதற்கும் சொல்லி ...டுகிறேன். எவ்வளவடா பணம் ஆகும்?''

''அதெல்லாம் வீட்டைப் பார்த்து, நீ போடுகிற ...யின்'' 'லைப் பார்த்துத்தான் சொல்ல வேண்டுமடா! ...ரனதக் கொடுத்துவிட்டுப் போயேன்!''

''கொடுக்காமலிருந்துவிட்டால் சும்மா விட்டு விடுவாயா?''

''என்ன 'ஹவுஸ்-ஓனர்'! எங்கே இப்படி?... ஏறும் ...ண்டியில்!'' என்று ஐயம் கம்பீரமான குரலில் என்னை ...அழைத்தார். சட்டென்று கிருஷ்ண ஸ்வாமியை அவர் ...முன்னால் கொண்டுவந்து நிறுத்தி, 'இவரும் நானும் ரொம்ப நாள் சேர்ந்து படித்த பேர்' என்று அறிமுகம் செய்து வைத்தேன்.

''அதனால் ஒருத்தர் செய்கிற பிசகு இன்னொருத் ...தருக்குத் தெரியாது; எல்லாம் பழகிப் போயிருக்கும்! ...அப்புறம்?''

''இவா இங்கே ஒரு எலெக்டிரிக் கம்பனி வைத்திருக் கிறார்.''

''கேட்டவுடனேயே எனக்கு 'ஷாக்' அடித்துவிட்டது... அப்புறம்?''

''நம் வீட்டுக்கு 'லைட்' போட இவரையே வைத்துக் கொள்ளலாமென்று நினைத்தேன். அவரிடமும் அதைத் தான் சொல்லிக் கொண்டிருந்தேன்.''

''ஐயம் உரக்கச் சிரித்தார் : ''இனாஸ்மெட்டு! உமக்கு இவரோடு சண்டை போட்டுக்கொள்ள வேண்டிய காலம் ...வெகு சீக்கிரத்தில் வருகிறது.''

"அதெல்லாம் இல்லை. 'ஆகிறதைக் கொடு, போதும்' என்று சொல்லிவிட்டான் கிருஷ்ணஸ்வாமி!" என்றேன்.

"இந்தாரும்! இப்பத்தான் உம்ம வீட்டில் வர்சத்தாம் வைத்திருக்கிறது. ரூம்கள் எப்படி 'ஷேப்' ஆகிறது; எங்கெங்கே எந்தெந்த மாதிரி விளக்குப் பொருத்தினால் எடுப்பாக இருக்கும், எத்தனை விளக்கு வேணும்; எந்த மாதிரி 'பிட்டிங்ஸ்' - என்றெல்லாம் யோசனை பண்ண வேண்டாமா? ஹாலில் எப்படி விளக்கு, டைனிங் ரூமில் எப்படி விளக்கு, படிக்கிற உள்ளில் மேஜை எங்கே வரும் என்று பார்த்துச் செய்ய வேண்டாமா? இப்போ எங்க ஐயா விளக்குக் கொண்டு மாட்டுவார், உங்க 'கிளாஸ்-மேட்' ?"

"அதெல்லாம் நீங்கள் சொல்கிறபடி, பார்த்துக் கவனித்து..."

"ஏறய்யா வண்டியிலே!... உங்க வாட்ச்மன் ஜலமே விட மாட்டேன் என்கிறான்; சுவரெல்லாம் காய்ந்து போகிறது..."

காரில் உட்கார்ந்தேன். "வரேம், கிளாஸ்—மேட்டு! வணக்கம் பல!" - ஐயத்தின் கார் புறப்பட்டுவிட்டது.

"டேய்? அப்புறமா நான் வரேண்டா!" என்றான் கிருஷ்ணஸ்வாமி என்னிடம்.

நான் கட்டட வேலை நடக்கும் இடத்துக்குப் போனபோது, வாட்ச்மன் சுவர்மீது ஜலம் ஊற்றிக்கொண்டிருந்தான். "என்ன பெரியவரே! ஜலமெல்லாம் விட்டாச்சா?" என்று கேட்டார் ஐயம். அவன் பதிலை எதிர்பாராமலேயே சுவர்களைப் பரீட்சை செய்து, ஜலம் படாத பல இடங்களை அவனிடம் காண்பித்தார்.

"அது எல்லாம் உறிஞ்சிடுச்சுங்க!" என்றான் வாட்ச்மேன்.

"உறிஞ்சினால் மேலே ஊத்தறது!"

"கெணறு ஜெலம் பத்தலிங்க!"



ற்றோருக்கும் தெரிந்திருக்க வேண்டியது!

"அதனால் ஊற்றாமல் விடுகிறதா?... அதோ அங்கே இருக்கிற கிணற்றிலிருந்தாவது ஜலம் கொண்டுவர வேண்டும்."

"அதை அய்யாகிட்டச் சொல்லுங்க, சாமி!"

"உன்னை இங்கே ஜலம் ஊற்றத்தானே வைத்திருக்கிறது? 'என்டா ஊற்றவில்லை' யென்றால், அய்யாகிட்ட என்னத்தைச் சொல்றது? நேற்றைக்கும் நான் பார்த்தேன். நீ சரியாக ஊற்றவில்லை... இதென்ன, பணத்தைப் போட்டுத்தான் சுவர் கட்டியிருக்கமா, என்ன!"

"அதெல்லாம் அய்யாகிட்ட விவரமாகச் சொல்லிடுங்க சாமி!"

"உங்க அய்யா எங்கே இப்போ?"

"அது எங்கியோ? என்னைக் கேட்டா?"

"எப்ப வருவாரு?"

"வர்ருவாரு வர்ரப்போ!" - கிழவன் அவன் வழக்கப்படி மெள்ள ஜலம் ஊற்றிக்கொண்டிருந்தான்.

"என்ன ஸார், இது இப்படிப் பேசுகிறான் இவன்? என் பணத்திற்குத்தானே இவன் வேலை செய்கிறான்?" என்று கேட்டேன் ஐயத்திடம்.

"பணத்தைக் கொடுத்துவிட்டு வராமலேயே இருந்தால் இப்படித்தான் செய்வான் இவன். அதோ 'ஸைட்' ஆகிவிட்டார் உங்கள் திருமலை!"

திருமலை வரும்போதே கைகூப்பி "நமஸ்காரம், எது இந்தப் பக்கம் காலை வேளையிலே இரண்டு பேருமாக!... எனக்குப் பயமாயிருக்கிறதே!" என்று ஐயத்தைக் கேட்டுவிட்டு, "நான் உங்கள் வீட்டுக்குத்தான் போய் விட்டு நேரே வந்து கொண்டிருக்கிறேன்" என்றார் என்னைப் பார்த்து.

ஐயம் என்னை முதலில் தட்டி, "பார்த்தீர்களா, என்னையும் பிடித்து அலைக்கழித்து, அவரையும் சிரமப்

படுத்தியிருக்கிறீர்!... காலையில் என்னிடம் வந்து, 'ஸார், சரியாக ஜலமே விடவில்லை... நீங்கள் வந்து பாருங்கள். என்று இழுத்தீரே!... உம்ம வீடு, உம்ம கன்ட்ராக்டர்' உம்ம ஒர்க்மன்...'' என்றார்.

நான் திருமலையிடம் விஷயத்தைச் சுருக்கமாகச் சொன்னேன். அவர் தம் ஆளுக்குப் பரிந்துகொண்டு கோபித்துக்கொள்வாரே என்று நினைத்து ஏமாந்தேன். பழைய சமுகமான புன்னகைதான். ''அதற்கென்ன! நாளைக்கே வேறு ஆளாகப் பார்த்துப் போட்டுவிடுகிறேன்...சரவணன் என்று நம்ம ஆள் ஒருத்தன் வருகிறான். அவன் பொறுப்பாகச் செய்வான்...''

''அப்படியானால் இவனைத் தள்ளிவிடப் போகிறீர்களா?''

''நான் வேறு வீட்டில் உபயோகித்துக் கொள்கிறேன்!''

''இவர் வீடு நன்றாக வந்தால் போதுமே இவருக்கு!'' என்றார் ஜயம் கேலியாக.

''அப்படி இல்லை, ஸார்!''

''ரைட்டு! அடுத்த விஷயந்தான் அப்புறம்! மேலே மேலே போய்க் கொண்டிருக்க வேண்டும். இவரை நீங்கள் எதற்காக வீட்டில் போய்த் தேடினீர்கள், மிஸ்டர் திருமலை.

''இரும்புக்கு மனுப் போட வேண்டும். எல்லாம் எழுதிக் கொண்டு வந்திருக்கிறேன்'' என்று என் கையில் அதுபற்றிய விவரங்களைக் கொடுத்தார். சுமார் மூன்று டன் வேண்டியிருக்கும் என்று அதில் குறிப்பிட்டிருந்தார்.

எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வரவே, ''ஸார்! என் சிநேகிதர் ஒருவர் என்னைப் போலவே ஒரு வீடு கட்டுகிறார். தனக்கு நாலு டன் வரை ஆகும் என்று சொன்னாரே!'' என்று கேட்டேன்.



திருமலை என்னைக் கடுமையாகப் பார்த்து, ''என் வழக்கம், எது தேவையோ அதை மட்டுந்தான் நான் போடுவது'' என்றார்.

''அது நியாயம், ஸார்! ஆனால், போட்டதில் முக்கால் மட்டுமே கொடுப்பதால், கொஞ்சம் கூடப்போட்டு.....''

''கொடுக்கிறதைக் கொடுக்கட்டும்; போதாததற்கு மறுபடி போட்டு வாங்கிக்கொண்டுவிட்டால் போகிறது.''

''சிரமம் இல்லாமல் நடத்திக்கொள்ளலாமே என்று நான் நினைத்தேன்.''

''நான் நேர்மையாக நடந்துகொண்டு வருவதால், கன்ட்ரோலர் ஆபீஸில் என் 'அப்ளிகேஷன்' என்றால் தனி மதிப்புக் கொடுப்பார்கள்.''

''சரி...உங்கள் பேச்சை நானும் இவரும் ஒப்புக் கொண்டாகி விட்டது அடுத்தபடி என்ன?'' என்று கேட்டார் ஜயம்.

எங்களுக்குப் பதில் சொல்கிறவர்கள் போல் அந்தச் சமயம் தச்சர்கள் கோஷ்டி பிரவேசித்தது. தலைமையில் 'டக்'கர்க உடை அணிந்து, பட்டு உருமால் வீசி, காதில் கடுக்கன் அணிந்து ஒரு இளைஞன் வர, பின்னால் வயது முதிர்ந்த இரு தச்சர்கள், ரம்பத்தைத் தோளில் சாத்தியபடி ஒரு சித்தாள், பெரிய டிபன் பாக்ஸைச் சுமந்தபடி ஒரு பையன் ஆகியவர்கள் வரிசையாக வந்தார்கள்.

''என்ன ருத்ரையா! வா! உனக்கு மூணு தரம் ஆள் அனுப்பி விட்டேன் நீ இப்பத்தான் மெள்ள வர்ரே!'' என்றார் திருமலை குறைப்பட்டுக்கொண்டு.

''ருத்ரையா'' என்று அழைக்கப்பட்ட தச்சு மேஸ்திரி எங்களையெல்லாம் ஒரு முறை பார்த்தான். அவன் உதடுகள் படபடவென்று துடித்தன; கண்கள் சிவந்து கொண்டு வந்தன. என்ன பதில் சொல்வானோ என்று திகைத்து நின்றபோது ''சொச்-சொச்-சொச்-

சொன்னாங்க...... ஒவ்-ஒவ்-ஒவ்-ஒவ்-ஒடம்பு சொவ பில்லிங்கோ நாலு நாளா!'' என்றான் அவன்.

திருமலை அவனிடம், ''பார்! நிலைக்கால் மட்டும் அவசரமாய்ச் செய்துகொண்டோம். பாக்கி அவ்வளவும் நீதான் செய்ய வேண்டும்! (என்னைக் காண்பித்து) இந்த ஐயாதான் கட்டுகிறார் வீடு! என்ன சொல்றே?'' என்றார்.

அவன், ''ஜஜ் ஜஜ்-ஜஜ்-ஜமாய்ச்சுப்பிடுவோம், சாமி!... சுஸ்-சுஸ் - சுஸ்- சுத்தமாயிருக்குமுங்க நம்ப வேலை'' என்றான். ஒரு குடும் எச்சிலை என்மீது அதனுடன் வாரித் தெளித்துவிட்டு, திருமலை பக்கம் திரும்பி மம்-மம்-மாத்துக்கு ஆர்டர்' கொக்-கொக்-கொடுத்திட்டீங்களா, சாமி?'' என்று இரைச்சல் போட்டுக் கேட்டான்.

''உம்... உனக்கு வேண்டியது மரந்தானே! நான் நாளைக்கே கொண்டுவந்து தள்ளிவிடுகிறேன்!'' என்றார் திருமலை,

''ரொம்ப மரம் வாங்க வேண்டியிருக்குமோ?'' என்று நான் இடையில் கவலையுடன் கேட்டேன்.

''முன்னாடி எல்லா நிலைகளுக்கும் ஜன்னல்களுக்கும் வாங்கிக் கொள்கிறது. அப்புறம் கதவுகளுக்குச் சட்டங்கள் பலகைகள் வாங்குகிறது... மெள்ள மெள்ளப் பார்த்துக் கொள்ளுவோமே!''

ஐயம் சிரித்தார். ''நீங்கள் எத்தனை மெள்ளச் செய்வதாக இருந்தாலும் இவர்தானே பணம் கொடுக்க வேண்டும்? அதற்காகக் கவலைப்படுகிறார்'' என்று சொல்லிவிட்டு, ''ஜன்னல்கள் எல்லாம் எப்படி அளவு?'' என்று வினவினார்.

''என்ன அளவு சொல்கிறீர்களோ, அப்படிச் செய்து விடுகிறது நாங்கள் மூன்றரைக்கு ஐந்தரை வைப்போம்.',

''நிலை வாசல் ஏழு அடி என்றால், தரைக்கு மேலே ஜன்னல் ஒன்றரை அடியில் இருக்கும், அல்லவா?'' என்று



கேட்டுவிட்டு, ஐயம் தமது யோசனை ஒன்றையும் உடனே எங்களுக்குச் சொன்னார்: ''ஒவ்வொரு ஜன்னலின் அடியையும் உட்காரும் இடமாகப் பலகை போல் அமைத்துக் கொள்வது. அதன் அடியில் ஜன்னல் அகலத்துக்கு மரக்கதவுகளுடன் ஒரு அலமாரியாகச் செய்துவிடுவது, இதனால் ஜன்னலாச்சு, அதில் உட்கார ஒரு இடம் ஆச்சு; இதே புஸ்தகங்கள் வைக்க ஒரு அலமாரியும் ஆச்சு... இப்போ உங்கள் வீட்டில் இருக்கிற மாதிரி புஸ்தகங்களை வைக்கவும் வேண்டாம்!''

''அதெப்படி வைத்திருக்கிறார் இவர் வீட்டில்?'' என்று ஸ்ரீ திருமலை விசாரித்தார் ஆவலுடன்.

''இவர் ஆபீஸ்-அறைக்குள் நான் போக வேண்டு மானால், ஒரு ஐம்பது புஸ்தகத்தை எடுத்து வெளியே போட வேண்டியிருக்கும்!'' என்றார் ஐயம். மேலும் தொடர்ந்து, ''நான் சொன்ன யோசனை உங்களுக்குப் பிடித்தால் செய்யுங்கள். இல்லாவிட்டால் தள்ளுங்கள்'' என்றார்.

''நீங்கள் சொல்கிறபடியே இருக்கட்டும், ஸார்!'' என்றேன்.

''கொஞ்சம் யோசனை தான் பண்ணுங்களேன். உடனே சரி என்பதானால் செய்ய வேண்டியதே இல்லை. போகட்டும், ஜன்னல் கம்பிகள் எல்லாம் எப்படி? புது 'பாஷ'னில் படுத்தாப் போல் வைக்கிறார்களே அப்படியா? சம்பிரதாயப்படி செங்குத்தாகவா?''

''நீந்-நீந்-நீந்-நீட்டுவாக்கிலேயே இருக்கட்டும் சாமி!'' என்றான் ருத்ரையா.

''ஏன்?''

''பப்-பப்-பப்-பப்-படுத்தாப்பிலே இருந்திச்சின்னா. எய்-எய்-எய்- என்னமோ மாதிரி இருக்குமுங்க.''

''உங்களுக்கு எப்படி இருந்தால், ஸார் பிடிக்கும்?'' என்று திருமலை என்னையே நேரிடையாகக் கேட்டார்.

"எது அழகாக இருக்குமோ அப்படிப் போடுங்கள்!" என்றேன்.

"அழகாக இருக்க வேண்டுமானால் கம்பிகளே போட வேண்டியதில்லை!" என்றார் ஐயம்.

"தேவலையே! திருடன் வந்துவிடுவான்!" என்றேன். ருத்ரையா மேஸ்திரி தமது சகாக்களைப் பார்த்துச் சிரித்தார். அவர்களும் சிரித்தார்கள். ஐயம் மட்டும் சிரிக்கவில்லை. "அவசரப்படாமல் கேட்பதானால் சொல்லுகிறேன், சில வீடுகளில் வெறும் கம்பி போடாமல் அழகழகாக வளைத்து வைத்திருப்பார்கள்; பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

கம்பி கட்டுகிற முருகய்யன், தனது பெரிய மீசையை இருபுறமும் ஒதுக்கிக்கொண்டு, "க்ரில்னு சொல்றீங்களா? நல்லாயிருக்குமுங்க!" என்று சம்பாஷணையில் சேர்ந்து கொண்டான்.

"ஓஹோ! 'ஜால்லி' சொல்றயா? பேஷாகப் போடலாமே!... நம்ப அடையாறு மருதமுத்துவுக்குச் சொன்னால், நன்னாவும் செய்து தருவான்; 'சீப்'பாகவும் நமக்கு அடங்கும்!" என்றார் திருமலை.

"அப்படியானால் நாளைக்கே மருதமுத்து வந்து விடட்டுமே!" என்றேன்.

"அவசரப்படாதீர்கள், மிஸ்டர்! மருதமுத்து வந்து என்ன செய்வான்? நீர் 'டிஸைன்' கொடுத்தால் அதன்படி செய்வான். 'டிஸைன்' கொடுங்கள்!" என்றார் ஐயம்.

"நீங்களே ஒன்று நல்லதாகப் போடுங்கள், ஸார்!" என்று கெஞ்சினேன்.

"நல்லது என்று கடையில் ஒன்று விற்கிறதா? அவரவர்களுக்குப் பிடித்தது. உமக்கு மார்கழி கிழங்கு பிடிக்குமா?"



எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டியது!

"ஐய! மூட்டைப்பூச்சி நாற்றம்! கிட்ட வந்தாலே குமட்டல் கண்டு விடும்."

"நம்மகிட்டே நரஸிம்மய்யங்கார் என்று ஒரு பேர்வழி இருக்கிறான். வீசை வீசையாக அதை வாங்கி வைத்துக் கொண்டு தின்கிறான்... நாலு இடத்திற்குச் சுற்றி, பிடித்ததாகப் பார்த்து வைப்பதா, இல்லையா!"

எழுந்திருந்த ஐயம், ஏதோ நினைத்துக்கொண்டவராக என்னிடம், "எங்கே எடும்! உம்ம 'டேப்,' ரூல் மட்டம் எல்லாம்... இப்போது அது வேண்டியிருக்கிறது" என்று கையை நீட்டினார்.

"நான் இன்னும் வாங்கவில்லையே!"

"நிச்சயமாக வாங்கவில்லையா?" என்று அதட்டின போது, எங்கே அதற்காகக் கோபித்துக்கொண்டு என்னைத் திருமலையுடன் விட்டு விட்டுப் போய்விடுவாரோ என்று பயந்து போனேன். அந்தப் பயத்தில், "வாங்கி வீட்டில் வைத்திருக்கிறேன்" என்று ஒரு பொய்யைக்கூடக் கூறி விடுவோமா என்று தயங்கின சமயம், "வீட்டில் வைத்திருக்கிறீர்களானால் நான் வந்து பார்ப்பேன்" என்று அவரே எச்சரிக்கை செய்தார்.

"இல்லை. இன்றைக்கு எப்படியும் ஒன்று வாங்கி விடுகிறேன், ஸார்."

"வேண்டியதில்லை இனிமேல் நீர் வாங்கவேண்டியதே இல்லை!"

"ஏன், ஸார்?"

"வாங்கக்கூடாது; ஏனென்றால், நான் வாங்கி வந்து விட்டேன். வண்டியில் இருக்கிறது; போய் எடுத்துக் கொண்டு வாரும்!"

மிகுந்த லஜ்ஜையுடன் சென்று எடுத்து வந்தேன். ஸ்ரீஜயம் 'டேப்'பை எடுத்துக்கொண்டு சில இடங்களை

அளந்தார். ஒரொரு சமயம் என்னையும் ஒத்தாசைக்கு அழைத்துக்கொண்டார். கந்தசாமி மேஸ்திரி, வாயில் குதப்பியிருந்த புகையிலையைத் துப்பிவிட்டு ஓடி வந்து எங்களைக் கவனித்தான்.

"மேஸ்திரியாரே! அளவு சரி இல்லையே!" என்றார் ஜயம்.

"சரியா இருக்குமுங்களே!" என்றான் கந்தசாமி.

"நன்றாகப் பார்த்தேன்: பார்த்துத்தான் சொல்றேன். ஹால் நீளம் பதினேழே முக்காலும், அகலம் பன்னிரண்டே காலும் இருக்கிறது. அதுவும் நாலு புறமும் அப்படி இல்லை..."

கந்தசாமி உடனே அளந்தான். ஜயம் சொன்னது சரிதான்! "இதைச் சொல்றீங்களா?" என்று கேட்டான்.

"ஆமாம்! இதையேதான்!"

"இது பூசும்போது சரி பண்ணிப்போமுங்க!"

"இப்பவேகூட அதைச் சரியாகக் கட்டியிருக்கலாமல்லவா!"

மேஸ்திரி தலையைச் சொறிந்துகொண்டான். சட்டென்று திரும்பி, "ஏ கழுதை! டாய் மன்னாரு! இங்கே வாடா!...என்னமா வேலை ஸெய்ஞ்சிருக்கிங்கோடா! மாடுங்களா! வந்து பாருங்கடா! உதவாக்கரைப் பஸங்களா!" என்று இரைச்சல் போட்டான்.

இரு கொத்தனார்கள் வந்து நின்றார்கள். கந்தசாமி தொடர்ந்து, "ஐயா கேழ்க்கிறாரடா! பதில் ஸொல்லுங்கடா!...இன்னாமா அவர் மொகத்தைப் பார்த்து ஸொல்றது? இந்தம் மா(தி)ரி கட்டிப்பிட்டு பெரிய கொத்தனாராங்காட்டியும் வெளியே வர்ரீங்களே..." என்றான்.

ஜயம் நிறுத்தி, "போதும்...அதுதான் பூச்சில் சரிசெய்து விடுவீர்களே! அதோ அந்தப் பொம்பிளைங்கள் எல்லாம்



இன்னம் ஏன் மணல் முட்டு மேலே விளையாடிக்கொண்டிருக்கிறார்கள்? நாங்கள் இதோ போய்விடப் போகிறோம். உள்ளே வந்து விளையாடச் சொல்லுங்கள்!" என்றார்.

அவர் குறிப்பிட்டவர்கள் வேறு யாருமில்லை. இந்திராணியும் அவள் சகியான சுந்தரவல்லியுந்தான். மேஸ்திரி உரத்த குரலில், "ஏ இந்திராணி! எழுந்து வர்ரயா இல்லை, இன்னிப்பூரா கதை பேசிக் குந்திக்கொண்டிருக்கப் போறயா?.. தொலைச்சு முளுவிடுவேன்!" என்றான்.

ருத்ரையா ஆச்சாரி ஜயத்திடம் வந்து, "ஸ்வாமி!" என்றான்.

"ஏன்?"

"நிந்...நிந் நிந்...நிலைக்காலுங்களுக்கு மே லே ய வெவ் வெவ் வெவ் வெவ் வெவ்....."

சின்னக்கண்ணன் அங்கே இருந்திருந்தால் ஆச்சாரி ஜயத்துக்கு அழகு காட்டுவதாகவே அர்த்தம் செய்துகொண்டு அதைச் சொல்லியும் இருப்பான். ஆச்சாரியின் அவஸ்தையைப் புரிந்துகொண்ட ஜயம் "வெண்டிலேட்டர் தானே, ஆச்சாரி? வேண்டியதில்லை! அதற்கு வேறு யோசனை வைத்திருக்கிறேன். நீங்கள் சிரமப்பட வேண்டாம், பிற்பாடு சொல்லுகிறேன்."

இந்திராணியும் சுந்தரவல்லியும் எங்களைப் பார்த்து என்னவோ சொல்லிக்கொண்டும் 'இடி இடி'யென்று சிரித்துக்கொண்டுமிருந்தார்கள் என்பதை நாங்கள் வரும்போது கவனித்தோம். ஜயம் என்னிடம், "நமக்கு இவர்கள் இன்று பெயர் வைத்துவிட்டார்களே! உமக்குத் தெரியுமா?" என்றார்.

"சொல்லுங்கள், ஸார்!"

"நான் இங்கே வரும்போதெல்லாம் குறை சொல்வதால் என் பெயர் 'மாமியார்' தனுக்காக வந்து பேசிச் சிரித்து

விட்டு, ஒருவருக்கும் நோகாமல் யாரையும் எதிர்த்துப் பேசாமல், நாஸுக்குடன் போகிறபடியால் நீர் 'மாப்பிள்ளை'!... வாரும், மாப்பிள்ளையாரே! உம்ம கட்டடத்தில் இனிமேல்தான் ரொம்பத் தகராறுகள் வரப்போகின்றன!'' என்று சொல்லிக்கொண்டே காரில் ஏறினார்.

## 8. மேஸ்திரிக்குத் தெரிந்தது!

யோசனையில் ஆழ்ந்தபடி வீட்டில் உட்கார்ந்துகொண்டிருந்தேன். சிமிட்டி இருபத்தோரு 'டன்'களுக்குப் 'பெர்மிட்' வந்து விட்டது. ஸ்ரீ திருமலை மனுப்போட்டிருந்தது இருபத்தைந்து 'டன்'களுக்குத்தான் "இப்போதைக்கு இது போதும். போகப் போகப் பார்த்துக்கொள்ளலாம்" என்று சொல்லிவிட்டார் அவர். இரும்புக்கு நான் அனுப்பியிருந்த 'அப்ளிகேஷன்' உடனே திரும்பி வந்துவிட்டது. ஆசிரியர் அங்கீகாரம் பெறாத கட்டுரைகளைப்போல்! அதனுடன் கண்ட்ரோலர் ஒரு கடிதம் வைத்திருந்தார், 'உம்முடைய பி. ஏ. நம்பருடன் 'ஞாங்ஷனா'கியிருக்கும் கார்ப்பரேஷன் பிளானையும் வைத்து அனுப்பினால் தான் உமது மனு கவனிக்கப்படும்'' என்று அதில் கண்டிருந்தது.

''ஸார்! இவ்வளவு நாள் வீணாகத் தாமதம் ஆகிவிட்டதே! முதலிலேயே நாம் அதை வைத்திருக்கலாமே!'' என்று திருமலை என் வீட்டுக்கு வந்ததும் அவரைக் கேட்டேன்.

''ஒன்றும் பெரிய மோசம் வந்துவிடவில்லை. இன்றைக்குத்தான் அனுப்புங்களேன். நாம் தளம் போடுகிற



சமயத்துக்கு வந்துவிடும்...வரவில்லையானாலும் பாதகமில்லை. இப்போதைக்கு இரும்பு வலை வாங்கிக்கொள்ளலாம்.''

''ஆமாம், ஸார்! எனக்கு ஒரு 'எஸ்டிமேட்' கொடுங்கள் என்று கேட்டேன், நீங்கள் இன்னம் கொடுக்கவே இல்லையே!'' என்று குறைப்பட்டுக்கொண்டேன்.

''நான் மறக்கவில்லை; சொல்லியிருக்கிறேன்! வீட்டில் இப்போது தயாராகிக்கொண்டிருக்கிறது...''

''அதிகமாக என்னை இழுத்துவிடாமல் நீங்கள்தான் பார்த்துக்கொள்ள வேணும், ஸார்!''

''அன்றைக்கும் சொன்னேன், இன்றைக்கும் சொல்கிறேன்...நான் வீடு கட்டிக் கொடுத்துவிட்டுப் போன அப்புறம் என்னை ஒருத்தர் வையாதபடி நான் பார்த்துக்கொள்ள வேண்டுமா, வேண்டாமா, சொல்லுங்கள்!''

''போகட்டும்! ஆறுமுகத்தை மாற்றி சரவணனைத் தண்ணீர் ஊற்றப் போடுவதாகச் சொன்னீர்களே!''

''ஆமாம்...அந்தச் சரவணன் பயல் நேற்றே வர வேண்டியவன்...வந்துவிடுவான்...நீங்கள் எதற்கும் கவலைப்பட வேண்டாம்; ஆறுமுகத்தையும் நன்றாகக் கண்டித்திருக்கிறேன்...''

''ஜன்னல்கள், வாசற்கால்கள்...''

''எல்லாம் தயாராகிக்கொண்டிருக்கின்றன, ஜன்னலுக்குத்தான் கம்பியில்லை, 'க்ரில்' என்று எப்போது தீர்மானம் பண்ணி விட்டீர்களோ, இனிமேல் கட்டடம் [illegible]மனவென்று வாசற்கால் உயரம் ஏறிவிட வேண்டியதுதானே?''

''அளவுகள் கொஞ்சம் சரியாக இல்லையென்று ஐயம் சொன்னாரே...நீங்களாவது கேசவனாவது அதையும் கவனித்துப் பார்த்து...''



27070

"அதெல்லாம் அப்படித்தான் இருக்கும். அங்குல கணக்கில் வித்தியாசப்பட்டால் ஒன்றும் முழுகிவிடாது. 'ஸ்டாக் ப்ரிக்' ஒன்பது அங்குலம் என்கிறான். ஒரு சமயம் ஒன்பதரையும் இருக்கு; எட்டே முக்காலும் இருக்கிறது."

"இருந்தாலும் ஐயம் பார்த்துப் பிசகைக் காண்பிக்கிற போது சிரமமாக இருக்கிறது. கேசவன்கூட இப்போதெல்லாம் அங்கே வருகிறதே இல்லை. நீங்களும் அங்கே வராமல் இருந்துவிட்டால்..."

"சேச்சே! முக்யமான வேலை என்றால் அங்கிருந்து அசைய மாட்டேனே நான்! கேசவனையும் நம்பமாட்டேன், நாராயணனையும் நம்பமாட்டேன். நானே நின்று பார்த்து கவனித்து..."

"ஸார், ஸார்! என்னால் என் மகிழ்ச்சியைத் தாங்க முடியவில்லை, சற்று நிறுத்துங்கள்" என்று கெஞ்சிக்கேட்டுக் கொண்டு என் கன்னங்களில் வழிந்த கண்ணீரையும் துடைத்துக்கொண்டேன். கொஞ்சம் நிதானித்து, "கிணற்றில் ஜலம் போதவில்லை என்கிறானே ஆறுமுகம்! அதற்காக ஜலம் விடாமல் இருந்துவிட்டால்" என்று கேட்டேன்.

"விடாமல் இருந்துவிடுவோமா? அது விந்திய மலை மேலே இருந்தாலும் கொண்டுவருவோம். பயப்படாமல் இருங்கள். ஐயம் எதையோ சொல்கிறார் என்று நீங்கள் மனசைப் போட்டு உளைத்துக் கொள்ள வேண்டாம்!"

"அப்படி இல்லை.. அவரும் விஷயம் தெரிந்தவர்."

"யார் இல்லை என்கிறார்கள்! நானும் எத்தனையோ வீடுகள் கட்டி அனுபவப்பட்டவன்தான்; அதையும் ஒப்புக் கொள்ளுங்கள்... டாக்டர் மணி வீடு கட்டினேனே, அப்போ கூட...."

"அதிருக்கட்டும். நம் வீடு ரொம்ப நன்றாக வரவேண்டும், ஸார்!"



"சந்தேகம் என்ன! நாங்கள் திருப்தியாகச் செய்து தரோம், ஸார்!"

"கொஞ்சம் காபி சாப்பிடறேளா?"

"இல்லை வேண்டாம்...சூடாக வெந்நீர் இருந்தால் கொடுங்கள்!"

"இன்னும் எட்டு அடிக்கவில்லை! நாலு நிமிஷம் பாக்கியிருக்கிறது. காபியே சாப்பிடலாம்" என்றேன்.

"என்ன சொல்கிறாரடா, தம்பி?" என்று கேட்டுக் கொண்டு, கண்ட்ராக்டர் சென்ற பிறகு என் தாயார் கூடத்துக்கு வந்தாள். விஷயங்களைச் சொல்லி, "இரும்பு வரவேண்டும்; இன்றுதான் மனுவையே அனுப்பியிருக்கிறேன். கிடைக்கிறது ரொம்பச் சிரமம், அம்மா" என்றேன் கவலையுடன்.

"ஒரு சிரமமும் இருக்காது... முருகனிடம் சொல்லிவிடு" என்றாள் அவள்.

"நீ இப்படித்தான் அம்மா, எதற்கெடுத்தாலும் சொல்கிறாய். நான் மட்டுமா வீடு கட்டுகிறேன்? எத்தனையோ மனுக்கள்! அதில் நம்முடையதைப் பார்த்துச் செய்ய வேண்டும். எனக்கு ஒரு இடத்தில் ஒருத்தரைப் பார்க்க முடியாது. கட்டடத்திலானால் வாட்ச்மன் சரியாக ஜலம் விடுவதில்லை என்று ஐயம் ரொம்பக் கோபிக்கிறார்."

"ஆறுமுகமா அப்படி?"

"அவனேதான்! சண்டித்தனம் செய்கிறான்; அவனை வேலையை விட்டு நீக்குகிறேன் என்கிறார் திருமலை."

"நம் வீட்டு வேலைக்காரர்களில் கந்தசாமி முருகய்யன், ஆறுமுகம் என்று எல்லாம் வேலன் பெயராக இருக்கிறதே என்று சந்தோஷப்பட்டேன், தம்பி!"

ராஜம் சமையற்கட்டிலிருந்து சின்னக்கண்ணன் வாயைத் துடைத்துவிட்டவாறு எங்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டே

வந்தாள். "ஆறுமுகத்தைத் தள்ளினால்கூட பதிலாக வருகிற ஆள் பெயர் சரவணன்தான், அம்மா! அதனால் பரவாயில்லை" என்றாள்.

நான் கட்டடம் நடக்கும் இடத்துக்குப் போகும் போதெல்லாம் கந்தசாமி மேஸ்திரியுடன் சற்று நேரமாவது அளவளாவாமல் வருவதில்லை. அவனுடன் பேசுவதில் எனக்கு இருந்த ஆசை அவனுக்கும் இருந்த தென்பதை நான் அறிந்துகொண்டிருந்ததனால் எங்கள் நட்பு அதிகமாகி வந்தது.

"ஆயிப்போச்சுங்கோ, ஸாமி! அஞ்சு, ஆறு, ஏழு, எட்டு ... வாசக்காலுங்க! எல்லாம் நாளன்னிக்கு வைச்சாயிப் போயிடும், ஸாமி!" என்று எண்ணிச் சொன்னான் அவன்.

"அப்புறம்?"

"ஜன்னலுதானுங்கோ அடுத்தபடி... அதுவும் என்னா பிரமாதம்; வாசக்காலுங்களை வைச்சுப்புட்டு, சுத்தி சுவரு ஒன்னரை அடிக்கு உயர்த்திக்கொண்டு வர்றதுக் குள்ளே, அதுவும் தயாராயிப் போயிடுமுங்கோ!"

"தேவலையே!... ஜன்னலை வைத்தவுடன்—"

"மளமளன்னு ஜன்னல் உயரம் ஏத்திவிட வேண்டியது தானுங்கோ. முன்னாடியே, 'லிண்ட்டெல்'லுங்களைப் போட்டு வைச்சுடறோம். 'டக்' 'டக்'னு மேலே தூக்கிப் போட்டுவிடலாம்!"

"அது சரி, மேஸ்திரி; இப்படி என் பக்கத்திலே வா! 'லிண்ட்டெல்' என்றால் என்ன?" என்று கேட்டேன்.

"அதுங்களா! இப்போ இந்த வாசக்கால் இருக்குதுங்களல்லே?"

"ஆமா, இருக்குது."



"இதுக்கும் மேலே 'காங்கிரீட்' போட்றதுங்க.. அதுதான் 'லிண்ட்டல்' சுவரில் அது ரெண்டு பக்கமும் தாங்கலாக கிடக்குமுங்க... அதும் மேலே எவ்வளோ பாரம் ஏத்தினாலும் தாங்கிக்குமுங்க."

"ஓஹோ! அப்படியானால் நிலைவாசல் மேலே பாரம் தாக்கவே தாக்காது என்கிறாய்?"

"அதேதானுங்கோ, ஸாமி - இந்தம் மா(தி)ரி, எல்லா வாசற்கால், ஜன்னலு எல்லாத்து மேலேயும் 'லிண்ட்டல்' போட்டுவிடுவோம். அதும் மேலேதான் மாடி மாடியா கட்டடத்தை உயர்த்துவோம்."

"பேஷ்பேஷ்! புரிஞ்சுது!" நன்னாப் புரிஞ்சுது என்றேன் உத்ஸாகமாக.

"இதுலே, கேளுங்க ஸாமி! 'பேஸ்மெண்ட்'டிலே தொடுக்கேவிடாமே 'காங்கிரீட்' போட்டமா? மேலே அப்படிப் போட வேணாமுங்க. எங்கெங்கே வேணுமோ அங்கங்கே மட்டும் போடறதுங்கோ. அதுக்காக இளேயே 'லிண்ட்டெல்'ங்களைப் போட்டு ஒளெட்டு நான் வைச்சிருந்து..."

"நன்னாப் புரிஞ்சுது... அப்புறம் மேலே தூக்கிப் போட்டு விடுவீங்க!"

"அதுவேதானுங்க, ஸாமி!"

"ஏது! நாளைக்கு நானே ஒரு வீடு கட்டிவிடலாம் போல் இருக்கிறதே!"

"என்னா பிரமாதம்; ஸாமி? இதைக் கவனிச்சுக்கிட்டு வந்தீங்கன்னா, அடுத்த வீடு ஜம்முனு இதைவிட நல்லா கட்டுவீங்களே!... உங்க புத்திஸாலித்தனத்துக்குக் கேட்கணுங்களா?"

"ஆமாம், கந்தசாமி! கீழே 'லிண்ட்டல்' போடுவதென்றால் அதற்கும் இரும்பு வேண்டும் அல்லவா?"

"ஓ!... நல்லா வேணும், ஸாமி!"

"இன்னும் இரும்பு வரவில்லையே?"

"அது அய்யாவுக்குத்தான் தெரியும், ஸாமி! நமக்குத் தெரியாது."

"அப்போ 'லிண்ட்டல்' போடுவதற்கு நாளாகும் அல்லவா?"

முருகய்யன் இடையில் பேசினான்:- "நம் ஐயா இரும்பு வலைக்குச் சொல்லியிருக்காருங்க; இண்ணைக்கு நாளைக்கு வந்துவிடுமுங்கோ!"

"அதற்கு மட்டும் 'கண்ட்ரோல்' கிடையாதா?"

"கிடையாதுங்கோ... 'லிண்ட்ட'லுங்க, ஸன்-ஷேடுங்க எல்லாத்துக்குமே அது போதும்..."

"தளம் போடுகிறதற்கு அது சரிப்படாதாக்கும்...?"

"போ...ஓ...ஓ...டலாமுங்க!... எவ்வளவோ பேர் போட்றாங்கோ, ஸாமி!...ஆ...னா, எட்டடிக்கு மேலே எங்கேயும் அதைப் போடறதில்லே!"

"அதற்குக்கூட அளவு இருக்கிறதா?" என்று விசாரித்தேன்.

முருகய்யன் மீசையைத் தள்ளிவிட்டுக்கொண்டு, "பின்னே? இல்லாமே இருக்குமுங்களா? இவ்வளவு சதுரத்துக்கு இவ்வளவு கனம் கம்பின்னு இல்லையா?... தளம் போடறப்போ, பெர்மிட் கம்பி வந்தாக வேணும், ஸாமி!"

"சமையற்கட்டு, சாமான் உள்ளு இரண்டுக்கும் மேலே பூராவும் பரண் வேண்டும் என்று ஐயம் சொல்லியிருக்கிறாரே, அதற்குக்கூட இரும்புக்கம்பி வந்துதான் ஆகணும் இல்லையா?"

"எ(த்)து வா னா லு ம் இரும்பு இல்லாமே காரியம் இல்லைங்கோ!" என்றான் முருகய்யன் முடிவாக.



இவனுடன் சிறிது நேரம் பழகுவதற்குள், இரும்புக்கம்பி கட்டுபவன் என்றாலும் தங்கமான மனம் படைத்தவன் என்று அறிந்துகொண்டேன்.

"முருகய்யன்!... ஸன்-ஷேட்களுக்கு கூடப் பொருத்திருந்து கம்பியே போட்டால் இன்னும் பலமாயிருக்கும்; இல்லையா?" என்றேன்.

"அவசியமில்லிங்கோ. இதுவே சாஸ்திங்க. இப்ப கம்பட்டார நாற்காலி பண்றோமுங்களே, அனாவஸ்யமா அதன் காலை மட்டும் பெரிசாப் பண்ணினா லாபம் என்னாங்கோ?"

"ஒண்ணுமில்லை."

"அதே மாதிரிதானுங்க... இவுங்க ஜன்னக்கால் உயரம் கட்டின அப்புறம், வெளியே முட்டுக்கொடுத்து, 'ஸன்-ஷேட்'டுக்கு 'ஸெண்ட்ரிங்' பண்ணிட்டாங்கன்னா..."

"புது வார்த்தையா இருக்கே அது?"

"ஆமாமுங்க... தச்சருங்க பலகையினாலே தளம் மாதிரியே போட்டுவிடுவாங்க. அது வலுவா நிற்கக் கீழே முட்டு வேறு கொடுத்திடுவாங்க... அது மாதிரி நீங்க பார்த்ததே இல்லையா?"

"இல்லை; சீக்கிரத்தில் நம்ம வீட்டிலே பார்த்துவிடறேன்."

"அதன் மேலே நானு கம்பி கட்டிவிடுவேனுங்க... அப்பறமே 'காங்கிரீட்' போட்டு, ஏழெட்டு நாள் ஜலம் காத்திக்கிணே வந்தா, 'கப்'னு புடிச்சுக்கும். பலகைங்களைக் களட்டிடலாமுங்க!"

"அப்புறம் முட்டுகளை எடுத்தாலும் ஸன்-ஷேட் விழாதாக்கும்?"

"விழுவாதுங்க...எதுக்கும், மேலே நாலு கல் முறை கட்டடம் கட்டிப்பிட்டுத்தான் முட்டுங்களைப் பிடுங்கி எடுப்பாங்க, எல்லாம் நீங்க பார்த்துக்கிணே வாங்களேன்!"

"நந்...நந்...நந் . நந் .. நமஸ்காரமுங்க, ஸாமி!" என்றான் ருத்ரையா, ஒரு புன்னகையுடன்.

"வா, அப்பா! நிலைக்கால்கள் எல்லாம் ரொம்ப சுத்தமாகச்செய்திருக்கிறாய்...வைத்துவிடலாம் அல்லவா?"

"ஓ! 'அஸ்திரி' அடிச்சுட்டாங்கன்னா, வை வை வை வை......"

"அஸ்திரி என்றால் ஏதானும் விஷ ஜந்துவா? அது நிலைக்கால் பக்கம் அடிக்கடி வருமா?" என்று நான் விசாரித்தேன்.

முருகய்யனும் ருத்ரையாவும் சிரித்தார்கள். கந்தசாமி, "அதில்லிங்க, ஸாமி! மரத்தும் மேலே ஒரு பெயின்ட் உடனே அடிச்சுடுவாங்க. கறையான் உளு கிளு அதும்மேலே அண்டாதுங்க......அப்பாலே உங்களுக்கு எந்த வர்ணம் இஷ்டமோ அதை அடிச்சிக்கலாம்" என்று விவரித்தான்.

'பாம் பாம்' என்று மோட்டார் சப்தம் அப்போது கேட்டது.

ஸ்ரீ ஐயமும் ஸ்ரீ திருமலையும் காரிலிருந்து இறங்கிப் பேசிக் கொண்டே வந்தார்கள். "என்ன மேஸ்திரியார்! எப்படி வேலை நடக்கிறது?" என்று கேட்டார் ஐயம்.

"ஒரே வாரமுங்கோ, வாசக்கால் உயரம் வந்துடுவோமுங்கோ!"

"எனக்கு அவசரமே இல்லை. மெள்ள நடக்கட்டும்; ஆனால், நன்னா நடக்கணும்... அதோ பார், உங்க கொத்தனார் கல்லை நனைக்காமலே கட்டறார்!"

திருமலை உடனே, "ஏம்பா! உங்களுக்கு நான் எத்தனை தடவை சொல்றது? வேலை செய்ஞ்சா ஒழுங்காய்ச் செய்யணும்......இப்போ என்ன அவசரம் வந்துட்டுது?" என்று கடுகடுத்தார்.

"அந்த ஆளு சுத்த உதவாக்கரைங்க; நாளை முத வேறே பார்த்து விட்டுடறேன்!" என்றான் கந்தசாமி.



"கண்ணில் பட்டால் குற்றம் சொல்லத்தான் வேண்டியிருக்கிறது. இப்படி நின்று பார். மூன்றடிச் சுவருக்குள் ஒரு கோணல்...சொல்லப்போனால், எல்லாம் பூச்சில் சரியாகப் போய்விடும் என்பாய்!" என்றார் ஐயம்.

"உங்களை எல்லாம் வைத்துக்கொண்டு வேலை வாங்குகிறதற்குள் என் பிராணனே போகிறதப்பா!" என்றார் திருமலை கந்தசாமியிடம்.

"பூச்சில் கோணல் என்று காண்பித்தால் வெள்ளையடிக்கிறபோது சரியாகிவிடும் என்பாய்" என்றார் ஐயம்.

கந்தசாமி அங்கிருந்து ஓடினான்.

"அலமாரிகள் ஜன்னல்கள் வருகிற இடங்களில் இவர்கள் பாட்டுக்குக் கவனமில்லாமல் கட்டிக்கொண்டு போய்விடப் போகிறார்கள்...அப்புறம் கடப்பாரையால் இடிக்கும்படி ஆகப் போகிறது" என்று எச்சரிக்கை செய்தார் ஐயம்.

"அதெல்லாம் நான் பார்த்துக்கொள்ள மாட்டேனா? எனக்கு வேறென்ன வேலை?" என்று கேட்டார் திருமலை.

"நான் அதற்குச் சொல்லவில்லை, ஸார்! நீங்கள் இல்லாத சமயம் இங்கே கிடுகிடென்று நடந்துவிட்டால்?"

"தவறாக நடக்காது; அப்படி நடந்தாலும், சரி செய்து கொடுக்க வேண்டியது என் பொறுப்பு."

நான் குறுக்கிட்டு, "செய்யும்போதே சரியாகச் செய்து விட்டால் போச்சு!...சற்று அங்கே உட்காரலாமா நாம்?" என்று மணல் மூட்டையைக் காண்பித்து, அதை நோக்கி நடந்தேன்.

"மிஸ்டர் திருமலை! 'க்ரில்'காரருக்கு ஆள் அனுப்புவதாகச் சொன்னீர்களே! ஜன்னல்கள் தயாராகின்றன போலிருக்கிறதே!"

"அது ஆனால் ஆகிவிட்டுப் போகிறது! 'க்ரில்' தனிப் பட்டச் செய்து, சொருகிக்கொண்டால் போச்சு!...அந்த

மருதமுத்துவுக்கு நாலு தடவை ஆள் அனுப்பியாச்சு... அடே சின்னசாமி!''

சின்னசாமி ஓடி வந்து நின்றான்.

''என்னடா, மருதமுத்துவைப் போய்ப் பார்த்தயாடா!'

''பார்த்தேனுங்களே! 'வர்ரேன், போடா' இன்னானுங்கோ......வரக்காணும்! இதோடே மூணு வாட்டி அவன் கிட்டச் சொல்லிட்டேனுங்க!''

''சரி, நாளைக்குக் கடைசித் தடவையாகச் சொல்லு. வராவிட்டால், வேறே இடத்திலே நாம் பண்ண வேண்டியதுதான்.''

''ஆசாமி 'சீப்'பாக இருப்பான்; அதோடே 'சோப் மாதிரி நழுவி விடுவான் போலே இருக்கிறதே!'' என்றார் ஐயம்.

அடுத்த வாரம் நான் கட்டடத்தைப் பார்க்க ராஜத்தையும் என் தாயாரையும் அழைத்துக்கொண்டு போயிருந்தேன். அங்கே அதற்குள் ஜன்னல்கள் எல்லாம் வைத்து விட்டார்கள்; சுவரை வீடெங்கும் அந்த உயரத்திற்கு எழுப்பியும் விட்டார்கள்.

''ரொம்ப வேலை நடந்துவிட்டதென்று உங்கள் பேச்சிலும் அமர்க்களத்திலும் நினைத்துக்கொண்டிருந்தேன். ஒன்றையும் காணோமே!'' என்றாள் ராஜம்.

''ஒரே வீச்சாக வீசி விடுகிறாயே! இதுவரை இங்கே எத்தனை வேலை நடந்திருக்கிறது!'' என்றேன் நான்.

''எத்தனை தப்புகள் செய்திருக்கிறோம்! அதையும் சொல்லுங்கள்'' என்றார் ஐயம்.

சுவரின் மேலிருந்தபடி இந்திராணி, சுந்தரவல்லி முதலியவர்கள் வெறித்துப் பார்க்க என் குடும்பத்தாருடன் நான் சுற்றிப் பார்த்துக்கொண்டு வந்தேன்.

''முன்னே எவ்வளவு சிறியதாகத் தென்பட்டது, அம்மா? இப்போ பெரியதாகப் போய்விட்டது மாதிரி



இல்லையா? 'லிண்ட்டல்' போட்டு இன்னும் மூன்றடி உயரத்துக்கு எழும்பிய பிறகு இன்னும் பெரிதாகக் காட்டும்...எப்படி அம்மா இருக்கிறது எல்லாம்?'' என்று கேட்டேன்.

''நன்றாகத்தான் இருக்கிறது. காற்றுத்தான் அசாத்தியமாக இருக்கிறது.''

''கூரை போட்டவுடன் கொஞ்சம் குறையும். ஜன்னல் கதவு போட்டால் நன்றாகக் குறைந்து விடும்!...வேறு யோசனை தோன்றினால் சொல்லுங்கள், கேட்கக் காத்துக் கொண்டிருக்கிறோம்'' என்றார் ஐயம்.

ராஜத்தை நான் தனியே கூப்பிட்டு, ''நீ மகாபுத்திசாலி என்று மனசுக்குள் நினைத்துக்கொண்டிருக்கிறாயே! திருமலை பக்கத்தில் ஒரு வீடு கட்டுகிறார். அந்த வீட்டு அம்மாள் எங்கெங்கே அலமாரிகள் வர வேண்டும் என்று அறை அறையாகக் குறித்துக் கொடுத்திருக்கிறாள்!'' என்றேன்.

''நீங்களும் என்னைக் கேட்டிருந்தால் சொல்லியிருப்பேன். உங்களுக்கு வீட்டுக்கு வந்தால் புஸ்தகம் படிக்கவும் சிநேகிதர்களுடன் வம்பளக்கவுந்தான் போது சரியாக இருக்கிறது!''

''சரி, நீ நாளைக்குப் போட்டுக் கொடேன், பார்க்கலாம்!''

''ஓனர்-ஹவுஸ்-ஓனர்!'' என்று உயரே இருந்து சப்தம் கேட்டதைப் பார்த்து நிமிர்ந்தேன். ஸ்ரீ ஐயம் ஒரு சுவரின் மீது ஏறி நின்று கொண்டிருந்தார். ''வாரும், அய்யா மேலே!'' என்று என்னையும் கூப்பிட்டார்.

''என்னால் அங்கே வர முடியாதே!'' என்றேன்.

''டப்ம சொந்தச் சுவர்! இதைக் கண்டு இத்தனை பயமா?''

"இல்லை, ஸார்! வரவில்லை!"

"இப்படிக் கையைக் கொடும், ஐயா!...கொடும் என்றால் கொடும்!"

மேலே இந்திராணி சிரிக்க, கீழே ராஜம் சிரிக்க, ஜயத்தின் கையைப் பற்றிக்கொண்டு மூன்று முறை எழும்பி நான்காவது முயற்சியில் ஒருவழியாக உயரே ஏறிவிட்டேன்.

நிலை வாசல்கள் மீது 'லிண்ட்டல்' ஏற்றிவிட்டார்கள். ருத்ரையா வெளி ஜன்னல்களின் ஸன்-ஷேடுகளுக்கு 'ஸெண்ட்ரிங்' செய்து விட்டான்.

"எல்லாம் சரிதான்! சமையற்கட்டு மேல் பரண் போடு கிறோமே, அதற்குத் தளம் போடும்போது கூட 'ஸெண்ட்ரிங்' உண்டோ?" என்று நான் விசாரித்தேன்.

"நிச்சயமாக உண்டு!" என்றார் திருமலை. "ஆனால் அதற்கு முந்தி தரையைக் கெட்டி செய்துகொண்டாக வேண்டும். ஜலம் கொட்டி திமுசு போட்டு, அதை உறுதி செய்துகொண்டுதான் சவுக்குக் கட்டைகளை நிறுத்தி வைப்போம்!"

"அதற்கும் முந்தி ஒரு காரியம் உண்டு!" என்றார் ஜயம்.

"என்ன?" என்று நான் ஆவலுடன் விசாரித்தேன்.

"ஒரு மழை பெய்த பிறகுதான் தளம் போடுகிறது, தாளம் போடுகிறது எல்லாம்! கட்டடம் மழைக்குக் கொஞ்சம் இறங்குமே? முன்காலத்திலெல்லாம் வீடு கட்டுவதென்றால், பேஸ்மெண்ட் வரை கட்டிவிட்டு மூன்று வருஷத்திற்குக் கிட்டே போக மாட்டார்கள். அமுங்கு கிறவரை அமுங்கட்டும் என்று. இப்போது அவசர காலம்! ஒரு மழையாவது பெய்யட்டுமே!" என்றார்.

தாமதமாகிறதே என்று என் முகம் வாட்டங் கண்டதைக் கவனித்து, "உமக்கு வருண ஜபம் தெரிந்தால் சொல்லிப் பாருங்கள்! எனக்கு ஆட்சேபம் இல்லை!" என்று சொல்லிக்கொண்டே அவர் கீழே இறங்கினார்.



ஸ்ரீஜயம் சொன்னபடிதான் நடந்தது. மூன்று நாட்களுக்குப் பிறகு மழை அடித்துப் பெய்தது. கட்டட வேலையும் ஒரு வாரம் நின்றது. ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு மறுபடி நாங்கள் வழக்கம்போல் கட்டடத்தில் சந்தித்தோம்.

"இனிமேல் பரணுக்கு தளம் போடும் வேலையை ஆரம்பிக்கலாம் அல்லவா?" என்று நான் கேட்டேன்.

முருகய்யன் வந்து, "கம்பி வந்துட்டுதுங்கோ! ஐயா சொன்னதும் நான் தயார்!" என்றான்.

"நந்...நந்...நந்...நாங்க அதுக்கும் முன்னாலே ரெடி" என்றான் ருத்ரையா.

ஸ்ரீ திருமலை கந்தசாமி மேஸ்திரியை, தரைக்குத் திமசு போட உத்தரவிட்டுவிட்டார்.

மூன்றாம் நாள் பரணுக்கு 'ஸெண்டரிங்' ஆகிவிட்டது. சமையல் அறை, சாமான் அறைகளுக்குள் பல பந்தல்கால்கள் நின்றன. ஆனால், ஜயத்துக்குப் பரண் அப்படிப் போடலாமா என்று சந்தேகம் தீரவே இல்லை. அனுபவம் உள்ள நண்பர்களையெல்லாம் கூப்பிட்டுக் கூப்பிட்டுக் காண்பித்தார். பல இடங்களுக்குச் சென்று பார்த்தார். திருமலையைக் குடைந்து குடைந்து பல கேள்விகள் கேட்டார்.

"எப்படிச் செய்யச் சொல்கிறீர்களோ அப்படிச் செய்து தருகிறோம்" என்று சொன்னார் அவர்.

"நன்றாயிருக்குமா?"

"இருக்கும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

"கான்கிரீட் போட்டுவிட்டால் அப்புறம் இடிக்க,மாற்ற முடியாதே!"

"போட்டால் போட்டதுதான்!"

"அப்படியானால், பரணைச் சற்றுக் குறைத்தே போடுவோமா?"

"அப்படிச்சொன்னாலும் நாங்கள் செய்து தருகிறோம்."

"உங்கள் அபிப்பிராயந்தான் என்ன?"

"நீங்கள் சொன்னபடி கேட்கிறோம்!"

கந்தசாமி மேஸ்திரியும் அதிக உபயோகமாக இல்லை. "போடுங்க ஸாமி... புது மோஸ்தராயிருக்கட்டுமே! ஹிஹ்ஹி..." என்று இளித்தான்.

"வீணாகப் போய்விட்டால்?"

"அதுவும் திர யோஸனை ஸெய்ய வேண்டியது தானுங்கோ!"

"உனக்கு என்ன தோண்றது?"

"நீங்கள் ஸொல்றதுனாலே, இது ஒரு மாதிரி நல்லா இருக்கவா முங்கோ!"

"செய்துவிடுவோமா?"

"தைரியமா ஸெய்ங்கோ ஸாமி!"

"இல்லை, கொஞ்சம் பொறுத்துப் பார்த்து..."

"பொறுத்துப் பார்த்து நிதானமா ஸெய்ங்க. அதில் நஸ்டம் என்னங்க?"

ஐயம் நின்று கவலையுடன் பரணைப் பார்த்துக் கொண்டிருந்தார். எனக்கு இது முற்றிலும் புரியாத விஷயம். அகஸ்மாத்தாகத் திரும்பினேன். கந்தசாமி மேஸ்திரி ஜயத்தைப் பார்த்துக் கேலியாகப் பின்னால் சிரித்துக் கொண்டிருந்தது என் கண்ணில் பட்டுவிட்டது.

"அடே! நல்லவன் போல் பாசாங்கு செய்து கூழைக் கும்பிடு போட்டுக்கொண்டிருக்கும் நீ, இத்தனை பொல்லாதவனா? என் வீட்டைப் பார்த்தா, எனக்கு உதவி செய்யும்



ஜயத்தைப் பார்த்தா நீ சிரிக்கிறாய்?... உன்னை இங்கே வைப்பதில்லை!" என்று மனதிற்குள் கருவிக்கொண்டேன்.

ஸ்ரீ ஜயம் புறப்படும்போது, "இருக்கட்டும், இந்தப் பரண் விஷயமாக நாளைக்கு நாம் ஒரு முடிவு செய்யலாம்!" என்றார் என்னிடம்.

"சரி, ஸார்!" என்றேன் சுரத்தில்லாமல்.

என் முதுகில் தட்டி, "மேஸ்திரி மேல் அவ்வளவு கோபம் வேண்டாம்!... இவனைத் தள்ளிப் புது மேஸ்திரி வைத்துக் கொண்டாலும் இப்படி இருக்க மாட்டான் என்று என்ன நிச்சயம்?" என்று கேட்டார் ஜயம்.

"ஸார்! உங்களையே கேலி செய்து சிரிக்கிறான், ஸார் அவன்!"

"போகிறான்!... நீங்கள் இப்போது முதல் தடவையாக அதைப் பார்க்கிறீர்கள்! கோபம் வருகிறது. எனக்கு ஐந்தாவது தடவை!" என்றார் சாந்தமாக.

"அவனை முதலில் துரத்திவிடுகிறேன் ஸார், திருமலையிடம் சொல்லி."

"கூடாது! கூடவே கூடாது! உங்கள் வீடு பூராவையும் நீங்கள் கட்டிக் கொள்ள வேண்டியது; அப்புறம் ஒரே தடவையாகத் துரத்த வேண்டியது... இந்த உலகத்தில் நம்மைப் பரிகாசம் செய்கிறவர், நம் மேல் கோள் சொல்கிறவர்கள், அசூயைப் படுகிறவர்கள், பழிக்கிறவர்கள் ஆகியவர்களை ஒதுக்குகிறதென்று ஆரம்பித்தால், நாம் மட்டுந்தான் தனியாக நிற்கவேண்டி வரும்!... நான் வருகிறேன். வணக்கம் பல!"

* * *

இதற்கு மூன்றாவது நாள் பரணுக்கு ஜல்லி போடும் வேலையில் ஆட்கள் மும்முரமாக ஈடுபட்டார்கள்.

# 9. எனக்கும் மெள்ள மெள்ளத் தெரிகிறது!

''நேற்று ராத்திரியெல்லாம் நான் தூங்கவே இல்லை'' என்று சொல்லிக்கொண்டே வந்து ஸ்ரீஜயம் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டார்.

''ஏன், உடம்பு ஏதானும் அசௌக்கியமா?...அல்லது கொசுக்கடியா?'' என்று நான் கேட்டுவிட்டு அவர் எதிரில் உட்கார்ந்து கொண்டேன்.

''என்ன ஸார், நீங்கள் பேசறது! இப்படி உங்கள் வீட்டுச் சமையல் கட்டுப் பூராவும் அடைத்துப் பரண் போடுகிறோமே. அது மண்டையில் மூட்டுகிறாப்போல் இருந்துவிடுமோ? புகை சரியாகப் போகுமா? வெய்யில் காலத்தில் அடுப்பையும் மூட்டினால் உள்ளே வெந்து போகுமா? ஒன்றுமே தெரியவில்லை! இப்போ எல்லாத்துக்கும் நீர் தலையை ஆட்டிக்கொண்டிருந்துவிட்டு, அப்புறம் என்ன சொன்னாலும் பிரயோசனம் இல்லை!'' என்றார்.

''நன்றாக வரும் என்று நினைக்கிறேன்'' என்று நான் மழுப்பினேன்.

''நான் சொல்றது, சமையல்கட்டுக் கூரையை உயர்த்தி வைத்தால், ஒரு கரி, ஒட்டடை எது பிடித்தாலும் ஒன்றும் செய்ய முடியாதே! ஏழரை அடி எட்டடியில் அது இருந்தால் நின்றபடியே கையால் தட்டி விடலாமே!''

''ஆமாம், ஸார்! அதுவும் செய்யலாம்!'' என்று ஒப்புக் கொண்டேன்.

''போங்கள்! திருமலையுடன் பேசிப் பேசி, எதைச் சொன்னாலும் நீங்களும் சரி, சரி என்கிறீர்!''



''அப்படி இல்லை. நீங்கள் சொல்கிறதில் சில நல்ல அம்சங்கள் இருக்கின்றன. பரீட்சை பண்ணிப் பார்க்கலாமே!''

''நான் இன்று விடியற்காலையில் இஞ்ஜினீர் நரஸிம்மனைக் கொண்டுவந்து காண்பித்துவிட்டேன். பல் தேய்த்துக்கொண்டிருந்தான். 'ஏறுடா, வண்டியிலே! அங்கே கிணற்றில் கை அலம்பிக் கொள்ளலாம்' என்று தூக்கிக்கொண்டு வந்துவிட்டேன்.''

''என்ன சொல்லுகிறார் அவர்?''

''நன்றாயிருக்கும் என்கிறார். ஆனால், நான் சோதனை செய்து பார்க்கப் போகிறது உம்ம பணம் ஆயிற்றே!......''

''அவரே சொல்லும்போது ரொம்பச் சரியாகப் போச்சு!.. பேசாமல் நடத்துங்கள்.''

''எனக்குப் பயமாகத்தான் இருக்கிறது. சரி, அப்புறம் 'கிரில்' விஷயம் என்ன ஆயிற்று?''

''ஒன்றும் ஆகவில்லை. திருமலையைக் கேட்கிறேன்.''

''உமக்கு மறதி ஜாஸ்தியாக இருக்கிறது. எழுதி வைத்துக் கொள்ளும்!''

ஜயம் போன பிறகு திருமலை வந்தார். ''இன்று ஃபானுக்குக் கம்பி கட்டிவிட்டோம்...பதினோரு மணிக்குள் எல்லாம் சௌகரியமானால் ஜெல்லியும் போட்டு விடுவோம்!'' என்றார்.

''கம்பியெல்லாம் சரியாகக் கட்டியிருக்கிறதா? பார்த்து விட்டீர்களா?''

''நீங்கள் யாரை வேண்டுமானாலும் கொண்டு வந்து காண்பித்துக் கொள்ளுங்கள். ஆட்சேபணை இல்லை.''

''அதற்குச் சொல்லவில்லை. கவனித்துச் செய்ய வேண்டிய விஷயம் அல்லவா?'' என்றேன்.

''நான் நன்றாகக் கவனிக்க மாட்டேனா?......நான் என்ன மடையனா?''

''இன்றைக்கு நீங்கள் ஏதோ கோபமாக இருக்கிறீர்கள் போலிருக்கிறது.''

''எனக்குக் கோபமே வராது. விட்டால் ஒரு கையா விடணும், அது கிடையாது; கப்பன், சேஷன், தேவதத்தன் என்று இருபத்தைந்து பேரைக் கொண்டுவந்து காண்பிக்கிறது. அவர்கள் ஆளுக்கு ஒன்றைச் சொல்கிறது; அதைக் கேட்டுக்கொண்டு நீர் என்னிடம் குதிக்கிறது.''

''ஸார், ஸார்! சொல்கிறவன் சொல்லிவிட்டுப் போகட்டும்!''

''நான் லட்சியம் பண்ண மாட்டேன். 'என்னடா தெரியும் உங்களுக்கு' என்று நானே கேட்பேன், எனக்கென்ன பயம்?''

''எனக்கு வேண்டியவர் ஐயம் ஒருவர்தான், அவர் தான் சொல்லுவார்.''

''பேஷாய் இருக்கட்டும்.''

''அவர் சொல்கிறபடி எல்லாம் நடந்துவிட்டால் எனக்குத் திருப்திதான்.''

''சரி, அப்படியாவது விட்டுவிடுங்கள். ஒரு எஜமானராகப் போகட்டும் எனக்கு. தலைக்குத் தலை பேசுகிறபோது நன்றாயில்லை. பாருங்கள் ....''

''ஒருத்தரும் ஒன்றும் பேசினதாகத் தெரியவில்லையே! நீங்கள் சொல்கிறதைப் பார்த்தால் நாங்கள் யாருமே அந்தப் பக்கமே வரக்கூடாது என்கிறீர்கள் போலிருக்கிறதே!''

''தாராளமாக வாருங்கள்; நான் ஒளிவு, மறைவு ஏதாவது செய்கிறேனா? அங்கே திருட்டுப் புரட்டு நடக்கிறதா?



''பார்த்துச் செய்வீர்கள் என்றுதான் எல்லாரும் சொன்னார்கள்.''

''இப்போது யார் இல்லை என்றார்கள்?''

''அதிருக்கட்டும், வேறு ஏதானும் விசேஷம் உண்டோ?''

''நான் வரேன்; இன்னொன்று. நீங்கள் பாட்டுக்கு ஒவ்வொன்றாக நினைத்து நினைத்துச் செய்யச் சொல்லிவிட்டு, விலை ஏறிற்று என்றால் நான் ஜவாப்தாரி ஆக மாட்டேன்!''

''அது சரி!...ஆமாம், 'எஸ்டிமேட்' தருவதாகச் சொன்னீர்கள்...இன்னும் எனக்குக் கொடுக்கவில்லையே!''

''அந்த மடையன் கேசவனிடம் நூறு தரம் சொல்லிவிட்டேன். நான்தான் போடவேண்டும் போலிருக்கிறது. சரி, போட்டுத் தரேன்.''

திருமலை போனபிறகு எனக்கு மிகக்க வலையே வந்துவிட்டது. என்றுமில்லாமல் இன்று ஏன் இவர் எரிந்து விழுகிறார் என்று எனக்குப் புரியவில்லை. ஐயம் குற்றம் கண்டு பிடித்ததில் கோபமா? வேறு யாராவது சொல்லிக் கொடுத்திருப்பார்களா?

கந்தசாமியுடன் முறைத்துக்கொள்வதிலும் லாபம் இல்லை என்று எனக்குத் தோன்றியது. அன்று அவன் கேலி செய்ததைப் பார்க்காதவன் போல் பாசாங்கு செய்து விடுவதென்று தீர்மானித்துவிட்டேன். நான் அங்கே போனவுடன், ''அய்யா வந்துவிடுவாங்க, ஸாமி! ஐயம் மட்டும் வந்துட்டுக் கார்லே 'விர்'னு இந்தப் பக்கம் இப்பத்தான் போனாருங்கோ!'' என்றான் மேஸ்திரி.

''அடேடே!...உம்...வேறு யாராவது வந்தார்களா?''

''ஏனுங்க! நெதம் எவ்வளவோ பேருங்க வர்ராங்களே! நேத்துப் பாருங்க, ஒரு அய்யரு ஒரு அம்மா வந்தாங்க. சுத்திப் பார்த்துட்டு, 'இந்த ஊடு நல்லாக் கட்றாங்கோ...

யாரு கட்றது இது?' அப்படீன்னு கேட்டாரு. அய்யா பார்த்தா, நல்லா உண்டானப்பட்டவராங்காட்டியும் இருந்தாருங்கோ. அப்புறம் நான்...உங்க பேரை ஸொல்லி... 'அவுங்க கட்றாங்கோ' அப்பிடீன்னு ஸொன்னேனுங்கோ. 'ஸர்தாண்டா'னு ரொம்பச் சந்தோஷப்பட்டுக்கினாங்க!''

''நன்றா யிருக்கிறதென்று அவரே உன்னிடம் சொன்னாரா?''

''என்கிட்டயும் ஸொன்னாரு. அவருகூட வந்த அம்மாகிட்டேயும் பேஸிக்கினே போனாரு!''

''ஓஹோ!''

''அவரு மாத்திரம் என்னாங்கா! இங்கே வர்ர மொத்தப் பேரும் பார்த்துட்டு, 'இந்தத் தெரு ஊடு அல்லாத்திலேயும் இதுதான் அளகு'ன்னு பேஸிக்கிறாங்கோ!''

''ஓஹோஹோ!''

தன் பண்டம் உயர்த்தி என்றுவிட்டால் நமக்குத்தான் என்ன திருப்தி! நம்மையே மறந்து விடுகிறோமே!

''ஆமானுங்கோ!... நான்கூட நேத்து, தேஸவர் வந்தாரே, அவருகிட்ட ஒரு பூசணிக்காய் வாங்கிக் கட்டிடணும்னு சொன்னேனுங்க!''

''நல்லதுதான், உடனே கட்ட ஏற்பாடு பண்ணு.''

''ஸெய்றேனுங்க. இப்பவே! டாய் கதிர்வேலு! இங்கே வாடா!''

கதிர்வேலு வந்து நின்றான். மேஸ்திரி அவனிடம், ''...யிலே கொத்தவால் சாவடியிலே போய் ஒண்ணே கால் ரூபாயிலே ஒரு பூசணிக்காய் வாங்கிட்டு வந்து, தெற்கு ...டியிலே கட்டிடணும் இன்னாடா?...'' என்றான்.

''கட்டிடறேனுங்க!''

''நாளைக்கு அய்யா வரச்சே அது அங்கே இருக்கணும்!''

''கட்டாயமுங்க... நாளைக்கிங்க.''



''இந்திராணி! கலவையைக் கவுனி! சுந்தரவல்லி! என்ன யானை மாதிரி அசை போடறே!...உம்?...''

''என் மேஸ்திரி! இன்றைக்கு ஜெல்லி போட்டு விடுவாயா?''

''ஆயிப்போச்சுங்களே, அய்யா வந்து விட வேண்டியது தானுங்க...?''

'இது எப்படிக் கலவை?''

''ஒண்ணுக்கு ரெண்டுக்கு நாலுங்க. ஒரு பங்கு சிமிட்டி, ரெண்டு பங்கு மணல், நாலு பங்கு ஜெல்லிங்க''

''என்னடாது, கந்தசாமி! புருடா அடிச்சிண்டு நிற்கற யாடா இவன் கிட்ட!'' என்று கேட்டுக்கொண்டு என் சிநேகிதன் எலெக்ட்ரீஷியன் கிருஷ்ணஸ்வாமி அங்கே வந்து சேர்ந்தான்.

கந்தசாமி ஒரு புன்னகை செய்து, 'இன்னைக்குப் பாணுக்குத் தளம் போட்டாயிடுமுங்க. மாடிப்படிங்க 'வாருவ'ப் போறேனுங்க'' என்றான் பிறகு என்னைக்காட்டி, ''இவரு அய்யா ஒருத்தர் வர்ராரு; அவரு ஸொன்னா ருங்கோ; 'மாடித் திருப்பத்திலே அரைப்படி அரைக்கால் படி ஒண்ணும் உதவாதுடா; ''வாண்டிங்'' மாதிரி போட்டுத் திருப்பிடு' அப்பிடின்னாருங்கோ! அதுவும் நல்ல யோசனை தானுங்க!'' என்றான்.

''அப்படியே செய்டா நான் இப்போ 'வைரிங்' பண்றேனே சீப் ஸூப்ரின்டெண்ட் வி ஜி வெங்கடரத்னம் வீட்டிலே, அங்கேகூட அப்படித்தாண்டா இருக்கிறது...''

''மாடிக்கு அடியில்தான் எலெக்டிரிக் மீட்டர் போர்ட் வாணும்னு சொல்றார் ஐயம்'' என்றேன்

''அப்படியே செய்துவிட்டால் போச்சு. சீப் ஸூப்ரின்டெண்ட்...''

''நம் வீட்டு லைட் விஷயமாக ஐயத்தையே நீ கேட்டுக் கொள்.''

"அதுக்கு இன்னம் 'டைம்' இருக்குடா! இவன் தளம் போட்டு முடியவே பதினைந்து நாள் பிடிக்குமேடா... எனக்கும் சீப் ஸுப்."

"அவுங்க; ஆவுங்க!... தச்சருங்கோ. மாடிப்படிக்கு நாளைக்கு 'ஸெண்ட்ரிங்' செய்றாங்கோ... அப்புறம் மைத்த இடங்களுக்குச் செய்தாவணும்..."

"கிளாஸ்மேட்டு! 'லைட்' எல்லாம் போட்டாயிட்டுதா? நான் வந்து பார்க்கலாமா?" என்று கேட்டுக் கொண்டு ஐயம் வந்தார்.

"எனக்கு இன்னம் பதினைந்து நாள் வேலை இருக்கே சீப் ஸுப்."

"என்ன 'ஓனர்'! பரணுக்கு ஜெல்லி போட்டாகி விட்டதா?"

"திருமலையை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். கலவை யெல்லாம் எப்படி என்று விசாரித்தேன் ஒண்ணுக்கு ரெண்டுக்கு நாலு என்கிறார்கள்."

"ரொம்பச் சரி! அதை நெட்டுருப் பண்ணிக்கொண்டு விடலாம். அப்புறம்?"

"ஏண்டா! கலவை கைக்கலவையாடா, மிஷின் கலவையாடா?" என்று கேட்டான் கிருஷ்ணஸ்வாமி.

ஒரு சொல்லுருவுடன் வந்துகொண்டிருந்த கந்தசாமி, "கைக் கலவைதானுங்க தரம். அது நல்லா கலந்து, தயிர்-ஸாதம் இருக்கு பாருங்க, தயிர் ஸாதம், அந்தம் மா(தி)ரி பதத்திலே போட்டா கெட்டியா நிக்குமுங்க. ரொம்ப நல்லா வருமுங்கோ!" என்றான்.

"நம் மேஸ்திரியிடம் 'மிஷின்' இல்லை; அதனால் கைக்கலவைதான் தரம் என்கிறார்!" என்றார் ஐயம்.

"இல்லைங்கோ, ஸாமி! ஊஸ்மான் ரோடிலே மிஷினே இருந்திச்சுங்கோ. அந்த ஊட்டுக்கார அய்யா



வந்து, "டாய்! மிஷின் கிஷின் கெடக்கட்டும். நமக்கு தரம்டா' அப்படின்னு ஸொல்லி..."

"சீப் ஸூப்ரிண்டெண்ட் வி. ஜி. வெங்கடரத்னம் வீட்டிலே எப்படின்னு கேட்டால்..." என்று கிருஷ்ணஸ்வாமி ஆரம்பித்து மேலே சொல்வதற்குள், அங்கே திடும்பிரவேசமாக ஸ்ரீ திருமலை வந்து சேர்ந்தார்.

வழக்கமாகக் காணப்படும் புன்னகை அவரிடம் அந்தர்த்தானமாகி யிருந்தது. ஏதோ காரியமாக அலைந்துவிட்டு வந்திருக்கிறபடியால் களைப்பாயிருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டேன். அவர் எங்கள் யாரையும் கவனிக்காமல், "எங்கே! கந்தசாமி! ஏன் இன்னும் ஜெல்லி போடவில்லையா?...எத்தனை நாழி?" என்று இரைந்தார்.

"அ(த்)தானுங்க கவனிச்சிட்டிருக்கேன்...ஏ சந்தானம்_ ரொம்பே நிக்கறுந்தே! ஒரு கொடம் தண்ணி கொண்டார எம்மாம் நேரம்டா!"

"கலவையெல்லாம் சுத்தமா ஒரு கையா இருக்கணும்... டாக்டர் மணி வீட்டுக்குப் போயிட்டு பாரு. அதே மாதிரி பார்த்துப் போடு...நடுவே நடுவே கலவை போதாமே போய், 'பப்பிள்ஸ்' கண்டுவிடப்போறது, ஜாக்கிரதை!" என்றார் திருமலை.

"சுத்தமா இருக்குமுங்கோ!"

திருமலை இப்போதுதான் ஐயம் வந்திருப்பதைக் கவனித்தார். "என்ன ஸார்! ஜெல்லி போட்டுவிடலாம் அல்லவா?" என்று கேட்டார்.

"யாரால் அதை நிறுத்த முடியும் இனிமேல்! நடக்கட்டும், நடக்கட்டும்."

"போடச் சொன்னால் போடுகிறேன், ஸார்! உங்களுக்கு ஏதாவது 'மிஸ்டேக்' என்று பட்டாலும் சொல்லி விடுங்கள்!"

"நன்றாயிருக்கிறது! தவறு கண்டுபிடிக்கும் அளவுக்கு எனக்கு என்ன தெரியும்? அங்கே இங்கே பார்த்ததை உங்களிடம் உளறிக்கொட்டி விடுகிறேன்; நீங்கள் சிரித்து விட்டுப் போங்கள்!...வணக்கம் பல!"

"என்ன ஸார், புறப்பட்டுவிட்டீர்களே!" என்று நான் கேட்டேன்.

"நின்றால் என் உத்தியோகம் போய்விடும்...உங்கள் புழக்கடைச் சுவர் பாதியில் நிற்கிறது; அதற்கு 'ஸெல்வார்' விடவில்லை. மறந்துபோய் விட்டான் உங்கள் மேஸ்திரி. ஞாபகப்படுத்துங்கள். செய்துவிடுவான்."

" 'ஸெல்வார்' என்றால் என்ன ஸார்?"

"எனக்குத் தெரியாது. அவரையே கேளுங்கள்! வணக்கம் பல!" ஐயம் காரில் சென்று விட்டார்.

திருமலை முகத்தில் ஜ்வாலை வீசிக்கொண்டிருந்தது. "மேஸ்திரி! என்ன வேலை செய்றீங்கடா நீங்க?"

"என்னாங்க?" என்றான் கந்தசாமி ஓட்டமாக ஓடி வந்து.

புழக்கடைக்குப் போனோம், திருமலைக்குக் கடுகடுப்பு அதிகமாயிற்று. மேற்கொண்டு தொடர்ச்சியாக சுவர் கட்ட வேண்டுமானால், அதில் செங்கற்களை நீட்டியும் குறைத்தும் வைத்துக் கட்டியிருக்க வேண்டுமாம். இதுதான் 'ஸெல்வார்' விடுவது என்பதாம். அது இங்கே விட மறந்திருக்கிறார்கள் என்பது ஐயத்தின் கண்ணில் எல்லாருக்கும் முன்னால் பட்டிருந்தது.

"என் மானம் போகிறது...உன் மாதிரி ஆட்களை வேலைக்கு வைத்துக்கொள்கிறதற்கு, இந்தக் கண்ட்ராக்ட் தொழிலுக்கே நான் முழுக்குப் போட்டுவிட வேண்டியது தான்."

"இல்லிங்க, ஸாமி! வந்து..."



"போடா! என்னிடம் பேசாதே! சுவரு கட்டற போதே மூளை எங்கே போச்சு'" என்று கேட்டார் இடிக்குரலில்.

கந்தசாமி பதுங்கிவிட்டான். நானும் கிருஷ்ணஸ்வாமியும் ஒருவரையொருவர் மௌனமாகப் பார்த்துக்கொண்டு நின்றோம்.

"ஏ ருத்ரையா!" என்று அதட்டினார் திருமலை.

"வவ் வவ் வர்ரேனுங்க!"

"நாளைக்குக் காலையில் ஆபீஸ் ரூம், ஹால் ரெண்டிலும் ஜலம் கட்டி திமுசு போடச் சொல்கிறேன். இரண்டே நாளில் அது பூராவும் சாரம் கட்டியாகணும், என்ன செய்துகொண்டிருக்கிறே இப்போ...?"

"மம் மம் மட்—"

"மாடிப்படிக்குச் சாரம் கட்றாங்கோ. நான் படி 'வருவ'றேனுங்கோ...ஐயம் அய்யா சொன்னாரு-" என்று கந்தசாமி பின்னால் வந்தான்.

"நீ ஏன் இங்கே வர இப்போ? போய், உன் வேலையைப் பாரு!" என்ற திருமலை, அவன் போன பிறகு, "மடையன்" என்று பல்லைக் கடித்தார்.

"நந் நந்-நாளைக்கே ஆரம்பிச்சுட்றேனுங்கே. கொக்-கொஞ்சம் பலவாய் மட்டும் வேணுமுங்க!"

"பலகையா! மாடபலம் வீட்டிலே நாளைக்கு 'ஸெண்ட்ரிங்' கழட்டுகிறோம். வேண்டியது வாங்கிக்கோ... அப்புறம் இல்லை என்று சொல்லாதே!"

"பப் பப் பப் பரண் ஸெண்ட்ரிங் பார்த்துட்டீங்களா ஸாமி?"

எல்லாரும் பரண் அடிக்குப் போனோம். ஆயிரக்கால் மண்டபம்போல் காட்சி அளித்த அந்த இடத்தில் ஒன்றிரண்டு கொல்லத்துக் காரர்களும் நின்றார்கள். மேலே கலவை கொட்டும் சப்தமும், கொத்தர்கள் அதைச்சமமாகக்

குத்திக் குத்திப் பரப்பிவிடும் ஓசையும் கேட்டுக் கொண்டிருந்தது. கதிர்வேல் என்பவன் 'ஸெண்ட்ரிங்' செய்திருந்த கம்பம் ஒன்றை அப்புறப்படுத்த வரவே நான், "ஏய் ஏய்! அதைத் தொடாதே!...எல்லாம் விழுந்துவிடப் போகிறது!" என்று கூவி விட்டேன்.

திருமலை அவனை விழித்துப் பார்த்து, "ஏண்டா அதைப் போய், எடுக்கிறே?" என்றார்.

"மேலே மேஸ்திரி கேழ்க்கிறாருங்கோ!"

"வேறே மரம் இல்லை? 'ஸெண்ட்ரிங்' வைத்திருக்கிறது தானா உனக்கு அகப்பட்டது?"

கந்தசாமி அங்கே ஓடிவந்து குறுக்கிட்டு, "ஏண்டா நாயி! உன்னை இந்த மரத்தையாடா நான் எடுக்கச் சொன்னேன்! உதவாக்கரை கழுதே! என் பேரைக் கெடுத்துடுவே போலே இருக்குதேடா, நாயி!" என்று அதட்டி அவனை அப்பால் இழுத்துக்கொண்டு போனான்.

"ஏன் ஸார், இன்று ஜெல்லி போடுகிறார்களே, 'ஸெண்ட்ரிங்' எல்லாம் எப்போது எடுப்பார்கள்?" என்று கேட்டேன். திருமலை பதில் சொல்லுமுன், "அது பதினைஞ்சு நாள் ஆகும்டா? இது மேலேடா-நாளையிலேருந்து களிமண் பாத்திகள் கட்டிவிடுவாடா. அதுக்குள்ளே தினம் ஜலம் கட்டிக்கொண்டு வருவாடா...ஜலம் நிற்க நிற்க இது இறுகிக்கும்டா! நீ ரோட்லேகூட பார்த்திருப்பியேடா" என்றான் கிருஷ்ணஸ்வாமி.

"ஜயம் காண்பித்து 'இதைப் பார்' என்றால்தான் இவர் பார்ப்பார்; இல்லாவிட்டால் கண்ணை மூடிக் கொண்டுவிடுவார்!" என்றார் திருமலை. பிறகு, "உம், சொல்ல மறந்துபோய்விட்டேனே, சிமிட்டி அநேகமாகத் தீர்ந்துவிட்டது! முப்பது மூட்டைதான் பாக்கி இருக்கிறது" என்றார்.

"அவ்வளவு சிமிட்டியுமா?"



"நீங்கள் வாங்கின சிமிட்டி உங்களுக்கு மட்டுந்தான் உபயோகமாகியிருக்கிறது!"

"மறுபடி மொத்தம் எவ்வளவு வேண்டும் என்று சொல்லுங்கள் ஒரே தடவையாக வாங்கிவிடுகிறேன்."

"பன்னிரண்டு டன் போடுங்கள்; மிகுதியிருந்தால் திருப்பி விடலாம்!"

"பதினைந்தானாலும் வாங்கிவிடுகிறேன், சொல்லுங்கள்."

"நான் வேண்டிய அளவுக்கு மேல் ஒரு இம்மிகூடக் கேட்க மாட்டேன்; அதை முன்னாடியே சொல்லியிருக்கிறேனே!" என்றார் திருமலை கண்டிப்பாக.

குத்ரையா வந்து நின்று காதுக்குப் பின்னால்சொறிந்து கொண்டான். திருமலை சட்டென்று ஞாபகம் வந்தவர் போல், "ஆமா!...மரங்கூட நீங்கள் வாங்கியாக வேண்டும்!" என்றார்.

"வாங்கின மரமெல்லாம் ஆகிவிட்டதா?" என்றேன்.

"நீங்கள் பாருங்கள். நாங்கள் யாரும் இங்கே மரம் சாப்பிடுகிறதில்லை! நிலைகளுக்கும் ஜன்னல்களுக்கும் தானே மரம் வாங்கினோம்? எல்லாந்தான் வைத்தாகி விட்டதே!" என்றார்.

"இப்போ மறுபடி எதற்கு வாங்குகிறோம்?"

"தளம் போட்ட பிறகு மாடிக்கு வாசற்கால்கள், ஜன்னல்கள் எல்லாவற்றுக்கும் வேண்டாமா?"

"அது எத்தனை ஸார் வேண்டும்?"

"எத்தனை என்ன? கீழே எவ்வளவோ அவ்வளவுதான் மேலேயும்!"

சற்றுத் தலை சுற்றலாக இருந்தது; ஆனாலும், கிருஷ்ணஸ்வாமி எதிரில் அதைக் காண்பித்துக்கொள்ளாமல் "ஆகட்டும், ஸார்!" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து

புறப்பட்டேன். சுமார் ஒரு பர்லாங் வந்த பிறகு, திருமலையிடம் 'ரீல்' விஷயமாகப் பேசவில்லை என்று நினைவு வந்து திரும்பினேன். ஆனால், போன போது பெரிய ஏமாற்றம் காத்திருந்தது: அங்கே திருமலை இல்லை. பரண் ஸெண்ட்ரிங்கிலிருந்து குறிப்பிட்ட சவுக்குக் கட்டையையும் எடுத்திருந்தார்கள்.

''இதையார் எடுத்தது?'' என்று அதட்டி விசாரித்தேன்.

''ஆ(ந்)துனாலே பரவாயில்லிங்கோ!'' என்றான் மன்னார் என்பவன்.

''நான் கேட்டதற்கு நீ பதில் சொல்லு!...இதை எடுத்தது யார்?''

''மேஸ்திரியாரே எடுத்தாரு!''

''எங்கே அவர்?''

''இப்பத்தான் பெரிய கடைத்தெருவுக்கு ஆணி வாங்கிவரப் போனாரு!''

இதற்குப் பிறகு நாலைந்து நாட்களுக்கு ருத்ரையாவின் தாண்டவம் வெகு அதிகமாக இருந்தது. சவுக்குக் கம்பங்களை நிறுத்துவதும், மேலே பலகைகளைப் பொருத்துவதுமாகத் தச்சர்கள் வேலை செய்தார்கள். வீட்டுக்குக் குறுக்கும் நெடுக்குமாகப் பல கம்பங்கள் போடப் பட்டு விட்டபடியால், குனிந்து குனிந்துதான் நடக்க முடிந்தது. சுமார் ஒரு வாரத்திற்குப் பிறகு 'ஸெண்ட்ரிங்' தீர்ந்துவிட்டதென்று சொன்னான் ருத்ரையா.

அன்று நான் போகும்போது மேஸ்திரி மேலே இருந்த படியால் அவனைப் பார்க்க முடியவில்லை. அவன் பேச்சுக் குரல் மட்டும் கேட்டது. முருகய்யனுடன் பேசிக்கொண்டிருந்தான். ''இன்னாங்க பொளைப்பு இது? எல்லாருக்கும் ஒரு யெஜமான்; நம்பளுக்கு நாலுயெஜமான்... கண்ட்ராக்டு அய்யாவுக்குச் சரியா ஆடினா, மோட்டார்க் காரு அய்யா



வுக்கு ஆவல்லே...கண்குத்திப் பாம்பு மாதிரி வந்து இல்ல நிக்கிறாரு!''

''அவங்களுக்கு இஷ்டமாகச் செய்துட்டுப் போயேன்!'' என்றான் அவன்.

''இஸ்டத்தை எங்கே அண்ணே சொல்லறாரு? ஆளை எப்படி மடக்கலாம்னு பார்க்கறாரு...அவரு! வந்தாலே போவற மட்டும் கதிகலக்கமாயிருக்குது!''

''கந்தசாமி!'' என்று நான் குரல் கொடுத்ததும் ''வர்ரேன், ஸாமி!'' என்று ஓடிவந்தான் அவன். திருமலையும் ஜயமும் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

''எங்கே அப்பா பூஷணிக்காய்?'' என்று கேட்டேன்.

''ஏ கதிர்வேலு! இங்கே வாடா! ஐயா பூசணிக்காய் ஸொன்னாரே, வாங்கியாந்தியாடா?''

''எங்கும் ஆப்படலிங்கோ!''

''போடா!... நிக்காதேடா!... அய்யா ஸொல்லியிருக்கப்போ!...''

''மேஸ்திரி! அதோ அந்த ஆளு வேலை நன்னா இல்லை, மாற்றப் போறேன் என்று சொன்னாயே! ஏன் வந்திருக்கான்?''

''நான் ஸொல்லலிங்க; அவனா வந்து நிக்கிறானுங்கோ...''

''இதெல்லாம் என்ன பேச்சு?...மிஸ்டர் திருமலை! நீங்கள் கொஞ்சம் இதைக் கவனிக்கணும், ஸார்!''

''கவனித்துக்கொண்டுதான் வருகிறேன், நான் என்ன மடையனா?''

எனக்கும் கோபம் வந்தது. ''கவனித்துத்தான் என்றைக்கு இப்படி ஆயிற்றா?'' என்று கேட்டேன்.

''என்ன ஆகிவிட்டது? ஒன்றும் ஆகிவிடவில்லையே!''

"நான் சொன்னால் நீங்கள் கேட்பதே இல்லை. வாட்ச்மேன் உபயோகமில்லை என்று சொன்னேன்..."

"வேறே ஆள் அகப்படவில்லை, ஸார்! நான் பரிச்சயமில்லாத ஆட்களைக் கொண்டுவந்து வைப்பதில்லை."

"'எஸ்டிமேட்' கேட்டேன்; அதுவும் கிடைக்கவே இல்லை."

"போட்டுத்தானே ஸார் தரணும்? தப்புத் தவறாக நான் கொடுத்துவிட்டு, அதை வைத்துக்கொண்டு பின்னாடி என்னை நீர் 'கிராஸ்' செய்யப்படாதே!"

"ஆமாம்! இப்போது ஹால் மேலே தளம் போடுகிறீரா, மேஸ்திரி?" என்று கேட்டார் ஐயம்.

"கம்பி கட்டறாருங்கோ, ஆனவுடன் நாளைக்குப் போடுவோமுங்க!"

"வெண்டிலேட்டர்கள் உயரே வைக்க வேண்டும் என்று சொல்லியிருந்தேனே; நீங்கள் பாட்டுக்கு ஏகாண்டமாகச் சுவரை எழுப்பி விட்டீர்களே!" என்று கேட்டார் ஐயம்.

"நீங்கள் எப்போ சொன்னீர்கள்?" என்று கேட்டார் திருமலை.

"மேஸ்திரியிடம் கேளுங்கள்!"

"சொன்னாருங்கோ!"

"என்னிடம் ஏன் சொல்லவில்லை?"

"நினைப்பு இல்லிங்கோ!... இப்ப வேலையை நிறுத்தி விடறேனுங்க!"

"வேலையை நிறுத்தினால் ஆச்சா? கட்டின சுவரை இடித்தால் யாருக்கு நஷ்டம்?... ஸார்! உமக்குச் சம்மதமானால் எனக்கு ஆட்சேபம் இல்லை!"

"இப்போது என்னதான் செய்கிறது. சொல்லுங்கள்!" என்றார் திருமலை பொறுமை இழந்தவராக.



"என்னைக் கேட்டால்! இதோ முதலாளி இருக்கார்; நான் வருகிறேன்...! ஐயம் வேகமாக வெளியேறினார். நான் கூடவே "ஸார், ஸார்!" என்று ஓடினேன்.

"எனக்கு இதில் ஒன்றுமே தெரியாது. நீங்கள் சொன்னால்தான்..." என்றேன்.

"நான் சொன்னால்தான் கேட்கமாட்டேனென்கிறான்... அப்போ நீர் தான் சொல்லிப்பாரும்!"

## 10. ஸ்ரீமான் அப்புவுக்குத் தெரிந்தது!

ஸ்ரீ ஐயமும் ஒதுங்கிக்கொள்கிறார், திருமலையும் முறைத்துக் கொள்கிறார் என்றபோது நான் மிகவும் கலங்கிப் போனேன் என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். கட்டடத்தை அதோடு நிறுத்தி விடுகிறதா, வேறு கண்ட்ராக்டரை நானாக வைத்துக்கொள்வதா, ஐயம் மீண்டும் எனக்கு உதவி செய்வாரா என்று பல விதங்களில் நான் மனத்தைப் போட்டு உளைத்துக்கொண்டிருந்த போதுதான், நண்பர் அப்பு என்னை வந்து அவருடைய புதிதாகக்கட்டி வரும் வீட்டைப் பார்க்கும்படி அழைத்தார். பார்த்துவிட்டு, என் விஷயங்களைப்பற்றி அவருடைய அபிப்பிராயத்தையும் அறிந்துகொண்டு வரலாமென்று புறப்பட்டேன்.

எனக்கு ஒன்றரை மாதம் முன்னாடி ஆரம்பித்திருந்த அப்புவின் வீடு தளம் பூராவும் போடப்பட்டிருந்தது. உள்புறமெல்லாம் அநேகமாகப் பூசி விட்டார்கள்; இரண்டொரு அறைகளில் தரைக்குச் சிமிட்டி போட்டுச் சிவப்பு வர்ணத்தைப் பளிங்குக் கற்களால் ஒட்டிக்கொண்

டிருந்தார்கள் கொத்தர்கள். "இது எவ்வளவுக்கெவ்வளவு ஒட்டுகிறார்களோ அவ்வளவுக்கவ்வளவு நன்றாக இருக்கும்!" என்றார் அப்பு.

அப்புவின் வீட்டை மேற்பார்வை பார்த்து வந்த இன்ஜினியர் எங்கள் பின்னால் நின்றுகொண்டிருந்தார். "முதல் தரமான 'ஆக்ஸைட்' (வர்ணம்) உங்களுக்கு 'ஸ்பெஷ'லாக நான் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். சில பேர் இரண்டு மூன்று தடவையாக வாங்குவார்கள்: அதனால் வராந்தா ஒரு வர்ணம், ஹால் ஒரு வர்ணம், 'ஸ்டடி' ஒரு வர்ணம் என்று பல தினுசுகளாக இருக்கும். நமக்கு ஒரே மாதிரியாக இருக்க வேண்டுமென்று மொத்த மாக வாங்கிவிட்டேன்" என்று விவரித்தார்.

"நான்கூட ஒரே மாதிரி வாங்கிவிடுகிறேன்" என்று நான் அப்புவிடம் சொன்னேன்.

"ஸார்கூட வீடு கட்கிறாப்போல் இருக்கிறது!" என்றார் இன்ஜினியர்.

அப்பு விஷயங்களை விவரித்து, "ஐயம் கவனித்துக் கொண்டு வருகிறார். ரொம்ப நன்றாக இருக்கிறது, இவர் வீடு" என்றார்.

"நமக்கு யாரும் கவனிக்க வேண்டியதில்லை!" என்றார் அந்த இன்ஜினியர்.

"பூச்சு வேலை செய்திருக்கிறீர்களே, எவ்வளவு கனம் இருக்கும்?" என்று நான் இன்ஜினியரை விசாரித்தேன்.

"ஸார்! சில பேரைப் போல் எனக்குப் பூச்சில் போய் அசாத்திய கனம் வைப்பதில் நம்பிக்கை இல்லை. அரை அங்குலம் கொடுத்திருக்கிறேன்."

"அடே அப்பா! அரை அங்குலம் எதேஷ்டமாச்சே!" என்று ரொம்பத் தெரிந்தவன் போல் நான் ஒப்புக்கொண்டு ஹாலுக்கு வந்தேன்.



அப்பு என்னை உயரே நிமிர்ந்து பார்க்கச் சொல்லி, "இரண்டு நாகபாசம் போட்டுவிட்டேன் பாருங்கள். என் தாயார் ஊஞ்சல் அவசியம் வேண்டும் என்று சொன்னாள்" என்றார்.

"நானும் இதே மாதிரி என் வீட்டில் போட்டுவிடு கிறேன்" என்றேன்.

"ஊஞ்சல் இல்லாவிட்டால் தொட்டில் வேண்டு மானாலும் போடலாமே! ஸாருக்கு எத்தனை குழந்தைகள்?" என்று விசாரித்தார் இன்ஜினியர்.

அப்புவின் வீட்டு வாசலைப் பெரிய வளைவாக வளைத்திருந்தார்கள். அதுவும் ஒரு எடுப்பாகத்தான் இருந்தது. என் அபிப்பிராயத்தைச் சொன்னேன்.

"நீங்கள் இப்போதும் ஒன்றும் சொல்லக்கூடாது. வெள்ளை அடித்து வர்ணம் பூசினவுடன் வந்து பார்க்க வேண்டும். அது மட்டும் இல்லை. ஜன்னல்கள், கதவுகளுக்கு 'பெயிண்ட்' அடித்தீர்களோ வீட்டுக்கு ஒரு புது சோபையே வந்துவிடும்... அப்புறம் வீடு அடையாளங்கூடத் தெரியாது, ஸார்!" என்றார் இன்ஜினியர்.

அப்புவைத் தனியாக இழுத்து, "உங்கள் இன்ஜினியர் கெட்டிக்காரராக இருக்கிறாரே?" என்றேன்.

"ஆமாம் இதற்கு முந்தி ஒருவர் மூலமாகச் செய்தேன். பல விஷயங்கள் எனக்குத் தெரியாது; ஏமாந்துவிட்டேன். இவரிடம் விசேஷம் என்னவென்றால், நமக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டு அப்புறம் செய்கிறார்."

"நான்கூடக் கண்ட்ராக்டரை மாற்றும்படி இருக்கும் போலிருக்கிறது..."

"நிதானமாகச் செய்யுங்கள். ஒவ்வொருவரிடம் ஒரு குறை இருந்து கொண்டுதான் இருக்கும்... இன்னொன்று: வாசற்கதவு அலமாரிகளை நல்ல மரமாகப் போட்டுச் செய்யுங்கள். பத்து ரூபாய் மலிவாக இருக்கிறதென்று

ஏதாவது 'அடாஸ்' மரமாக வாங்கிவிட ஒப்புக் கொள்ளாதீர்கள். இது என் அனுபவம்'' என்றார் அப்பு.

அவர் வீடு நன்றாக அமைந்துவிட்டதென்று சொல்லி விட்டு விடை பெற்றுக்கொண்டு நான் கொஞ்ச தூரம் வந்திருப்பேன்; என் பின்னால், ''ஸார், ஸார்!'' என்று குரல் கேட்டுத் திரும்பினேன். கேசவன் ஓட்டமாக வந்து கொண்டிருந்தான்.

''எங்கே இந்தப் பக்கம்?'' என்று என்னைக் கேட்டான்.

''நீர் எங்கே இந்தப் பக்கம்?'' என்று நான் திருப்பிக் கேட்டேன்.

''திருமலை மாம்பலத்தில் வீடு ஒன்று கட்டுகிறாரே! உங்களுக்காக இங்கிருந்துதான் பலகைகூடப் போய்க்கொண்டிருக்கிறது. அதற்காகத்தான் நான் வந்தேன்'' என்றான் கேசவன்.

''உமக்கு நடந்த விஷயம் தெரியாது போல் இருக்கிறது. திருமலை நம் வீடு கட்ட முடியாதென்று முறித்துக் கொண்டுவிட்டார்!'' என்றேன்.

கேசவன் பெரிய தமாஷைக் கேட்டுவிட்டது போல் சிரித்தான். ''அதெல்லாம் அவ்வளவு லகுவில் நடந்துவிடுமா? ஹஹ்ஹா!'' என்றான்.

''லகுவில் நடந்துவிட்டதே! நான் வேறு யாரைக் கொண்டு கட்டலாம் என்று பார்க்கத்தான் வந்தேன்!''

''அந்தச் சிரமம் உங்களுக்கு வேண்டாம். திருமலை ஒருகாலும் உம்மை விடமாட்டார்!'' என்றான் கேசவன்.

''விட்டுப் போவதாக அவரே சொல்லிவிட்டார் என்றால்?''

''ஒரு தரந்தானே அப்படிச் சொன்னார்?'' என்று கேட்டான் கேசவன்.

''இதென்ன கூத்து! எத்தனை தரம் சொன்னால் அவர் நிச்சயம் என்னை விட்டுப் போகிறார் என்று அர்த்தம்?''



மறுபடி கேசவன் சிரித்தான். ''கோப வேளையில் அப்படித்தான் சொல்கிறது; அப்புறம் சரியாகப் போய் விடுகிறது. இதெல்லாம் சகஜம். நடுவில் பிரிந்துகொண்டால் அவருக்குத்தான் அழகா, உங்களுக்குத்தான் அழகா? நினைத்துப் பாருங்கள்.''

''அழகு கிடக்கட்டும். மனுஷன் ஒன்றையுமே கவனிப்பதில்லை...''

கேசவன் சட்டென்று என் எதிரே போய் நின்று என் வழியை மறித்தான். ''ஸார்! நீங்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லுங்கள்... எங்கள் திருமலையைப்பற்றி அது மட்டும் சொல்லாதீர்கள்!'' என்றான் படபடப்பாக.

''பின் என்ன ஐயா? சுவர் எடுப்பானேன், அதை அப்புறம் இடிப்பானேன்? எனக்கு நஷ்டம் செய்விக்க வேண்டுமென்றே இப்படி...''

''எது வேணா சொல்லுங்கள்; திருமலையைப்பற்றி அது மட்டும் நான் கேட்டுக்கொண்டிருக்க மாட்டேன்!''

''எப்படியோ போகட்டும்... நம்மை இப்போ விட்டு விட்டார்.''

''ஒருகாலும் இல்லை. எனக்கு எல்லாம் தெரியும். உங்கள் 'கண்ட்ராக்ட்'டை முடித்துவிட்டுத்தான் போவார். அதைச் சொல்லத்தான் நான் வந்தேன்.''

இருவரும் ஒரு மதகில் உட்கார்ந்தோம். ''மிஸ்டர் கேசவன்! திருமலைக்கு நன்றாக வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசுகிறீர்கள். நான் எத்தனை தரம் 'எஸ்டிமேட்' கேட்பது அவரை? இதுவரை என் பணம் பதினேழாயிரம் ரூபாய் ஆகிவிட்டது!'' என்றேன்.

''செலவானதில் ஒரு பிசகிருக்காது... உமக்கு எஸ்டிமேட் தானே வேணும்? நான் இப்போது சொல்கிறேனே! மாடியில் இரண்டு ரூம், இரண்டு வராந்தா, ஒரு பாத்-ரூமா?... சரி... இருநூறு... இருநூறும் நூற்றிருபதும்

மூன்னூற்றிருபது; மூன்னூற்றிருபதும் எண்பத்தெட்டு நானூற்றெட்டு, நானூற்றெட்டும் நூற்றெழுபத்தாறும் ஐந்நூற்று எண்பத்தினாலு...அதாவது அறுநூறு. அ ஏழால் பெருக்கினால் நாலயிரத்து இருநூறு; அ அப்புறம் ஒன்பதால் பெருக்கினால்..."

"மெள்ளப் போடுங்கள்..."

"இன்னும் முப்பத்தேழாயிரத்தி எண்ணூறு ரூபாயி முடிந்து விடும்!"

"ஸார்! சீக்கிரம் என் முதுகைக் கொஞ்சம் தாங் கொள்ளுங்கள். நான் வாய்க்காலில் விழுந்துவி போகிறேன்!"

"என்ன, என்னைப் பரிகாசம் செய்கிறீர்களே!"

"இல்லை; இருபதாயிரம் ரூபாயில் வீடு கட் சொன்னேன். இப்படியோ அப்படியோ இரண்டாயி அதிகம் ஆகும் என்றார் திருமலை. நீங்களா பதினேழும் முப்பத்தேழும் ஐம்பத்தி நாலாயி என்கிறீர்களே!"

"சற்று இருங்கள், சற்று இருங்கள். அப்படியான முப்பத்தேழாயிரத்தை மூன்றால் வகுங்கள். எ வருகிறது, சொல்லுங்கள்!"

"பன்னிரண்டாயிரத்துச் சொச்சம்."

"அப்படியானால் அவ்வளவுதான் ஆகும்!"

"எதற்காக மூன்றால் வகுக்கிறது?"

"அதை உங்களுக்குச் சொன்னால் புரியாது. நா எல்லாம் சரியாகவே போட்டுத் தருகிறேன், திருமலையி ஒரு வார்த்தை சொல்லி விடுங்களேன்!"

"இதோடு நூறு தரம் சொல்லிவிட்டேன். நீ 'எஸ்டிமேட்' போடுகிறதாக அவரானால் சால் சொல்லிக்கொண்டிருக்கிறார். பெரிய புளுகர் போ கிறது, திருமலை."



"ஸார்! என்ன வேணுமானாலும் சொல்லுங்கள்; அது அவரைப்பற்றிச் சொல்லாதீர்கள்; நான் ஒப்புக் ...டேன்" என்றான் கேசவன்.

நான் என் கட்டடத்துக்கு வந்து கொண்டிருந்தபோது ...ஜத்தின் மோட்டார் பின்னால் ஹார்ன் செய்து ...ண்டே வந்து என் அருகே நின்றது. "ஸார்!" ...றேன். அதற்கு மேல் என்னால் அவரிடம் பேச முடிய ...லை.

"சமீபத்தில் உம்முடைய கனத்தை நிறுத்துப் பார்த்துக் ...ண்டிருக்கிறீரா?" என்று கேட்டார் ஜயம்.

"இல்லை. ஐந்தாறு மாதத்துக்கு முன் நூற்றி ஐம்பது ...ண்ட் இருந்தேன. ஏன்? அதற்கு என்ன இப்போ?"

"இப்போது பத்துப் பவுண்டுக்கு மேல் ஏறியிருக்க ...ட்டீர். நம்ம கார் 'ஸ்பிரிங்' தாங்க வேண்டுமே! ...னவே உன்னை ஏகப்பட்ட கனம் ஏற்றியிருக்கிறேன்."

...ாருக்குள் எட்டிப் பார்த்தேன். ஒரு கல்லுரலும் அம்மி ...அதனுள் இருந்தன.

"ஏறுங்கள், ஸார்! இதெல்லாகூட உங்கள் வீட்டுக்குத் ...! கொண்டு போய் அம்மியைச் சமையல் கட்டில் ...ட்டு, கொட்டி மிக்கம் எப்படி வருகிறது. அடுப்பு ...டி வருகிறது என்று பார்க்க வேண்டும், சீக்கிரம்!"

"ஸார், நேற்று நீங்கள் போன போது, இதோடு ...து என்று நினைத்துவிட்டேன், ஸார்!"

"இப்போது மட்டும் தீரவில்லையென்று யார் ...ன்னார்கள்?"

"எனக்கு ஒன்றும் புரியவில்லையே!"

"என்ன ஸார் புரியவில்லை? இன்றைக்குச் சுவர் ...கிறது. நாளைக்கு அதன் மேல் தளம் போடுகிறது, ...என்றைக்குப் பூசுகிறது என்றால் என்ன அர்த்தம்?

சிமிட்டியில் நன்னா ஜலம் ஊத்தி, ஆறி, கெட்டிப்பட்ட புறம் போடணும். உங்கள் திருமலையிடம் ஆள் நிறை இருந்தால் சடசடன்னு உம் வீட்டைப் பாழ் பண்ணி விடணுமா?"

"அதை அவரிடம் சொல்லவாமே!"

"நீர் சொல்லும். ஆட்சேபணை இல்லை. நா சொன்னால் சண்டைதான் வரும்! நானா ஐயா 'ஓனர்' ஏற்கெனவே எனக்கு 'மாமியார்' என்று பட்டப் பெய வந்துவிட்டது!..."

"நீங்கள் எனக்குச் சொல்லிக் கொடுங்கள், ஸார் நன்றாய்க் கண்டிக்கிறேன். நீங்கள் 'வெண்டிலேட்ட விஷயமாக உங்கள் யோசனைகளையும் என்னிட சொல்லுங்கள்!"

"அதுவா! நம் வீடுகளில் 'காத்துவாரி' என்று வை கிறோம். அவைகளைத் திறக்கிறதுமில்லை, சாத்துகிற மில்லை. நான் சொல்கிறது, அறைக்கு மேலே நாலுபக்கமு இரண்டடி நீளம் முக்கால் அடி அகலத்துக்கு நாலு அல் ஆறு ஓட்டைகள் விட்டுவிடுகிறது!...அறையில் எல்லா கதவுகளும் சாத்தியிருந்தாலும் கெட்ட காற்று தானா வெளியே போய்விடும்."

"மழைச்சாரல் அடித்தால்..."

"வெளிப்புறமாக வாட்டம் கொடுக்கிறது; ஒ வலையைப் போட்டு மூடிவிடுகிறது......அப்புறம்?"

"அப்படியானால் சரி."

"எனக்காகச் சொல்ல வேண்டியதில்லை, செய பார்க்கிறது, பிடித்தால் வைத்துக் கொள்கிறது; இல் விட்டால் விட்டுவிடுகிறது."

நாங்கள் கட்டடத்தைப் போய் அடைந்தபோது அங் கந்தசாமி மேஸ்திரியும் கிருஷ்ணஸ்வாமியும் நின்று பே கொண்டிருந்தார்கள். சுவரைப் பார்த்துத் திரும்பி



கொண்டு, மிகுந்த சங்கோஜப்படுபவன் போல் ஒரு ஆள் நிற்பதையும் கவனித்தேன்.

"என்னடாது, ரொம்ப நாழியாக் காத்திண்டிருக் கேண்டா! 'ஜம்ப்பர்' அடிக்க ஆள் அனுப்பலாமான்னு பார்த்தேன். ஒண்ணுமே ஆகல்லியேடா!" என்றான் கிருஷ்ணஸ்வாமி.

"கிளாஸ்மெட்டு ஏன் அவசரப்படுகிறார்?" என்று கேட்டார் ஜயம்.

"அவசரமில்லை...எனக்கு இன்னும் சீப் ஸுப்ரண்ட்..." என்று கிருஷ்ணஸ்வாமி ஆரம்பிப்பதற்குள் ஜயம் சங்கோஜி யாக நின்ற ஆசாமி பக்கம் திரும்பி, "என்ன, நாயக்கர்! நான் சொன்ன 'க்ரில்' பார்த்தீங்களா?" என்று கேட்டார்.

"பார்த்துட்டேனுங்க! அதே மாதிரி சுத்தமா செஞ்சு தாரேனுங்க!" என்றார் அவர்.

"இவர்தான் வீட்டுக்காரர். பணம் செலவு செய்கிறவர். எல்லாம் இவரைக் கேட்டுக்குங்க, என்னைக் கேட்டு பிரயோசனம் இல்லை."

"அதெல்லாம் நம்ம வேலை ரொம்ப சுத்தமாக இருக்குமுங்க."

" 'க்ரில்' எல்லாம் வேண்டாங்க, பணம் பிடிக்கும் என்று ஆளமட்டும்சொன்னேன், கேழ்க்க மாட்டேனென்கிறார்!"

"சுத்தமா செஞ்சு தாரேன் என்கிறேனே, ஸார்!" என்று மேலும் அவர் சங்கோஜப்பட்டார்.

"எங்கே, நான் கொடுத்த 'டிஸைன்' இருக்குமா?"

ஜன்னல் கம்பிகள் வளைக்க வேண்டியபடி ஒரு சித்திரத்தை எடுத்து நாயக்கர் என்னிடம் காண்பித்தார். நான் பார்த்து, "நன்றாயிருக்கிறதே!" என்றேன்.

"கிளாஸ்மெட்டு! நீங்களும் பாருங்கள் ஸார்!" என்றார் ஜயம்,

கிருஷ்ணஸ்வாமி பார்த்துவிட்டு, "நன்றாய்த்தானேடா இருக்கு?" என்று என்னைக் கேட்டான்.

"எப்படியப்பா விலை ஆகும்?" என்று நான் நாயக்கரைக் கேட்டேன்.

"நம்ம வேலையெல்லாம் ரொம்பச் சுத்தமாக இருக்கும்; அதைப் பார்த்துக்கொண்டு இஷ்டமானதைக் கொடுங்க!"

"எப்போ கிடைக்கும்?" என்று அவனைக் கேட்டார் ஐயம்.

"இரண்டு வாரம் ஆகுமுங்க."

"இரண்டு வாரமா? ஐயையோ!"

"வேலை சுத்தமா இருக்கவேணுமுங்களா!"

"அப்படியே செய்துகொண்டு வா! சுத்தமாயிருக்கட்டும்!" என்றார் ஐயம்.

நான் வெளியே பார்த்தபோது தொலைவில் ஸ்ரீ திருமலை வேறொரு ஆசாமியுடன் ஸைக்கிளில் வந்துகொண்டிருந்தது தெரிந்தது. ஐயத்திடம் அதைச் சொன்னேன். "வரட்டுமே, மிஸ்டர்! வரட்டுமே!... உம்மிடந்தானே அவர் வேலையை விடுவதாகச் சொன்னார்? எனக்கு அது தெரிந்திருக்க வேண்டிய அவசியம் இல்லையே!" என்றார் ஐயம்.

திருமலையுடன் வந்த ஆசாமி கருவலாக இருந்தார். குறுகுறுவென்று நாலாபுறமும் பார்த்தார். எட்டுப்பட்டை தீர்ந்திருந்த அவர் மூக்குக் கண்ணாடிக்கு பிரேம் இல்லை என்று கவனித்தேன்.

திருமலை பொதுவாக ஒரு புன்னகை செய்து, "வழியில் நம்ம ஜோஸப்பைப் பார்த்தேன். கையோடு இழுத்துக்கொண்டே வந்து விட்டேன்!" என்றார். பிறகு ஜோஸப்பிடம், "இவர்களைத் தெரியும் அல்லவா?" என்றார்.



"அடிக்கடி பார்த்திருக்கிறேன்" என்று புளுகினார் ஜோஸப்.

"நானுந்தான்!" என்று பதிலுக்குப் புளுகிவிட்டு, திருமலையுடன் சமாதானம் செய்துகொண்டுவிட்டதை நான் அதன்மூலம் ஊர்ஜிதம் செய்தேன்.

"இவர் ஸானிடரி இஞ்ஜினியர். உங்கள் வீட்டு 'டிரெயினேஜ்' விஷயமாக வந்திருக்கிறார். எப்படி எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படி அப்படிச் செய்யுங்கள்!" என்று சொல்லித் தமது காரியம் பூர்த்தி ஆகிவிட்டதற்கு அறிகுறியாகத் திருமலை நான்கு அடி பின்வாங்கிக் கொண்டார்.

"மிஸ்டர் 'ஒனர்'! வெண்ட்டிலேட்டருக்குக் கந்தசாமி சுவரை இடிக்கப் போகிறான் என்று சண்டை போட்டுக் கொண்டீர் அல்லவா?... இதோ வந்திருக்கிறாரே, மிஸ்டர் ஜோஸப்! இவர் 'தடார் தடார்' என்று இடிக்கப் போகிறார்; உங்கள் வீட்டுச் சாக்கடைகள் ஓட, அறை அறையாக அடியில் பள்ளம் செய்தாக வேண்டுமே?" என்றார் ஐயம்.

"ஓஹோ!" என்றேன்.

"இதோ கிளாஸ்மேட்டு இருக்கிறாரே, இவர் மட்டும் சும்மா இருப்பாரா? மாடியிலும் கீழேயும் இடிக்கப் போகிறார் எலெக்ட்ரிக் லைனுக்காக!"

"ஏண்டா கிருஷ்ணஸ்வாமி?"

"ஆமாம்! அப்புறம் எலெக்டிரிக் கனெக்ஷன் கொடுக்க கம்பெனிக்காரர்கள் வேறு வந்து இடிப்பார்கள்!"

திருமலை குறுக்கிட்டு, "அப்படித்தானே வழக்கம்!... நீங்கள் கூடாதென்றால் நின்றுவிடுமா? மவுண்ட்ரோட்டில் வழவழவென்று இன்று தார் போட்டுவிட்டுப் போவான்; நாளைக்குக் காலையில் எலெக்ட்ரிக் கம்பெனிக்காரன் வந்து குறுக்கே வாய்க்கால் மாதிரி வெட்டுவான். கண் எதிரில் பார்த்துக்கொண்டிருக்கிறோமே!" என்றார்.

"ஏன்! முன்னால் அதைச் செய்வதென்றால் முடியாதோ?" என்று கேட்டார் ஐயம்.

"இதோ எலெக்ட்ரீஷியனே இருக்கிறார், கேட்டுக் கொள்ளுங்கள்!"

ஐயம் தொடர்ந்து, "இவர் ஓட்டைகள் போட்ட பிறகு மறுபடி ஜோஸப் வந்து குழாய்க்காகப் பல இடங்களில் இடிக்கப் போகிறாரே" என்றார்.

ஜோஸப் சிரித்தார், "அப்புறம் திருமலையே மழை ஜலம் விழுகிற குழாய் பொருத்த ஒரு தரம் இடிப்பார். இன்னும் எத்தனை தரமோ! ஒரு தரம் கட்டின இடத்தை இடிக்கிறதென்றால் எனக்கு யாரோ என்னையே இடிக்கிறாப்போல் இருக்கிறது நீங்கள் எல்லாரும் சேர்ந்து மனசு வைத்தால் இடிபாட்டைக் குறைக்கலாம் என்று நான் நினைக்கிறேன்..."

கந்தசாமி வந்து நின்று, "வெண்ட்டிலேட்டருங்களைப் பற்றிச் சொன்னாருங்கோ நம்ம ஐயா, சுவரை இடிக்கலாமுங்களா?" என்று கேட்டான்.

"சொன்னால் சொன்னபடி செய்யேன்!" திருமலை பிறகு எங்கள் பக்கம் திரும்பி, "நமக்குள் தகராறே வேண்டாம். தினம் இன்ன இன்ன வேலை செய் என்று சொல்லிவிடுங்கள் அதன்படி நடந்திருக்கிறதா இல்லையா என்று பார்த்துக்கொள்ளுங்கள்!" என்றார்.

"நான் காலையில் ஏழாவது மணி வந்துவிடுகிறேன். 'ஓனர்' வருகிறாரா, கேளுங்கள்!" என்றார் ஐயம்.

"நீங்கள் இவ்வளவு உபகாரம் செய்யும்போது நான் மட்டும் வராமல் இருக்கலாமா? கட்டாயம் வருகிறேன்" என்றேன்.

ஐயம் என்னை மிக அதிருப்தியுடன் பார்த்து, "உம் வார்த்தையில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆகையால் உம்மை இங்கேயே கொண்டு வைத்துவிடுவதுதான் சரி!...



மிஸ்டர் திருமலை! இவருக்கு நீங்கள் முன்னாடி சமையல் அறை. சாமான் உள், சாப்பிடுகிற அறை, வாசலில் ஆபீஸ் அறை இதுகளைச் சரி செய்துவிடுங்கள். ஜோஸப் தான் 'ட்ரையினேஜ்' தயார் செய்துவிடுகிறார்... கிளாஸ் மெட்டு! முன்னாடி கிழே மாத்திரம் லைட் போட்டுக் கொள்ளலாமா?" என்று கேட்டார் ஐயம்.

"செஞ்சுடறேண்டா!" என்றான் கிருஷ்ணஸ்வாமி என்னிடம்.

"இதென்ன மாசம்? மாசி அல்லவா?... புது வருஷத்துக்கு 'ஓனர்' கிருஹப்பிரவேசம் செய்யலாமா, மிஸ்டர் திருமலை?" என்று விசாரித்தார் ஐயம்.

"நடுநடுவில் குறுக்கிடாமல் எங்கள் வேலையைச் செய்ய விட்டால் அதற்கு முன்னாலேயே முடித்துத் தருகிறோம்! அப்படியானால் வேலை இனிமேல் தொடர்ந்து நடக்கலாமா?" என்று கேட்டார் திருமலை.

"ஆஹா! ஆனந்தமாக! இதோ நான் ஓடியே போகிறேன். வணக்கம் பல!" என்று புறப்பட்டார் ஐயம்.

ஜோஸப்புக்குச் 'செக்' எழுதிக் கொடுத்ததைப் பார்த்துக் கிருஷ்ணஸ்வாமி தனக்கும் கொஞ்சம் பணம் வேண்டும் என்றான். "ஏதோ கொஞ்சம் கொடேண்டா! உனக்குத்தாண்டா 'காயில்' வாங்கப் போறேன்" என்றான்.

திருமலை ருத்ரையாவுக்கு ஜாடை செய்தார். "ஐயா கிக் இக்கிக்... கிரவப் பிரவேசம் பண் பண் பண்றதானா, கக் கக் தக் கக் கதவுங்க போட வேண்டாமா?" என்றான் அவன் மெதுவாக.

"பேஷாகப் போடேன்!"

"போப் போப் போப் போட்டுத்தாரேன்! பப் பப் பப் பலவாய் வாங்கித் தாங்க! தெத் தெத் தெய்ச்சுப்பிடலாம்!"

"அதுதான் மரம் வாங்கப் பணம் கொடுத்தேனே, ஸார்?" என்று வெடுக்கென்று கேட்டேன் திருமலையை.

"அது மாடி நிலைகளுக்கல்லவா? நீங்கள் இப்போ கதவுகளுக்கும் ஜன்னல்களுக்கும் சட்டமும் பலகையும் வாங்கப் பணம் கொடுங்கள்."

'ஐயோ! அதே மாதிரி மாடிக்கும் கேட்பீர்கள் அல்லவா?"

"பின்னே வேண்டாமா? நிலை வைத்துவிட்டுக் கதவு வைக்காமல் இருக்கலாமா?... அதற்கப்புறம்..."

"அப்புறமுமா?"

"பீரோ, அலமாரி, ஷெல்ப், வெண்ட்டிலேட்டர், வாசல்-புழக்கடை கம்பிக்கதவுகள், ஜன்னல் அடியில் இருக்கும் கப்-போர்டுகள், மாடிப் படியின் கைப்பிடி, பரண்களுடைய கதவுகள் இதுகளுக்கும் மரம் வேண்டியிருக்கும். அதெல்லாம மெதுவாகச் செய்துகொள்ளலாம்!"

கிருஷ்ணஸ்வாமி என்னைப் பார்த்துப் பெரிதாகச் சிரித்தான். "அடே கந்தசாமி! நீ ஸன்-ஷேடுக்குக் கொடுத்த முட்டுகள் ஏதானும் பாக்கியிருந்தால் சீக்கிரமாகக் கொண்டுவாடா! இந்த ஆளுக்கு முட்டுக் கொடுக்க வேண்டும் போலே இருக்குடா!" என்றான்.

இதற்கெல்லாம் ஒரு வாரத்திற்குப் பிறகு நான் என கட்டடத்திற்குப் போயிருந்தேன். ஹாலில் போய் நின்றதும், ஒரு காட்சி என் கண் முன் தோன்றியது. மாடிப்படியின் மத்தியில் நின்று மன்னார் வேலை செய்து கொண்டிருந்தான். மேல் தளத்திலிருந்து கந்தசாமி, "இந்திராணி! ஒரு பாண்ட் எடுத்து வர எம்மாம் நேரம்?" என்று உரத்துக் கூச்சல் போட்டுக்கொண்டிருந்தான்.

இந்திராணி தலையில் கலவை-பாணலியுடன் போகும் போது, மன்னார் வழி மறித்து, 'மாமா வளியை விடு'ன்னு கேளு அப்பத்தான் உனக்குப் பாதை விடுவேன்!" என்றான்.

"இந்திராணி! எம்மாம் நேரம்?" கந்தசாமியின் குரல்.



"சட்டுனு சொல்லிவிடு; நகர்ந்துக்கறேன். இல்லாட்டி! வழி இல்லைதான்!" மன்னார்.

"இது என்னாடி கயிஷ்டம்!... வளியை உடுறியா, என்ன இப்போ!" இந்திராணி பொய்க் கோபத்துடன்.

"'மாமா, வளியை உடு'ன்னு சொல்லிப்புடேன், போவலாம்."

"இந்திராணி! வரியா என்ன!" கந்தசாமி.

"என்னா உவத்திரியம் ஐயா இது...நவரறியா, கூச்சப் போடட்டுமா?"

இந்த (அ)சந்தர்ப்ப வேளையில் நான் போய் நின்றேன். அப்படியே அவர்களை எரித்துவிடலாமா என்று கோபம் வந்தது. பல்லைக் கடித்துக்கொண்டு, மேஸ்திரியிடம் புகார் செய்யும் உத்தேசத்துடன் மேலே சென்றேன். வழியில் சிவப்பு முண்டாசு கட்டிக்கொண்டு ஒரு ஆள் உட்கார்ந்திருந்தான். ஏனோ என்னைக் கண்டதும் அவசரமாகத் தலையை நட்டுக்கொண்டான். அதனால் சந்தேகம் ஏற்பட்டு, அவன் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். "கந்தசாமி!" என்று உடனே ஒரு முழக்கம் செய்தேன்.

"ஸாமி!" என்று ஓடி வந்தான் மேஸ்திரி.

"பார்! இவனை இங்கே வேலைக்கு வைத்துக்கொள்ள வேண்டாம் என்று எத்தனை தரம் சொல்லிவிட்டேன்? இவன் ஏன் திரும்பத் திரும்ப என் வீட்டை நாசம் செய்ய வருகிறான்? எனக்கு உன் காரியம் கொஞ்சங்கூடப் பிடிக்க வில்லை!" என்று ஆத்திரமாகத் திரும்பி விட்டேன். நேரே ஐயந்திடம் போய் இதைப்பற்றிச் சொன்னேன். அவரும் கோபித்துக்கொள்வார் என்று எதிர்பார்த்தேன்.

"இதைப் பாருங்கள்! பேசாமே ஒரு மாசம் பொறுத்துக் கொண்டு, அந்த வீட்டில் போய் உட்கார்ந்து கொள்ளுங்கள். நேரே நின்று வேலை வாங்குங்கள். அப்புறந்தான். இதெல்லாம் நிற்கும். அது ஒன்றுதான் வழி!" என்றார் அவர்.

# 11. போகப் போகத் தெரிகிறது!

உலகத்தில் சதா சர்வ காலமும் ஒத்துக்கொள்ளாத ஜதைகள் இரண்டு இருக்கின்றன ஒன்று, மாமனார்—மாப்பிள்ளை; இன்னொன்று வீட்டுக்காரர்—குடித்தனக்காரர். இந்த இரண்டாவது வகைக்கு ஏழு வருஷ காலம் விதிவிலக்காக இருந்து வந்த நான், திடீரென்று ஒரு நாள் நினைக்காமல் குறிக்காமல் உடைத்தாருடன் சேர்ந்து கொண்டேன்! மாதம் ஒரு முறை வாடகை வாங்கும் சமயம் தவிர என்னை வந்து பார்க்கும் வழக்கம் வைத்துக் கொள்ளாத அந்த நல்ல மனிதர் நடு மாதத்தில் சுருங்கின வதனமும் கனல் பறக்கும் நயனங்களுமாக என் எதிரே வந்து, "என்ன ஸார், நீங்கள் வீடு கட்டிக்கொண்டிருக்கிறதாக ஊர் பூராவும் தம்பட்டம் அடித்துக்கொண்டு வருகிறீரே!" என்று கேட்டார்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. "அடடா! என்னிடம் தம்பட்டம் ஒன்றும் கிடையாது; எனக்குத் தெரிந்தவரையில் எங்கள் சின்னக்கண்ணனிடங்கூட இல்லையே...வேறு யாரோ தான் அடித்திருக்க வேண்டும்!" என்று அவருக்கு யதார்த்தைக் கூறி, "ஆமாம், தம்பட்டம் அடித்துவிட்டுப் போகட்டுமே! அதனால் நமக்கு என்ன சிரமம்?" என்று கேட்டேன்.

"சிரமமா! நாசமாய்ப் போச்சு, போம்! நீர் லகுவாகச் சொல்லி விட்டீர்! காலையிலும் மாலையிலும் என்னை வீடு தேடி வந்து, இந்த வீட்டைத் தனக்கே விடும்படி விசாரிக்கிற பேருக்குப் பதில் சொல்லி முடியவில்லை, ஐயா! அதற்கே தனியாக ஒரு ஆள் வேலைக்குப் போட வேண்டியிருக்கும் போலிருக்கிறதே! பொல்லாப்பு வேறு வருமோ என்று பயமாயிருக்கிறது!" என்றார்.



எத்தனையோ சந்தர்ப்பங்களில் எத்தனையோ பையன்கள் ஏதானும் வேலை காலி இருந்தால் கையைக் காட்டி வைக்கும்படி என்னை வருந்திக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இதோ ஒரு நல்ல வேலை காலி இருக்கிறது! ஆனால், ஒரு பையன் பெயராவது ஞாபகத்துக்கு வந்தால் தானே? அதை எனக்குள் அடக்கிக்கொண்டு, "நீங்கள் இப்படி என்னைக் குறை கூறிவிட்டு, எல்லோருக்கும் முன்னாடி என்னுடன் பொல்லாப்பைத் தேடிக்கொள்கிறீர்களே! உங்கள் வீட்டின் மகத்தானதொரு விசேஷம், இதில் குடி வந்த நான் சொந்தமாக வீடு கட்டிக்கொண்டு போவது. இதை மட்டும் நான் விளம்பரம் செய்ய ஆரம்பித்தேனோ, உங்கள் பாடு இன்னும் ஆபத்தாகி விடும்......ஆகையால், நான் செய்ய வேண்டியது என்ன என்பதை நீங்கள் சுருக்கமாக—சுமுகமாக—சொல்லி விடுங்கள்" என்றேன்.

என் வீட்டுக்காரர் மிக நல்லவர். சுபாவமாகவே சாந்தர். தெய்வபக்தி உள்ளவர். என்னிடம் விசுவாசமே வைத்திருந்தார். எனவே, அவருக்கு ஏற்பட்ட சிரமத்தினாலேயே இப்போது சற்றுப் படபடப்பாகப் பேசி விட்டார் என்பதை அடுத்த கணம் தாமே அறிவித்துக் கொண்டு விட்டார்.

"நான் என் வாயினால் ஒரு ஆசாமிக்குக்கூட இது விஷயம் பிரஸ்தாபிக்கவில்லை...எப்படியோ பரவியிருக்க வேண்டும், ஸார்!" என்று நானும் மிக அங்கலாய்த்துக் கொண்டேன்.

"ஆமாம், வீடு எங்கே கட்டுகிறீர்? எத்தனை ஆகியிருக்கிறது?" என்று அவர் பழைய புன்னகையுடன் விசாரித்ததும் பூரா விவரங்களையும் சொன்னேன். "என் கிருஹப் பிரவேசம் சீக்கிரம் நடக்கவேண்டுமானால், நீங்களே ஒரு காரியம் செய்யலாம்!" என்றேன்.

"என்ன?" என்று அவர் கேட்டார் ஆவலுடன்,

'உங்கள் வீட்டைக் கேட்டுக்கொண்டு வருகிற அத்தனை ஆசாமிகளையும் எங்கள் கண்ட்ராக்டர் திருமலையின் விலாசத்துக்கு அனுப்பி வையுங்கள்!'' என்று சொல்லி அவரை அனுப்பினேன்.

''என்ன தம்பி! வீட்டுக்காரர் குரல் மாதிரி கேட்டதே!'' என்று கேட்டுக்கொண்டே என் தாயார் அங்கே வந்தாள்.

''ஆமாம்! அவரே தான்!''

''இங்கே நாம் படுகிற தண்ணீர்க் கஷ்டத்தைப்பற்றிச் சொன்னாயா?''

''நாம்தான் காலி செய்கிறோமே, அம்மா? அதற்குள் அவருடன் என்ன பேச்சு!'' என்று சமாதானம் கூறி முடிக்கிறதற்குள், ஸ்ரீஜயம் வந்து சேர்ந்தார். ''ஏது, கிருஹப் பிரவேச ஏற்பாடு பலமாக இருக்கிறது போல் காண்கிறது! வீட்டுக்காரரை வருவித்துச் சாவி கொடுக்கிற தேதியைச் சொல்லியிருப்பீர்கள் போலிருக்கிறதே!'' என்றார் அவர்.

என் தாயார் உன் பக்கம் திரும்பியதும், ''அம்மா, அம்மா! இன்றைக்கு நீங்கள் எல்லாரும் உங்கள் வீட்டுக்கு வந்து போகும்படி நான் மிக மிக வேண்டிக் கொள்கிறேன். சமையற்கட்டில் மேடை வேண்டுமா வேண்டாமா, அம்மி எங்கே போடுகிறது, தொட்டி மித்தம் எப்படி வைக்க வேண்டியது, சாமான்களுக்கு அலமாரி எப்படி இருக்க வேண்டியது, புகை போக்கி போறுமா—எல்லாம் நீங்கள் பார்த்துத் தீர்மானிக்க வேண்டிய விஷயங்கள். எனக்கு ஒன்றுமே தெரியாது!'' என்றார்.

''ஆஹா! அதற்கென்ன, வருகிறோமே!''

ஜயம் என்னைப் பார்த்து, ''வருகிறேன் என்றால் போய்க்கொண்டேயிருக்க வேண்டும்.. சீக்கிரம், சீக்கிரம்!'' என்று துரிதப்படுத்திவிட்டுத் தமது காரில் போய் உட்கார்ந்து கொண்டார்.



என் தாயார் ராஜத்தைப் புறப்படும்படி சொன்னாள்; ராஜம் தாயார் பார்த்துவிட்டாலே போதும் என்றாள். ...வாக்கண்ணன் தானும் வருவேன் என்று குதியாகக் குதித்துக்கொண்டிருந்தான். எனக்குக் கோபம் வந்து கொண்டிருந்தது. ''நீங்கள் வராவிட்டால் போங்கள்! நான் மட்டும் போய்விடுகிறேன்!'' என்று நான் கூச்சல் போட்டேன்.

''ஓரி!' சீக்கிரம்!...உத்தியோகம் போய்விடும்!'' என்று ஜயம் ஹாரனை ஓசைப்படுத்தி காரிலிருந்தபடி அழைத்தார்.

ஒரு வழியாக நாங்கள் போய்ச் சேர்ந்தோம். கந்தசாமி மேஸ்திரி அவனுடைய பற்களைக் காட்டி வரவேற்றான்; இந்திராணி ஒரு கதாநாயகியைப்போல் எங்களை எட்டவிருந்து அலட்சியப் பார்வை பார்த்து, ''உங்களுக்கெல்லாம் இங்கே என்ன வேலை?'' என்று தன் மனத்திற்குள் நினைத்துக்கொண்டாள்.

'எங்கே, முதலில் சமையல் அறைக்குப் போங்கள்!'' என்று ஜயம் முன்னே சென்றார். அங்கே அம்மியை வலதுமாகப் போட்டிருந்தார்கள். ''பாருங்கள், அம்மா! அடுப்பு இழுக்கைப் பார்க்க இருக்க வேண்டும் என்பீர்களே!'' என்றார் ஜயம்.

''ஆமாம், அது சரிதான்!''

''மூன்று அடுப்புகள்; உயரே நேரே புகைபோக்கி; புகை போக்கியை நன்றாக உயரமாகக் கட்டிவிட்டால்......''

நாங்கள் எல்லாரும் அடியில் நின்று நிமிர்ந்து அதனுள் எட்டிப் பார்த்தோம். ஜிலு ஜிலுவென்று காற்றோட்டம் இருந்தது. ஜயம் தொடர்ந்து உத்லாகமாக, ''காற்று........ இ.....ழு......த் துக் கொண்டே போய்விடும்!'' என்று கையை வீசினார்.

கந்தசாமி அதை ஆமோதித்துத் தலையை ஆட்டி, "ஆமாமுங்கோ......உயரே......நல்லா......ஏனடி கட்டிட்டோம்னா.....புகை ஓடியே போய் விடுங்கோ!" என்றான்.

"போய்விடுமா?" என்று அவனைப் பார்த்துச் சந்தேகப் பட்டார் ஐயம்.

"போயிடும், ஸாமி! கண்டிப்பாய்ப் போயிடும்!" என்றான் மேஸ்திரி.

"ஒருகால் சரியாகப் போகாவிட்டால் என்ன செய்வ தென்பதற்காகத்தான் முன் ஜாக்கிரதையாக அறையின் இரண்டு பக்கமும் ஜன்னல் வைத்திருக்கிறேன், கவனித் தீர்களா, அம்மா!"

"அதுவும் நல்லதுதானுங்கோ, ஸாமி!"

"இதோ இங்கே அம்மியைப் போட்டால், இடக்கைப் புறம் தொட்டி மித்தம் வருகிறது, பாருங்கள்! சரிதானே?"

என் தாயாருக்குச் சொல்லத் தெரியவில்லை—"சரியாக இருக்கும்போல்தான் தோன்றுகிறது!" என்றாள் மெதுவாக.

"ஏ ராஜம்! நீ அதி மேதாவி ஆயிற்றே! வாய் திறந்து சில முத்துக்களை உதிர்க்கிறதுதானே?" என்று கேட்டேன்.

"நீங்கள் சொல்கிறதில் ஏதாவது பிசகு இருந்தால் தானே நாங்கள் பேசலாம்!" என்றாள் அவள்.

"'வேறு வழி இல்லை. இப்படித்தான் வைத்தாக வேண்டும்' என்கிறீர்களா?" என்று கேட்டார் ஐயம.

எங்கள் சங்கடத்தை ஊகித்த கந்தசாமி மேஸ்திரி சட்டென்று எங்களிடையே புகுந்து, அம்மி முன் நின்று, அரைத்துக் காட்டி, "ரொம்ப சௌகரியமாக இருக்கும், ஸாமி!" என்று நடித்தும் காண்பித்து விட்டான்.

"நான் ஏன் இவ்வளவு யோசனை செய்கிறேன், தெரியுமா? அடுப்பங்கரையில் புகை போகவில்லை, இதர

27070
41725



...ாகப் போகத் தெரிகிறது!

...கரியங்கள் இல்லை என்றால், வீடு பூராவும் நாசம் ...விடும்! எங்கு பார்த்தாலும் கரி ஏறும்; வீட்டை விட்டு ...வெளியே போக மாட்டோமா என்று தோன்றிவிடும்... ...ந்த வீட்டில் நான் புதிதாகச் சில காரியங்கள் செய்து ...டேன். சமையற்கட்டில் அடுப்பு மூட்டி புகை சரியாகப் ...கிறதென்று தெரிந்து கொண்ட பிறகுதான் எனக்கு ...து சமாதானம் அடையும், தூக்கம் வரும்" என்று ஐயம் ...ன்னார்.

நான் சிரித்தேன்.

"சிரிக்கிற விஷயம் இல்லை. உமக்கு உபகாரம் செய்யப் ...ேன். இது சரியாகவரவில்லை என்றால், என்னைத் தினம் ... நீர் அஷ்டோத்திரம் ஸஹஸ்ரநாமம் செய்ய ...மோ?"

"அது மாத்திரம் சொல்லாதீர்கள்!"

"உஸ்!...கேசவன் மாதிரி பேச ஆரம்பித்துவிட்டீரே! ... சகவாசம்!...மேஸ்திரி! அலமாரிகளுக்குத் தட்டு ...த்துவிட்டீர்களா?"

"ஆயிட்டுதுங்க, ஸாமி!"

"ஸார்! தட்டு அளவு சரியாக இருக்கிறதா என்று ...க்கவேணுமே! எங்கே, நான் கொடுத்த 'டேப்'பை ...க் கொண்டுவாரும்!"

"அடடா! நான் வீட்டிலிருந்து கொண்டுவர மறந்து ...ட்டேனே!" என்றேன் நான்.

"நீர் எதற்காக ஸார், இங்கே வருகிறீர்? நீர் வாங்க ...ை என்று நானே ஒன்று வாங்கிக்கொடுத்தால், அதைக் ... கொண்டு வராமல்"

...எனக்கு மிக வருத்தமாக இருக்கிறது, ஸார்! நாளை ..."

"ரொம்ப வருத்தப்பட வேண்டாம். இதோ திருமலை
வருகிறார். அவர்கூட முக்யமான ஒரு விஷயம் மறந்து
போய்விட்டார்!" என்றார் ஐயம்.

"என்ன என்னைத் திட்டிக்கொண்டிருக்கிறீர்கள்
ட்ருமனும் ஆட்லியுமாக!" என்று கேட்டார் திருமலை.

"ஒன்றுமில்லை. இவர் எதையோ மறந்துவிட்டே
என்றார். நீங்கள்கூடத் தளம் போடும்போது சமைய
கட்டு ஜன்னலுக்கு 'ஸன்ஷேட்' வைக்க மறந்து விட்டீர்க
என்று அவரிடம் சொன்னேன்!" என்று கடகடவென்
சிரித்தார் ஐயம்.

திருமலை கந்தசாமியை விழித்து, "என்னது, ஐய
சொல்றாரே!...வாஸ்தவந்தானா?" என்று கேட்டார்.

"ஆமாமுங்கோ...எப்படியோ தவறிடிச்சு" என்
தலையைச் சொறிந்தான். அவன்.

"அதனால் என்ன! நான் உங்களுக்கு ஸன்-ஷே
தனியாகச் செய்து வைத்துவிடுகிறேன்...இந்தக் கந்
சாமியை ஒரு காரியத்தில் பூரா நம்பினால்..." என்
திருமலை பல்லைக் கடித்தார்.

"அவரைக் கோபிக்காதீர்கள்! மாடியில், பெட்
சுவரில் ஒரு சிறு இரும்புப் பெட்டி (வால்-காபர்) ப
வேண்டுமல்லவா?...அதை அவர் மறந்துவிட்டார்!" என்
ஐயம் சொல்லி மேலும் சிரித்தார். திருமலையின் மு
அப்போது பார்க்கச் சகிக்கவில்லை.

கந்தசாமி, "டாய் மன்னாரு! கழுதே!" என
ஆரம்பித்ததும், ஐயம் கையமர்த்தி, "இந்தா, இதெல்
நாங்கள் போனபிறகு ஆகட்டும்! தப்பு நேர்ந்
சொல்கிறோம்.. இவருக்கும் பண நஷ்டம் ஆகக்
தல்லவா? ஒன்றுமில்லை! நேற்றுப் பூரா 'ஜாலி' அறுக்
கிறீர்கள்; எல்லாம் சமனான ஓட்டையாக இருக்க வேண்
அல்லவா? இருக்கிறதா, பாருங்கள்!" என்று கேட்டார்.



"அது கம்பி கட்டினதிலே பிஸிருங்கோ.. நம்ப மேலே
ஒரு பிஸகில்லே!" என்று மேஸ்திரி ஆரம்பித்தான்.

"கம்பி சரியாக இல்லை என்றால் நீ ஏன் மேலே
வேலை செய்கிறாய்?"

திருமலை தொப்பியை அகற்றித் தலையைத் தடவிக்
கொண்டார். "கந்தசாமி! அந்த ஜாலி பூராவும் இடித்துத்
தள்ளு! வேறு செய்து கொள்ளலாம்! போ!...எங்கே
முருகய்யன்? அவன் ஏன் அப்படிக் கம்பி கட்டினான்?"
என்றார்.

"முருகைய மேஸ்திரி இல்லிங்கோ... அவரு மச்சானுக்குக்
காயலாவுன்னு கருக்கல்லே புறப்பட்டுப் போனாருங்கோ!"
என்றான் மன்னார் என்கிற ஆள்.

"பின்னே எப்போ வருகிறானாம்?"

"அவருக்குக் காயலா சொஸ்தமானாலும் வந்திடுவாரு;
அவரு இறந்துட்டாலும் வந்திடுவாரு...இளுத்துக்கிட்டுக்
கெடந்தா தான் வர நாளாவும்!"

"அப்படியானால், செந்தில் ஆண்டவனே! இரண்டில்
ஒன்று ஆகக் கடவது!" என்றார் திருமலை விரக்தியுடன்.

"இவர்தான் 'முருக பக்தர்' என்று நினைத்தேன்;
திருமலை ஸாருக்கும் அந்த மாதிரி பைத்தியம் உண்டா?"
என்று கேட்டார் ஐயம்.

"எனக்குச் சிதம்பரம் நடராஜர்மீதுதான் அசாத்திய
பக்தி!" என்று ஒப்புக் கொண்டார் திருமலை.

"அப்படியா? சிதம்பரம் போனபோது கோபுரத்தை நீர்
எப்போதாவது தட்டிப் பார்த்தது உண்டா?"

"இல்லை; ஏன் கேட்கிறீர்கள்?"

"அடுத்த தடவை போகும்போது ஞாபகமாகத்
தட்டிப் பாரும்! ஒரே மரமாயிருக்கும் உள்ளேயெல்லாம்...
ஆமாம், ஸார்!"

திருமலை சிரித்தார். என்னைக் காட்டி, "இவரோடு பேசிப் பேசிப் பொய்க்கதைகள் சொல்ல உமக்கும் பழகி விட்டது!" என்று தமாஷ் செய்துவிட்டு, "நீங்கள் கவலைப்பட வேண்டாம்! இன்று ஜாலியில் வேலை செய்த ஆள் கூலியை நான் பிடித்துவிடுகிறேன். வீணாகப் போன கலவையை நான் எடுத்துக்கொள்கிறேன்!" என்றார்.

"பாருங்கள்" ஓனர், உங்களால் கன்ட்ராக்டர் கைப்பணம் போகிறது!...உட்! கிருஹப் பிரவேசம் என்றைக்கு? திருமலை கையில் அல்லவா இருக்கிறது அது!" என்று ஐயம் கேட்டார்.

"என் பேரில் பிசகில்லை. மாடியில் பார்த்தீர்கள் அல்லவா? வெதர்-புரூபிங்' வேலை மளமளவென்று நடக்கிறது...பாட்டுச் சத்தம் காதில் வந்து மோத வில்லையா?" என்றார்.

"அடடா! வாங்க ஸார்! இந்திராணியின் சங்கீதக் கச்சேரி சித்தெ நாழி கேட்கலாம்!" என்று ஐயம் சொல்ல, எல்லாரும் மேலே ஓடினோம்.

மாடியில் திறந்த வெளியில் சுண்ணாம்பு ஜெல்லி போட்டு, நீமிக செய்துவிட்டு, சில பெண்கள் அதன்மீது உட்கார்ந்து ஒரு கட்டையால் தட்டிக்கொண்டிருந்தார்கள். அடிக்கடி கடுக்காய் ஜலத்தையும் ஊற்றிக் கொண்டிருந் தார்கள். நான் அதை வேடிக்கை பார்க்கும்போது ஐயம், "மழை வெய்யிலுக்கு இலக்காகும் இடம் அல்லவா? ஆகையால் சுண்ணாம்பு ஜெல்லி போட்டுத் தட்டிவிட்டு, அதன் மேலே சொருகு ஓடு இரண்டு வரிசைகள் எதிர் எதிராகப் போட்டு அதன் மேலே சிமிட்டியையும் பூசிவிடுவார்கள். அப்புறம் 'பக்கா'வாகப் போய்விடும்... என்ன மழை பெய்தாலும் இறங்காது... இன்ஜீனியர் ஸார்! மழை ஜலம் எல்லாம் வடவண்டை ஓட வேண்டும்; வாட்டம் அந்தப் பக்கம் கொடுக்கணும்! சரிதானே, ஸார்?" என்றார்.



"பார்த்துக்கொள்கிறேன்...ஆமாம்" இவர் கிருஹப் பிரவேசம் சித்திரையில் நடக்க வேண்டும் என்றால், சிமே இப்போது பூச வேண்டும்!"

"எனக்குத் தெரியாது! ஓனரைக் கேளுங்கள்!" என்றார் ஐயம்.

"அப்படியானால் நான் பூசட்டுமா?"

"அதெப்படி, ஸார்? மேலே 'டொக் டொக்' என்று இப்படித் தட்டிக் கொண்டே சிமே பூசினால் என்ன ஆகும்?"

"ஒன்றும் ஆகிவிடாது! சித்திரை மாதத்தில் வரவேண்டும் என்றால் எங்கே 'டைம்' இருக்கிறது?"

"வைகாசியில் வரட்டுமே!"

"அது உங்கள் இஷ்டம்."

"இஷ்டம் இல்லை ஸார்! சுவர் இன்னம் கொஞ்சம் தண்ணீர் சாப்பிடட்டுமே! ஜலம் ஊற்ற இவரிடம் ஒரு 'பம்பு' வாங்கித் தரும்படி சொன்னேன்; இவர் கொடுக்கவே இல்லை."

"கொடுத்துவிடுகிறேன், ஸார்!" என்றேன் நான்.

கந்தசாமி வந்து நின்று பின் தலையைச் சொறிந்து, ஒரு காலால் நடனம் செய்து, "அலமாரிங்களுக்குக் 'கண்டிக் கல்லு'ங்களை 'அப்ளிச்'கடலாமுங்களா?" என்று கேட்டான்.

நான் ஒன்றும் புரியாமல் ஐயத்தைப் பார்த்தேன். அவர், 'கண்டிக்கல்' என்பது மெல்லிய கற்கள்; 'அப்ளிச்சல்' என்பது நேர்வாக்கில் அவைகளை நிறுத்திக் கட்டுவது என்று விவரித்தார். அலமாரியில் ஆழம்காட்ட இவைகளைத்தான் உபயோகிப்பார்கள்.

"பேஷாச் செய்யேன்; இதென்ன கேள்வி?" என்றார் திருமலை.

"ஆமாம்... ஒரு காரியம் செய்யுங்களேன், திருமலை! அலமாரிகளுக்குப் பின்னால் சிமிட்டி பூசும்போது வலை வைத்துப் பூசிவிட்டால் இன்னும் பலமாயிருக்காது?" என்று கேட்டார் ஐயம்.

"நான் அப்படித்தான் செய்வேன், நீங்கள் சொன்னாலும் சொல்லாவிட்டாலும்!... மேஸ்திரி! நாளைக்குக் காலையில் கோழி வலை வாங்கிக் கொண்டு வந்துவிடு ஆறு அலமாரிக்கு!"

"இன்னிக்கே சொல்லி அனுப்பிக் கொண்ணாந்துடறேனுங்க!"

"அப்படித்தான் மேஸ்திரி பூஷாணிக்காய்க்கும் சொன்னார்... இன்னும் கட்டவே இல்லை!" என்றேன் நான்.

"போகட்டும்! கிருஹப் பிரவேசத்து ஸாம்பாருக்கு வாங்கும்போது இரண்டு காயாக வாங்கிவிடுங்கள்!" என்றார் ஐயம் சமாதானமாக. மேலும் தொடர்ந்து, "நான் உங்களிடம் சொல்ல வந்தது, கிடுமே தளம் போடுவது பற்றி..." என்றார் திருமலையைப் பார்த்து.

"என்ன செய்ய வேண்டுமோ, சொல்லுங்கள்..." என்றார் திருமலை.

ராஜம் என்னிடம் காதோடு, "சொன்னால் வாழ்ந்தது! அவர் அதைக் கந்தசாமிடம் சொல்லிக் குட்டிச்சுவர் செய்து விடுவார்" என்றாள்.

"இருங்கள், இருங்கள்! இங்கே தம்பதிகள் ஏதோ முக்கியமான முடிவு செய்துகொண்டிருக்கிறார்கள்" என்று ஐயம் என்னைத் திரும்பிப் பார்த்தார்.

"ஒன்றுமில்லை, ஸார்! வெந்நீர் உள்ளை ஒரு முறை பார்க்க வேண்டும் என்கிறார்கள்" என்று சொல்லித் தப்பித்துக்கொண்டேன்.



"இருக்கட்டும்; அதற்கு ஒரு புது மாதிரி 'பிளான்' இருக்கிறது, சொல்கிறேன். மற்ற வேலைகள் முன்னாடி ஆகட்டும்!" என்று ஐயம் சொன்னார்.

"அப்படியானால் பாத்-ரூமில் நாங்கள் வேலை தொடங்க வேண்டாம் அல்லவா?" என்று கேட்டார் திருமலை.

"கிட்டே நெருங்க வேண்டாம்!"

காரில் நாங்கள் திரும்பி வரும்போது மிஸ்டர் ஐயத்தின் நண்பர் ஒருவர் முன் ஸீட்டில் உட்கார்ந்துகொள்ளவே, நான் என் குடும்பத்துடன் பின் ஸீட்டில் நெருங்கி ஒண்டிக் கொண்டேன், சின்னக்கண்ணன் நெருக்கடியில் முனக ஆரம்பித்துவிட்டான்.

"என்னடாலே, என்ன சமாசாரம்?" என்றார் ஐயம் திரும்பிப் பார்த்து.

"இங்கே எல்லாருமாய்ச் சேர்ந்து என்னை 'அப்ளி'ச் சுடறா, மாமா!"

"ஓஹோ! புது வார்த்தை கத்துக்கொண்டுவிட்டான் உம்ம பிள்ளை!" என்று கூறி ஐயம் சிரித்தார்.

கிடுமே பூசசு வேலைககு லகுவில இடங்கொடுக்கவில்லை ஐயம். இனிமேல் தாமதம் செய்வது தகாது என்று நானே சொன்னபோது, "அட போ அய்யா! முடியாது என்றால் முடியாது!" என்றார். திருமலை ஒரு புறம் பூச்சு வேலைக்கு என்னை நச்சரித்து அவசரப்படுத்த, ஐயம் ஒருபுறம் அசுவாரஸ்யமாக அதைக் கிடத்திப் போட, என் பாடு ஒரு வார காலத்திற்குச் சங்கடமாகிவிட்டது.

"அப்புறம் என்னைக் குற்றம் சொல்லாதீர்கள்! கிருஹப் பிரவேசத்தை ஒத்திப் போடவேண்டியதுதான்!" என்று எச்சரித்தார் திருமலை.

"தாமா வைத்துக்கொள்கிற தேதிதானே ஐயா, அது? தீபாவளியா, பொங்கலா, தள்ளி வைக்க முடியாதென்

பதற்கு?... நீர் போய் 'க்ரில்'காரரைப் பார்த்தீரா? அதைச் சொல்லும்!" என்று பேச்சை மாற்றினார் ஐயம்.

"இன்னும் இல்லை."

"பின்னே? அது முக்கியம் இல்லையா?... அப்புறம் வீட்டின் முன் புறத்தை எப்படி அமைப்பதென்று நிர்மானம் பண்ணினீரா? Architectural Frontage இருந்தால்தானே வீட்டுக்குளடுப்பு? அதற்கு என்ன ஏற்பாடு செய்திருக்கிறீர்?"

"எனக்குத் தெரியாது."

"தெரியாது, தெரியாது என்றால்! போய் நாலு புது வீடுகளைப்பாருமேன்! பார்த்து, அழகாக - பொருத்தமாக - ஏற்றதாக - 'ஸிம்பி'ளாக - பொறுக்கி, கிராப் - கடுதாசியிலே அதைப் போட்டு உபயோகமாக ஏதானும் செய்வீரா?... பூசுகிறதாம்! உம்ம வீட்டைப் பூசினால் எல்லாம் ஆகிவிட்டதா? பூசினவுடன் ஜாகை போய் விடலாமா?"

"திருமலை சும்மா கேட்கிறாரே!"

"'இப்போ வேண்டாம், நீங்க முன்னால் மாடியைக் கட்டுங்கோ' என்று சொல்கிறது... என்ன ஸார் நீங்கள்!"

"போன வாரத்தில் 'நாம் அடுத்த வாரம் பூசலாம்' என்றோம். இப்போது......"

"'அடுத்த வாரம் ஆகட்டும்' என்று சொல்லுமேன்! வீடு உம்முடையதுதானே? திருமலையுடையது இல்லையே!"

என்னுடைய நல்ல காலமோ என்னமோ, மாடி அறைகளுக்கு 'லெண்ட்ரிங்' செய்து ஜெல்லி போட ஏற்பாடு செய்து கொண்டிருந்த கந்தசாமி, "ஸிமிட்டி இன்னும் ஏழுடன்களேதான் பாக்கியிருக்கின்றன. தளம் போட்டுக் கொண்டு, நிதானித்துப் பூசலாம்" என்று தெரிவித்தான்.

மாடியில் தளம் போடும் சமயத்தில் எலெக்ட்ரீஷியன் கிருஷ்ணஸ்வாமி அவன் கோஷ்டி ஆட்கள் சிலருடன் வந்து சேர்ந்தான்.



"அடே! நான் முன்னாடி சுவரில் ஒட்டைகள் செய்து விடறேன்டா! பூசின பிற்பாடு, சீப் ஸுப்ரின்டெண்ட் வி. ஜி. வெங்கடரத்னம் வீட்டிலே வேலை செய்கிற ஆட்கள் எல்லாரையுமே இங்கே திருப்பி விடுகிறேன்டா. சரி தானேடா?" என்று கேட்டான்.

"அப்படியே செய்யேன்!" என்றேன்.

"உனக்காக முதல்-தரமான 'பீப்பர்' போடறேன்டா!... இங்கிலீஷ் 'க்ளாம்ப்'கள் தான் நான் 'யூஸ்' செய்யறதுடா!"

"உன்னிடம் ஒப்புவித்துவிட்டேன். எது சரியோ அப்படிப் பார்த்துச் செய்."

"அது இல்லேடா! ஒரு நாலு ரூபாய் கூடச் செலவானாலும், நான் படி நிற்கணும்டா. இப்போ 'ஒயரிங்' செய்து விட்டு, மறுபடி இரண்டு வருஷத்திலே அதைப் பிரிச்சுச் செய்யறதிலே என்னடா சுகம் இருக்கு. ஆளை வேலைக்கு விட்டுவிடட்டுமாடா!"

ஜோஸப் ஒரு 'ஸல்யூட்' அடித்துவிட்டு, "பைப் எல்லாம் கொணர்ந்துட்டேன்... பார்த்தீங்களா, ஸார்?" என்று கேட்டார். அவர் வெகு நாகரிகமாக உடை உடுத்திருந்தார். மூக்குக் கண்ணாடி பளபளவென்றது.

"எல்லாம் ரொம்பத் தரமாயிருக்கிறது. மேலே வேலை நடத்துங்கள்!"

"கொஞ்சம் 'மணி' வேணும்... கடைசியிலே பில் போட்டு எல்லாத்துக்கும் அக்கௌண்ட் கொடுக்கிறோம்!"

"அதற்கென்ன, தரேன்!" என்றேன். அவருக்குப் பணம் இல்லையென்று யாராலும் சொல்லமுடியாது!

கிருஷ்ணஸ்வாமி உடனே, "எனக்குக்கூடக் கொஞ்சம் வேணும்டா!... சீப் ஸுப்ரண்ட் வி. ஜி. வெங்கடரத்னம் 'காம்ப்' போயிட்டார்டா; அவர் 'ஒப்ப்' கிட்டச் சொல்ல மறந்து போயிட்டார்டான்னாக்கே!" என்றான்.

கந்தசாமியும் திருமலையும் பேசிக்கொண்டே வந்தார்கள். "ஸார்! உயர ஸன் - ஷேட் போட 'மாட்' தீர்ந்துவிட்டது. ஒரு ஐம்பது அடி விலையாவது வேணும்... பணம் கொடுத்தால் தேவலை!" என்றார் திருமலை.

"தருகிறேன்—அப்புறம்?"

"சிமெட்டி ஒரு மூணு டன் போடுங்கள். அதற்குள் 'அட்ஜஸ்ட்' செய்துவிடலாம். அதற்கும் பணம் வேணும்."

முருகய்யன் தலையை நீட்டினான்; "அய்யா கிட்டச் சொல்றதாகச் சொன்னீங்களே, சாமி! கால் அங்குலக் கம்பி தேவையாச்சுங்களே!" என்று கண்ட்ராக்டருக்கு ஞாபகப்படுத்தினான்.

"ஆமாம், ஸார்! 'கால் அங்குலம்' இல்லாவிட்டால் மாடித் தளம் போடுவதற்கில்லை. அது ஒன்றில்தான் எல்லாமே 'டிலே' ஆகிவிடும் போலிருக்கிறது. கறுப்பு மார்க்கெட்டுக்கு நான் போகிறதே இல்லை; இந்தத் தடவை தீராது போல் இருக்கிறது! நான் அலையாத இடம் இல்லை...அதற்கும் பணம் கொடுங்கள்!"

"கொடுக்கிறேன், ஸார்!"

"நீங்கள் ஒரே தடவையாக மணல் வாங்கிப் போட்டு விட்டீர்களானால் பூச்சு வேலைக்கு வைத்துக்கொள்ளலாம். ஆர்டர் கொடுத்து விடட்டுமா?"

"ரொம்ப ஆகுமோ?"

"இதுவரைக்கும் மணல் எங்கே ஆயிற்று? பூசும்போது தானே சிமிட்டியும் மணலும் வாரிக்கொண்டு போகும்?"

"இனிமேல்தானா? ஐயய்யோ!"

"பார்த்துக்கொண்டே வாருங்களேன் நீருந்தான்! எல்லாம் தெரிந்து கொள்ளுமேன்!... ஆ! அதோ 'கரில்'கார நாயக்கர் வந்துகொண்டிருக்கிறார். எல்லாம் சேர்த்துச் சொல்கிறேனே என்று எண்ணிவிடக் கூடாது... நீங்கள் வாங்கிக் கொடுத்த மரம் ஜாடாவும் தீர்ந்து விட்டது!..."



"மம்மம்மம்...!" என்று வந்த ருத்தரையாவைக் கவனிக்காதவன் போல நாயக்கரை எதிர்நோக்கி நடந்தேன். அவர் என்னைப் பார்த்துப் பேச சங்கோஜப்பட்டு அங்கிருந்த தென்னை மரம் ஒன்றைப் பார்க்கத் திரும்பிக் கொண்டார்.

"எங்கே வந்தீர்கள், நாயக்கர்?...எனக்கு ஆபீஸுக்கு நேரமாகிறது!" என்று கேட்டேன்.

"உங்கள் வேலையெல்லாம் சுத்தமா செய்து தரேன் ஸாமி!" என்றார்.

"அதுதான் அன்றைக்கே சொன்னீர்களே! செய்து, தாருங்கள்!"

"கொஞ்சம் அட்வான்ஸ் வேணுமுங்கோ!... இரும்பு வாங்கத்தரவலா?" என்று கேட்டார்.

'கேட்கிற பேரெல்லாம் ஏக காலத்தில் என்னைக் கேட்டு விடுங்கள்!' என்று நினைத்துக்கொண்டு, "சரி...... கொடுக்கிறேன்!" என்றேன்.

"நீங்க கொடுத்தால்தானுங்கோ வேலை துவக்கலாம்!... சுக்குமா இருக்க வாணாமுங்களா?"

பாங்கியில் உள்ள பணமும் 'சுத்த'மாகத் தீர்ந்துவிடுமென்று நான் எண்ணிக்கொண்டு வீட்டுக்குத் திரும்பினேன். ஒரு தபால் எனக்கு வந்திருந்தது. அதில் எனக்கு முந்நூறு அடி குழாய் 'ஸாங்ஷன்' ஆகியிருப்பதாகவும், பணம் கட்டிப் பெற்றுக்கொள்ளும்படியும் கண்டிருந்தது. பல்லைக் கடித்துக்கொண்டேன்.

"அப்பா! எனக்கு ஒரு சிலேட்டு வாங்கப் பணம் தா, அப்பா!" என்று சின்னக்கண்ணன் வந்ததும் என் பொறுமையை முற்றும் இழந்து விட்டேன்.

"பணம், பணம், பணம்! சட்! நான் ஏன் வீட்டைக் கட்ட ஆரம்பித்தேன்?" என்றேன் உரக்க.

"ஏன்! என்ன சிரமம் உனக்கு இப்போ? எல்லாவற்றையும் முருகனிடம் ஒப்புவித்துவிடு என்று நான் முன்னாடியே சொன்னேனே!" என்று என் தாயார் கேட்டாள்.

"இதுவரையில் ஒவ்வொருவர், ஒரொரு சமயம் பணம் கேட்டார்கள். இப்போ எல்லாரும் ஏககாலத்தில் கேட்கிறார்கள், அம்மா! இவர்களுக்குக் கொடுத்துச் சாத்தியப்படாது போலிருக்கிறது!"

"யார் யார் கேட்கிறார்கள்?"

"அந்த ஜாபிதாவைச் சொல்வதைவிட, கேட்காத இரண்டே பேர்களைச் சொல்கிறேன். அவர்கள் நீ சொல்கிற முருகனும், ஜயமும் தான்!" என்று சொல்லி மிக அலுத்துக் கொண்டேன்.

இசைப்படாமல் பின்னால் வந்து நின்றுகொண்டிருந்தார் ஸ்ரீ ஜயம். "நான் மட்டும் ஏன் கேட்கவில்லை? 'எப்போ சாப்பாடு போடுகிறீர்' என்று கேட்கத்தான் இப்போது வந்திருக்கிறேன். நாளைக்குக் காலையில் பூச்சு வேலையை ஆரம்பிக்கச் சொல்லிவிட்டு, வைகாசி மூன்றாம் தேதி கிரஹப்பிரவேசம் வைத்துக்கொள்ளும்! நாள் ரொம்ப நன்றாயிருக்கிறது!" என்றார்.

"அது முடியுமா? .. யோசித்துப் பார்க்கிறேன், ஸார்!"

"அதைப்பற்றி அனாவசியமாக நீர் யோசிக்க வேண்டாம்...வீட்டு முன்புறம் எப்படி அமைக்கலாம் என்று யோசனை செய்யும். ஏதாவது உபயோகமாக இருக்கும்!... இப்போதே ரொம்ப 'டிலே' செய்துவிட்டீர்!... வணக்கம் பல!"



# 12. பக்கத்து வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்தது!

"பூச்சு வேலையை இனி ஆரம்பித்துச் செய்யலாம்" என்று ஸ்ரீஜயம் சொன்னவுடன் என் உள்ளம் பூரித்துப் போயிற்று. திருமலைக்குச் சந்தோஷம் அளிக்கும் விஷயம் ஒன்றை என்னால் சொல்ல முடியும் என்றதும், அவர் வீட்டுக்குப் பறந்துகொண்டு சென்றேன்.

வாசல் ஒட்டுத் திண்ணையில் கேசவன் உட்கார்ந்து ஏதோ ஒரு பெரிய கூட்டல் கணக்குப் போட்டுக்கொண்டிருந்தான். என்னைக் கண்டதும் தலையை ஆட்டி ஒரு புன்னகை செய்து, அதே ஒட்டுத் திண்ணையில் இரண்டு முழம் விட்டு ஒதுக்குப்புறமாக உட்கார்ந்து கொள்ளும்படி எனக்குச் சமிக்ஞை செய்தான்.

"திருமலையைப் பார்க்கத்தான் வந்தேன். அவர் வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டேன் நின்றபடியே.

அதற்குப் பதில் சொல்லாமல், "என்ன விசேஷம்?" என்று கேட்டான். நான் அவனுக்குப் பதில் தராமல், "ரொம்ப வேலைத் தொந்தரவாக இருக்கிறாரோ?" என்று மறுபடி ஒரு கேள்வி போட்டேன்.

"அப்படித்தான் இருக்கிறார்.....நீங்கள் வந்திருக்கிறதாகச் சொல்லி விடுகிறேன்" என்றான் கேசவன் எனக்குப் பிடி கொடுக்காமல்.

'நானே வந்துகூடத் திருமலை வராமல் இருந்து விடுகிறாரா, பார்க்கலாம்!' என்று மனத்திற்குள் கறுவிக் கொண்டு, "எனக்கும் ஆபீஸுக்குப் போக வேண்டிய 'டைம்' ஆகிக்கொண்டிருக்கிறது...வருகிறதானால் வரச்

சொல்லுங்கள்'' என்றேன், சிறிது விறைப்புடன். இதுவரை காணப்படாத ஒருவித அலட்சிய பாவம் கேசவனிடம் தென் பட்டதாக எனக்கு ஒரு சம்சயம் ஏற்பட்டது.

திருமலை வந்துவிட்டார். ''வாருங்கள், உட்காருங்கள்'' என்று என்னைச் சொல்லவில்லை. புன்னகையும் செய்ய வில்லை. புருவத்தை மூன்று அங்குல உயரம் தூக்கி, ''என்ன!'' என்று விசாரித்தார்.

''இன்று காலை ஸ்ரீ ஐயம் என்னைப் பார்க்க வந்தார்...'' என்று சற்றுத் தயங்கினேன். அது அவர் காதில் விழுந்ததா என்று எனக்குச் சந்தேகமாக இருந்தது.

''சரி!''

''பூசலாம் என்று சொல்கிறார்.''

''சரி!''

''முதலில் வீட்டின் உட்புறம் பூசுவீர்களா, வெளிப் புறமா?'' என்று நானாகவே வெகுளியாகக் கேட்டேன்.

''அதையும் நீங்கள் ஐயத்திடம் கேட்கவில்லை போலிருக்கிறது!'' என்று கேலி செய்யும் பாவனையில் திருமலை கேட்டார்.

''எப்படி வழக்கம் என்று கேட்டேன். சொன்னால் சொல்லுங்கள்; இல்லாவிட்டால் விட்டுவிடுங்கள். இதற்கு முன் இந்த விஷயத்தில் பழக்கமே இல்லாமல் இருப்பதால் தானே எனக்கு இந்தத் தவிப்பு!''

''நீங்கள் இந்தத் தவிப்பை வைத்துக்கொள்ள வேண்டாம் என்றுதான் நான் சொல்கிறது! எதற்கும் உங்களுக்கு ஐயம்தான் 'அட்வைஸர்' ஆகிவிட்டார். நான் சொல்கிறதெல்லாம் தப்புந் தவறுமாக இருக்கிறதே என்று சொன்னேன்.''

''நீங்கள் அப்படி நினைக்கவே கூடாது, ஸார்! உங்களிடம் என்றைக்கு என் வீட்டை ஐயம் ஒப்புவித் தாரோ, அப்போதே...''



''ஒதுங்கிக்கொண்டிருந்தால் நல்லது!...உங்களுக்கோ தொட்டதெல்லாம் சந்தேகமாக இருக்கிறது. நான் எங்கே எதைக் கெடுத்து விடுகிறேனோ என்ற பயம் வந்து விடுகிறது.''

''பார்த்தீர்களா, பார்த்தீர்களா! ஒரு காலும் இல்லை. உங்களை முதல் முதல் பார்த்தபோது, 'என் அண்ணா' என்றேன் அல்லவா? அது தொடங்கி, இந்த நிமிஷம்வரை நான் வேறு மாதிரி எண்ணினது கிடையாது. ஒரு நாள் நீங்கள், 'போதும் உன் வேலை! பிடி கையில்!' என்று கோபமாகப் புறப்பட்டீர்களே, அன்றுகூட நீங்கள் வழக்கத்தை விட 'ரொம்ப அண்ணா' மாதிரி நடந்து கொண்டதாக நான் அபிப்பிராயப்பட்டேனே தவிர...''

''போனது போகட்டும்; நானும் ஒரு வேலையை ஆரம்பித்துவிட்டோமே என்றுதான் இதில் தொடர்ந்து செய்கிறேனே தவிர...''

''எனக்கு நின்றுகொண்டிருக்க 'டைம்' இல்லை; பூசு வதற்குச் சீக்கிரம் ஏற்பாடு செய்கிறீர்களா?'' என்று கேட்டேன்.

திருமலை சற்று நேரம் கண்ணை மூடிக்கொண்டிருந்து விட்டு, ''கேசவா!......அந்த மூக்கையா ஆச்சாரி இருப்பானா பாரேன்!'' என்று கேட்டார்.

''நேத்து காலையிலே கூட டீக்கடை வாசல்லே நின்று கொண்டிருந்தான்'' என்றான் கேசவன் குனிந்தபடியே.

'இன்னுமா அங்கே இருப்பான்?' என்று நான் வியந்து கொண்டிருந்தபோது, ''நீ போய் அவனை வரச்சொல்லு... நாளைக்குத் தனத்தைக் கொத்தவேணும், ஐயா சொன்னா ருன்னு சொல்லு!'' என்றார் திருமலை.

''ஆகட்டும்'' என்று கேசவன், உட்கார்ந்த இடத்தை விட்டு அசையாமல் சொல்லிவிட்டு, கணக்கை எடுத்து வைத்துக்கொண்டான்.

"இவர் என்ன, எனக்காக 'எஸ்டிமேட்' போட்டுக் கொண்டிருக்கிறாரா இப்போ?" என்று மெள்ளக் கேட்டேன்.

திருமலை அரைக்கண்ணால் கேசவனைப் பார்த்தார், பிறகு என்னைப் பார்த்து அழுத்துக்கொண்டு, "பொறுங்கள், ஸார்! வேண்டிய எஸ்டிமேட்டுகள் தரேன்; இதைப் பாருங்கள்! உங்கள் பணத்தில் காலணா எனக்கு வேண்டாம்!" என்றார்.

"அதற்கில்லை; என் சக்தியை மீறி ......" என்று நான் எழுந்தேன்.

"உம்முடைய சக்தி உமக்குத் தெரியுமா? ஆஞ்சநேயருக்குக்கூட அவர் சக்தியை வேறே ஒருத்தன் தான் சொல்ல வேண்டியிருந்தது!" என்று அவரும் எழுந்தார். இந்தப் பேச்சில் 'கூட'மாக த்வனித்த உவமையைக் கவனிக்காமலே என் ஸைக்கிளின்மீது உத்ஸாகமாகத் தாவி ஏறினேன்.

இதற்கு மறுநாள் ருத்ரையா ஆச்சாரி கட்டிய சாரங்களின்மீது நின்றுகொண்டு மூக்கையா ஆச்சாரியின் தலைமையில் நாலு கல் தச்சர்கள் என் வீட்டுக்கூரைத் தளத்தை 'டொக்டொக்'கென்று பொளிந்து தள்ளினார்கள். அப்படிப் பொளிந்துவிட்டால்தான் பூசும்போது, 'கலவை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும்' என்று கந்தசாமி மேஸ்திரி எனக்குப் பல சமிக்ஞைகளுடனும் உபமான உபமேயங்களுடனும் விவரித்துக் கூறினான்.

கொல்லத்துக்காரர்கள் தளத்தின் அடிப்பாகத்தைப் பூசுவது வெகு தமாஷாக இருந்தது. 'பாண்டு'களிலிருந்து கலவையை அவர்கள் கொல்லுருவில் சீவி எடுத்துக்கொண்டு வெகு லாகவமாக உயரே நோக்கி அடித்தார்கள். இதை எட்டி நின்று கவனிக்கும்போது இரு குஸ்தி வீரர்கள் ஒருவர் மீது ஒருவர் படாமல் கத்தி வீசிக்கொள்வது போலவே இருந்தது. வீசப்பட்ட கலவை 'சொத் சொத்'தென்று தளத்தின் மீது பட்டு ஒரு பங்கு ஒட்டிக்கொள்வதும் ஒன்பது



பங்கு கீழே சிதறுவதுமாக இருந்தது. "இந்திராணி! பாண்ட்! ஜல்தி!" என்று மேஸ்திரி ஓயாமல் கத்திக்கொண்டிருந்தான். "டாய் மன்னாரு! எங்கே பார்க்கிறே! கலவை கொட்டுது பார்!" என்பான். பெரிய சிமிட்டிப் பாளம் ஒன்று தளத்திலிருந்து அவன் பின்னால் பெயர்ந்து விழும்.

கீழே திருமலை நின்று, "கந்தசாமி! அப்பப்போ மட்டம் பார்த்துக் கொள். டாக்டர் மணி வீட்டிலே ஆனால் போல் ஆகிவிடப் போகிறது!" என்று எச்சரிக்கை செய்துகொண்டிருந்தார். (டாக்டர் மணி வீட்டில் நடந்ததென்னவென்று எனக்குச் சொல்பவர் இல்லை!) சற்று அசந்த சமயம் சடாலென்று சுண்டைக்காயளவு கலவை என் சட்டை மீதும் வாரித் தெளித்தது.

"டாய்! ஐயா நிக்கிறது கண் தெரிலே?" என்றான் கந்தசாமி.

"யார் பேரிலும் பிசகில்லை; நான் நின்றதுதான் பிசகு!" என்றேன்.

"வீடு கட்ட ஆரம்பித்ததே பிசகு என்று என்னைக் குறை கூறுவீர்களோ என்று பார்த்தேன்!" என்று என் தோளைத் தொட்டபடி கூறின ஐயம், "என்ஜினீர் ஸார்! வணக்கம் பல!" என்று திருமலைக்குத் தம வருகையை அறிவித்துக் கொண்டார்.

திருமலை உதட்டைப் பிதுக்கிக்கொண்டு, தலையை மட்டும் ஆட்டினார்.

"பூச ஆரம்பித்துவிட்டீர்கள் போலிருக்கிறதே!...ஓனர் என்னமோ பூசவே போகிறதில்லை என்று ஒற்றைக் காலால் நின்றாரே!" என்று கேட்டார் ஐயம்.

"எல்லாம் உங்கள் உபதேசம் எப்படியோ அப்படித்தான் அங்கேயும் நடக்கிறது!" என்று குறைபட்டுக் கொண்டார் திருமலை.

''நீங்கள் அப்படி ஒருகாலும் சொல்லக்கூடாது. நான்
ஒப்புக்கொள்ள மாட்டேன்...ஆமாம், 'ஓனர்' ஸார்! அடித்
தளத்திற்கு என்ன 'டிஸைன்' போடுகிறீர்கள். இழிருந்து
நிமிர்ந்து பார்த்தால் அழகாக இருக்க வேண்டுமே!''

''நீங்கள் என்ன சொல்கிறீர்களோ, அதைச் செய்
கிறோம். சொல்றதைக் காலாகாலத்தில் மட்டும்
சொல்லுங்கள்!'' என்றார் திருமலை.

ஐயம் என்னைப் பார்த்து, ''சும்மா நின்றுகொண்
டிருந்தால்? சொல்லுங்கள், ஸார், வாய் திறந்து!'' என்றார்.

நான் விழித்தேன். ஐயமே சட்டென்று ஒரு பழைய
கவரைத் திருப்பி வைத்துக்கொண்டு திருமலையின் பேனா
வினால் ஒரு சித்திரம் வரைந்து காட்டினார். அதில் சுற்று
புறம் ஒரு அடி இடம் விட்டு ஒரு வரம்பு காட்டியிருந்தது
நாலு மூலைகளிலும் நாலு பத்மங்கள். ''இப்படி ஏதாவது
செய்தால் நன்றாயிருக்குமா, சொல்லுங்கள்!'' என்று
திருமலையைக் கேட்டார்.

திருமலை பதில் சொல்லுமுன், ''ரொம்ப நல்லா
யிருக்குமுங்கோ..... நான்கூட சொல்லலாமுன்னிருந்
தேன்...அப்புறம் ஐயா என்ன சொல்வாங்களோன்னு...'' என்று
தலைக்கு மேலே சாரத்திலிருந்து கந்தசாமி சொன்னான்.

திருமலை அந்தக் கடுதாசியைக் கந்தசாமியிடம்
ஒப்புவித்தார். நாங்கள் வெளியே வந்தோம்.

அன்று மத்தியானம் ஸ்ரீ ஐயம் என்னை டெலிபோனில்
அழைத்தார்.

''ரொம்ப வேலையாக இருக்கிறீரோ?''

''இல்லை.. ஏன்?''

'''க்ரில்' விஷயமாகப் போய்ப் பார்த்துவிட்டு வந்து
விடுங்களேன்! உயர்ந்தால் ஒரு அரை மணி பிடிக்கும்!''

''அந்த ஆசாமிதான் சுத்தமாகச் செய்வதாகச் சொல்லி
யிருக்கிறாரே!''



பக்கத்து வீட்டுக்காரர்களுக்குத் தெரிந்தது!

''சொன்னார், ஸார்! ஆனால் அதை நீர் பார்க்க
வேண்டாமா?''

''பார்க்கத்தான் வேண்டுமா?''

''நாசமாய்ப் போச்சு! பணம் கொடுத்துவிட்டு நீர்
வீட்டிலே இருந்தால் உம் இஷ்டப்படி நடந்துவிடுமா?...
போய்ப் பாருங்கள், ஸார்!''

அன்று சாயந்திரம் நான் 'க்ரில்'காரரிடம் போன
போது, அங்கே அப்போது தான் ஐயம் வந்து, வேலை
நன்றாக இல்லை என்று ஏகச் சத்தம் போட்டுவிட்டுப்
போனதாக அறிந்தேன்.

''சுத்தமாகச் செஞ்சிருக்கிறேனுங்க! நல்லாயில்லை
என்கிறாரு!'' என்று புகார் செய்தார் 'க்ரில்'காரர்.

அவர் செய்து வைத்திருந்த ஜன்னலை நானும்
பார்த்தேன். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. நான்
கொடுத்த 'மாதிரி' அது இல்லை.

''என்னாங்க! அடியோடு 'டிஸை'னை நீங்க மாத்திட்
டீங்களே!'' என்றேன்.

''சுத்தமாகச் செய்திருக்கிறேன், ஸாமி! நல்லா
பார்த்துக்குங்க!''

''சுத்தம் இருக்கட்டும், ஐயா! நான் சொன்ன மாதிரி
இல்லையே இது; அதற்கென்ன சொல்கிறீர் இப்போ?''

''அது நல்லாவே இல்லிங்க... இது சுத்தமான
வேலைங்க!''

இவருடன் பேசிப் பயன் இல்லை. செய்திருந்தது
நன்றாக இருந்தது; ஆனால் ஐயம் என்னைச் சும்மா விட
மாட்டாரே! பயந்துகொண்டே கட்டடத்தைப் போய்ச்
சேர்ந்தேன். அப்போது இருட்டியிருந்ததால் வேலை
நின்றிருக்கும் என்று நினைத்தேன். ஐயத்தின் கார் ஒருப்புற

மாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்றால், கையில் ஹரிக்கேன் லாந்தருடன் ஐயம் சாரத்தின் மேல் நின்று, தளத்தின் அடியில் போட்டிருந்த பத்மம் சரியாக வந்திருக்கிறதா என்று அளவு பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஸார், ஜாக்கிரதை!" என்றேன்.

"நீர் ஜாக்கிரதையாக ஒதுங்கி நில்லும்! உம் மேல் குதிக்கப் போகிறேன்!... 'க்ரில்' எப்படி இருக்கிறது?"

"அதைத்தான் இப்போது சொல்ல வாயெடுத்தேன்!"

"சொல்ல வேண்டியதே இல்லை! ரொம்பச் சுத்தமாக இருக்கிறது!"

"நாம் கொடுத்த மாதிரி இல்லையே!" என்றேன்.

"வேண்டியதில்லை! சுத்தமாக இருந்தால் சரிதானே?... போங்க, ஸார்! உம்மை நான் எத்தனை தடவை அங்கே போய்ப் பார்க்கச் சொன்னேன்?"

"அவகாசம் இல்லை, ஸார்!"

"அவகாசம் இல்லையென்றால் வீடு கட்ட வேண்டாம் என்றேனே!"

"என் பிசகுதான், ஸார்!"

"ஒரு பிசகில்லை; இதுவரை இந்த வீட்டில் இரண்டாயிரம் பிசகாகி விட்டது! இது 2001-வது பிசகு!"

"நான் என்ன செய்யலாம் இப்போ?"

"2002-வது பிசகாக, 'க்ரில்'காரருடன் சண்டை போட்டுக்கொள்ள வேண்டாம். பேசாமல் வாங்கி ஜன்னலை மாட்டுங்கள். கிருஹப் பிரவேசத்திற்கு இன்னும் அதிக நாள் இல்லை!" என்றார்.

தளங்கள் பூசப்பெற்ற பிறகு, சுவர் உட்புறங்கள் பூச ஆரம்பித்தார்கள். குழைத்துவிட வேண்டிய இடங்கள், வளைத்துவிட வேண்டிய இடங்கள் என்று ஐயம்கூட நின்று குஸ்தி போட்டார். சுவரில் பூச்சு மட்டும் சாபந்தமாக



...துக்கும் கந்தசாமிக்கும் ஒரு ராம-ராவண யுத்தமே ...ந்தது. திருமலை துடித்தார்; நான் தவித்தேன்; ...தசாமி திணறினான். "இது பேஜார் பொளைப்புங்க ...ம்! இந்த ஊட்டோடு நான் இதை விட்டுவிடறேன்!" ...று முனகினான்.

ஐயம் எதையும் காதில் போட்டுக்கொள்ளவில்லை. ...ல்கட்டடம் கட்டும்போது பூச்சில் பார்த்துக்கொள்ளலாம் ...என்றார் மேஸ்திரி. பூசியாகிவிட்டது; இப்போது சரி ...யில்லை என்றால் வெள்ளையடித்தால் சரியாகப் போய் ...டும் என்கிறார். வெள்ளை அடித்தப்புறம் ஐயா கூடப் ...பேசிக்கொண்டு அவரா நிற்கப் போகிறார்!" என்று ...கேட்டார்.

எல்லோருக்கும் கோபம் கோபமாக வந்தது. திருமலை ...சாமியை எரிந்து விழுந்தார்; கந்தசாமி மன்னாரின் ...மண்டையை உடைக்கப் போவதாகப் பிரதிக்ஞை செய்தான். ...மன்னார் இந்திராணியைக் கரித்துக் கொட்டினான். ...திராணி அடிக்கடி வெற்றிலை புகையிலை போட்டு ...டைச் சுற்றித் துப்பினாள். ஆனால் ஒருவராது ...த்துக்குப் பதில் சொல்ல முடியவில்லை.

அலமாரிகளின் பின்புறம் பூசப்படும் போதும் ஸ்ரீஜயம் ...இருந்தார். "எங்கே மேஸ்திரியார்! கோழிவலை ...கப் பூசுவதாகப் பேசிக்கொண்டீர்களே!" என்று ...சரித்தார்.

"...ஆமாமுங்கோ!... நமக்கு வலை 'ஸப்ளை' ஸெய்ய ...ங்கோ!" என்று மேஸ்திரி சொன்னான்.

"வாங்கும்படி திருமலை உன்னைச் சொன்னாரே, ...கூடக் கேட்டுக்கொண்டிருந்தேனே? 'பூஷணிக்காய் ...றி செய்துவிடப் போகிறாய்' என்றதுகூட ஞாபகம் ...இல்லையா?" என்று நான் ஞாபகப்படுத்தினேன்.

"...எல்லாம் இருக்குங்கோ! பட்டணம் முச்சூடும் ...த்திப் பார்த்துட்டேனுங்க... எங்கியும் கோழி வலை ...கிடையாதுங்கோ!" என்றார் மேஸ்திரி.

"மிஸ்டர் ஐயம்! பார்த்தீர்களா இந்த வேடிக்கையை! நான் ஒரு பண்டம் கேட்க வேண்டியதுதான், உடனே அது பட்டணத்தில் அகப்படாமலே போய்விடுகிறது!... மிஸ்டர் திருமலை எங்கே?" என்று கேட்டேன்.

"அவரு வியாஸர்பாடி போயிருக்காருங்கோ... அங்கே நிலை முஹூர்த்தம் ஒண்ணு நடக்குதுங்கோ!"

"அச்சா! அவரும் போய்விட்டாரா?" என்றார் ஐயம். "அப்படியானால் வலை இல்லாமலே பூசவேண்டியது தானாக்கும்?" என்று கேட்டார்.

"நீங்க வேலையை நிறுத்த ஸொன்னா இதோ நிறுத்தி விடறேனுங்க."

"கலவையெல்லாம் என்ன ஆகிறது?" என்று கேட்டார் ஐயம்.

கேசவன் அப்போது வந்தான். விஷயத்தை அவனிடம் சொல்லி, "இவ்வளவு அசிரத்தையாகத் திருமலை இருப்பார் என்று நான் எதிர் பார்க்கவில்லை" என்று வருத்தப்பட்டுக்கொண்டேன்.

"அசிரத்தையா! திருமலையா?... ஒருகாலும் இல்லை! அது மட்டும் சொல்லாதீர்கள், நான் ஒப்புக்கொள்ள மாட்டேன்" என்றான் அவன். ஐயம் சிரித்துவிட்டு, "போகட்டும்! கோழி - வலை இப்போ அகப்படுமா பாருங்கள்!" என்றார். கேசவன் எங்கேயோ பார்த்து வருவதாகச் சொல்லி விட்டுப் போனான்.

இப்படியாக, உள்புறம் பூச்சுவேலை ஒரு வழியாக நடந்து முடிந்தது. அப்படியே வீட்டின் பின்புறத்தி வெளிப்பூச்சும் நடந்தது. முன்புறத்தைப் பூசுவதற் 'Architectural Frontage' தீர்மானமாக வேண்டு என்பதாக ஸ்ரீ ஐயம் தடையுத்தரவு போட்டுவிட்டார்.

அலமாரிகளில் தட்டுகளை வைத்துப் பூசினார்கள் இடையில் இரண்டு முறை ருத்ரையா மரம் போதாம



ணம் வாங்கிக்கொண்டான். சிமிட்டி தீர்ந்து போய், இரண்டு டன் ஒரு முறையும், ஒன்றரை டன் ஒரு முறையும் மேலும் வாங்கிக் கொடுத்தேன். மணல் ஆகிவிட்டதென்று மேலும் இரண்டு லாரிகள் கொண்டுவரச் சொன்னோம். மேலும் கண்டிக்கல் தீர்ந்து போய் மாடியின் பக்கவாட்டிற்காகவும் இதர வேலைகளுக்கும் அதில் இரண்டாயிரம் போட்டுக் கொண்டோம். இரண்டாம் மாடித் தளம் திறந்த வெளி யாக இருப்பதால் அதற்கு வெதர்-புரூபிங் பேடச் செங்கல், ஜெல்லி, சுண்ணாம்பு, சொருகு ஓடு எல்லாம் மறுபடி ஒரு முறை வாங்கி, இந்திராணியின் கச்சேரியையும் திரும்ப நடத்தினோம்!

அப்புறம் தரைக்குத் தளம் போட ஆரம்பித்தார்கள் அதற்கு ஒரு முக்கால் டன் சிமிட்டி வாங்கிக்கொண்டார்கள். நான் படித்துப் படித்துச் சொல்லியும் ஆறு தடவைகளில் தான் 'ஆக்ஸைட்' (சிகப்பு வர்ணம்) வாங்கினார்கள். வீட்டில் ஆறு தினுசு சிகப்பு நாளைக்கும் நிரந்தரமாக இருக்கிறது! ஐயம், "லெவல்!" "லெவல்!" "ஜலம் அப்படி அப்படியே ஓடிப் போகும்படி இருக்க வேண்டும்!" என்று கூடநின்று கூச்சல் போட்டதன் பேரில், திருமலையும்,'மட்ட, மட்டம்' என்று எதிரொலி செய்தார். கந்தசாமிமேஸ்திரியும் மன்னார், சின்னசாமி, பெருமாள் என்ற மூன்று கொல்லத் துக்காரர்களையும் ஓயாது வைது கட்டினான். இருந்துங்கூட வெந்நீர் அறையில் விட்ட ஜலம் 'டைனிங் ரூமு'க்கு வந்து. அது சமையற்கட்டு வழியாகச் சாமான் அறையை நோக்கித்தான் ஓடியது. ராஜம் வந்து பார்த்துவிட்டுத் தலையில் அடித்துக்கொண்டாள்.

"அது கெடக்குதுங்கோ பெரமாதமில்லே! இது நானே செவுனிச்சு ஸெஞ்சுதாரேன்!" என்று கந்தசாமி மார்பைத் தட்டிக் கொண்டான். இதுவரை அவனைக் கவனிக்காமல் இருக்கும்படி நிறுத்தி வைத்திருந்தது யார் என்பது நாளது வரை ஐயம் உள்பட எங்கள் குடும்பத்துக்கு விளங்காததொரு மர்மமாகவே இருந்தது.

"போ! அதை முதலில் கவனி!" என்று திருமலை இடிக்குரலில் அதட்டவும் சீர்திருத்தங்கள் மளமளவென்று நடந்தன.

"கக் கக் கக் கதவுகளைத் தைச்சாச்சு; நாதாங்கி வேண்டாமா?" என்று ருத்ரையா கேட்டான்.

"இவர் எப்படிச் சொல்கிறாரோ அப்படிச் செய்!" என்றார் திருமலை.

எந்தக் கதவை எந்தப் பக்கம் எப்படித் தாழ்ப்பாள் போடுவது, எம்மாதிரித் தாழ்ப்பாள் போடுவது என்பது எவ்வளவு சிரமமான காரியம் என்பதை அப்போதுதான் அறிந்தேன். என் தேவைகளைக் கூட்டிப் பார்த்தபோது, "அடேயப்பா! ஒவ்வொரு வீட்டிலும் இவ்வளவு தாழ்ப்பாள்கள் இருக்கின்றனவா?" என்று நான் அசந்து போனேன்.

"சொச் சொச் சொச் சொன்னீங்கன்னா வாங்கியாரோம்!" என்றான் ருத்ரையா.

தாழ்ப்பாள்களின் விலையைக் கேட்டபோது எனக்கு மூச்சு முட்டி, வாய்ப்பூட்டுப் போட்டது போலவே ஆகிவிட்டது.

"வாசல்புறம் பூசுவது பற்றி என்ன?" என்று கேட்டார் திருமலை.

"அடுத்த வாரம் கிருஹப்பிரவேசம் ஆன பிறகு அந்த வேலைதான் செய்ய வேண்டும்.. எங்கே, ஆச்சாரி! ஐயா ஜாகை வந்துவிடுகிறார். வீட்டு முன்பக்கம் கண்ணாடிக் கதவுகளுக்குக் கண்ணாடி வாங்கியாகி விட்டதா?" என்று விசாரித்தார் ஐயம்.

"வாங்கினோமுங்க. சதுரம் பதினாலணா!" என்றான் கந்தசாமி.

"கொஞ்சம் குறைந்தது. அதை மறுபடி வாங்கப் போனால், அதற்குள் விலை உயர்ந்துவிட்டது; சதுரம் ஒன்றே கால் ரூபாயாகி விட்டது!" என்றார் திருமலை.



"இப்போதாவது சரியாகப் பார்த்து வாங்கினீர்களா?" என்று கேட்டேன்.

"மும் மும் மூன்று கண்ணாடி குறைவுங்க...சச் சச் சதுரம் ரெண்டே அரைக்கால் சொல் சொல் சொல்றாங்கோ வாங்கறதானு யோய் யோய் யோய் யோ..." என்றான் ருத்ரையா.

"ஐயோ! ஐயோ!" என்றேன் நான்.

"ஐயா அழுவறாரு!" என்றார் ஐயம் என் கண்ணைத் துடைத்து.

நான் பதிலே சொல்லவில்லை.

வைகாசி மாதம் மூன்றாம் தேதி கட்டாயம் நாங்கள் வந்துதான் தீர்வோம் என்று தெரிந்ததும் ஸ்ரீ திருமலையிடம் அசாதாரணமான பரபரப்பைக் கவனித்தேன். ஜன்னல் 'க்ரில்'களுக்கு அவரே ஆள் அனுப்பித் தருவித்தார். அவைகள் பொருத்தப்படும் போது ஸ்ரீ ஐயத்துடன் கூட நின்றதுமல்லாமல் 'க்ரில்'காரரை "'னா'யா'து?" என்று பல முறை கோபித்துக்கொண்டார்! அது 'என்ன ஐயா இது?' என்பதன் திரிபு என்று நான் தெரிந்து கொண்டேன்.

ஜன்னலுக்கு வேண்டிய கொக்கிகள், 'ஹிஞ்சு'கள் வளையங்கள் எல்லாம் ஒரு முறை கணக்குப் போட்டு, மறுபடி என் தலையையும் சுற்ற வைத்து, பணத்தைப் பெற்றுக்கொண்டுபோனார். அப்புறம் கப்-போர்டுகளுக்கும் அலமாரிகளுக்கும் கிள்ளுத் தாழ்ப்பாள் வேண்டுமென்று சொல்லி என் நெஞ்சை மீண்டும் ஒரு முறை வெடுக்கென்று கிள்ளி விட்டார்.

எலெக்ட்ரிஷியன் கிருஷ்ணஸ்வாமி ஒரு வார்த்தைக்கு ஒரு முறை என்னை 'டா' போட்டுக்கொண்டு, அவன் வேலையைத் துரிதமாகச் செய்தான். அவனுடைய 'அஸிஸ்டெண்ட்'டாக வந்த பேர்வழி புழக்கடையில் அடிக்கடி சந்திரவல்லியிடம் சரஸமாடிக்கொண்டு நின்றதை நான்

கவனித்து அவனிடம் புகார் செய்தபோது, "உனக்கென்னடா அதெல்லாம், போடா பேசாமே! உனக்கு உன் வேலைதானேடா ஆகவேண்டும்! அவர்கள் எப்படியோ போகிறார்களடா!..." என்று சொல்லிவிட்டு கோயமுத்தூரில் அவன் ஒரு 'காண்ட்ராக்ட்' எடுத்துக்கொண்ட சமயம் நடந்த சில (வி)ரஸமான கதைகளைப் பல 'டா'க்களுக்கிடையில் விவரமாகச் சொல்லித் தீர்த்தான்.

கிருஹப்பிரவேசத்தை (வீடு பூர்த்தியாகாததனால்) குடும்பத்துடன் மட்டும் வைத்துக்கொள்ள வேண்டும் என்று ஐயம் சொன்னார். நல்ல வேளை பதினொன்றிலிருந்து பதினொன்றரைக்குள் வந்தபடியாலும், என் வீடு வெகு தொலைவில் இருந்தபடியாலும் ஐயமே காரில் வந்து என்னையும் ராஜத்தையும் அழைத்துப் போவதாக உத்தரவு போட்டு, சரியாக 11-50க்கு வந்து சேர்ந்தார். "உம்மை எதற்காக அங்கே கொண்டு வைக்கிறேன், தெரியுமா?" என்று கேட்டார் ஐயம்.

"தெரியாது, சொல்லுங்கள்!"

"இனிமேல்தான் வீட்டை அழகுபடுத்தும் வேலை இருக்கிறது. இதுவரை செலவானது ஒன்றுமே இல்லை. இனிமேல்தான் பார்த்துப் பார்த்துச் செலவு செய்து வரவேண்டும்."

"செலவு இருக்கிறதா இன்னும்?"

"வாசல் முன்புறத்தை முடித்துக்கொண்டு, வெள்ளை அடிக்க வேண்டும்; கதவுகளில் சிலவற்றுக்கு வர்ணமும் சிலவற்றிற்கு வார்னிஷும் கொடுக்க வேண்டும்... வாசலில் காம்பவுண்டைப்பற்றி இன்னும் யோசனையே செய்யவில்லை. 'லைட்'டுக்குக் கனெக்ஷன் வாங்க வேண்டும். குழாய் போட்டாக வேண்டும். கிணறு பூசவேண்டும்... அ(ட்)டேயப்பா! ரொம்ப வேலை இருக்கிறது! ஆளைத் தின்கிற வேலையெல்லாம் இனிமேல்தானே!"



"இப்படித்தானா ஸார் வீடு கட்டுகிற அவ்வளவு பேரும் செய்கிறார்கள்?" என்று கேட்டேன் திகிலுடன்.

திடீர் 'பிரேக்' போட்டு ஐயம் காரை நிறுத்தினார்; வழியில் போகிற இரண்டு பேரை, "ஏ! பீப்பீ! பிப்பீ! இங்கே வா!" என்று அழைத்தார்.

இரு சிறுவர்கள் நாயனம், ஒத்து, தவல்களுடன் (அவர்களுடைய பெற்றோருடையதாக இருக்க வேண்டும்!) தங்கள் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தார்கள்.

"ஏய்! வாசியுங்கடா முன்னாலே...! அதோ தெரிகிறதே அந்த வீடு வரைக்கும் ஜமாய்த்துத் தள்ளணும்... இவர்கிட்டப் பணம் வாங்கித் தருகிறேன். சீக்கிரம்! முகூர்த்தம் தவறக்கூடாது! உங்களுக்குத் தெரிந்தது அவ்வளவையும் பலக்க வாசித்து விடவேண்டும்!" என்றார்.

# 13. வேலைக்காரர்கள் தெரிந்துகொண்டது!

கிரஹப்பிரவேசம் நடந்த அன்று மாலை புதிய வீட்டில் என் குடும்பத்தாருடன் நான் உட்கார்ந்து விச்ராந்தியாகப் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தேன். அப்போது வீட்டுக்கு என்ன பெயர் வைக்கிறது என்பது பற்றிய சம்பாஷணை ஆரம்பமாயிற்று. "பெயர் ஒன்று நாம் வைத்துத்தான் ஆகவேண்டுமா? நம்பர் ஒன்பது என்று தான் இருக்கிறதே!" என்று நான் கேட்டேன்.

"உங்கள் பெயர் ஒரு பக்கம், வீட்டின் பெயர் ஒரு பக்கம் காம்பவுண்டில் கட்டாயம் இருக்கவேண்டும்" என்றாள் ராஜம்.

"அது மட்டும் எப்படிப் போதும்? ஸினிமாக்களில் காட்டுகிறார்களே புரொட்யூஸர், டைரக்டர், கதை வசனம் எழுதியவர், பாட்டு தொகுத்தவர் என்று ஒரு பெரிய வரிசை; அதை மாதிரி வீட்டுக்கு உடையவர், பிளான் போட்டவர், அதைக் கட்ட உதவி செய்தவர், காண்ட்ராக்ட் எடுத்தவர், மேஸ்திரி, கொல்லத்துக்காரர்கள் எல்லோர் பெயரையும் ஒரு வரிசையாகப் போட்டுவிடுவோமா?" என்றேன்.

"உங்கள் இடக்கு இருக்கட்டும்; என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள் சொல்லுங்கள்... ஐந்தாம் நம்பர் வீட்டுக்காரர் 'லலிதா மந்திர்' என்று வைத்திருக்கிறார். லலிதா என்பது அவர் பிரியமான பெண் குழந்தையாக்கும்!" என்று சொன்னாள் ராஜம்.

"நீ என்ன ஜாடையாகச் சொன்னாலும் நான் இந்த வீட்டுக்கு 'ராஜம்' என்று வைக்கப் போகிறதில்லை!"

"நான் உங்களை அப்படி வைக்கும்படி இப்போது கேட்கவில்லையே!"

"படபடவென்று பேசக்கூடாது! ஒரு பக்கம் என் பெயரும் ஒரு பக்கம் உன் பெயருமாக இருந்தால் பார்க்கிற பேருக்கு எப்படி இருக்கும்?..."

"மாமா! நம் வீட்டுக்கு 'மல்லிகா' என்று வையுங்கள்!" என்றான் விச்சு.

"ஏன்! சுற்று வட்டாரத்துக்கு ஒரு மைலுக்கு எங்கும் புஷ்பராசியே இல்லை என்றா?"

"நம் அடுத்த வீட்டுக்கு 'டில்ஷாட்' என்று பெயர். 'ஆனந்த இதயம்' என்று அர்த்தமாம். அது மாதிரி..." என்று சரஸு ஆரம்பித்தாள்.

"ஒன்றும் வேண்டாம்! அப்புறம் எல்லாரும் இது என்ன அர்த்தம் என்று கேட்பார்கள்; சொல்லிக் கொண்டிருக்க



வேண்டும்... இங்கிலீஷில் 'ஙிட்ரீட்,' 'காஸில்,' 'க்ரோவ்,' 'க்ளென்' என்று வைக்கலாம்" என்றான் விச்சு.

"'ஷட் அப்!' என்று உன்னைச் சொல்லுகிறேன்!" என்று அதட்டினேன்.

"எதையாவது ஆரம்பிக்கிறது, அப்புறம் குழந்தையைப் பிடித்துத் திட்டுகிறது!" என்றாள் ராஜம்.

"சரி... 'ராஜராஜேச்வரம்' என்று வைத்தாய்விட்டது... ஏலே சின்னக்கண்ணா! நீ போய் அதை வாசலில் எழுதிவிடடா!"

"பொறுமைசாலிகளுடன் நம்மால் பேச முடியாது!"

என் அத்திம்பேர் குறுக்கிட்டு, "பெயர் வைக்கிறதென்ன பெரிய காரியம்!... மூன்றாம் நம்பர் வீட்டுக்கு 'ருக்மிணி' என்று பெயர் வைத்திருக்கிறார்கள். அது வீட்டுக்காரரின் தாயார் பெயராம்."

"என் பெயரை வைத்துவிடாதே!" என்றாள் என் தாயார்.

"அப்படியானால் நீங்களே ஒரு பெயர் சொல்லுங்கள், அம்மா!" என்றாள் என் தமக்கை.

"ஊர்ப் பெயர்கூட வைப்பார்களே! 'நொச்சாடு பாலஸ்' என்று உங்கள் ஊர்ப்பெயரையே வையுங்களேன்" என்று ராஜம் என்னைப் பரிகாசம் செய்தாள்.

"சேச்சே! 'லால்குடி மஹால்' என்று உன் ஊர்ப்பெயரை வைத்தால் இன்னும் நன்றாக இருக்குமே!"

"என்னைச் சதா சொல்லிக்கொண்டே இருக்க வேண்டும் உங்களுக்கு! திருப்தியாகச் சொல்லுங்கள்!"

"சற்றுப் பேசாதீர்கள்! பாட்டி என்னமோ சொல்லப் போகிறார்!" என்று எச்சரித்தான் விச்சு.

"நான் சொன்னால் கேட்பீர்களா?" என்று கேட்டாள் என் தாயார்.

"பேஷாக!" என்று அவ்வளவு பேரும் ஒருமிக்கக் கத்தினோம்.

"இந்த வீடு கட்டிக் கொடுத்தது முருகனாகையால் 'ஷண்முக விலாஸம்' என்று வைத்துவிடு. திருச்செந்தூரில் அவன் சந்நிதியை ஞாபகப்படுத்திக்கொண்டே யிருக்கட்டும்!"

"எனக்குச் சந்தோஷந்தான்!" என்றேன் நான்.

"பஸ்ட் கிளாஸ் பெயர்!" என்று என் தமக்கையும் அத்திம்பேரும் ஒப்புக்கொண்டார்கள்.

அன்று சாயந்திரம் ஐயத்திடம் பெயர் வைத்தாகி விட்டது என்று, பெயரையும் சொன்னேன். "எப்படி இருக்கிறது ஸார், பெயர்?" என்று கேட்டேன்.

"'ஆனந்த ஷண்முக விலாஸ் காபி ஹோட்டல்' என்று அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறேன்" என்றார் அவர்.

"சொல்லுங்கள், ஸார்!... என் தாயார் வைத்த பெயர் இது!"

"அற்புதமாயிருக்கிறது... பேஷாயிருக்கிறது... அப்படி இல்லையென்றாலும் இதைத்தான் நீர் வைக்க வேண்டும்! தாய் சொல்லுறந்தொரு வாசகம் இல்லை!" என்றார் ஐயம்.

வீட்டின் முன்புறம் எப்படி இருக்க வேண்டும் என்பதைப் பற்றி ஸ்ரீ ஐயம் என்னை வேளை தவறாமல் கேட்க ஆரம்பித்துவிட்டார். "ஏதாவது வீடுகளைப் பார்த்நீர் களா?" என்றார்.

"பார்த்தேன்... ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதமாக இருக்கிறதே, ஸார்!" என்றேன்.

"அழகாக, உமக்குப் பிடித்ததாக இருக்கும் ஒன்றைப் பார்த்துச் சொல்லும், அந்த மாதிரி செய்துவிடலாம்!"

"எல்லாமே அழகாகவும், எனக்குப் பிடித்தமானதாகவும் இருக்கிற படியால், ஒன்றும் நிச்சயமாகச் சொல்ல



முடியவில்லை. திருமலையிடம் சொல்லி முடித்துக்கொண்டு விடுவோமா?"

"திருமலைக்குப் பிடித்தது உமக்குப் பிடிக்கும் என்று நிச்சயமாக நீர் நினைக்கிறீரா?" என்று கேட்டார் ஐயம்.

"நான் ஒன்று கேட்கிறேன். திருமலையை நாம் அழைத்து வேலையை ஒப்புவித்தபோது, அவர் வேலையில் நம்பிக்கை வைத்துத்தானே செய்தோம்?" என்று நான் திருப்பிக் கேட்டேன்.

"ஆட்சேபணை என்ன! இன்றைக்கும் அவர் வேலையில் எனக்குப் பூர்ண நம்பிக்கை இருக்கிறது. திருமலை என் சிநேகிதர். அவரை இருபது வருஷமாக எனக்குத் தெரியும். அவர் கட்டின வீடுகள் எல்லாம் ரொம்ப நன்றாக இருக்கின்றன, ஒரு இடத்தில் அவர் அசிரத்தையாக இருந்தார். வேண்டுமென்று ஒரு பிசகு செய்தார் என்பது இதுவரையில் கிடையாது..."

எனக்கு ஆச்சர்யமாகவே இருந்தது. விழித்தேன். தொடர்ந்து ஐயம், "என்ன ஸார் நீங்கள்! நான் அவருடன் தினம் சண்டை போடுவதாக நீர் தப்பாக நினைத்துக் கொண்டிருக்கிறீர் போலிருக்கிறது! என்னிடம் யோசனைகள் சில இருக்கின்றன; ஆனால் நான் கட்டிப் பழக்கம் இல்லாதவன். அவர் அதையே தொழிலாக வைத்துக்கொண்டிருப்பவர்; ஆனால், பழைய வழக்கப் படியே செய்வார். இரண்டு பேர் செய்வதிலும் பிசகு இருக்கலாம். அவரவர்களுக்குத் தெரிந்ததைச் சொல்லி போக விட்டுப் பார்க்கிறோம்! கடைசியில் வீடு நன்றாக அமைந்துவிட்டால் உமக்கு நல்லதுதானே?" என்றார்.

"அவ்வளவுதானா?"

"அவ்வளவேதான்!... என் அபிப்பிராயப்படி உங்கள் வீட்டில் திருமலை சுமார் 2000 தப்புகள் செய்திருக்கலாம்;

இதர இடங்களில் சுமார் 20,000 தப்புகள் நடந்திருக்கலாம்..."

"அதிருக்கட்டும், ஸார்! 'எஸ்டிமேட்' என்று கேட்டால் அவர் கொடுக்க வேண்டியதுதானே?" என்று நான் கேட்டேன்

"அதுவா! எஸ்டிமேட்டைக் கொடுத்து நீர் ஏமாந்து போவதைவிட, கொடுக்காமல் ஏமாந்து போவது நல்லதென்று அவர் நினைத்திருக்க வேண்டும். அந்த நாளில் இங்கிலீஷில் ஒரு புஸ்தகம் உண்டு. 'இரண்டாயிரம் பவுன் எஸ்டிமேட் போட்டு ஆரம்பித்த ஒரு வீட்டை ஐயாயிரம் பவுனுக்குள் முடித்துக்கொள்வது எப்படி?' என்று அதில் கணக்குப் போட்டுக் காட்டியிருக்கும். அதிருக்கட்டும்... இப்போது Architectural Frontage பற்றி என்ன சொ கிறீர்? அடுத்த வேலை அதுதானே?"

"வாஸ்தவமாக எனக்குத் தெரியவில்லை, ஸார்!"

"தெரியவில்லை என்றால்! தெரிந்த ஆசாமியா யாரையாவது ஒருத்தரை விட்டு 'டிஸைன்' போட சொல்கிறது, செய்கிறது!... எனக்கு மட்டும் தெரியுமா என்ன?... வாட் இஸ் இட்!"

"தெரிந்த ஆசாமி யார் என்று நீங்களே கொஞ்ச சொல்லி விட்டால்..."

"உமக்கு எப்போ ஐயா ஒழியும்?"

"உங்களுக்கு எப்போ சௌகரியப்பட்டாலும், நா தயார்..."

திருமலை அங்கே வந்து நின்று, "மரம் கொஞ் தேவையாக இருக்கிறது. மாடி வராந்தாவுக்கு பே போடச் சட்டம் வேண்டுமே!" என்றார்.

"ஸார்! மரம் மரம் என்று கேட்டுக் கேட்டு என் மூ மரத்துப் போய்விட்டது!" என்றேன் ஆத்திரமாக.



"மலிவாகச் செய்கிறதென்றால் காட்டு மரம் போடலாம்... அதுவும் வேண்டாமென்றால் 'ஷெட்'டையே நிறுத்திவிடுவோமே!" என்றார் திருமலை.

"ஏது, இன்ஜினியருக்குப் புது வீடு 'காண்ட்ராக்ட்' கிடைத்திருக்கிறதென்று ஊகிக்கிறேன் வேலையை நிறுத்துவோம் என்கிறாரே!" என்றார் ஐயம்.

"அப்படித்தான்! ஆனால், அதற்காக இவர் (என்னைத் சுட்டிக்காட்டி) இந்த வீட்டு வேலையை அலட்சியம் செய்து விடுவேன் என்று நினைத்துக்கொள்ளப் போகிறார்!" என்றார்.

ஐயம் உடனே, "நீங்கள் எதையுமே லட்சியம் செய்வதில்லை என்று சொல்கிறவர் இவர். அப்படிச் சொன்னால் மட்டும் நம்பிவிடுவாரா?... வீட்டு முன்புறம் எப்படித் தீர்மானம் செய்தீர்கள்?"

"தீர்மானம் என்ன! டாக்டர் மணி வீட்டை வேணால் இவருக்குக் காட்டுகிறேன். பிடித்தால் அதே மாதிரி செய்து விடலாம்."

கிருஷ்ணஸ்வாமி இப்போது எங்களுடன் சேர்ந்து கொண்டான். "என்னடாது... பெரிசா யோசனை பண்றயேடா! என்னோடு வாயேன்; சீப்ஸுப்ரண்டண்ட் வி. ஜி. வெங்கடபத்துலம் வீட்டைக் காட்டுகிறேன்... அது மாதிரி செய்துட்டுப் போயேண்டா!" என்றான்.

"ஹாஸ்மான் ரோடுக்குக் கிளக்காலே நான் ஒரு ஊடு கட்டினேனுங்க... அதுலே வாஸல்லே கொடி மாதிரி, மலை மாதிரியெல்லாம் ஷோக்கா போட்டு, வெள்ளி மூலாம் பூசி ரொம்ப அரு(ம்)மையா வைச்சிருக்காங்கோ! பார்த்தா ஸினிமா தியேட்டர் கணக்கா இருக்குமுங்கோ... அது மாதிரிகூட செய்யலாமுங்கோ" என்று கந்தசாமி மேஸ்திரி சொன்னான்.

"மிஸ்டர் திருமலை! உங்களுக்கு இப்போ அவசர ஜோலி இருக்கிறதா?" என்று விசாரித்தார் ஐயம்.

"என்ன, சொல்லுங்கள்!"

"என்னுடன் வந்தால் ஒரு 'டிஸைன்' காட்டுகிறேன்; ரொம்ப 'ஸிம்பி'ளாக இருக்கும்!"

"அப்படித்தானா இருக்கணுமுங்கோ! இவ்வளோ பணம் போட்டு செய்ஞ்சதுக்கு நல்லா இருக்க வாணாமுங்களா!" என்று மேஸ்திரி ரொம்பப் புரிந்துவிட்டாற்போல் எங்களுடன் கலந்துகொண்டான்.

"நீயும் ஏறு வண்டியில் மேஸ்திரி!" என்றார் ஐயம்.

நாங்கள் ஏறிக்கொண்டவுடன் ஐயமும் உட்கார்ந்து வண்டியை ஓட்டிக்கொண்டு சென்றார். "ஏண்டா! நான் இருக்கட்டுமாடா, போகட்டுமாடா?" என்று என்னைக் கேட்டான் கிருஷ்ணஸ்வாமி.

"இருந்தால் இரு; வேறு வேலை இருந்தால் போயேன்!" என்றேன்.

"எனக்குப் பணம் வேணும்டா!"

"இப்போ பணம் இல்லை."

"அதை நீ முன்னாடியே சொல்றதுக்கென்னடா! நீ தரப்போறே என்று நான் அப்பவே முதல் காத்துக்கொண்டிருக்கிறேனேடா!... ஏண்டா?"

"என் பாக்கி ரொம்ப சொற்பம்; நீ செய்ய வேண்டிய வேலையோ ரொம்ப பாக்கியிருக்கிறதே!"

"பணம் கொடுடா! நாளைக்கே வேலை பூரா முடிச்சுடறேண்டா!"

"அதுதான் இப்போ என்னிடம் இல்லை, நாளைக்கு வா!"

எங்கள் வீட்டு முன்புறம் அமைய வேண்டிய விதம் மூன்றே நிமிஷத்தில் முடிந்தது. ஐயம் காண்பித்த மூன்று வீடுகளிலிருந்து மூன்று நல்ல அம்சங்களைச் சேர்த்துக் குழைத்துக்கொண்டோம். திருமலையும் கந்தசாமியும் ஐயம் சொன்னதைச் 'சரி, சரி' என்று உடனுக்குடன் ஒப்புக்



கொண்டதிலிருந்து, என் வீடு சௌஜன்யமாகக் கையை விட்டுப் போனாலே போதும் என்று அவர்கள் அவசரப்படுகிறார்கள் என்பதை ஊகித்துக்கொண்டேன்.

"சரி... முடிவு செய்தாகிவிட்டது... அப்புறம் என்ன?" என்று கேட்டார் ஐயம்.

"அப்புறம் என்ன! ஒரு 'டன்' சிமிட்டி, நாலு லாரி மணல் போடுங்கள்!" என்றார் திருமலை என்னிடம்.

எனக்கு ஆத்திரம் வந்தது. "இன்னும் சிமிட்டியா?" என்றேன்.

"வாங்குகிறதெல்லாம் உங்கள் வீட்டில் செலவாகிறதா இல்லையா என்று பார்த்துக்கொள்ளுங்கள்!" என்றுதான் அவரால் சொல்ல முடிந்தது.

சிமிட்டி என்னை அதோடு விடவில்லை. 'பேஸ்மெண்ட்' பூச வேண்டும் என்று ஆறு மூட்டை கேட்டு வாங்கிக்கொண்டார். 'ஸன் - ஷேட்' மேற்புறம் 'ஆத்தி' விட வேண்டும் என்று மூன்று மூட்டை மட்டும் வாங்கித் தரச் சொன்னார். கிணறு பூசுவதை இரண்டே மூட்டைகளுள் பார்த்துக்கொள்ளலாமென்றார்; வலைக்கதவுகள் பொருத்தவும்; அலமாரிகளின் பக்கவாடுகள் பூசவும், மழைத்தண்ணீர்க் குழாய்கள் வைக்க நிறுத்தவும் அரை மூட்டை கொண்டிலத்து போட்டுப் பணம் வாங்கிக்கொண்டார். பாத்-ரூமிலும், மாடி - வராந்தாவிலும் சில ஓட்டைகளை மறந்துவிட்டதாக ஒரே ஒரு படி சிமிட்டி வாங்கி வர ஆள் அனுப்பினார். கடைசி கடைசியாக, "ஸார்! எங்கேயாவது ஒரு சிட்டா சிமிட்டி இருக்குமா பாருங்கள்! மாடியில் இரண்டு மூன்று இடங்களில் சின்னச் சின்னப் பொறைகள் தெரிகின்றன!" என்று கேட்டு என் இதயத்தைக் கட்டப்பாரை கொண்டு இடித்தார்!

முதலில் இரண்டாயிரம் ரூபாய் செக்குகளை அலட்சியமாக வீசின நானும் இப்போ இரண்டு ரூபாய்களை வெகு நிதானமாக எண்ணிக் கொடுத்தேன். ஒரு படி சிமிட்டிக்குத்

திருமலை எட்டனா கேட்டபோது, ''ஆறணாவுக்குப் பாருங்களேன், ஸார்!'' என்று சொல்லவே தோன்றியது

கந்தசாமியும் அவன் ஆட்களும் வருவதும் போவதுங் கூடப் படியாகக் குறைந்து வந்தன.

''ஒரே நாள் வேலை''என்று ஒரு வாரம் வரை சொல்லிக் கொண்டிருந்தான்.

''நாலு 'அவுரு' வேலை பாக்கி'' என்று நாலு நாள் வேலை செய்தான்.

கடைசியாக அரை 'அவுரு' வேலை இருந்தபோது, அவன் வராமலே ஒரு அஸிஸ்டெண்டை அனுப்பி வைத்தான். அதற்கப்புறம் நாலு தினங்கள் மட்டும் இந்திராணி காலையில் வந்து பக்கத்து நிலத்துத் தென்னை மரத்தின் அடியில் புகையிலை போட்டுத் துப்பிக் கொண்டிருந்துவிட்டு, யாரும் வேலைக்கு வரவில்லை என்று கண்டு மனவாட்டத்துடன் திரும்பிச் சென்றுகொண்டிருந்தாள்.

தங்கு தடையின்றி வேலை செய்தவன் ருத்ரையா. அவன் மரங்களைச் சீவிச்சீவி மலைப்போல் குவித்தான். மாலையில் தினமும் அவனுடன் டிபன்-பாக்ஸ் ஏந்தி வந்த பையன் அந்தச் சீவப்பட்ட தூள்களை எடுத்துக் கொண்டு போனான். தச்சர்கள் மரத்தூள்களை மட்டும் அடுப்பு எரிக்கக் கொண்டுபோவது 'மாமூல்' என்று திருமலை ஆதியிலேயே சொல்லியிருந்தார். ருத்தைரயா ஏராளமாகச் சீவிக் கொட்டிக் கொண்டிருந்ததன் மர்மம் எனக்கு இப்போது தெரிய வந்தது.

நான் இதைத் தெரிவித்தபோது ருத்ரையாவுக்கு ருத்ர கோபமே வந்தது. டிபன்-பாக்ஸ் பையனை வெறிக்கப் பார்த்து, 'ஏ கக் கக் கக் கக்...கழுதை! அந்த தத் தத் தத் தரித்திரம் வேண்டாமுடா உனக்கு என்றேனே! தொடாதேடா... இந்த வே வே வே வேலையையே தொலைச்சு மு மு மு முழுவேமடா!'' என்று கத்தினான்.



துரதிர்ஷ்டவசமாக நான் இதைச் சொன்னது அவர்கள் வேலை செய்த கடைசி தினம்...மறுநாள் காலை முதல் 'ருத்ரையா அண்ட் கோ' தங்கள் ஆயுதங்கள் சகிதம் திருமலை புதிதாக வேலை தொடங்கியிருந்த ஒரு வீட்டை நோக்கிப் போய்க்கொண்டிருந்ததாக என் மருமான் வந்து சொன்னான்.

வாசல் முன்புறம் தயாராகி ஒரு வாரம் வரை வாட்ச்மேன் ஆறுமுகம் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்து விட்டு, ''சாமி, பொங்கலிணாமுங்க!'' என்றான்.

''ஏதுடா பொங்கல் இப்போ!... நாலு மாசமாகிறதேடா பொங்கல் ஆகி!'' என்றேன்.

''நீங்கள பொங்கலுக்கும் கொடுக்கல்லே; கிரவப் பிரவேசத்துக்கும் ஏதுவும் தரல்லை... நாளையோடு போறேனுங்க...திருமலை அய்யா என்னை மேட்டு ஊட்டுக்கு வரச்சொல்லிவிட்டாரு!'' என்றான்.

''சுகமாகப் போய் வா!'' என்றேன்.

ஸ்ரீ ஜயந்திடம் நம் வீட்டில் ஆட்கள் நின்றுவிட்ட செய்தியைச் சொல்லி, ''திருமலையை என்ன செய்யச் சொல்லலாம் அடுத்தபடி?'' என்று கேட்டேன்.

''பில் அனுப்பச் சொல்லுங்கள்!''

''வெள்ளை அடிக்க வேண்டாமா?''

''வேண்டியதில்லை...ஆறு மாசம் கழித்துத்தான் அது விஷயம் யோசிக்கப்படும்.''

''நன்றாக இல்லையே, ஸார்!''

''அப்படியானால் உங்கள் இஷ்டப்படி செய்து கொள்ளுங்கள்!''

''இல்லை, ஸார்!''

''சிமிட்டியில் கட்டின வீடு, வியர்த்துவிடும். ஒரு மழை அடித்து ஒரு 'ஸீஸன்' முடிந்த பிறகு வெள்ளை வர்ணம்

எல்லாம் அடித்தால் நன்றாக இருக்கும்...இப்பவே அதையும் செய்கிறேன் என்றால் தாராளமாகச் செய்து கொள்ளுங்கள்!"

"பொறுத்தே செய்கிறேன், ஸார்!"

நடுவில் இரண்டு பெரு மழைகள் பெய்து ஓய்ந்தன. அதற்குப் பிறகு ராஜம் வீட்டில் ஜன்னல் கதவு, அலமாரிக் கதவுகளைத் திறக்கவேண்டுமானால் என்னை கூப்பிடுவாள். நான் போய் இரு கால்களையும் அவற்றின்மீது உதைத்துக் கொண்டு திறந்து தருவேன். புழக்கடைக் கதவையும் வாசற்கதவையும் இரவு சாத்த வேண்டுமானால் என் குடும்பத்தினர் அவ்வளவு பேரும் முனையவேண்டும்! எல்லோரும் ருத்ரையாவைத் திட்டிக் கொட்டினோம்.

"பார்த்தீர்களா, ஸார்!" என்று ஐயத்திடம் அதைக் காண்பித்தேன்.

"அதுதான் ஸார் சொன்னேன். இரண்டு 'ஸீஸன்' போகட்டும் என்று. இப்போது தெரிகிறதா?" என்றுதான் அவர் பதில் சொன்னார்.

இதற்குள் எலெக்ட்ரீஷியன் வேலையைப் பூராவும் முடித்துக் கொண்டிருந்தான். ஐயம் அதைப் பார்வையிட்டுவிட்டு வந்தார்.

"ஸிளாஸ்மெட்டு வேலை ரொம்ப நன்றாக இருக்கிறது" என்று தம் அபிப்பிராயத்தையும் தாராளமாகச்சொன்னார்.

"அப்போது கிருஷ்ணஸ்வாமி என்னிடம் "வேறு என்னடா சொல்ல முடியும் அவராலே? எங்கே வேலை செய்தாலும் நான் கூடப் போய் நின்று விடுவேண்டா! அப்பதாண்டா எனக்கும் திருப்தி, நம்மிடம் வேலையை ஒப்படைக்கிறவனுக்கும் திருப்தி...என்னடா சொல்றே நீ?' என்று கேட்டான்.

"சரிதாண்டா! போடா!" என்றேன் எரிச்சலுடன். கிருஷ்ணஸ்வாமி இரண்டாயிரத்து முந்நூறு ரூபாய் பாக்கி



நிற்கும் சீப்-ஸூப்ரிண்டெண்ட் வி.ஜி. வெங்கடரத்னத்தையும் ஆயிரத்து முந்நூறு பாக்கி நிற்கும் ஸினிமா ஸ்டார் பாரிஜாத மோகினியையும் நெறிக்காமல், ஆயிரத்துநானூறு ரூபாய்களைப் பெற்றுக்கொண்டபின் நூற்றுப்பத்தொன்பது ரூபாய் பதினாலணா பாக்கியிருக்கும் என்னை மட்டும் நக்ஷத்திரையன் போல் வறுத்தெடுத்து என் ஹிருதயத்தை மிக வாட்டி வதக்கியது.

"போடா! இப்போ என்னிடம் பணம் ஒன்றும் இல்லைடா!" என்று நான் சொன்னேன்.

"நான் என்னடா பண்றது? உன்னை நம்பி நம்பி நான் ரொம்ப ஏமாந்துவிட்டேண்டா!" என்றான் அவன்.

"ஏமாற்றமென்னடா? ஒரு வாரம் இரண்டு வாரம் பொறுத்துக் கொள்ளேண்டா! என் சிநேகிதன் என்கிறாய், இது கூடவாடா எனக்காக நீ செய்யக்கூடாது?"

"சிநேகிதன் என்று நீதான் முன்னாலே கொடுத்துக் கொஞ்சம் உதவி செய்யேண்டா!"

"இப்போ பணம் இல்லையே"

"நான் உன் வீட்டு வியாபாரம் தொடங்கியது முதல் எனக்கே நஷ்டம்டா! மூணு ரூபா வட்டிக்கு நூறு ரூபாய் வாங்கி வெளியில் இருபத்தி நாலு ரூபாய் வரை வட்டியாகவே தொலைத்துவிட்டேண்டா!"

எனக்கு ஆத்திரம் வந்தது. வேறு காரியமாக வைத்திருந்த பணத்தைக் கொடுக்க முடிவு செய்து நூற்றுப் பத்தொன்பது ரூபாய்க்கு உடனேயே ஒரு செக் எழுதினேன்.

"அடே! அந்தப் பதினாலு அணாவைக் குறைத்து விடாதேடா! அது தாண்டா உன் வீட்டு வேலை செய்து நான் கண்ட லாபம்!" என்றான் கிருஷ்ணஸ்வாமி.

நான் பதிலுக்கு, "அந்தப் பதினாலணாதான் நீ போட்ட முதல் என்று நினைத்தேன்" என்றேன் சூடாக.

"நான் ஆரம்பத்தில் சொன்னது பலித்து விட்டது போலிருக்கிறதே!" என்று ஐயம் கேட்டு, எங்கள் வாக்குவாதத்தை முடித்து வைத்தார்.

அதற்கு பின் நான் கிருஷ்ணஸ்வாமியைப் பார்க்கவே இல்லை.

இரண்டு வாரங்கள் வரையில் என் வீடு சிமிட்டி நிறமாகவேதான் இருந்தது. கதவுகள் எல்லாம் வர்ணமோ வார்னிஷோ இல்லாமல்தான் இருந்தன. "இருக்கட்டுமே, ஸார்! அதனால் ஒன்றும் பாதகம் இல்லை!" என்று சொல்லிக்கொண்டிருந்தார் ஐயம்.

ஒரு நாள் காலையில் பத்தாம் நம்பர் வீட்டு நண்பர் என்னுடன் பேச்சுக் கொடுத்தார். "எப்படி ஸார் வேலையெல்லாம் வைத்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"அநேகமாகத் தீர்ந்து போயிற்று இன்னும் பத்து நாள் வேலை பாக்கியிருக்கும்" என்றேன்.

"யார் சொன்னது? இரண்டு மாச வேலைக்குக் குறைச்சல் இல்லை!...செய்து பாருங்கள், தெரியும். கிணற்றங்கரைக்குத் தளம் போட வேண்டும்; மூன்று 'கோட்' வெள்ளை அடிக்க வேண்டும்; கதவுகளுக்குப் 'பெயிண்ட்' செய்ய வேண்டும்; காம்பவுண்டு கட்டடங்கள் கூடக் கட்டவில்லை; 'கேட்' போட வேண்டும்.. அடேயப்பா! மூன்று மாச வேலை தாராளமாக இருக்கிறது!" என்றார்.

"அப்படியா?"

"இப்போது யாராவது உங்கள் வீட்டைத் தேடிக்கொண்டு இங்கே வந்தால் எப்படி நான் அடையாளம் சொல்கிறேன், தெரியுமா?...'அதோ வெள்ளை அடிக்காமல் வர்ணம் பூசாமல் இருக்கிறதே அந்த வீடு' என்று சொல்கிறது! அடையாளம் சொல்ல சௌகர்யமாகக் கூட இருக்கிறது!" என்றார்.

எனக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது; ஆனால், அவரிடம் ஒன்றும் சொல்லவில்லை. ஐயத்திடந்தான் தொந்தரை செய்தேன்.



"வேண்டுமானால் செய்துகொள்ளுமேன், ஐயா! ஒரு மழை பெய்து, எங்கெங்கே எப்படி இருக்கிறது என்று நிதானித்தால் நல்லது. புதிதாகக் கான்கிரீட் போட்டால் சில சமயம் கூரை சொட்டும், ஒழுகும். 'வெண்டிலேட்டர்'கள் எப்படி 'ஒர்க்' செய்கிறதென்று பார்க்கலாம். அப்புறம் பனிக்காலம் வந்துவிடும். வர்ணம் ஒட்டாது. சித்திரை வைகாசியில் மரம் உலர்ந்திருக்கிறபோது அடித்தால் ஜிலுஜிலுவென்று இருக்கும். நல்ல ஆளாகப் பிடித்து, நல்ல பெயிண்ட்களாக வாங்கிக் கொடுத்து, கிட்ட இருந்துகொண்டு..."

"ஸார்! அதெல்லாம் இருக்கட்டும்...பஸ்ஸில் போகிற பேரெல்லாம் என் வீட்டைப் பார்த்துவிட்டு, 'ஏன் வெள்ளை அடிக்காமல் விட்டு விட்டான் அந்த மனுஷன்? அதற்குள் கை காலியாகிவிட்டதா?' என்று கேட்டுச் சிரிக்கிறார்கள்!' என்றேன்.

"போங்கள், ஐயா!" என்று ஐயம் சொல்லிவிட்டுப் போனார்.

இதற்குப் பதினைந்து நாட்களுக்குப் பிறகு ஐயம் திருக்குற்றாலம் போனார். திரும்பி வர இருபது நாளாகும் என்று தெரிந்ததும், அவர் வருமுன் வீட்டின் சில வேலைகளை நானாகக் கவனித்துவிடத் துணிந்துவிட்டேன்.

இதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. தினம் இரண்டு பேர் எங்கள் வீட்டுக் கதவை இடித்தார்கள். யார் என்று விசாரித்தால், "நாங்கள் பெயிண்ட் செய்வோமுங்க... நம்ம ஊட்டுலே வேலை இருக்குமா?" என்று கேட்டார்கள். அல்லது, மிகவும் அழுக்குப் படிந்த நற்சாட்சி பத்திரங்களைக் காண்பித்து என்னை அவற்றைப் படித்துப் பார்த்துவிட்டு வேலையை ஒப்புவிக்கும்படி வேண்டினார்கள். சுமார் எட்டுப் பேர்களிடம் "ஆகட்டும், ஆகட்டும்" என்று சொன்ன பிறகு, திடீரென்று ஒரு நாள், திருமலையின் பொறுப்பை நானே ஏற்றுக் கொண்டேன்!

# 14. என் குடும்பத்தாருக்குத் தெரிந்தது!

எங்கள் வீட்டுக்கு 'டிரெய்னேஜ்', 'பைப்' முதலிய வசதிகள் செய்து கொடுத்த மிஸ்டர் ஜோஸப் கறார்ப் பேர் வழி. அவரிடம் எதுவும் சொன்னால் சொன்னதுதான்! அவர் ஆட்கள் காலையில் வருவார்கள் என்றால் காலையில் தான் வருவார்கள்; வரமாட்டார்கள் என்றால் வரவே மாட்டார்கள். கார்ப்பரேஷனே அவர் விரல் நுனியில் ஆடுவது போல எங்களுக்கு ஒரொரு சமயம் பிரமை தட்டும்படி கூடச் செய்திருக்கிறார். "உங்கள் வீட்டுக் குழாயில் இன்று ஜலம் வரும்" என்று அவர் சொல்லிவிட்டார்; ஸத்யத்துக்குக் கட்டுப்பட்டாற்போல் அன்று ஜலம் மடமட வென்று கொட்டித் தீர்த்துவிட்டது (அதற்குப் பிறகு இன்று வரை வரவில்லை என்பதையும் இங்கேயே சொல்லி, இதர சென்னைவாசிகளின் நிலைமையிலேயே நானும் இருந்து வருவதை விளக்கிக் கொள்கிறேன்.)

ஜோஸப் விடை பெற்றுக்கொண்டு, என் 'செக்'கை மடித்துப் பையில் வைத்துக்கொண்டபோது, அவர் வதனத்தில் ஒரு நட்புப் புன்னகை அரும்பியது.

"என்னங்க! நம்ம வீட்டுக்கு டிஸ்டெம்பர் அடிக்கலையா?" என்று கேட்டார்.

"அடிக்க வேண்டுந்தான். நல்ல ஆளாக இருந்தால் சொல்லுங்கள். சில பேர் சுவரில் சொரிதையாக 'டிஸ்டெம்ப'ரை அடிக்க வேண்டும் என்கிறார்கள்; சில பேர் ஒரு 'கோட்' வெள்ளையடித்துவிட்டான பிறகே அடிக்க வேண்டும் என்கிறார்கள்... ஒன்றும் எனக்குப் புரியவில்லை!" என்றேன்



"நம்மிடம் நல்ல ஆள் இருக்கிறான், ஸார்! பொறுப்பாக வேலை செய்வான். வேலையும் சுத்தமாக இருக்கும், அனுப்புகிறேன்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

அவர் போன சிறிது நேரத்துக்கெல்லாம் ஒல்லியாக, சிவப்பாக, ஷர்ட் அணிந்த ஒரு ஆள் வந்து நின்று விறைப்பாக 'குட்மார்னிங்' என்றான்.

அவனை ஹாலில் உட்காரச் சொல்லி, "தாங்கள் யார்?" என்று கேட்டேன்.

"ஜோஸப் சொன்னார், 'டிஸ்டெம்பர் அடிக்க வேணும் என்று!" என்றான் அவன் இங்கிலீஷில்.

"ஓஹோ! உங்களுக்குந் தெரியுமா நல்ல ஆளாக!" என்று கேட்டேன் சுத்தத் தமிழில்.

"நானே அடிக்கிறதுதான்!... ஸார்... வீட்டில்கூட அடித்தேன் ஸர்ட்டிபிகேட் கொடுத்திருக்கிறார். நான் செய்து தரேன்!" என்றான் விடாமல் இங்கிலீஷிலியே.

"சரி...என்னென்ன வேணுமென்று சொல்லுங்கள், வாங்கித் தருகிறேன்!" என்றேன் தமிழில்.

அவன் தொடர்ந்து இங்கிலீஷில் "நீங்கள் சிரமப்படவே வேண்டாம்! நானே வேண்டியதை வாங்கிக்கொண்டு உங்களுக்கு 'பில்' கொடுத்துவிடுகிறேன்... ரொம்ப நல்ல 'டிஸ்டெம்பர்' வந்திருக்கிறது இப்போ...நாலங்குல 'ப்ரஷ்' ஒன்றும் வாங்கிக் கொடுங்கள், பார்த்துக் கொள்ளலாம்!" என்றான்.

"அப்படி எத்தனை 'பிரஷ்' வேண்டியிருக்கும்?"

"அது சொல்ல முடியுமா? எவ்வளவு தேவையோ அவ்வளவு வாங்கிக் கொள்ளவேண்டியதுதான்!"

என் 'செக்'கை வாங்கிக்கொண்டு அவன் போய்ச் சேர்ந்தான். 'பெயிண்ட்' அடிக்க, கன்னியப்பன் என்ற ஒரு

ஆளை அமர்த்தினேன். அதிகமாக வெயில் படும் கதவுகளில் 'பெயிண்ட்' அடிப்பதென்றும், பார்வையாக உள்ள இடங்களில் வார்னிஷ் அடிப்பதென்றும் பிரித்து, வார்னிஷுக்கு வேறொரு ஆசாமியையும் ஏற்பாடு செய்தேன்.

வார்னிஷ்காரர் கருகருவென்று மீசையுடன் காணப் பட்டார். அவரை எனக்குச் சிபார்சு செய்தவர், "இவருக்குக் கொஞ்சம் கூலி அதிகம்தான்; ஆனால் வேலை அயனாக இருக்கும். நம் வீட்டில் ஒரு பீரோ கதவுக்கு வார்னிஷ் செய்திருக்கிறார். அதற்கு நிலைக்கண்ணாடி தேவை இல்லை, அப்படி இருக்கிறது!" என்று வர்ணித்தார்.

அந்த ஆவேசத்தில் நான் என் வீட்டு பீரோவின் நிலைக் கண்ணாடியை ஏன் உடைத்துவிட்டு பதிலாக வார்னிஷ் பூசச் சொல்லவில்லை என்று இப்போது நினைத்தால்கூட ஆச்சரியமாகத்தான் இருக்கிறது. வார்னிஷ் அடிப்பதற்கு மூன்று விதக் காகிதங்கள் (ஸாண்ட்-பேப்பர்) உபயோகிப் பார்கள் என்றும், மூன்று முறை வார்னிஷ் அடித்து அடித்து வெவ்வேறு காகிதங்களால் தேய்ப்பார்கள் என்றும், கடைசி யில் தான் 'பாலிஷ்' ஏற்றுவார்கள் என்றும் தொழில்-ரகசியங்களை நான் கேட்டறிந்து கொண்டேன்.

வீட்டு வெளிப்புறம் (கோபி கலந்த) வெள்ளையடிக்க, 'காண்ட்ராக்'டாகச் சின்னஸாமி என்ற ஒருவனைப் பேசி அமர்த்திவிட்டேன். தினக்கூலி கொடுத்துவிட்டு வாசலோடு நின்று வேலை வாங்க நம்மால் ஆகாதென்றே இவ்வாறு செய்தேன். எல்லாருக்கும் வேண்டிய சாமக்கிரியைகளை வாங்கிக் கொடுத்து வேலையையும் துவக்கிவிட்டு ஆபீஸுக்குப் போனேன்.

சாயந்திரம் வந்தபோது வீட்டில் ஓர் அமர்க்களமே நடந்து கொண்டிருந்தது என்பதை ராஜம் விளக்கினாள்.

வெள்ளையடிப்பது 'காண்ட்ராக்ட்' ஆகையால், சின்னஸாமி இரண்டே நாளில் வேலையை முடிக்க முடிவு



செய்திருந்தானாம்! அதற்காக, அவனுடைய கொள்-பாட்டனார் முதல் கைப்பிள்ளை வரை ஒன்பது பேரைக் குச்சி மட்டைகளுடன் ஆஜர் செய்வித்து, தலைக்கு ஒரு தனி இடம் காண்பித்து அடிக்கச் சொல்லவே, வீட்டின் ஏழு கதவுகளில் எதைத் திறந்தாலும் சின்னஸாமியின் குடும்பம் தென்பட்டுக்கொண்டே இருந்ததாம்! அதுதான் போகட்டும் என்றால், ஒரே வேலையைப் பலபேர் செய்ததால் ஒரு இடம்போல் ஒரு இடம் ஒற்றுமையாக இல்லை என்றும் புகார் செய்தாள்.

'டிஸ்டெம்பர்' அடித்த 'இங்கிலீஷ்' ஆளுக்கும் முனி என்ற வார்னிஷ் ஆளுக்கும் "உனக்கென்னடா தெரியும்?," "உனக்கென்னடா தெரியும்?" என்று சாதாரணத் தமிழில் ஒரு வாக்குவாதம் தொடங்கி, 'டிஸ்டெம்பர்' ஆங்கிலத்தில் திட்ட, 'வார்னிஷ்' தெலுங்கில் பதிலுக்கு ஜமாய்த்துத் தள்ள, மத்தியானம் பூராவும் ஏக ரகளையாம்! தவிர, டிஸ்டெம்பர்காரனும் வர்ணம் கன்னியப்பனும் வேறு ஏதோ தகராறு செய்துகொண்டு, வர்ணத்திலே மீறு டிஸ்டெம்பரைத் திட்டுவதும், பதிலுக்கு மற்றவன் பழி வாங்குவதுமாயிருந் தார்களாம். மாலையில் என்னைப் பார்த்ததும் ஒருவன் மற்றவனைப்பற்றி, "ஒண்ணே கால் ரூபாய்க் கபோதிங் களுக்கு நீங்க மதிப்பு வச்சு மூணே கால் ரூபாய் சம்பளம் கொடுத்து வைச்சால் இதுவும் பேசுவான், இன்னமும் பேசுவான்!" என்று சொல்லி, தங்கள் வண்டவாளங்களை இழுத்து விட்டுக்கொண்டார்கள்.

வர்ணம் கன்னியப்பன் என்னிடம், "இரண்டு பேருமே மோசமுங்க! வெளியே அனுப்பிவிடுங்க... நான் 'பெயிண்டிங்'கை முடிச்சுக்கிட்டு உங்களுக்கு ஒவ்வொண்ணா நிதானமாகச் செய்து தாரேன்... என் வேலையைப்பற்றி வேணா, நீங்க 'கம்பெனி'யிலே கேட்டுக்குங்க... எவ்வளவு அர்ஜண்ட் வேலையானாலும், நான் வர்ர மட்டும் அவுங்க நிப்பாட்டி வெச்சுக் காத்திருப்பாங்களே!" என்றான்.

இவர்களுக்குள் ஒரு மாதிரி சமாதானம் செய்வித்து விட்டு நான் மறு நாள் ஆபீஸ் போனேன். சாயந்திரம் வந்தபோது ஹாலுக்கும் டைனிங் ரூமுக்கும் இடையே உள்ள கதவைக் கள்ளியப்பனும் முனியுமாக, ஆளுக்கு ஒரு பக்கம் பலமாக இழுத்துக்கொண்டிருந்ததைக் கண்டு பதறியே போனேன்.

"இது என் கதவு, ஸார்! இதைப் பெயிண்ட்தான் செய்யணும்!" என்றான் கள்ளியப்பன்.

"சொல்லுவே!... இது என் கதவு, ஸார்! இதற்கு வார்னிஷ்தான் அடிக்க வேண்டும்!" என்றான் முனி விடாப்பிடியாக.

ராஜம் தலையில் அடித்துக்கொண்டு என்னைப் பார்த்து, "பேசாமலே நிற்கிறீர்களே! இரண்டு பேரும் 'என் கதவு' 'என் கதவு' என்கிறார்கள். 'நம்ம கதவு' என்பதை அவர்களுக்குச் சீக்கிரமாக ஞாபகப்படுத்துங்களேன்!" என்றாள்.

இரு கட்சிக்கும் சமரஸமாகப் போகும் உத்தேசத்துடன், நான் தீர்ப்புக் கூறினேன். இரண்டு பேரும் என் தீர்ப்பை ஒப்புக் கொண்டார்கள்: "கதவின் ஒரு பக்கம் வார்னிஷ், ஒரு பக்கம் வர்ணம்!" என்று சொன்னேன்.

இங்கிலீஷ் பேசும் பேர்வழிக்கு ஏழு நாட்களில் மூன்று முறை டிஸ்டெம்பரும் ப்ரஷ்ஷும் வாங்கிக் கொடுத்தேன்; சின்னஸாமிக்குச் சுண்ணாம்பு போதாமல் 'பொறை' 'பொறை'யாக வாங்கித் தந்தேன். பெயிண்ட்காரன் லின்-ஸீட் ஆயில் என்றும், ஸிங்க்-ஒயிட் என்றும் மாற்றி மாற்றிக் கேட்டுக்கொண்டேயிருந்தான். இரண்டும் இல்லாத போது 'ப்ரஷ் தேய்ந்துவிட்டது' என்றான். நடுநடுவே 'பெய்ண்ட்' தீர்ந்துவிட்டது என்றும் கேட்டான்.

முனியின் வேலை மெதுவாக நடந்தது. ஆனால் நன்றாகச் செய்தான்.

"அடடா! ஸீஸன் ஆவாத மரமாச்சுங்களே! அதுதான் கதவுங்களைத் தொறக்க, சாத்த முடியல்லே. நம்மகிட்டே



ஒரு தச்சன் இருக்கிறான்... அவனைக் கொண்டு எல்லாக் கதவுகளையும் சரிசெய்து தரச் சொல்றேன்" என்றான் முனி.

"ஆகட்டும், அழைத்து வா, பார்க்கலாம்!" என்றேன்.

மறுநாள் தொங்கிய வயிறும் பரிதாபமான பார்வையுமாக ஒரு தச்சன் வந்து என் வீட்டு மர வேலைகளைப் பார்த்துவிட்டு என் மீது மிக அனுதாபப்பட்டான், என்னைப் பார்க்கும்போதே அவன் முகத்தில் பல பல மாறுதல்கள் ஏற்பட்டன. "ஸாமி! பரம சாதுவாயிருக்கீங்களே!" என்றான்.

"ஏன் அப்பா?" என்று கேட்டேன்.

"ஊடு பூராவும் சுத்த 'அடாஸ்' மரமுங்க; அடடா! அடடா! அடடா!"

"ஏன்! 'பர்மா டீக்' என்று சொன்னார்களே!" என்றேன் கடுமையாக.

"ஒருத்தர் வேலையை ஒருத்தர் குறை சொல்லக்கூடாது. ஆனால் இது 'பர்மா டீக்' என்று சொன்னால் நான் காதை அறுத்துக்கிறேனுங்க! மலபார் மரமுங்க; அதிலேயும் சுத்த அடாஸ்!"

"இப்போ என்ன செய்யலாம்?" என்று கேட்டேன் அவசரமாக, அவன் காதை அறுத்துக்கொள்ளுமுன்.

"இதையே நான் நல்லா இழைச்சு, சுத்தமா செஞ்சு தாரேன். நான் வேலை செஞ்ச அப்புறம் இது என்ன மரம்னு யாராலும் கண்டுபிடிக்க முடியாதுங்க!... இரண்டு க்தான் வேணுமுங்கோ!"

"அப்படியே வைத்துக்கொள்!"

முனியும் சும்மா இருக்கவில்லை. "நான் 'ஸ்பெஷல்' வார்னிஷ் போட்டு விடறேன்... என்னா தச்சரே! திவான்

பகதூர் மந்திரியார்ச்சுனப் பிள்ளை வீட்டிலே போட்டமே பாலிஸ் பௌடர் கிவ்டர் போட்டு..." என்று கேட்டான்.

"அது சுத்தமான வேலையாச்சுங்களே! 'டைம்' கூட ஆவும்... ஆனா, ஏழு வருஷமானாலும் 'பாலிஸ்' மாறாதுங்களே! .."

"பேஷ், பேஷ்! அப்படித்தான் நம் வீட்டிலேயும் இருக்க வேண்டும், நடக்கட்டும்!" என்றேன்.

அன்று கேசவன் வந்திருந்தான். "மலபார், பர்மா" விஷயமாக நான் கேட்டறிந்த 'உண்மை'யைக் கூற தொடங்கியதும் அவன் துள்ளிக் குதித்தான். "அ(த்)து மட்டும் சொன்னால் நான் ஒப்புக்கொள்ள மாட்டேன், ஸார்!...யாராவது அப்படி நிரூபிக்கட்டும், நான் காதை அறுத்துக்கொள்கிறேன்!" என்றான்.

இரண்டு கட்சிக்காரர்களுமாகச் சேர்ந்து மர விஷயமாக என் காதை அறுக்காமல் விட்டால் சரியென்று அதோடு அந்தப் பேச்சை விட்டேன்.

டிஸ்டெம்பர் ஆசாமி, "காம்பவுண்டுக்கு நல்ல வளை இருக்குதுங்க, நமக்குத் தேவைங்களா?" என்று விசாரித்தான் இங்கிலீஷில்.

"கொடேன், ரொம்ப உபகாரமாக இருக்கும்!" என்றேன்.

"அப்படியானால் முன்-பணம் இருபத்தைந்து ரூபாய் தாருங்கள்! நாலே நாளில் கொண்டுவந்து போடச் சொல்கிறேன்" என்றான். அன்றே பணத்தையும் வாங்கிக் கொண்டு போனான்.

என் பணத்தைப் பிறர் பங்கு போட்டுக்கொள்கிறார்கள் என்பதைக் கண்டுகொண்டோ என்னவோ, வர்ணம் அடிக்கும் கன்னியப்பன், தான் மட்டும் ஏமாந்து போகவேண்டாம் என்று, "வாசலில் காம்பவுண்ட் கட்டைக் கட்டப் போறீங்களா?" என்று விசாரித்து, "நம்மகிட்ட அருமை



யான கொத்தனார் இருக்கிறார், நாளை இட்டாரவா?" என்று கேட்டான்.

"நல்ல ஆள்தானா அவன்?" என்று கேட்டேன்.

"அவருக்கு மிஞ்சி இந்தப் பட்டணத்திலேயே கிடையாது. இப்போ ஒரு ஸ்டுடியோவிலே இருக்கிறாரு!"

"அழைத்துவா!" என்றேன்.

கீச்சு மூச்சென்று பேசிக்கொண்டு நரை மீசையுடன் ஒரு ஆள் வந்து சேர்ந்தான். என்னைப் பார்த்தவுடன், "இந்த ஐயாவா! எனக்குத் தெரியுமே இவுரை! மோட்டார் ஸைக்கிளிலே போவாரு...முன்னைகூட மவுண்ட்ரோடிலே கீழே வண்டியைப் போட்டுக்கினு விளுந்தாங்களே!" என்றான்.

"நானேதான் அது!" என்றேன்.

"நான் கட்டித்தாரேன்...அப்பப்போ ஜாமான் வாங்கிக் கொடுங்க...தினக்கூலி கொடுங்க...எவ்வளவு குறைவா முடியுமோ முடித்துத் தாரேன்!" என்றான்.

கீச்சு மூச்சுக் கொத்தனார் மறுநாள் இரண்டு சகாக்கள் (தலா ரூ 3.50) ஒரு அரையாள், (கூலி ரூ. 1-50) ஒரு பொம்மனாட்டி (ரூ. 1.50) ஒரு பையன் (அணா 14) ஆக ஐந்து பேருடன் ஒரு 'பட்டாள'மாக வந்தார். "ஐயையோ! இத்தனை பேர் எதற்கு?" என்றேன்.

"கடக்கால் எடுக்கத் தாவலா?"

"சரி!"

"கலவை கலக்கத் தாவலா?"

"சரி!"

"சித்தாள் வேலை செய்யத் தாவலா?"

"சரி!"

"கட்டை கட்டத் தாவலா?"

''சரி!''

''நாலு பக்கம் பூசத் தாவலா?''

''தேவலை, அப்பா நீ!'' என்றேன்.

நான் பார்த்த நேரங்களில் எல்லாம் இத்தனை பேரும் சுறுசுறுப்பாக இருந்தார்கள். இப்படி முழுசாக ஆறு தினங்கள் சென்ற பின் கட்டைகள் பூச ஆரம்பித்தார்கள். அதற்காக அதன் நாலு பக்கங்களில் நாலு பேர் நின்று கொண்டார்கள். பையனுக்குக் கீழே இடம் இல்லாமல் போகவே, அவனைக் கட்டை மேல் ஏற்றி நிற்க வைத்து விட்டார்கள்!

குபேரப் பட்டணம் கொள்ளை போகிறதென்று கண்ட சின்னஸாமி, ''எசமான்!'' என்றான்.

''என்னப்பா?''

''நல்ல எருவாக இருக்குங்க! ஆட்டெரு மாட்டெரு எல்லாம் இருக்குங்க—பவுன் கணக்கா! போட்டீங்கன்னா செடிங்க ஜிலுஜிலுன்னு வரும்... நாலு வண்டி கொண்டாரட்டா?'' என்று கேட்டான்.

''பார்க்கலாம்'' என்றேன் மழுப்பலாக.

நான் தபாலாபீஸ் போய்விட்டு வருவதற்குள் நாலு வண்டி எரு (வண்டி ரூ. 3 வீதம்) போட்டாகியிருந்தது. இந்த எருவைப் பார்த்த வேறொரு வண்டிக்காரன், ''ஐயோ ஸாமி, இப்படியா ஏமாந்து போகிறது? என்னை ஒரு வார்த்தை கேட்கப்படாதா? பஸ்ட் கிளாஸ் எரு போடுவேனே!'' என்று ஒரு வண்டி கொண்டுவந்தான்.

ஐந்து வண்டி எருவையும் எங்கள் வீட்டுப் பால்காரன் பார்த்து, ''ரெண்டணா பொறாது, கார்ப்பரேஷன் குப்பை என்னண்டை சொல்லாமே ஏன் வாங்கினீங்க? நான் கொண்டாரட்டுமா ஒரு வண்டி?'' என்றான்.

''வேண்டாம்!'' என்றேன்.



27070
4192546

என் மனத்திற்குள் அவன் மட்டும் யோக்யன் என்று தோன்றிக் கொண்டிருந்தது!

டிஸ்டெம்பர் ஆசாமி இருபத்தைந்து ரூபாயை ஏப்பம் விட்டு விட்டான் என்பதைத் தெரிந்துகொள்ள எனக்கு ஒரு வாரம் பிடித்தது. தினசரி சால்ஜாப்புகளைக் கேட்டுப் பொறுமை இழந்து அவனைக் கண்டித்தபோது, அவன் என்னை எரிக்கிறாப்போல் பார்த்தான். ''மனுஷனுக்கு ஒரு 'ஸொல்' வேணுமுங்க - ஆயிரம் ரூபாய் வரதானாலும், ஒரு ரூபாய் போறதானாலும்! உங்க பிச்சைக் காசைத் திருப்பி னால்தான் எனக்கு வேலை ஓடும்!'' என்று சொல்லி, அது முதல் அரைகுறையாக வேலை செய்து முழுநாள் சம்பளத்தை வாங்கிக்கொண்டு போக ஆரம்பித்தான்.

அவன் வேலையைப்பற்றிக் குறை சொன்ன போது அவன் இங்கிலீஷில், ''இருபத்தைந்து ரூபாய் உங்களுக்குப் பெரிசு; எனக்கு அது துச்சம்! என்னைப்பற்றி நீங்கள் நன்றாகத் தெரிந்து கொள்ளவில்லை!'' என்று இரைந்து விட்டுப் போனான் அப்புறம் அவன் வரவேயில்லை.

சின்னஸாமியை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டுக் கன்னியப்பனையும் கணக்குத் தீர்த்து அனுப்பினேன்.

முனியும் தர்சனும் கடைசியில் ஒரு பிரம்மாண்டமான 'பில்' தயார் செய்து கொண்டுவந்து கொடுத்து என்னை பரீட்சை போட வைத்தார்கள். நான் அவ்வளவு பணம் கொடுக்கச் சரிப்படாது என்றவுடன், ''உங்களுக்கு பத்தரையா மாதிரி 'அடாஸ்' ஆளுங்கதான் சரிப்படும்'' என்று ஏகமுகமாகத் தீர்ப்புக் கூறி, முழுப்பணத்துடன் கோபமாக வெளியேறினார்கள்.

''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டாள் ராஜம்.

''ஒரு வழியாக வேலைகள் எல்லாம் தீர்ந்தன!'' என்றேன்.

மீசை மூக்குக் கொத்தனார் கும்பிடு போட்டு, ''கட்டை வேலை தீர்ந்ததுங்க. கிணற்றங்கரை தளம் பூசலாமுங்களா? ஒருவா முடித்துத் தாரேன்'' என்றார்.

"தபால்!" என்று சப்தம் அப்போது கேட்டது. ஸ்ரீமான் ஜயம் திருக் குற்றாலத்திலிருந்து கடிதம் போட்டிருந்தார்.

"இந்தப் பன்னிரண்டு நாட்களுக்குள் எவ்வளவு வேலை நடந்திருக்கும் என்று என்னால் ஊகித்துக் கொள்ள முடிகிறது. உங்கள் பேரில்பிசகில்லை. வீடு கட்டுகிறவர்கள் எல்லோருக்குமே 'ஒரே மூச்சில் முடித்துவிட வேண்டும்' என்ற ஒரு பயித்திய-ஆவேசம் (மன்னிக்கவும்!) வருவது சகஜந்தான். இருந்தாலும் நிதானமாகப் போவதே நல்லது-வீட்டுக்கும் சரி, உங்களுக்கும் சரி. இதுவரை செலவு செய்தது போதும்; நிறுத்திக் கொள்ளுங்கள். கிணற்றுக்கு இப்போது தளம் பூசவேண்டாம். இன்னும் இரண்டு மழைகள் பெய்து சுற்றிலும் தரை "உட்கார்ந்த' பிறகுதான் அந்தச் செய்ய வேண்டும். உங்கள் வீட்டுக் 'காப்பவுண்டு' வலைக்கு நான் ஏற்பாடு செய்துவிட்டு வந்திருக் கிறேன்! வந்து சேரும். நான் ஒரு வாரத்தில் வருகிறேன்.

உங்கள் புது வீட்டின் அழகை அடிக்கடிபார்த்து ரஸித்துக் கொண்டும், வருகிறவர்களுக்கெல்லாம் வலுவில் அலுப்புச் சலுப்பின்றி அறை அறையாகத் திறந்து காண்பித்துக்கொண்டும், இதற்கு முன் நம்மைவிட அழகாக யாரும் வீடு கட்டியதில்லை என்று மார்பைப் பார்த்துக் கொண்டும் ஆனந்த மாகப் பொழுதைப் போக்குவீர்கள் என்றும் நம்பு கிறேன். வணக்கம் பல!

தங்கள் அன்புள்ள,
ஜயம்."

'இவருக்கு இதையெல்லாம் யார் சொல்லியிரு பார்கள்?' என்று நான் யோசித்தேன்,



"கிருஹப்பிரவேசத்திற்கு வந்துகொண்டிருக்கும்போது வழியில் மேளக்காரன் வருவான் என்று அவருக்கு யார் சொன்னாங்க?" என்று விச்சு கேட்டான்.

"ஜயம் சொல்கிறபடிதான் கேளேன்!" என்றாள் என் தாயார்.

"கேட்கிறேன், அம்மா!...இங்கே வந்து பார்த்துவிட்டு அவர் என்னைத் திட்டாமல் இருக்க வேண்டுமே என்றல்லவா பயமாக இருக்கிறது!" என்று நான் கவலைப் படலானேன்.

# 15. பார்த்த பேருக்குத் தெரிந்தது!

வீடு பூர்த்தியானவுடன், வீட்டுக்குடையவர் முதலில் ஆசையுடனும், இடையில் கடமையுணர்ச்சியுடனும், கடைசியில் சலிப்புடனும் செய்கிற காரியம் ஒன்று உண்டு. அந்தக் காரியத்தில் முதல் இரண்டு பகுதிகளும் எல்லாருக் கும் உடனேயே ஏற்படுகின்றன. மூன்றாவது சிலருக்கு முன்னே வரும்; சிலருக்குத் தாமதித்து வரும். ஆனால், எல்லாருக்கும் வந்தே தீரும்! அந்தக் காரியம் வருபவர் களுக்குப் புது வீட்டைக் காண்பிப்பதுதான்! எனக்கு இந்த மூன்றாவது தசை ஏற்படும் சமயம், எங்கள் சின்னக் கண்ணன் முன் வந்து, சிரமமான அந்தப் பொறுப்பை ஆர்வத்துடன் ஏற்றுக்கொண்டு விட்டான்!

வீடு காண்பிக்கும் நாடகம் ரஸமானது. வீடு பார்க்க வருபவர் உள்ளே வரத் தயங்கிக்கொண்டு வாசற்படியில் நிற்கிறார். குபீரென்று நான் அவர் சங்கோஜத்தை விரட்டி அடித்து, "வாருங்கள், ஸார்; வரலாம், வாருங்கள்!" என்று உள்ளே அழைக்கிறேன்.

"இதோ பார்த்தீர்களா, ஆபீஸ் ரூம்... இங்கே இரண்டு பீரோ போட்டிருக்கிறேன்!" என்கிறேன்.

"ரொம்பக் கச்சிதமாயிருக்கிறது" என்ற பதில் கட்டாயம் கிடைக்கிறது.

"நான் ஜன்னல்களைக் கொஞ்சம் பெரிசாகவே வைத்தேன் கவனித்தீர்களா?"

"கவனித்து விட்டேன், வந்தவுடனேயே! எனக்குச் இன்ன ஜன்னல்களைக் கண்டாலே பிடிக்கிறதில்லை."

"அப்புறம் இந்த 'விண்டோ-ஸீட்' போட்டேன்... இதைப் பயித்தியக்காரத்தனம் என்று வேண்டுமானாலும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்!"

"சேச்சே! நன்றாகச் சொன்னீர்கள்! எத்தனை உபயோகம்! நாற்காலி இல்லை என்று தேட வேண்டாம். சட்டென்று உட்கார்ந்து கொள்ளலாம். இல்லையா?... உம்... இதுதான் 'ட்ராயிங் ரூம்' ஆக்கும்?... உம் பேஷ்! நன்றாயிருக்கிறது! அப்புறம்...?"

"இது 'டைனிங் ரூம்'; மேலே பார்த்தீர்களா, மூனு சேந்திகள்!"

"அடேயப்பா! பிரமாத வேலை செய்திருக்கிறீர்களே! ஒ(ர்)ரு சாமான் கீழே வைக்க வேண்டாம்!"

"சமையல் கட்டு, சாமான் ரூம்-பாருங்கள்-டேய் யாருடா இவன், சும்மாச் சும்மா இந்த மேல் தாழ்ப்பாளைப் போட்டு வைத்து! திற, சொல்கிறேன்!"

"ஆகட்டும், மெள்ள ஆகட்டும். கோபிக்காதீர்கள்!... இங்கே வெந்நீர் உள்... இங்கே 'டாப்' வைத்தீர்களா? பழைய சம்பிரதாயப்படிக்கும், புது மோஸ்தராகவும், ரொம்ப நன்றாகவும் யோசிச்சும் செய்திருக்கேன்..."

"அப்புறம் மாடி பார்க்க வேண்டாமா?... வாருங்கள்! (எட்டுப் படி ஏறியதும்) பார்த்தீர்களா, படுக்கைகளைக் கொண்டு போட ஒரு சேந்தி!"



"அடடே! நன்னாயிருக்குன்னா இது! ஒரோரு வீடுகளிலே படுக்கைகளைக் கண்ணெதிரில் போட்டு ஏக கோரமாக வைத்திருப்பார்கள்!... அடி கமலம்! (அல்லது கோமதி, கல்யாணி, அலமேலு) இதை வந்து பார்... நல்ல 'ஐடியா' ஸார் இது!"

"இங்கே பாருங்கள், இந்த வெண்டிலேட்டர்களை! எல்லாரும் ஒண்ணே ஒண்ணு உயரமாக வைப்பார்கள்; அதையும் திறக்கவே மாட்டார்கள்... நான் ஒரு பக்கத்துக்கு ஆறாக, பன்னிரண்டு வைத்து விட்டேன்... வேண்டியதை வேண்டியபோது திறந்து கொள்ளலாம், சாத்திக் கொள்ளலாம்!"

"ரொம்ப பிளான் போட்டு நன்றாகச் செய்திருக்கேன்!"

எனக்குப் பெருமை பிடிபடாது. இரண்டு படிக்கு ஒரு காலாக வைத்து மேலே ஓடிப் போய், "இது விருந்தாளிகளுக்காக ரூம்!" என்கிறேன்.

"இங்கேயே நான் தங்கிவிடலாம் போலேன்னா செய்துட்டேள்? நல்ல காற்றோட்டம், வெளிச்சம்! நம் வீட்டுக்கு ஒரு சொந்தக்காரான் வந்தான்னா எத்தனை சங்கடம்! நீங்கள் ஞாபகமாக..."

"இது பெட் ரூம்... இதற்கு இருபுறமும் வராந்தா."

"ரொம்ப ஆனந்தமாயிருக்கு உங்கள் வீட்டைப் பார்க்க! இந்த 'ஐடியா'க்களையெல்லாம் இனிமேலே யாராலும் மிஞ்ச முடியாது! ... அடி கமலம்! நம்ம பஞ்சுவை வந்து இவர் வீட்டைக் கட்டாயமாப் பார்க்கச் சொல்லணும்டி... பஞ்சு என் மூத்த மச்சினன், ஸார்! இப்போ கோடம்பாக்கத்திலே 'ப்ளாட்' வாங்கி, புதுசா வீடு கட்டறான்; இந்த 'ஐடியாஸ்'களை எடுத்துக்கலாமே!"

"தாராளமா! எப்போ வேணுமானாலும் வரச் சொல்லுங்கள்!"

"ஆமாம்... என்ன ஆச்சு?"

''நீங்கள்தான் சொல்லுங்கள்!''

''நான் என்னத்தைக் கண்டேன்; நீங்கள் செய்திருக்கிற வேலைகளைப் பார்க்கிறபோது ரொம்ப ஆகியிருக்க வேண்டும்னு தோண்றது!''

''ஆகத்தான் ஆயிற்று.''

''ஆனால் ஆகட்டும்; இந்த மாதிரி ஒரு வீட்டுக்கு என்ன வேண்டுமானாலும் கொடுக்கலாம்... நான் வரட்டுமா, நேரமாகிறது! உங்களுக்கும்...''

''இல்லை; காபி சாப்பிடாமல் எப்படிப் போக முடியும்?''

''ஐயையோ! வரபோது மூணு இடத்தில் காபி ஆகிவிட்டது!''

''மூன்று ஒன்றும் செய்யாதபோது, நாலாவது உங்களை என்ன செய்துவிடப் போகிறது! எலே விச்சு!...''

இதெல்லாம் வீடு கட்டும் விஷயம் தெரியாத பேர் செய்யும் காரியமும் சம்பாஷணையும். கட்டி அனுபவப் பட்டவர்கள் என்றால் நம் மனத்தைக் கலக்கியே விடுகிறார்கள். ஏன் வருகிறார்கள் என்று எண்ணும்படி செய்கிறார்கள். ''ஹால் 16-க்கு 12 போட்டீர்களா? உம்ம்ம்ம்... நான் மூன் யோசனையுடன் 20-க்கு 18 போட்டேன்!''; ''சமையல் கட்டை இப்படியா செய்து விட்டீர்கள்? (பக்கத்தில் வரும் நண்பரிடம்) நமக்கு அமைந்தாப் போல் எங்கேயும் சமையல் அறை அமைய வில்லை; நானும் இதுவரை ஆயிரம் வீடு பார்த்து விட்டேன்,'' ''உயரம் என்ன கொடுத்தீர்கள்?... பதினொன்றுதானே? எல்லாரும் அது போதும் என்றார்கள்! நான் பன்னிரண்டரை தூக்கிவிட்டேன். எனக்கு வெவெண்ட் வந்தது பாருங்கள், ஹா!'' இப்படி நம் வீட்டை நம் எதிரிலேயே குறைத்துக் குறைத்துப் பேசி வைக்கிறார்கள். முன்னாடி வெளியில் போக மாட்டார்களா



என்று தோன்றுகிறது. அல்லது, அவர்கள் வீட்டிற்கு மறுநாளே போய், இதே போல் கடுமையாகப் பேசி, பழிக்குப் பழி வாங்கவேண்டும் என்று வைராக்கியம் ஏற்பட்டுவிடுகிறது.

எத்தனையோ பேர் சுற்றிப் பார்த்துவிட்டு ஒன்றுமே சொல்லாமல் போய், எங்களை மிக மனவேதனையில் ஆழ்த்தியிருக்கிறார்கள். ''அவர்கள் பார்த்துவிட்டுப் போனார்களே, உங்களிடம் வீட்டைப்பற்றி என்ன சொன்னார்கள்?'' என்று ராஜம் என்னைக் கேட்பாள்.

''என்னிடம் ஒன்றுமே சொல்லவில்லை. உன்னிடம்?''

''வாயைத் திறக்கவில்லை!''

''ரொம்ப கர்வம் அவர்களுக்கு. ஒன்றும் சொல்ல இஷ்டம் இல்லையென்றால் இங்கே ஏன் வருகிறார்களாம்?''

சில பேர் வீட்டைப் பார்க்க விருப்பம் தெரிவிக்காத போது. பலவந்தமாகவே நானே இழுத்துச் சென்று; ''இதோ பார், பீரோ; இதோ பார், இரும்புப்பெட்டி'' என்று காட்டியுமிருக்கிறேன். பிறகு ராஜம் சொல்லி, அநாவசியமாகச் சிரமப்பட்டோமே என்று வருந்தியு மிருக்கிறேன்.

அது ஒரு 'பயித்தியம்' சிறிது காலத்துக்குத்தான் பிடித்து ஆட்டுகிறது. இப்போது அந்த உத்சாகம் குன்றி விட்டது. ராஜத்தின் சொந்தக்காரர்கள் யாராவது வரும் போது மட்டும், ''மூத்த மாப்பிள்ளை மகா கர்வி'' என்று அவர்கள் சொல்லிவிடாமல் இருப்பதற்காக வீட்டைச் சுற்றி அழைத்துக்கொண்டு காண்பிக்கிறேன்.

இதையெல்லாம் மௌனியாகக் கவனித்து வந்திருக்கும் ஆத்மா ஒருவன் இருக்கிறான். அவன், என் பிள்ளை சின்னக் கண்ணன். அவன் (என்னைப் போலவே) வருபவர்களுக்கு வீடு காட்ட ஆரம்பித்து விட்டான்! அதுவும் என்னைப் போலவே வெகு நன்றாகக் காட்டுகிறான் என்று ராஜம்

பெருமையாகச் சொல்லிவிட்டு, அவனையும் தாண்டி விட்டான். அவன் எனக்கே என் வீட்டைச் சுற்றிக் காட்ட ஆரம்பித்து விட்டான், போக்கிரி!

மாடிப்படியில் பாதி ஏறி நின்றுகொண்டு, என்னைப் போல் அபிநயத்துடன், "இதைப் பார்த்தீர்களா, படுக்கைகளை இங்கேபோட நான் ஒரு வழி பண்ணிவிட்டேன்!" என்கிறான். மற்றவர்கள் சொல்லும் பதிலை அவனே சொல்லி அழகு காட்டுகிறான். மேலும் ஆறு படிகள் ஏறி, ஒரு வென்ட்டிலேட்டரை இழுத்துக் காட்டி, "பார்த்தீர்களா இதை! எல்லாரும் உயரமாக ஒரே ஒன்று வைப்பார்கள். அப்புறம் அதைத் திறக்கவும் மாட்டார்கள், மூடவும் மாட்டார்கள். நான் இதை ஆறும் ஆறும் பன்னிரண்டாகப் பிரித்து..." என்று இமிடேஷன் செய்கிறான்.

இதைப் பார்க்கும்போது என் மனத்தில் ஒரே ஓர் எண்ணந்தான் ஏற்படுகிறது : "அடே சின்னக்கண்ணா! இந்த ஆயுளில் உன்னைப்போல் நிஷ்களங்கமாக நிஷ்கவலையாக என்னால் இந்த கிருஹஸ்தாச்ரமத்தில் இருக்க முடியவில்லையேடா! போகட்டும்; நீயாவது ஆனந்தமாக இரு. என்னை நீ என்ன அழகு காட்டினாலும் உன்னை நான் கோபிக்கவே மாட்டேன்!" என்று தாபம் கலந்த உள்ளத்துடன் நினைத்துக் கொள்கிறேன்.

நண்பர்கள் பார்த்துவிட்டுப் போன பிற்பாடு தனிமையில் உட்கார்ந்து யோசனை செய்து பார்க்கும் போது வீடு கட்டினது புத்திசாலித்தனந்தானா என்ற சந்தேகம் எனக்கு அடிக்கடி ஏற்பட்டுக் கொண்டுதான் இருக்கிறது. இதை நான் சில ஆப்தர்களிடம் சொல்லி மன ஆறுதல் பெற முயன்றிருக்கிறேன். அவர்கள் சொல்லும் பதில் (என்னைத் திருப்தி செய்யவோ என்னவோ) ஒரே மாதிரியாக இருக்கிறது. "நன்றாகச் சொன்னீர்களே! வீடு என்பது அவசியமா இல்லையா?" என்றார்கள். பக்கத்து வீட்டு நண்பர்களில் ஒருவர், "உங்களைப் பார்த்து நாங்கள்



பார்த்த பேருக்குத் தெரிந்தது!

ஆறுதல் அடைந்து கொண்டிருக்கிறோம்... நீங்களே இப்படிச் சொல்லிவிட்டால்!" என்றார். இதற்கு அர்த்தம் என்னவென்று நான் என் மண்டையை இன்னமும் குழாவிக் கொண்டிருக்கிறேன், புலப்படவில்லை!

விஷயம் தெரிந்த இரண்டொருவர், வீடு என்ன பிடித்தது என்று நான் சொன்னதும், "ஆகியிருக்கும்... 'ப்ளிந்த்' என்ன? இரண்டாயிரத்து முன்னூறா?... இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருந்தால் இரண்டாயிரம் ரூபாய் மிச்சம் பிடித்திருக்கலாம்" என்றார்கள்.

"அது வாஸ்தவம்... அப்படியிருந்தாலுங்கூட, இவ்வளவு ரூபாய் செலவழித்ததற்குப் பலன் இருக்கிறதா? இந்தப் பணம் பாங்கியிலிருந்தால்—" என்றேன்.

"இந்த மாதிரி விஷயங்களுக்கு இப்படிக் கணக்குப் போட்டுப் பார்த்தால் சரிப்பட்டு வராது... ஒரு மனிதன் ஹோட்டலில் அறை வைத்துக்கொண்டு தனியாக ஜீவித்து வந்தால் செலவு ஜாஸ்தி ஆகாதுதான். கல்யாணம் செய்து கொண்டு குழந்தை குட்டிகளுடன் இருப்பதென்றால் அதற்குச் செலவு அதிகம் ஆகும். இதை மட்டும் கவனித்துக் கொண்டு, பிரம்மசாரி வாழ்க்கைதான் உயர்ந்தது என்று முடிவு கட்டிச் சொல்லிவிட முடியுமா?" என்று எடுத்துக் கூறினார்கள்.

"என்னவோ, ஒரு ஆவேசம் வந்து கண்ணை மூடிக் கொண்டு செலவு செய்துவிட்டேன்... இந்தக் 'காண்ட்ராக்டர்'கள் நம்மை மெள்ள மெள்ள இழுத்துக்கொண்டே போய்விடுகிறார்கள். ஒரு 'அயிட்டம்' நாலாயிரத்துக்குள் முடியுமென்கிறார்கள்; நம்பி ஆரம்பிக்கிறோம். நாலாயிரம் தாண்டிவிடுகிறது; கட்டடம் பாதியில் நிற்கிறது. மேற்கொண்டு செலவழிக்காமலும் இருக்க முடிவதில்லை. விட்டாலும், போட்ட பணம் போய்விடுகிறது. நீங்கள் 'காண்ட்ராக்டர்'ரைக் கோபித்துக்கொண்டால், நானும் இடத்தில் விசாரித்துக்கொள்ளுங்கள்' என்கிறார்,

பணத்தை மேலே செலவழிக்கிறதைத் தவிர வேறு வழி இல்லாமல் போகிறது'' என்றேன்.

''ஏதோ, ஒரு விதமாக வீட்டை முடித்துவிட்டீர்கள். இனிமேல் பார்த்துக்கொள்ளலாம். எல்லாம் லகுவாக முடிந்தவரை நல்லதுதானே?'' என்றார் ஒரு ஆப்தர்.

''ஸ்வாமி! என் ஹிருதயத்தில் பவுண்டன் பேனாவைச் சொருகிக் கொண்டாக்கும் ஒவ்வொரு தடவையும் 'செக்' எழுதிக் கொடுத்திருக்கிறேன்!'' என்றேன் உணர்ச்சிப் பரவசத்துடன்.

சற்று வேதாந்த பரமாக இருந்த நண்பர், தாம் சமீபத்தில் மயிலாப்பூரில் ராமாயண காலட்சேபத்தில் கேட்ட கதை ஒன்றை எனக்குச் சொல்ல இதைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்டு வெற்றி பெற்றார். ''ஸார்! நீங்கள் முயற்சி செய்யாமல் இருந்தாலும், இந்தக் காரியம் நடந்தே தீரும்... ஈசுவரன் கட்டளை அது. வருவன வந்தே தீரும். அவன் நடத்தி வைப்பவன்! நேற்றுக்கூட ராமாயண சாஸ்திரிகள் அற்புதமாக ஒரு கதை சொன்னார்.

''பகவான் ஒரு பண்டத்தைச் சேர்ப்பிக்க வேண்டும் என்றால் அதற்கு ஒரு ஆளை ஏவுகிறார். அவன் செய்து வைத்துவிட்டுப் போகிறான்; எப்படியோ பணம் கிடைத்து விடும்... அதே மாதிரிதான் எடுத்துக் கொள்ளுகிற போதும்... ரொம்ப நன்றாகச் சொல்கிறார். இரண்டு நாள் வந்து ராமாயணத்தைக் கேளுங்களேன்... அப்புறம் விடமாட்டீர்கள்!'' என்றார்.

இதற்கு இரண்டு தினங்களுக்குப் பிறகு ஒரு நாள் மோட்டார் ஒன்று எங்கள் வீட்டு வாசலில் வந்து நின்றது. என் மருமான் ஓடி வந்து, ''மாமா திருமலை வருகிறார்; அவர்கூட ஒரு ஹைக்கோர்ட் ஜட்ஜை அழைத்துக் கொண்டு வருகிறார்!'' என்று என்னிடம் சொன்னான்.

நான் ஓட்டமாக ஓடி வந்து அவர்களை வரவேற்றேன். திருமலை வெகு தீவிரமாக, என்னைக் கவனித்தது



போலவே, என் வீட்டின் பல பாகங்களையும் ஜட்ஜுக்குச் சுட்டிக் காட்டி, ''இங்கே நான் என்ன பண்ணியிருக்கிறேன் என்று நீங்கள் கேட்டால்...'' என்று பல முறைகள் அவருக்கு அழுத்தம் திருத்தமாகச் சொல்லி விவரிக்கத் தொடங்கி விட்டார்.

நான் அப்போது ஏதாவது சொல்லாவிட்டால் ஸ்ரீ ஜயத்துக்குத் துரோகம் செய்வதாகும் என்று எனக்குப் பட்டது; ஏதாவது சொல்லி வைத்தாலோ, எனக்கென்று வீடு கட்டிக் கொடுப்பதாக வந்து ஸ்ரீ திருமலையிடம் நன்றி கெட்டதனமாக நடந்துகொண்டதாகவும் ஆகும்... இந்த மாதிரியான ஒரு தர்ம சங்கடத்தில் தவித்துக்கொண்டிருந்தேன். கனம் நீதிபதி என்னைக் கவனித்ததாகவோ, என் வீட்டைப் பார்த்ததாகவோ தெரியவில்லை. ஒரு பெரும் போக்காக அரைக் கண்ணை வீசுவதும், கழுத்துடன் சேர்த்தபடி தலையை அசைப்பதுமாக இருந்தார்.

ஸ்ரீ திருமலை என்னை, ''இவர்தான் வீட்டுக்காரர்'' என்று நீதிபதிக்கு அறிமுகம் செய்து வைக்காதது என் கௌரவத்துக்குப் பெரும் அநீதி இழைத்தது போல் தோன்றியது. ''இவர் அறிமுகம் செய்து வைக்காவிட்டால் என்ன! என்றாவது ஒரு நாள் ஸ்பெஷல் ஜூராராகப் போய் ஜட்ஜின் கண்ணில் பட்டால் போச்சு!'' என்று மனத்தைச் சமாதானப் படுத்திக்கொள்ள முயன்றேன். ஆனாலும், திருமலையிடம் ஒரு வார்த்தை பேசிவிட வேண்டும் என்று, ''மிஸ்டர் திருமலை! கொஞ்ச நாள் முந்தி என்னை இரண்டு போலீஸ்காரர்கள் தேடினதாகவும், இந்த வீட்டின் சொந்தக்காரர் நான்தானா என்று விசாரித்ததாகவும் சொன்னார்கள். அப்புறம் அவர்கள் வந்ததாகவே தெரியவில்லை... ஒருவேளை போலீஸ் கமிஷனர் என் வீட்டைப் பார்க்க விரும்பி அவர்களை அனுப்பியிருப்பாரோ?'' என்று கேட்டேன்.

திருமலை என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துவிட்டு, ''அதுவா! அதெல்லாம் ஒன்றுமில்லை... உங்களைப்பார்த்த மறுநாளே அவர்கள் என்னை வந்து பார்த்தார்கள்;

•சிமிட்டி, இரும்பு பெர்மிட்டுகளைப் பார்க்க வேண்டும். 'ஸ்டாக்' எங்கே இருக்கிறது. காண்பிக்கிறீர்களா?' என்றார்கள். 'தாராளமாகப் பார்த்துக்கொள்ளுங்கள்' என்றேன். பேசாமல் போனார்கள். நம்மிடம் ஒளிவு மறைவு எல்பதே கிடையாதே!'' என்று இரு கைகளையும் பலமாகத் தட்டிக் காண்பித்தார்.

பிறகு அவர்கள் மோட்டாரை நோக்கிச் சென்றார்கள். நானும் பின் தொடர்ந்தது அவசியமே இல்லை என்று ராஜம் சொல்கிறாள். ஆனால், அதனால் ஒரு பலன் கிட்டிய தென்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்!

காரில் அமர்ந்துகொண்ட கனம் நீதிபதி, ''இதென்ன, நான் சொன்ன 'எஸ்டிமேட்டு'க்குள் அடங்கிவிடும் என்கிறீர்கள் அல்லவா?'' என்று திருமலையைக் கேட்டார்.

''அதுவேதான்! இன்னும் கொஞ்சம் ஜாக்கிரதையாகச் செய்தால் குறையுமே தவிர, அதிகம் ஆகாது.. ஹிஹ்ஹி... செங்கல் விலை நாற்பத்தேழாக இருந்தது. இப்போ நாற்பத்து மூணு! சிமிட்டிகூட ஏழெட்டு ரூபாய் குறைச்சல்; இன்னும் குறையும் என்கிறார்கள், தாராளமாக ஆரம்பித்துச் செய்யலாம்'' என்றார் திருமலை.

''எப்படியும் இருபத்தைந்துக்கு மேலே போகாது?'' என்று சந்தேகம் தீரக் கேட்டார் கனம் நீதிபதி.

எனக்குப் 'பகீர்' என்றது; நான் நாற்பதாயிரத்தைக் கொட்டி யிருக்கிறேன்! இருபத்தைந்துக்கு மேலாகாது என்று பேசிக் கொள்கிறார்களே! என்ன அநியாயம் இது! என்ன சொல்வதென்று நிதானிப்பதற்குள் கார் 'புர்ர்ர்ர்...' என்றது.

''மிஸ்டர் திருமலை!'' என்றேன்.

அவர் திரும்பிப் பார்த்தார். ''நீங்கள் எனக்கு 'எஸ்டிமேட்டு' அனுப்புவதற்காக இனிச் சிரமப்பட வேண்டாம்... நானே எனக்கு ஆன செலவுகளை எழுதி வைத்துக் கொண்டு வந்திருக்கிறேன். உங்களுக்கு அனுப்புகிறேன்!'' என்றேன்.



கார் போய்க்கொண்டிருந்தது. அவர் காதில் விழுந்ததோ என்னவோ!

அன்று மாலை என் தாயாரின் மாமா கிராமத்திலிருந்து வந்திருந்தார். அவர் என் வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு, ''உம்...எல்லாம் செய்திருக்கிறாய்...ஒரு திண்ணை மட்டும் வைக்காமல் விட்டு விட்டாய்...திண்ணை அழகே அழகு!'' என்றார்.

''அது 'பாஷன்' இல்லை மாமா!'' என்றேன்.

''கிணறுதான் சுகம் இல்லை. பெரியவாள் நதிதீரமாக வீடு கட்டணும் என்கிறதன் அர்த்தமே இதுதான். குழாயிலும் ஜலம் இல்லை; கிணற்றிலும் ஜலம் இல்லை என்றால் எப்படி ஜீவிக்கிறது!''

''அதற்கு வழி செய்யப் போகிறேன், மாமா! 'பம்ப்' வைக்கப் போகிறேன்!''

''பம்ப் என்றால் பணந்தானே?''

''ஆக்ஷேபணை என்ன! நூற்றைம்பது ரூபாயாவது ஆகும்!''

மறுபடி நிதானித்துவிட்டு, ''ஆமா...வீடு மொத்தமும் கட்ட என்னடா அய்யா ஆயிற்று?'' என்று கேட்டார்.

''நீங்கள்தான் சொல்லுங்களேன், மாமா!'' என்றேன்.

''வீடு பெரிதாக இருக்கிறதே! எட்டு ரூபாய்க்கு மேலே ஆகியிருக்கும் போலிருக்கேடா அய்யா! நான் சொல்றது சரிதானே?'' என்றார்.

முகத்தைத் திருப்பிக்கொண்டு, ''கிட்டத்தட்ட அவ்வளவுதான் ஆயிற்று!'' என்று சொல்லிவிட்டு, நகர்ந்து கொண்டேன்.

அது எனக்கு மட்டும் தெரிந்த விஷயம் ஆயிற்றே! அதைச் சொல்ல ஆரம்பித்தால் தனியாக ஒரு அத்தியாயமே வேண்டியிருக்குமே!

## 16. எனக்கு மட்டும் தெரிந்தது!

ஸ்ரீஜயம் திருக்குற்றாலத்திலிருந்து திரும்பி, எழும்பூரில் ரயிலில் இறங்கி, வீட்டுக்குப் போகும் வழியிலேயே எங்கள் வீட்டு வாசலில் காரை நிறுத்திவிட்டார். "காரிலிருந்து இறங்கி உள்ளே வாருங்கள்!" என்று உபசரித்தேன்.

"அவசியமே இல்லை, ஸார்! வீட்டை ரொம்ப கோரம் செய்து விட்டீர்களோ என்று பயந்துகொண்டே வந்தேன். இங்கிருந்து பார்த்தாலே போதும்!" என்று பதில் சொன்னார் அவர்.

"நீங்கள் கோபித்துக்கொள்ளப் போகிறீர்களே என்று பயந்து கொண்டிருக்கிறேன்...வீடு எப்படி ஸார் இருக்கிறது?" என்று கேட்டேன்.

"ரொம்ப அழகாக இருக்கிறது...இது மாதிரி வீடு இதுவரை எங்கும் யாரும் கட்டினதில்லை."

"பரிகாசம் செய்கிறீர்களே!"

"இல்லை, ஸார்! ஒரு வீடு கட்டினவனுக்கு, தன் வீட்டைப்பற்றி இதுகூட நினைத்துக்கொள்ள உரிமை இல்லை என்றால், அப்புறம் எதற்காக அதைக் கட்டுவது?... அது கிடக்கட்டும்! காம்பவுண்டுக்கு வலை வந்ததா? ஸெமெண்ட்-போஸ்ட் வந்ததா?"

"இன்னும் இல்லை...நீங்கள் சொல்லி வைத்திருக்கிறீர்களா?"

"நான் சொல்லவில்லை; அவர்களாகவே உங்களுக்கு அனுப்புகிறார்கள்! வந்தாலும், அது தானாக வேலியும் போட்டுக்கொண்டு விடும்!"



சற்றைக்கெல்லாம் ஜயம் சொன்னபடி சிமிட்டி 'போஸ்ட்'டுகளும் வலையும் வந்து) சேர்ந்தன. 'போஸ்ட்'களை புதைத்து, வலையைக் கட்டுவதைப் போன்ற சிரமமான வேலை வேறெதுவும் இல்லை என்றும், வேறு யாரை விட்டாவது செய்யச் சொல்லி நான் ஏமாந்து போய் வேலி முழுவதும் ஒரேயடியாகச் சாய்ந்து போகும்படி விடவேண்டாமென்றும் ஒரு ஆள் என்னிடம் பலமாக எச்சரிக்கை செய்தான்.

"ஸா(ம்)மி!... நீ வேணா விசாரிச்சுப் பார்த்துக்க! சப்பான்காரன் குண்டு போடறான்னு இந்தப் பட்டணக் கரையிலிருந்து அய்யமாருங்க ஓடினாங்களே, அப்ப நான் ஒண்டி ஆளு தங்கியிருந்து அபிராமபுரம் மொத்தமும் காப்பாத்தினேன்!" என்றான் அவன்.

"அது சரி, அப்பா! வேலி போட என்ன கூலி?" என்று கேட்டேன்.

"அந்த நுங்கம்பாக்கம் டாக்டர் அய்யா இப்போ இல்லாமே பூட்டாரு. தர்மதுரைங்க. அவருக்கு மிஞ்சி இனிமே யாரு? 'டே பார்த்தஸாரதி'ம்பாரு; அள்ளி அள்ளி வீசுவாரு!..."

"இப்போ நம்ம வீட்டு வேலி போட என்ன கேட்கிறே? நான் ஏற்கெனவே ரொம்ப செலவழித்துவிட்டேன்; ஏமாந்தும் போய் விட்டேன்..."

"கொடு ஸாமி, உன் இஸ்டப்பட்டது..."

"உஸ்ஸ்... அந்தப் பேச்செல்லாம் நான் ஒப்புக்க மாட்டேன்."

"ஏளைப்பட்டவன், ஸாம்மி நான்! நீ இஸ்டமா எது வேணா கொடு..."

"உன்னோடு எனக்கு இப்போ பேசிக்கொண்டிருக்க முடியாது. உன் கூலியைக் கேள், பிற்பாடு..."

"நீ என்னா ஸாமி! நானு அப்படியெல்லாம் ஸண்டை கிண்டை போடமாட்டேன்; யாவரையும் நீ வி(ச்)சாரிச்சுப் பார்த்துக்க. நானும் ஏளைப்பட்டவன்; ஒரு பொஞ்சாதியும் ஏளு குளந்தைகளும் என் ஒருத்தனாலே பிழைக்கணும்; நீரும் இந்த ஊடு கட்டி ஒரு(ம்) மாதிரி ஆயிப்பூட்டேங்கிறே... எளுபத்தைஞ்சு ரூபா கொடு!"

"எழுபத்தைஞ்சா? ஏழு-அஞ்சா?"

"ஆமா, ஸாம்மி!"

"எண்பதுக்கு ஐந்து குறைவாகவா?"

"இது என்னா ஸாமி நீ, தமாஷ் பண்றே! எம்மாம் வேலை இருக்குது? 'போஸ்ட்டு'ங்களுக்குக் குழி பண்ணணும்; ஜெல்லி தட்டணும்; வலைங்களைப் பிரிக்கணும்: அஞ்சு கட்டு போடணும்... சும்மா பேருக்கு? ஸொய்ஞ்சுட்டுப் போனா, நாளைக்கு நீ என்ன சொல்வே! நமக்குத் துட்டு பெரிஸில்லே, ஸாமி...! ஒன்னண்டை இப்போ நாலணா ஏமாத்தி வாங்கிட்டுப் போய்ச் செலவழிச்சுடலாம்... ஆனா..."

"நீ எண்பது ரூபான்னா கேட்கிறே!"

"பின என்னதான் கொடுப்பே, நீயே சொல்லு!"

"நான் அஞ்சு ரூபாய் கொடுக்கலாம்னு நினைத்தேன்"

"ஐயோ, ஐயோ, ஐயோ, ஸாம்மி! ஹஹ்ஹஹ்ஹ!"

"நல்ல நாளும் அதுவுமா இங்கே யார் அவன் அவச்சத்தம் போட்டுக் கொண்டு?" என்று வந்தாள் ராஜம்.

இப்படி ஆரம்பித்த பேரம், கடைசியில் பதினைந்து ரூபாயில் வந்து நின்றது.

"அதுகூட மிக அதிகம்; அத்தனைக்கு எங்கே வேலை இருக்கிறது?" என்றாள் ராஜம் என்னிடம் தனியாக.



"இரண்டு ஒன்று கூடப் போனாலும் போகட்டும் ரொம்ப ஏழைப்பட்டவனாம்; அவனுக்கு ஒரு பொஞ்சாதியும் ஏழு பிள்ளையும் இருக்காம்!"

"அழகுதான்!" என்று சொல்லிவிட்டு ராஜம் உள்ளே போனாள்."

பார்த்தஸாரதி அவனுக்குத் துணைக்கு ஒரு கால் ஊனமாக இருந்த ஒருவனை இட்டு வந்தான். அவன் மெதுவாக வேலை செய்ததால் ஓயாமல் அவனைத் திட்டிக், கொட்டினான். மறுதினம் அவனை 'டிஸ்மிஸ்' செய்துவிட்டு ஒரு செவிடனை அமர்த்திக்கொண்டான்.

செவிடன் ஒன்று சொன்னால் ஒன்று செய்யவே, அவனையும் துரத்திவிட்டு, பொன்னுசாமி என்ற ஆளை அழைத்து வந்தான். பார்த்தஸாரதியின் வேலை மகா மோசமாக இருந்ததால் அவன் கணக்கைத் தீர்த்துப் பொன்னுசாமியை அமர்த்திக்கொண்டேன். போகும் போது பார்த்தஸாரதி பொன்னுசாமியிடம், "டாய்! நான் வந்த இடத்தைப் பிடுங்கிக்கொண்டாயா? நீயும் என் மாதிரி ஒரு நாள் வெளியே வரவேண்டியவன்தாண்டா!" என்று உறுமிவிட்டுப் போனான். மறு நாள் காலையில் புதைத்திருந்த அத்தனை போஸ்டுகளும் நிலை பெயர்ந்து கிடந்தன!

பொன்னுசாமி முழுக் குற்றத்தையும் பார்த்தஸாரதியின் மேல் சுமத்தினான். அடுத்த வயலில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த ஒரு இடையன் என்னிடம் அந்தரங்கமாக, "பொன்னுசாமியே அயோக்கியனுங்க; அவனேகூடப் பேர்த்திருப்பானுங்க!" என்றான்.

எது நிஜமோ, எது பொய்யோ! நான் எங்கள் வீட்டுப் பழைய வாட்ச்மேனைத் தருவித்துப் புதிதாகப் போஸ்டுகளை முதலிலிருந்தே போட்டு வலைக் கட்டிக் கொண்டேன்.

வலை போட்ட பிறகு, எனக்கு ஆட்களுடன் நேரிடையாகப் பழகி, கூலி பேசி, ஒழுங்கு பார்த்து, வேலை வாங்கி அதிக நஷ்டம் அடையாமல் முடிப்பது எத்தனை சிரமமான காரியம் என்பது புரிந்தது. ஆரம்பத்தில் சூரத்தனமாக, "பிரமாதமாகச் செய்துவிடுகிறேன்!" என்று சொல்லிக்கொண்டு வரும் ஆசாமிகள், நாளடைவில் 'கடன் இழவே' என்று செய்யத் தொடங்கி, இறுதியில் என் பணம் மட்டுமே குறியாகத் திரும்பியதையும் புரிந்து கொண்டேன். அதைப் பக்கத்துக் கட்டடத்தில் வேலை செய்துவரும் கந்தசாமி மேஸ்திரி இன்னும் தொடர்ந்து எனக்கு ஞாபகமூட்டி வரத் தொடங்கினான்.

என் வீட்டைச் சுட்டிக் காட்டி "இது என்னா ஊடுங்க!... நான் இங்கே கட்டித்தாரேன், பாருங்க- அரு(ம்)மையா இருக்கும்" என்று அந்த வீட்டுக்காரரிடம் அவன் அளப்பதை என் காதாலேயே கேட்டேன். என் உள்ளம் கொதித்தது. இது இரண்டு மாசம் முந்தி நடந்தது. அங்கே அவனுக்கு மேல் மூன்று பேர் மேற்பார்வை செய்கிறார்கள். கண்காணிப்பு கடுமையாக இருக்கிறதென்று ஆனவுடன், இப்போது விரக்தியுடன் பேசுகிறான்; என் அருகில் வேலியோரமாக வந்து நின்று, "பார்த்தீங்களா ஸாமீ?... இங்கே வேலை நம்மூடு மாதிரி இல்லைங்க... தலைக்குத் தலை அதிகாரம் தான் பறக்குதுங்க!" என்றான்.

"அப்படித்தான் இருக்கும்" என்றேன் சுருக்கமாக.

"இதிலே ஒருத்தர் ஸொல்றபடி ஸெய்தா, ஒருத்தருக்கு ஆவல்லே... வேலை ஸெய்ற மனுஸனுக்கு ரொம்ப கயிஷ்டம்! கலந்து போவுதுங்க!"

"ஆமாம் அப்பா!"

"இது பேஜார் பொளைப்புங்க... இந்த வீட்டோடு இதுக்கு நான் முளுக்குப் போட்டுவிடப் போறேனுங்க!"



"இதே வார்த்தைதான் நீ நம்ம வீட்டிலும் சொன்னாய்; உடனே இங்கே வேலை ஒப்புக்கொண்டாய்... நாளைக்கு மற்ற வீடுகளிலும் ஒப்புக்கொள்ளத்தான் போகிறாய்..." என்று சொல்லிவிட்டு உள்ளே வந்துவிட்டேன்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை மத்தியானம் பொழுது போகாமல் வாசல் திண்ணையில் நாங்கள் உட்கார்ந்து கொண்டிருந்தோம். "ராஜம்! நாம் முன்பிருந்த வீட்டில் சாண் பூமியாவது இருந்தால் பிரமாதமாகத் தோட்டம் போடுவேன் என்று சொன்னாயே! இப்போது வீட்டைச் சுற்றி ஒன்றே முக்கால் 'கிரவுண்ட்' தரை இருந்தும் நீ வாளாவிருப்பதன் ரகசியம் என்ன?" என்று என் மனைவியைக் கேட்டேன்.

"இப்போதானே வேலி போட்டீர்கள்?... தவிர, இந்தப் பங்குனி மாசத்தில் செடியும் கொடியும் வைத்தால் எப்படிப் பிழைக்கும்?" என்று அவள் என்னைத் திருப்பிக் கேட்டாள்.

"அப்படியானால் அதோ பூஞ்செடிகள் விற்றுக்கொண்டு வருகிறானே, அவன் முழு மூடனா?... நான் வாங்குகிறேன் பார்!" என்று, அவனைக் கைதட்டி அழைத்தேன். அவன் வந்து தலைச்சுமையைக் கீழே வைத்துவிட்டு எதிரில் உட்கார்ந்தான்.

"ரொம்ப உசந்த செடிங்கள் இருக்குது! பார்த்தீங்களா இந்தப் பூக்கொத்தை...விருக்ஷிப்பூங்க!" என்று ஒரு பூக்கொத்தைக் காட்டினான்.

"ரொம்ப நன்றாக இருக்கிறதே இந்தப் புஷ்பம்! எங்கே இதன் செடி?"

"இதோ பாருங்க!" என்று சுமார் பத்துச் செடிகளை எடுத்து வெளியே போட்டான். ஒவ்வொன்றின் வேர்ப் புறமும் ஒரு சருகில் சுருட்டி அழகாகக் கட்டி வைக்கப் பட்டிருந்தது.

"இதைப் பாருங்க, அடுக்கரளி."

"சபாஷ்! இதற்குச் செடி?"

"தர்ரேனுங்க!...உம்! டபிள் நந்தியாவட்டை! பூ ஒண்ணு இம்மாம் பெரிசு வருமுங்க..."

"இப்படி வை அந்தச் செடிகளை!...ஆறே செடிகள் தான் இருக்கா?"

"இதைப் பாருங்க, முல்லைச்செடி...முல்லையிலே பதினாறு விதமுங்க...பதினாறும் நம்ம கிட்ட இருக்கு!"

"அதையெல்லாம் தனியாக வை!...அப்புறம்?"

"பழச்செடிங்க, இதெல்லாம்! அலகாபாத் கொய்யா! ஒசத்தி ஒட்டுங்க! ஒரு பழம் கம்மா ஒரு சொம்பளவு வருமுங்க! வாயிலே போட்டீங்கன்னா கரைஞ்சு போவுங்கோ..."

"சபாஷ், சபாஷ்!...இது என்ன?"

"மாதுளைங்க...இது பரோடா ஜாதி, இங்கே எவங்க வீட்டிலேயும் இல்லே. நம்ம ராசா வீட்டிலே முன்னே இருந்திச்சி...ஒரு பழத்திலே ஐந்நூறு முத்து இருக்குமுங்க. வெயில்லே வெள்ளிப் பாத்திரம் வைச்சு, மல்லைத்துணியை மேலே போட்டு, முத்துக்களைத் தூவி வைச்சீங்கன்னா... செக்கச் செவேல்னு ரஸம் இறங்கிவிடும்...இந்த மா(தி)ரி வெய்ய வேளைக்கு ஐயா ஸாப்பிட்டா, ஜிலுஜிலுனு இருக்குமுங்க...அப்படியே ரத்த புஷ்டியாச்சுங்களே!"

அவன் சொல்லும் போது என் தோட்டத்தில் விருக்ஷியும் இருவாக்ஷியும் பூத்துக் குலுங்குவது போலும், கொய்யாவும் மாதுளையும் ஒட்டுமாவும் பழுத்துத் தொங்குவது போலும் என் கண்முன் ஒரு பிரமை உண்டாயிற்று. நாற்பத்தினாலு ரூபாய் விலை சொன்ன அந்தச் செடிகளை நானும் ராஜமும் சாமர்த்தியமாகப் பேரம் பேசி, இரண்டே கால் ரூபாய்க்குத் தீர்த்தோம். "ஐயா பேச்சுலே தேன் ஒழுகுது!" என்று அவன் பணத்துடன் சென்றான்.



அன்று பிற்பகல் வந்த வாட்மேன் ஆறுமுகத்தைக் கொண்டு அவைகளைப் புதைக்கச் சொன்ன போதுதான் உண்மை வெளியாகி விட்டது. பாதிச் செடிகளில் சருகு பார்ஸலை அவிழ்த்ததும் வேர் என்பதே இல்லை என்பதைத் தெரிந்துகொண்டு வேதனைப்பட்டோம்.

"இதற்காக நீங்கள் வருந்த வேண்டாம், ஸாமி! இந்தச் செடிகளில் வேர் இருந்தாலும் உபயோகம் இல்லை... இத்தனையும் நீங்க நினைக்கிற பூஞ்செடிகளே இல்லை... எல்லாம் காட்டுச்செடிகள்!" என்று சொல்லி விட்டான் அவன்.

இவ்வளவு வசுவாக நாங்கள் ஏமாந்து விட்டதை நினைத்து நானும் ராஜமும் சிறிது நேரம் வருந்திவிட்டு, "இனிமேல் இந்த வீட்டுக்காகக் காலணா செலவழிப்ப தில்லை; தெரிந்தும் தெரியாமலும், வேண்டியது நஷ்டப் பட்டுவிட்டோம்!" என்று கடும் வைராக்கியம் செய்து கொண்டு, காம்பவுண்டின் ஒரு மூலையில் எல்லாச் செடி களையும் வாரி வீசினோம்.

மாலையில் ஸ்ரீ ஜயம் இரண்டு நண்பர்களுக்கு வீடு காண்பிக்க வந்திருந்தார். என்னைப் பார்த்ததும், "ஓனர் ஸார்! கட்டின வீட்டுக்குப் பழுது சொல்ல வந்திருக்கோம்!" என்று கூவிக்கொண்டே வந்தார்.

"யார் கட்டின வீடு என்கிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"வாசலில் யார் பெயர் போட்டிருக்கிறதோ அவர் கட்டின வீடாகத்தானே இருக்க வேண்டும்?..." என்றார் ஜயம்.

"திருமலையானால் 'நான் கட்டினேன்' என்று சொல்கிறார்; என் தாயார், 'முருகன் கட்டித் தந்தான்' என்று பேச்சுக்குப் பேச்சு சொல்கிறாள்; நீங்கள் வந்து என்னைக் கட்டினவன் என்று சொல்கிறீர்கள்...உண்மையில்

இந்த வீட்டை உருவாக்கினது நீங்கள் இல்லையா?'' என்று கேட்டேன்.

''உம்முடன் கதை பேச நான் வரவில்லை: கதை எழுதுகிறவர்கள் நிஜம் பேசுவதில்லை என்று இவர்களுக்குத் தெரியும்...இவர்கள் இப்போ உங்கள் வீட்டைப் பார்க்க வரவில்லை. நல்ல காபியாக எங்கே கிடைக்கும் என்று என்னைக் கேட்டார்கள். ஆனந்த ஷண்முக விலாஸம் என்று எங்கேயோ பார்த்த ஞாபகம் இருக்கிறது, விசாரித்துப் பார்க்கலாம் என்று இப்படி அழைத்து வந்தேன்.''

''நாங்கள் ஒன்றும் சொல்லவே, இல்லை, ஸார்!'' என்று இரண்டு பேரும் தீவிரமாக மறுத்ததை லட்சியம் செய்யவில்லை ஐயம். என் வீட்டில் இருந்த பழைய கட்டில், மேஜை, நாற்காலி, பெஞ்சு முதலியவைகளை வெகு கடுமையாகப் பார்த்து, ''இந்தக் குப்பையெல்லாம் இங்கிருந்து வெளியே போக வேண்டும், ஸார்! புது வீடு கட்டினால், புது 'பர்னிச்சர்' போட வேண்டாமா?'' என்று கேட்டார்.

''அந்த பீரோ என் மாமனார் கொடுத்தது. அதை எப்படி...''

''அவருக்கே திருப்பிவிடுங்கள்!''

''இந்தப் பெஞ்ச் என் பாட்டனார் உபயோகித்தது.''

''உஸ்ஸ்ஸ்...என்ன ஸார் நீங்கள்! புது வீட்டில் எப்படி ஸார் இருக்கும் இதெல்லாம்!...என்னமோ உங்கள் இஷ்டம்!''

நான் பேசாமலே நின்றேன்.

''இந்த ஹாலில் அழகாக நாலு பெரிய நாற்காலிகள், நடுவில் ஒரு ஸெண்டர் - டேபிள்; வராந்தாவில் இரண்டு பிரம்பு நாற்காலிகள், ஒரு டீபாய்,-'ஸ்டடி'யில் ஒரு டேபிள், ஒரு நாற்காலி, மூணு பிரம்பு நாற்காலி, வேணுமானால் ஒரு



ஈஸிசேர் - இப்படி 'பிளான்' செய்து போட்டால் எத்தனை அழகாக இருக்கும்...?'' என்று ஐயம் விவரமாகச் சொல்ல, வந்தவர்கள் மாடியைப் பார்க்கப் போனார்கள்.

ராஜம் என்னிடம், ''இப்படியெல்லாம் சாமான்கள் போட எங்கே இடம் இருக்கிறது?'' என்று கேட்டாள்.

''இடம் கண்டுபிடித்துவிடலாம், ராஜம்! பணம் எங்கே இருக்கிறது?'' என்று நான் அவளைக் கேட்டேன்.

மாடியில் எப்படி மரச்சாமான்கள் இருக்க வேண்டும் என்று ஐயம் சொன்னார். பிறகு, ''வராந்தாவில் இரண்டு 'சிக்ஸ்' (தட்டிகள்) கட்ட வேண்டும், இல்லாவிட்டால் வெய்யில் பட்டு, கதவுகளின் வார்னிஷ் போய்விடும்'' என்றார்.

''என்ன முழிக்கிறீர்?.. அது வேறு செலவா என்று பயமா?...தரை 'பாலிஷ்' செய்ய வேண்டும்; ஆறுமாசம் கழிந்தாவது இன்னொரு 'கோட்' டிஸ்டெம்பர் அடிக்க வேண்டும்...கிணற்றங்கரை வேறு இருக்கிறது...கார் ஷெட் கட்ட வேண்டாமா? செலவு முடிந்துவிட்டதா?'' என்று கேட்டார் ஐயம்.

''ஒரு மாடு வாங்கி வைத்துக்கொள்ளுங்கள், மிஸ்டர்! வீடு என்றால் கட்டாயம் அது ஒன்று இருந்தாக வேண்டும்'' என்றார் வந்தவர்களில் ஒருவர்.

''தோட்டம் போடவில்லையா?...அப்படிப் போட்டால் ஒரு தோட்டக்காரன் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கும்'' என்றார் மற்றவர்.

''எதற்கும் வீட்டைப் பார்த்துக்கொள்ள ஒரு ஆள் இருந்துதானே ஆகவேண்டும், இல்லாவிட்டால் வீடு பாழாகி விடுமே'' என்றார் முதல்வர்.

''ஐயா அருவநார்.. தேமேனு குடியிருந்த வீட்டில் முப்பத்தைந்து ரூபாய் வாடகையை எறிந்துவிட்டு, வீட்டுக்காரரை அதிகாரம் செய்து கொண்டிருந்தது போக,

இப்போது தோட்டக்காரனுக்கு மட்டும் முப்பது ரூபாய் கொடுக்க வேண்டுமென்றால்...'' என்று சிரித்தார் ஐயம்.

''யானை அசைந்து தின்னும்; வீடு அசையாது தின்னும் ஸார்! என்ன செலவு செய்தாலும் இன்னும் கொஞ்சம் பாக்கியிருந்து கொண்டேதான் இருக்கும்!'' என்றார் வந்தவர்.

''ரொம்பச் சரியான வார்த்தை! மிஞ்சுகிற பணத்தை எப்படிச் செலவழிக்கிறது என்ற கவலை இனி எனக்கு வேண்டாம் என்கிறது என் வீடு...அடுத்தபடி செலவு செய்ய எப்போ பணம் வரும் என்ற கவலையையும் அல்லவா உண்டாக்கிவிட்டது!'' என்றேன்.

கிணற்றுக்குள் எல்லாரும் எட்டிப் பார்த்தபோது எனக்குத் 'திகீர்' என்றது. அது திருமலையின் பிசகு என்றாலும் நான் குற்றம் செய்து விட்டாப் போல் பெரிதாக லஜ்ஜை அடைந்தேன். அவர்கள் அதைப் பார்த்துச் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் வேல்-கம்பு போல் என் இதயத்தில் பாய்ந்தது.

''என்ன இது! சேலம் கிணறு மாதிரி ஆயிப்போச்சே!''

''வளைந்து போய்விட்டதே, ஸார்! இது நிற்குமா?''

''இப்படி யார் செய்தது?...காண்ட்ராக்டரிடந்தானே வேலையை ஒப்புவித்தீர்கள்?''

''ஜலம் இருந்தாலும் பரவாயில்லை; அதுவும் அடி வரண்டு கிடக்கிறதே!''

''இதைத் தூற்றுவிட்டுத்தான் வேறு தோண்டியாக வேண்டும்...குறைந்தது ஐந்நூறு ரூபாய் பிடிக்குமே! த்ஸொ! த்ஸொ! த்ஸொ!''

'' 'வீட்டைக் கட்டிப் பார்' என்பது வசனம் ஆயிற்றே ஸார்? அப்போதானே சிரமம் எல்லாம் தெரிகிறது.''



எனக்கு மட்டும் தெரிந்தது!

என் சங்கடத்தை ஸ்ரீ ஐயம் தெரிந்துகொண்டு பேச்சை மாற்றினார். மூலையில் போட்டிருந்த செடிக்குப்பலைப் பார்த்து, ''அதெல்லாம் என்ன?'' என்று கேட்டார்.

''அதுவா ஸார்! இந்தச் சின்னக்கண்ணன் பயல் எங்கேயோ சிநேகிதன் வீடுகள் என்று போய், கண்ட கண்ட காட்டுச் செடிகளையெல்லாம் பிய்த்துக்கொண்டு வருகிறான். 'ஜலம் விட்டு வளர்க்கலாம், அப்பா' என்கிறான். சொன்னால் கேட்கமாட்டேனென்கிறான்...'' என்று சொன்னேன்.

''அதிருக்கட்டும்...அந்தச் செடிக்காரன் இன்னொரு தடவை வந்தால் எனக்குச் சொல்லி அனுப்பும்...நானே அவனை உதைக்க வேண்டும் என்றிருக்கிறேன்!'' என்றார் ஐயம்.

''அவன் இனிமேல் இந்தத் தெருப்பக்கம் வரவே மாட்டான், மாமா; பத்து வீடுகளுக்கும் இதே போல் செடி விற்றிருக்கிறானே!'' என்று விச்சு சொல்லிவிட்டு என் கையில் பிடிபடாமல் உள்ளே ஓடிப்போனான்! அதிகப் பிரசங்கி!

ஐயமும் மற்றவர்களும் காரில் ஏறிக்கொண்டவுடன், என் மனமார்ந்த வந்தனத்தை ஸ்ரீ ஐயத்திற்குத் தெரிவித்துக் கொண்டேன். ஒவ்வொரு தடவையும் சரியான சமயத்தில் எனக்குப் புத்திமதிகள் சொல்லி, என் வீட்டை அழகாக அமைத்துக் கொடுத்ததற்கு நன்றி கூறினேன்.

ஐயம் முகத்தைத் திருப்பிக்கொண்டார். ''இவர் என்ன சொல்கிறார் என்றே புரியவில்லை. நான் இவருக்காகவா வீடு கட்டினேன்?...என் திருப்திக்குக் கட்டிப் பார்த்தேன்; அதற்கு இவர் பணம் உபயோகப்பட்டது...இவருடன் இந்த மாதிரி பேசிக்கொண்டு இங்கே நின்றால் நம்ம உத்தியோகம் போய்விடும்...வணக்கம் பல!''

கார் போய்விட்டது. நான் வாசற்படியிலேயே வெகு நேரம் நின்று கொண்டிருந்தேன்... ஒருத்தொருத்தர்

ஒன்றுமே செய்யாமல் இருந்துவிட்டு, கடைசியில் தாம் செய்ததாகக் கிதாப்பு செய்து கொண்டு வரும்போது, ஒரு பிரதிபலனையும் எதிர்பாராமல் ஒரு பெரிய காரியத்தை முடித்துக் கொடுத்துவிட்டு, அதைத் தாம் செய்யவேயில்லை என்று சாதிக்கும் மனிதர்கள் எத்தனை பேர் இருக்க முடியும் என்று அசந்து போய் நின்றேன்.

என்னைத் தேடிக்கொண்டு ராஜம் அங்கே வந்தாள் ,,என்ன பெரிய யோசனையில் ஆழ்ந்திருக்கிறீர்கள்? நான் வந்தது தெரிகிறதா?'' என்று கேட்டாள்.

''ஏன்?''

''யோசனையில் ஆழ்ந்துவிட்டால் பக்கத்தில் நான் இருப்பதும் தெரியாது; நான் பேசுவதும் காதில் விழாது! அது உங்கள் வழக்கமாயிற்றே!''

''ஆமாம்! நீ என்னிடம் சொல்லி எது நடக்கவில்லை?'' என்று கேட்டேன் உஷ்ணமாக.

''நான் கேட்டு எது நடந்திருக்கிறது?'' என்று திருப்பிக் கேட்டாள்.

நான் அப்படிச் சீறுவேன் என்று அவள் எதிர்பார்க்க வில்லை. வெளியே போ!...கெட்அவுட்...!! வெளியே போ!'' என்று கூச்சல் போட்டதும் அவள் நடுநடுங்கிப் போய்ச் சிலைபோல் நின்றாள்.

'' 'வெளியே போ' என்றால் 'வெளியே போ' தான் என்னிடம்!'' என்று கர்ஜித்து, சரசரவென்று அவளை வீட்டின் எதிரே, தெருவுக்குக் குறுக்கே இழுத்துச் சென்று விட்டேன்.

''நில்! இங்கிருந்து திரும்பிப்பார்! உனக்கு என்ன தெரிகிறது? நீ கேட்டது இல்லையா இது? - ஷண்முக விலாஸம்! உன் மனோரதம் நிறைவேறியதா, இல்லையா?'' என்றேன்.



''என்னமோ ஏதோவென்று பயந்து போய்விட்டேன்!'' என்றாள் ராஜம்.

''ஹூம்! உனக்கென்ன பயம் வந்தது! இருபதுக்குள் முடிக்கத் திட்டம் போட்டு, முப்பது வரை செலவு செய்யத் தயாராக இருந்து, நாற்பதையும் போட்டபின் மேலும் ஐந்தாறு கேட்கும் இந்த வீட்டைப் பார்த்து நானே பயப்பட வில்லையே!'' என்று நான் சிரித்தேன்.

**முற்றும்**

27070
419254